கல்கி

KALKI 1-4-79
75 காசு



Kalki Shopping Page

NOW EVEN BETTER!



Vellin
WET GRINDERS
$\frac{3}{4}$, 1, $1\frac{1}{4}$ & $1\frac{1}{2}$ lit.

BEST AFTER-SALES SERVICE!


Kumaravel Enterprises
48-B, Kachaleeswarar Agraharam
(Opp. to: Batliboi House, Armenian Street.)
Madras - 600 001
Phone: 25745

M/s. Vivek & Co.
92/1 Royapettah High Road, Madras-600004
Phone: 76923

M/s. Vivek & Co.
205, Purasawalkam High Road,
Madras-600 007
Phone: 662462

Admired for beauty
Bought for performance

Bharat TV
Urvashi




Available at:
TV TRADERS
Alwarpet,
Madras 600 018 Phone: 71238
Anna Nagar, Madras 600 040

ACIL BT 16/79

Admired for beauty
Bought for performance

Bharat TV
Urvashi



Available at
VIVEK & CO
Purasawalkam, Madras-600 007
Phone . 662462/663545
Mylapore, Madras 600 004
Phone : 76923 75661.

ACIL BT 17/79

SHOWROOM 1 EXCLUSIVE
BINNY'S

Entire range of BINNY TEXTILES including silks.

VENKATESH VASTRALAYA
P. LTD.


State Bank of Mysore Blg.
Opp. High Court,
Madras 600 001
Phone: 20201/2




''இனிமேல் காலே காப்பி வேண்டாம்!''
''?!!?!?''
''நிசமாத்தான்...காப்பி வேண்டாம். இளநீர் கொடு! வெயில் காலமாச்சே!''



''ஏம்பா, மெட்ராஸ்லே கோடை காலத்திலே தண்ணிப் பஞ்சம் பயங்கரமா இருக்குமாமே?''
''எவன் சொன்னது?... எந்தக் காலத்திலேயும் இங்கே 'தண்ணிப்' பஞ்சமே கிடையாது! 'புல்'லாக் கிடைக்கும்!''





''இந்த டிசைன் ஷர்ட்டிங் துணி ஒரு சென்டி மீட்டர் கூட விக்கல்லியே!... என்ன காரணம்னு தெரியல்லியே!''



''என்ன சார்... வெயில் பொசுக்குது!... நீங்க இப்படித் தெருவிலே சுத்தறீங்களே?''
''இது நிழலாத் தெரியுது எனக்கு... வீட்டுலே அவள் பொசுக்கறதைப் பார்த்தா...!''

''ஹூம். ம். ம்! ஒரு காலத்துலே இந்தக் கோடை வந்ததுன்னு 'ஸம் மர்கட்'டுன்னு 'க்யூ'விலே வந்து நிப்பாங்களே!''






''என்னப்பா... ரொம்ப சூடா இருக்குமோ?... தண்ணி கொதிக்குது போலிருக்கே?''



''உன் பாடு தேவலே. இடுக்கியாலே ஹெல் மெட்டைத் தூக்கிட்டே. அதைக் கழட்டறதுக்குள் நான் பட்டபாடு எனக்குத் தானே தெரியும்!''




''சூரியன் உச்சத்திலே இருக்கு துங்க...''

''ஆமா... இதை இவர் கிட்ட காசு கொடுத்துத்தான் தெரிஞ்சுக்கணு மாக்கும்!''

'''கோடை மழை... கோடை மழை'ன்னு சொல்றாங்களே.... அது எப்படிப் பெய்யுது?''

''அதுவா... சூரியனுக்கு வேர்த்துக் கொட்டுது... அதுதான் நமக்குக் கோடை மழை ஆகுது!''





கல்கி ஆசிரியருக்கு,

கல்கி ஆசிரியருக்கு, வணக்கம்.

நகைச்சுவை மலருக்கு ஒரு கட்டுரை தருவதாகச் சொல்லியிருந்தேன். அதைக் குறித்த நேரத்தில் தர முடியாத நிலையில் இருக்கும் நான், இப்போது கொடுத்த வாக்கிலிருந்து, கழண்டு கொள்ள விரும்புகிறேன்.

நான், என் வழியிலேயே வாபஸ் வாங்குவது என்றால், நேரிடையாக மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழி இருக்காது. அதைவிட, மற்றவர்கள் என் நிலையில் இருந்தால் எப்படி அந்த வாக்கிலிருந்து, தப்பிக்க முயல்வார்கள் என்று சற்று யோசித்தேன்...

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். கல்கி ஆசிரியரிடம் டெலிபோனில் சொல்கிறார்:

'கல்கி' ஏடு, 'கல்கி'யை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது என்பதாலும், இப்போது எனது மதிப்புக்குரிய நண்பர், ஆருயிர்த் தோழர் திரு. ராஜேந்திரன் அவர்கள் ஆசிரியராக இருப்பதால், அப்பத்திரிகையான கல்கி, ஒரு நகைச்சுவை மலரைக் கொண்டு வர, வெளியிட, பிரசுரிக்க, அச்சடிக்கத் தீர்மானித்திருப்பதாலும், அம்மலருக்குக் கட்டுரை ஒன்றை எழுதித் தருகிறேன் என்று நான் எப்போது கூறினேன் என்பதையும், எந்த நேரத்தில் அம்மாதிரி சொன்னேன் என்பதையும், ஏன் சொன்னேன் என்பதையும் திரு. ராஜேந்திரன் அவர்கள் நினைத்துப் பார்த்தால், மலர் என்பது பூவாகவும் இருக்க முடியும், பத்திரிகையாகவும் இருக்க முடியும் என்ற காரணத்தால், 'மலரே, மலரே, மல்லிகை மலரே!' என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை கூறியது போல், ரத்தத்தின் ரத்தங்களோடு சேர்ந்து, நாடும் மக்களும் போற்றுதற்கு ஒரு ஏடாக கல்கி இருக்கும்போது, அதன் ஆசிரியராக இருந்தவர் கல்கி என்பதாலும், இப்போதைய ஆசிரியர் நண்பர் ராஜேந்திரன் என்பதாலும்...

'கல்கி' ஆசிரியர்: ஸார்! நீங்க கட்டுரை கொடுக்காட்டாலும் பரவாயில்லே... என்னை விட்டுடுங்க... இனிமே இந்த மாதிரியெல்லாம் நான் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன். (டெலிபோனை வைக்கிறார்.)

கருணாநிதி கடிதம் எழுதுகிறார்:

அன்று தாங்கள் கேட்டபோது, கட்டுரை தருவதாகச் சொன்னேன் என்பதை மறுக்க முடியவில்லை. அதனை ஒரு சவாலாகவே ஏற்றேன். நான் சமாளித்துள்ள சவால்கள் சரித்திரத்திலே இடம் பெற்றிருப்பது தெரிந்திருக்கும்.

ஆனால், ஒரு வாக்குறுதியை அளிக்க நாம் முன் வரும்போது எந்தச் சூழ்நிலையில் அவ்வாக்குறுதி அளிக்கப்படுகிறது என்பதை மற்றவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

வாக்கா வாக்கோடு வாக்கால
வாக்கிய வாக்கிங் சில — என்ற வள்ளுவர் வாக்கினை நாம் இச்சமயம் நினைவில் கொள்ள வேண்டும்.

'கொடுத்த வாக்கு காப்பாற்றப்பட வேண்டும் என்றாலும், சில பிரச்னை வரும்போது 'வாக்கிங்' போது வாக்குறுதி போய் விடும்' என்று வள்ளுவன் விளக்கியிருக்கிறான்.



பெரியார் சிலை பிரச்னை இப்போது வந்திருப்பதால், மற்றப் பிரச்னைகளைத் தள்ளி வைக்க வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன்.

வேறொரு நிகழ்ச்சியையும் திரு. ராஜேந்திரன் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். முன்பு ஒருமுறை, கல்கியில் ஒரு கட்டுரை எழுத அண்ணா அவர்களே சம்மதித்து, பிறகு எழுத இயலாமற் போகவே, அந்த வாக்கை வாபஸ் பெற்றிருக்கிறார் என்பது, கல்கி ஆசிரியருக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். அண்ணாவே செய்த செயலைத்தான் நான் இப்போது செய்கிறேன்.

மு. கருணாநிதி.



சோ

மொரார்ஜீ தேசாய் :

இன்னும் ஏழு மாதம், எட்டு வாரம், எண்பத்தி ஏழு நாள், எட்டே கால் மணி நேரத்தில் இந்த நகைச்சுவைப் பிரச்னையை, நான் தீர்த்து வைக்கிறேன். எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது.

எஸ். வி. லட்சுமணன் :

நான்கு நாட்களாகத் தொடர்ந்து கடுமையாக, லட்சியத்துடன், உணர்ச்சி பூர்வமாக, போராடி, தைரியமாக நான் தூங்கி விட்டதால் கட்டுரையை எழுத முடியவில்லை என்பதை என் கண்டன மாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுமாறன் :

நகைச்சுவைக் கட்டுரை வேண்டுமென்று, மூப்பனாரிடமும் கேட்டிருக் கிறீர்களாமே? அப்படியானால், நான் ஒன்றும் எழுத மாட்டேன்! அவர் என்ன அவ்வளவு பெரிய மனிதரா? உங்கள் சதி எனக்குப் புரிகிறது. எம். ஜி. ஆர். என் பக்கமாக்கும்! மூப்பனார், ஏதாவது நகைச்சுவை எழுதிப் பார்க்கட்டுமே! ஒன்று அதி லிருக்கும் நகைப்பையாவது எடுத்து விடு வோம். இல்லே. சுவையையாவது தீர்த்து விடுவோம். பார்க்கலாம் ஒருகை!

பா. ராமச்சந்திரன் :

நகைச்சுவைக் கட்டுரை என்பதைப் பற்றி ஆழ்ந்து, அமர, ஆலோசனை நடத்தி, ஆராய்ச்சி செய்ததன் பல னாக, அது முடியாத காரியம் என்று முடிவு செய்து விட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ம. பொ. சி.

நகைச்சுவை ஸ்டாக் நிறைய என்னிடம் இருந்தது. அதனால் ஒப்புக் கொண்டேன்: இப்போது அலமாரியைத் திறந்து பார்த்தேன். ஒன்றுமே காணோம். முக்கால் பாகம் தி.மு.க. ஆட்சியில் அதன் புகழ்பாடித் தீர்த்து விட்டேன். மீதி கால் பாகத்தை இப்போது எம். ஜி. ஆர். ஆட்சியின் புகழ் பாடித் தீர்த்து விட்டேன். கைவசம் ஸ்டாக் இல்லே. மன்னியுங்கள்.

இந்திரா காந்தி :

கட்டுரை விஷயமாக சஞ்சய் காந்தியைக் கேளுங்கள்.

சஞ்சய் காந்தி :

கிட்ட வந்தா உதைப்பேன்.

இப்படி பல வழிகள் இருந்தாலும், அவற்றில் எதையும் பின்பற்ற முடியாத நான், என்ன செய்வேன்?

நேரமில்லாமல் போனதற்கு என் வழியிலேயே சொல்வதாக இருந்தால், 'கல்கி வாசகர்கள் கொடுத்து வைத்தவர்கள். என்னால் கட்டுரை எழுத இயலாமற் போய் விட்டது' என்று தான் சொல்ல வேண்டும்.

அன்புடன்
சோ

''ஏனய்யா சைக்கிளில் லைட் இல்லாமல் போறீங்க?''
''சார் இது ஒரு தப்பா! அங்கே எத்தனையோ பேர் சைக்கிளே இல்லாம போறாங்க.'' -நவீன்





குளிர்ச்சி

ஆசிரியர்: ஐஸ்முடி

கோடை தோறும் வெளியாகும் மலர்

சமர்ப்பணம்:

உங்கள் கரங்களில் தவழும் 'குளிர்ச்சி' யின் முதல் மலரை, தமிழ்த்தாயின் தண் மலர்ப் பாதங்களுக்குக் காணிக்கையாக்கு கிறோம்!

எவரெஸ்ட் சிகரத்தைக் 'குளிர்ச்சி' பத்திரிகையின் சின்னமாகத் தேர்வு செய்துள்ளோம்!



குளிர்ச்சியின் சிகரமாகக் கோடையில் பொலியும் இந்த இதழ் குளிர்ச்சியைத் தென்னாடுடைய சிவனே போற்றுவார். அதனால் தான் அவர் கைலாயத்தில் இருப்பதுடன் தம் முடி மீது கங்கைக்கும் இடமளித்துள்ளார்...!

குளிர்ச்சி இதழைப் படித்து மனம் குளிரவில்லையானால் இதனை நாலாக மடித்து விசிறிக் கொள்ளலாம். அதற்கு வசதியாகக் குளிர்ச்சி பெரிய சைஸில் அச்சாகிறது.

திரைத்திலகம்:

நிலாதேவி பேட்டி!

''கோடைக் காலத்தில், நீங்கள் வெப்பத்தையும், வெப்பத்தால் கண் எரிச்சல், நாவறட்சி ஏற்படுவதையும் தடுக்க என்ன செய்து வருகிறீர்கள்?''



பதில்: ''வெயில் காலத்தில் வெளியேயும் கடும் உஷ்ணம், ஸ்டுடியோ படப் பிடிப்புகளின் போதும் ஆயிரம் வாட் செட் லைட்டுகளின் உஷ்ணம்!... இதனால் வெப்பத்தால் உடல் சோர்வுகள் வரலாம்... எனக்கும் வரும்! இதே போல் வெப்பத்தால் அவதிப்படுபவர்களுக்கு என் அநுபவத்தைக் கூறுகிறேன்:

அகண்ட பேஸினில், ஐஸ்கட்டி கரைந்த நீரில், அரை மணி நேரம் பாதங்களை வைத்திருக்கவும். அவ்வப்போது சிறு ஐஸ் கட்டிகளையும் நீரில் போடலாம்.

பாதம் குளிர்ந்தால், உடலின் சூடு அப்படியே தணிந்து விடும்! கண் எரிச்சல் காததூரம் ஓடும்! இதுவே என் 20 வருட அநுபவம்!

தலையங்கம்:

நெடுஞ்சாலைகளிலும், நகர கிராமச் சாலைகளிலும், வெயிலில் வழி நடப்போர் தங்கி இளைப்பாற, பல தண்ணீர்ப் பந்தல்களை அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்! அங்கே சுகாதாரமான சூழ்நிலையில் குளிர்ந்த நீர் பருகிட அளித்திடல் வேண்டும்!

இதனால் பல படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்! வேலையில்லாத் திண்டாட்டம் சிறிது குறையும்! இதற்குச் செலவாகும் என்று அஞ்சக் கூடாது.



மாநில அரசு நிதிப் பற்றாக் குறைக்கு மத்திய அரசை அணுகலாம், மத்திய அரசு உலக பாங்கிடம் கடன் கேட்கலாம்!... உலக பாங்கிடம் பணம் இல்லையென்றால் குபேரனைப் பிரார்த்திக்கலாம்.



குறுநாவல் - டார்லிங்! டார்ஜிலிங்!!

இந்த இதழுடன் போனஸாக அளிக்கப் பட்டிருப்பதை வாசகர்கள் ஞாபகமாகக் கேட்டு வாங்கிக் கொள்ளவும். படிக்க மறந்தால் பாதகமில்லை.

பயணத்தொடர்:

ஆ! அலாஸ்கா...ா..!

நான் சென்ற ஆகஸ்டில் ஸ்விட்சர்லாந்து சென்றிருந்தேன். அங்கே ஹோட்டல் ஒன்றில், ஐரோப்பிய மங்கையுடன் கட்டைகுட்டையான ஒருவர் உள்ளே நுழைவதைப் பார்த்தேன். ''பார்த்தீர்களா! அந்தப் பெண்ணுடன் வரும் நபர், ஓர் எஸ்கிமோ! காலம் எப்படி மாறி விட்டது!...'' என்றார் என் ஸ்விஸ் நண்பர். அப்போதே பனியடர்ந்த அலாஸ்கா மற்றும் வடதுருவப் பகுதிகளைச் சுற்றிப் பார்க்க ஆசை கொண்டேன்... எனக்குத் தெரிந்த புரொட்யூஸர் யாராவது அலாஸ்காவுக்குப் படம் எடுக்கப் போகிறார்களா அல்லது எனக்கு வேண்டிய அரசியல்வாதி யாராவது அலாஸ்காவுக்குப் போகிறாரா என்று எதிர்பார்த்து ஸூட்கேஸைப் பாக் பண்ணிவைத்துக் கொண்டு காத்திருக்கிறேன்.

(தொடரும்)



மாதர் பகுதி:

மாமியார் – தயிர்வடை!

கோடை காலத்துக்கேற்ற சிற்றுண்டிகளில் ஒன்றான தயிர்வடையில், புதிய வகையாக 'மாமியார் தயிர் வடை' செய்யும் முறையைச் சகோதரிகளுக்கு அறிமுகம் செய்கிறேன்:

சாதாரணமாக வடைக்கு உளுந்துடன் உப்பைப் போடுவது வழக்கம். இந்த வடைக்கு உப்பே தேவையில்லை! உப்பில்லாமல் அரைத்த மாவை வாணலியில் வேக வைக்கவும். வடையை அரை வேக்காடில் எடுக்கவும்.



தயிரில் உப்புப் போடாமல் பத்துப் பச்சை மிளகாயை அரைத்துத் தயிரில் கலக்கி விடவும்.

வாணலியிலிருந்து அரை வேக்காடு வடையை எடுத்துத் தயிரில் ஊறப் போட்டு, ஒரு மணி வைத்திருக்கவும்.

வெளியே போய் அரட்டை அடித்துவிட்டு வெயிலில் நடந்து மாமியார் வீட்டுக்குத் திரும்பி வந்ததும் தயிர் வடையைப் பீங்கான் பிளேட்டில் பரிமாறவும்.

விஞ்ஞானக் கட்டுரை:



எங்கும் ஏர்கண்டிஷன் என்பதே பேச்சு!

'ஆளுக்கொரு வீடு' என்ற பேச்சு நாடெங்கும் கேட்கிற நாளிது.

வெறும் வீடு கட்டினால் மட்டும் போதுமா? ஏஸி வேண்டாமா?

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ரேடியோ அதிசயப் பொருள். இன்று? பட்டிதொட்டி முதல், பஸ், ரயில் வரை – எங்கும் வியாபித்துள்ளது – டிரான்ஸிஸ்டர் ரேடியோ!

சிறிய அஞ்சறைப் பெட்டியளவில் 'ஜனதா ஏர் கண்டிஷனர்கள் விஞ்ஞானிகளின் தீவிர முயற்சியால் அறிமுகம் ஆகும் நாள் தூரத்தில் இல்லை! குப்பம் முதல் குபேரப்பட்டினம் வரை எங்கும் வியாபிக்கும் இந்த ஏஸி பெட்டிகள். ஆனால் நிபந்தனைகள்: தயாரிப்பு சஞ்சய் காந்தியிடம் போகக் கூடாது; சரண் சிங் வரி விதித்துத் தாக்கக்கூடாது!

நகைச்சுவை:



ஆசிரியர்: "'நான் உதக மண்டலம் செல்வேன்' – இது எந்தக் காலத்தைக் குறிக்கும்?"

மாணவன்: "இது நீங்கள் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்து விட்ட காலத்தைக் குறிக்கும்!"

• • •

முதல்நபர்: என்ன நம்ம மாணிக்கம் ஆள் பாதியா இளைச்சுட்டான்? திடீர்னு அவனுக்கு என்ன வந்திச்சு?

இரண்டாம் நபர்: வேறென்ன... ஐஸ் பாக்டரி வச்சான். ஏகப்பட்ட நஷ்டமாம்... கடனும்!... அந்தக் கவலையில் உருகிப் போறான்!

மதிப்புரை:

கோடைமழை!

ஆசிரியர்: தென்றல் பிரியன்.
வெளியீடு: அருவிக் குளம்.

கோடைமழை என்னும் தலைப்புக்கே முதல் பரிசு தர வேண்டும்! கவிதை ஒவ்வொன்றும் ஒரு கூல் டிரிங்.

இரண்டாம் பகுதி – கட்டுரைகள்.

ஆசிரியரின் அழகிய நடையில், குற்றால அருவியின் வேகமும் ஐஸ்க்ரீமின் தண்மையும் சேர்ந்திருக்கின்றன!

கோடை மழையின் உயர்வைப் பற்றி எழுதியுள்ள வேர்ட்ஸ்வொர்த், கோல்ட் ஸ்மித் முதற் கொண்டு தென்னகத்து இராமலிங்க அடிகளாரின் 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்' அருட்பா வரை, ஆங்காங்கே மேற்கோள்களில் இடம் பெற்றுள்ளன. மொத்தத்தில் இந்தக்கோடை மழையில் நனையலாம். ஜலதோஷம் பிடிக்காது! – நிலா விரும்பி

பொன்மொழி

1. ஆண்டவன் உனக்கு ஐஸ்கிரீம் தருவார். ஆனால் அது உருகுமுன் சாப்பிடுவது உன் திறமை.

2. கோடைக்கு உதவும் செருப்பு கோடை மழைக்கு உதவாது!

க்விஸ்

இமயத்திலுள்ள பத்து சிகரங்களையும் அறிவீர்களா?

தெரியாதவர்கள் சிரசாசனம் செய்தால் கண்டு பிடித்து விடலாம்!

[illegible]

தயாரிப்பு: ஏ. சுவாமிநாதன்

எல்லா தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றது!

ஃபோர்ட் 3600

- இணையில்லா செயல் திறன்
- இணையில்லா நம்பிக்கை
- இணையில்லா சிக்கனம்



எஸ்கார்ட்ஸ் லிமிடெட்
ஃபார்ம் எக்விப்மெண்ட் டிவிஷன்,
18/4 மதுரா ரோடு, ஃபரீதாபாத்

EL-5140 TAM A



கல்கி

1979 ஏப்ரல் 1

காளயுக்தி பங்குனி 18

மலர்: 37 இதழ்: 35

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

தொழில்வளம் பெருகட்டும், தமிழகம் சிறக்கட்டும்!

முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். தொழிலதிபர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இதற்கு இரு தினங்களுக்குப் பிறகு கிராமத் தொழில்கள் அபிவிருத்தி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட டாக்டர் நாயுடம்மா குழு, தன் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது.

இவை இரண்டும் தமிழ் நாட்டின் தொழில் வளப் பெருக்கத்தில் ஒரு திரும்பு முனையாக அமைய வேண்டும் என்று விரும்புகிறோம்.

தொழில்வள முன்னேற்றத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்த காலம் உண்டு. அந்நிலை மாறி இன்று தமிழகம் ரொம்பவும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மறுபடியும் இரண்டாவது இடத்தையல்ல முதலிடத்தையே கூடப் பிடிக்கலாம். அறிவு பூர்வமான திட்டமும், நம்பிக்கையும், செயல் திறனும் தேவை.

முதலமைச்சருடன் அளவளாவிய சிறிய, பெரிய தொழிலதிபர்கள், தாங்கள் சந்திக்க நேர்கிற பலவிதமான சிரமங்களைச் சுமார் நாலுமணிநேரம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சாதகமான சூழ்நிலைகளையும் விவரித்திருக்கிறார்கள். உதாரணமாக திரு எம். வி. அருணாசலம், ஸ்திரமான அரசு, ஏற்கெனவே தொழில் துறையில் ஏற்பட்டுள்ள அடிப்படையான முன்னேற்றங்கள், வேலைத் திறனுள்ள ஊழியர்கள் முதலிய சாதகமான அம்சங்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதே நேரத்தில், உற்பத்தி அதிகரிக்காத போதே மேன்மேலும் ஊதிய உயர்வு எதிர்பார்க்கும் மனப்பான்மை, மிக அதிகமான விற்பனை வரி, அபரிமிதமான மின் கட்டணம் முதலிய பாதகமான விஷயங்களையும் பட்டியல் போட்டிருக்கிறார்.

லஞ்ச ஊழல் அற்ற ஆட்சி தொழில் துறை வளர்ச்சிக்குச் சாதகமென்றால், பல்வேறு தொழிற்சங்கங்களிடையே உள்ள பகை உணர்வு பாதகம் என்று திரு மாம்மென் மாப்பிள்ளை கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறே கூறப்பட்ட பல்வேறு அபிப்பிராயங்களைக் கேட்ட பிறகு இறுதியாக முதலமைச்சர், துரிதமான தொழில் வளர்ச்சியே தமிழக அரசின் நோக்கம் என்று உறுதியளித்துள்ளார். புதிய தொழிலகங்கள் தொடங்க லைசென்ஸ் சம்பிரதாயங்கள், கடன் உதவி முதலியவற்றுக்கு இங்குமங்குமாக அலைந்து அல்லல்படாமல் ஒரே இடத்தில் எல்லாவற்றையும் முடித்துக் கொள்ள வசதியான ஏற்பாடுகளை அரசு கவனிக்கும் என்றும் சொல்லியிருக்கிறார். துரிதமான தொழில்துறை முன்னேற்றத்தின் மூலம் சுபிட்சம் மிக்க தமிழ் நாட்டைக் குறுகிய காலத்தில் உருவாக்கத் தொழிலதிபர்களின் ஒத்துழைப்பை வேண்டிய முதல்வர், உற்பத்தி உயர்வதற்குத் தடையாக உள்ள எல்லா அம்சங்களையும் கவனித்து அவற்றை நீக்கத் தாம் பாடுபடப் போவதாக வாக்களித்துள்ளார்.

தொழில்துறை முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான அடிப்படைத் தேவை மின்சாரம்தான். அதில் தன்னிறைவு பெற முடியாவிட்டாலும் அண்டை மாநிலங்களின் உதவியுடன் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்ய வேண்டும். ஹொகனக்கல் மின் திட்டம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் முதல்வர். அது நிறைவேற நீண்ட காலமாகுமென்றாலும் கர்நாடக முதல்வருடன் பேச்சு வார்த்தை நடத்து

வதைத் தாமதப் படுத்தப் போவதில்லை என்று அவர் கூறியிருப்பதை வரவேற்கிறோம்.

காடம்பாறை நீரூற்று மின் திட்டத்தின் பணிகளை அண்மையில்தான் முதல்வர் ஆரம்பித்து வைத்தார். மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட நீரை மீண்டும் மேல்நோக்கிக் குன்றின் மீது கொண்டு சென்று, மறுபடி உற்பத்தி நிலையத்துக்கு விசையோடு அனுப்பி, ஜெனரேட்டர்களை இயக்கி, மின் உற்பத்தி செய்வது இதன் சிறப்பு அம்சமாகும்.


தூத்துக்குடி அனல் மின் நிலையம் பூர்த்தியானதும், நெய்வேலியில் இரண்டாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டப்பட்டதும் மின்சார விநியோகத்தில் கணிசமான அபிவிருத்தி ஏற்படும். இதற்கிடையில் இருக்கிற மின்நிலையங்களைத் திறம்பட இயங்கச் செய்வதையும் மின் சப்ளையின் போது மின்சாரம் வீணாகாமல் திறம்பட நிர்வகிப்பதையும் மின் துறை அதிகாரிகள் தங்கள் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். மின்சாரம் திருடுவது, மின்சாரம் விணடிப்பது இரண்டுமே தேசத் துரோகமான செயல்கள் என்பதை மக்கள் அனைவரும் உணர வேண்டும்.

கிராமப்புறங்களில் சுமார் 25 லட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரக்கூடிய முந்நூறு விதமான சிறு தொழில்களைப் பற்றி நாயுடம்மா ஆய்வுக் குழு திட்டம் சமர்ப்பித்திருக்கிறது. இதன்படி அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். பாங்குகள் இதில் தொண்ணூறு சத விகிதத்தையும் மற்றதை அரசும் வழங்கும்.


அரசியலோ, லஞ்ச ஊழலோ, மோசடிகளோ தலையிட முடியாதபடி பாதுகாப்புக்களைச் செய்து கொண்டு திட்டத்தை அமல் படுத்த முடியுமேயானால், கிராம மக்களின் திறமைகளும் செயலூக்கமும் பொலிந்து அவர்கள் ஏழைமைப் பிடியிலிருந்து விடுபடுவார்கள். தமிழ்நாடு வளம் பெறும்.

நாயுடம்மா திட்டத்தை ஊறுகாய் போட்டு விடாமல் அமல் படுத்த முயற்சிகளை அரசு தீவிரமாக மேற்கொள்ளும் என நம்புகிறோம். திட்டம் வெற்றி பெற மக்களின் பூரண ஒத்துழைப்பும் தேவை. அத்துடன் அவர்களிடையே நேர்மை உணர்வும் பொறுப்புணர்ச்சியும் வளர வேண்டும். அரசோ வங்கியோ செய்கிற முதலீடு தங்கள் நலனுக்காக என்றாலும் தங்களுடையதே அல்ல, சமுதாயச் சொத்து என்கிற உணர்வு வேரூன்றினால்தான் அதனை விணடிக்காமல் பன்மடங்காகப் பெருக்குவதில் ஈடுபாடு காட்டுவார்கள்.

தொழில்துறையில் முதல்வர் மேற்கொண்டுள்ள இருவிதமான நன்முயற்சிகளும் அவருக்கும் தமிழகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் வரலாறு காணாத வெற்றியாக அமைய வேண்டும் என்று மனப் பூர்வமாக வாழ்த்துகிறோம்.



சப்ளை சரி இல்லே! பேஜாரா போச்சு!
நான் இன்னு பண்ணுவேன்?



மாணவர் உடையோ..
விவசாயி உடையோ..
வக்கீல் உடையோ...
எதை வேணுமானாலும்
போட்டு சமாளிக்கிறீங்க!
உடன் பிறப்பு





★ இளஞ்செல்வன் புத்தக வெளியீட்டு விழாவில்

மனம் கவர்ந்த மலேஷியா-8

சிவசங்கரி

பினாங்கின் பிரமுகர் வள்ளல் ரேனு நா. ரங்கசாமிப் பிள்ளை, காலைச் சிற்றுண்டிக்கு எங்களை அவர் இல்லத்துக்கு அழைத்திருந்தார்.

ஏ. ஸி. செய்யப்பட்ட பென்ஸ் காரை ஓட்டிக் கொண்டு அவரின் இளைய மகன் வந்து அழைத்துப் போனார்.

அருமையான சிற்றுண்டி. இடியாப்பம், இட்டிலி, தோசை, ஆப்பம் தொட்டுக் கொள்ளச் சட்னி, சாம்பார், மிளகாய்ப் பொடி—போதுமா?

வயிறு நிறைந்தது. ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம். ரேனுவின் மகனே அழைத்துப் போனார்.

விமானப் போக்குவரத்து சகஜமாவதற்கு முன், இந்தியாவிலிருந்து கப்பல் கப்பலாய்த் தமிழர்கள் வந்து இறங்கின இடம் பினாங்கு துறைமுகம் தான்.

''அங்கே பாருங்கள். அதுதான் புகழ் பெற்ற பினாங் சுங்க அலுவலகம். எங்கள் தாத்தாக்கள் எல்லாம் தமிழகத்திலிருந்துவந்து இங்கு கப்பல் இறங்கித்தான் மலேயாவின் மற்ற இடங்களுக்குச் சென்றார்கள். ஒரு காலத்தில் ஜே... ஜே... என்று இருந்த இடம். இப்போது வெறிச்சிட்டுப் போய்விட்டது.'' துரைராஜ் நினைவு கூர்ந்தார்.

பினாங்கின் பிரசித்தி பெற்ற பாம்புக் கோவிலுக்குச் சென்றோம். எல்லா சீனக் கோவில்களையும் போல் இந்தக் கோவிலும் சிவப்பு நிறத்துடன், கண்ணாடிகள் பதித்த அலங்காரத்துடன் சரிந்த அழகிய கூரைகளுடன் பளபளத்தது. படிகள் ஏறி மேலே போனால் நுழை வாயிலில் பாம்பு, பூஜிக்கும் மேடையில் பாம்பு, சாமான்கள் மேல் பாம்பு, தலைக்கு மேல் பாம்பு, காலடியில் பாம்பு — ஆக, சர்வம் பாம்பு மயம்!

முதலில் அவை பாம்புகள் என்பதையே நான் உணரவில்லை. பச்சையும், மஞ்சளுமாய் மெல்லிசாய், நீள நீளமாய் நகராமல் கிடந்ததால் கோவிலின் உட்பகுதி அலங்காரத்தில் இதுவும் சேர்த்தி என்று நம்பி விட்டேன்.

அவை அசைந்தபோதுதான் பாம்புகள் எனப் புரிந்தது. அப்புறம் சுற்றிப் பார்த்தால் எங்கும் பாம்புகள்தாம்.

ரப்பர் பாம்புகள் போல் அத்தனையும் இருந்த இடத்திலேயே கிடந்ததால் மனசில் பயம் எழவில்லை.

ஏன் இப்படி என்று விசாரித்தேன்.

விடாமல் கோவிலினுள் சீனர்கள் பிரார்த்தனைக்காக ஊதுபத்திகள் ஏற்றி வைத்துக் கொண்டே இருப்பதால் அந்தப் புகையின் வாசத்தில் மயங்கிக் கிடக்கின்றன என்றார்கள்.

நல்ல வாசனை, நல்ல மயக்கம்! இத்தனைக்கு இவை 'விரியன்' ஜாதியைச் சேர்ந்த பாம்புகள் என்றும் சொல்கிறார்கள்! முன்பெல்லாம் நூற்றுக் கணக்கில் இங்கு பாம்புகள் இருந்தனவாம். வரும் உல்லாசப் பயணிகளில் சிலர் பாம்புகளைச் செல்லப் பிராணிகளாக வளர்க்க ஆசைப்பட்டு நைஸாக அவைகளைப் பையில் போட்டுக் கொண்டு ஸாவ்னீராக எடுத்துப் போய் விடுவதால் இப்போது பாம்புகளின் எண்ணிக்கை குறைந்து போய் விட்டதாம். பாம்பென்றால் படையும் நடுங்கும் என்ற பழமொழி இந்தப் பாம்புகளுக்குப் பொருந்தாது. மஹா அசமஞ்சங்கள்!

இவைகளைக் கையில் பிடித்துக் கொண்டும், கழுத்தில் மாலையாக்கிக் கொண்டும் சிலர் போட்டோ பிடித்துக் கொண்டனர்.

''நீங்களும் எடுத்துக் கொள்ளுங்களேன்'' என்றார் குமணன்.

'ஆளை விடுங்கள்' என்று நான் நகர்ந்து விட்டேன்.

'கோவில்களால் ஆன தீவு' என்ற பட்டப் பெயருடன் விளங்கும் பினங்கில் தடுக்கி விழுந்தால், சீன, புத்த, கிறிஸ்துவ, இந்துக் கோவில்கள் தான்.


இவைகளில் குவான் யுன் என்ற சீனக் கோவில் ரொம்பப் பிரசித்தம். பாமர மக்களின் பராமரிப்பில் இருக்கும் இக்கோவி லின் தெய்வமான குவான் யுன்னுக்குப் பதினெட்டுக் கைகளாம். ஏழைகளின் கண் ணீரைத் துடைக்க இரண்டு கரங்கள் போதா தென்று இத்தனை கரங்களாம்!

துங்கு அப்துல் ரஹ்மான் அக்வேரியம் — மீன் காட்சிசாலை — ரொம்பச் சிறப்பானது என்று கேள்விப் பட்டு அங்கு போனோம். ரொம்ப ரொம்ப சாதாரணம். நம் பம்பாயின் அக்வேரியம் இதைவிட உசத்தியாக இருக் கிறது.

பினங் ஹில் என்பது அழகான ஒரு மலைக் குன்று. மேலே போகச் செங்குத்தான குட்டி ரயில் கூட இருக்கிறது. இதில் பயணம் செய் தால் பினங்கைச் சுற்றி இருக்கும் கடலையும், இயற்கைக் காட்சிகளையும் வெகுவாகக் கண்டு களிக்கலாம் என்றார்கள். போய் வர அரை நாளாவது ஆகும் என்பதாலும், மதியத் துக்குள் பினங்கை விட்டுக் கிளம்ப வேண்டி இருந்ததாலும் மலைக்குமேலே நாங்கள் செல்ல வில்லை.

ஆயிரக் கணக்கான புத்தர் சிலைகளைக் கொண்ட, அழகான புத்த மடாலயமான 'கெக் லோக் சி மொனாஸ்ட்டிரி'யைப் பார்த்து விட்டுப் பொடானிக்கல் கார்ட னில் ஒரு சுற்று சுற்றினோம்.

மரகதப் பச்சைத் தோட்டங்கள், நடுவில் அணை கட்டி நாற்பத்தைந்து ஏக்கருக்கு ஏரி உண்டாக்கி இருக்கிறார்கள். ரம்யமான இடம். இங்கு சிவாஜிகணேசன் சம்பந்தப்பட்ட ஒரு படத்தின் ஷூட்டிங் நடந்தது என்று



ஒரு கல்லூரி மாணவன், தனக்கு ஸ்காலர் ஷிப் கிடைக்குமா, பணம் கட்டவேண்டுமா என் பதை இரண்டு தரம் விசாரித்துவிட்டு, அப்பா வுக்குக் கடிதம் எழுதினான்.

அப்பா பதறி அடித்துக்கொண்டு வந்தார். காரணம் அவன் கடிதத்தில் இருந்த ஒரே ஒரு எழுத்துப் பிழை தான்.

கடிதம் இதோ-

அன்புள்ள அப்பா...

நானும் கொஞ்சகை விசாரித்தேன். அவர் ஒரு தாரம் கட்டுங்கிறார். மறுதாரம் வேண்டாம் கிறார். நான் என்ன செய்யட்டும்?

கடிதம் கண்டு சிரித்து மகிழ்ந்தவர்
வ. தேனப்பன்

ரேணுவின் மகன் சொல்லவும், நாங்களும் அந்தப் பின்னணியில் எங்களைப் பல போஸ் களில் படம் பிடித்துக் கொண்டோம்.


மலேஷியாவில் ப்ரபலமான எழுத் தாளர்களுள் ஒருவரான இளஞ்செல்வன் என்பவரின் புத்தக வெளியீட்டு விழா அன்று மாலை சுங்கை பட்டாணி என்ற இடத்தில் நடக்க இருந்தது.


ஒருவாரம் முன்பு நடந்த வானம்பாடி ஆண்டு விழாவிலேயே நான் இளஞ்செல்வனைச் சந்தித்திருந்தேன். சின்ன வயசுக்காரர் தான். ஆசிரியராக சுங்கையில் வேலை பார்த்துக் கொண்டே, எழுதும் எழுத்தாளர். இளஞ் செல்வனின் மனைவி சுந்தராம்பாளும் ஓர் எழுத்தாளர்தாம்.



★ பாம்பு கோயிலில் பாம்புகள்

★ பினங்கு பாம்பு கோயிலுக்கு முன்னால்





குண்டாக இருப்பவர்: இந்தக் கோடை காலத்தில் என் வயிறு மட்டும் 'ஜில்' என்று குளிர்ச்சியாக இருக்கிறதே... எதனால் டாக்டர்?
டாக்டர்: பானை வயிறாச்சே... அதனால்தான்!
-மஹாலக்ஷ்மி

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

மலேஷியாவில் நாங்கள் சந்தித்த எழுத்தாளர்களில் ஒருவர் கூட எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர் இல்லை. கை நிறைய சம்பளம் வரும் உத்தியோகத்தில் பலர் ஆசிரியராக டெலிவிஷனில் வேலை செய்பவராக இருந்து கொண்டு எழுத்தைப் பகுதி நேர வேலையாக மட்டுமே வைத்துக் கொண்டிருக்கின்றனர். (வானம்பாடி ஆசிரியர் குமணன் கூட டிவியில் பார்ட் டைம் உதவியாளராக இருக்கிறார்.)

வறுமையில் வாடும் எழுத்தாளர்களை நாங்கள் சந்திக்கவேயில்லை என்பதை சந்தோஷத்துடன் குறிப்பிட வேண்டும். சொந்த வீடு, ஃப்ரிஜ், ஸ்கூட்டர் என்று தரமான வாழ்க்கையை எழுத்தாள நண்பர்கள் அனுபவிப்பது மனசுக்கு இதத்தைத் தரும் விஷயம். இளஞ்செல்வனின் பசித்திருக்கும் இளம் கொக்குகள் என்ற கதை, சில நாட்களுக்கு முன் வானம்பாடியில் தொடராக வந்து பிரச்னைக்குரிய கதையாக பரபரப்பாக விவாதிக்கப்பட்டு, இப்போது புத்தகமாக உருவாகி உள்ளதை நான் வெளியிட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

மலேஷியாவில் நான் கலந்து கொண்டு வெளியிட்ட புத்தகங்கள் இரண்டு, ஒன்று இளஞ்செல்வன் புத்தகம், மற்றது எல். முத்துவின் 'விரதங்கள்' இவ்விரண்டு விழாக்களிலுமே புத்தகத்தை விற்பதற்கு நிர்வாகிகள் செய்திருந்த ஏற்பாடு எனக்குமே புதுசாய் இருந்தது.

விழாவுக்கு நாலு நாட்கள் இருக்கும் போதே, ஒரு காகிதத்தில், 'இன்ன புத்தகம், இன்ன விலை, இன்னாருக்குத் தேவை' என்று அச்சடித்து விநியோகித்து விடுகிறார்கள். விழாவுக்கு வருவதற்கு இயலாத தோட்ட வாசிகளும், மற்றவர்களும் ஒவ்வொரு தாளிலும் தங்களுக்குத் தேவையான புத்தகம், தங்கள் பெயர், விலாசம், அனுப்பும் மொத்த பணம் இவற்றைக் குறிப்பிட்டு விழா நிர்வாகிகளுக்கு அனுப்பிவிடுகிறார்கள். விழாவுக்கு நேரில் வர முடிந்தவர்கள் அங்கேயே ஒரு தாளை வாங்கிப் பூர்த்தி செய்து கொடுத்து விடுகிறார்கள்.

வரவேற்பு, சிறப்பு உரைகள் முடிந்து, புத்தக வெளியீடு ஆனதும், நிர்வாகி தன்னிடம் உள்ள தாள்களில் கண்ட பெயர் விவரங்களை மைக்கில் படிக்கிறார். நேரில் வந்திருப்பவர்கள் தங்கள் பெயரைச் சொன்னதும் மேடைக்கு வந்து பணத்தை விழாத் தலைவரிடம் கொடுத்துப் புத்தகத்தைப் பெற்றுப் போகின்றனர்.

கிட்டத்தட்ட அரைமணி போல நான் தொடர்ந்து நின்று வந்த வாசகர்களுக்குப் புத்தகம் வழங்கினேன். அன்றைக்கு ரெக்கார்ட் ஸேலாம்: சுமார் எண்ணூறு வெள்ளி வருமானம் என்று மைக்கில் சொன்னார்கள்.

''எதற்காக இப்படி ஒரு விற்பனையைச் செய்கிறீர்கள், இதனால் என்ன ஆதாயம்?'' என்று இளஞ்செல்வனைக் கேட்டேன்.

''இங்கு புத்தக வெளியீட்டாளர் என்று யாருமே கிடையாது. எங்கள் புத்தகங்களை நாங்களே வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதால் விழா வைத்து விற்றால்தான் உண்டு. இல்லாவிட்டால் விற்பனை ஆகாமல் தேங்கிவிடும். வாசகர்கள் பெயரை மைக்கில் அறிவித்து அவர்களை மேடைக்கு அழைப்பதில் புத்தகத்தை வாங்குபவருக்கு ஓர் உற்சாகம், திருப்தி இருக்கிறது. அதனால் நிறைய பேர் வாங்க முன் வருகிறார்கள்'' என்று விளக்கினார்.

இளஞ்செல்வன் காரமாக எழுதுகிறார், மனசைத் தைக்கிற மாதிரி சின்னச் சின்ன வார்த்தைகளை எழுத்தில் கையாளுகிறார்.'


விழா இனிது நடந்தேறிய பிறகு இளஞ்செல்வன் வீட்டில் விருந்து. அதை ஒரு கை பார்த்து விட்டு இரவு பணி ஒன்றரைக்கு எங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலுக்கு வந்தோம்.

அந்நேரத்திலும் கும்பல் கும்பலாய் வராந்தாக்களிலும், வரவேற்புக் கூடத்திலும் அமர்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்த இளைஞர், வயசுப் பெண்களைக் கண்டபோது ஆச்சரியமாக இருந்தது. (தொடரும்)

இந்த இதழ் அச்சேறும் போது ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண், பம்பாய். ஜஸ்லோக் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆபத்தான கட்டத்தைத் தாண்டி அவர் உடல் நலம் பெற வேண்டும் என்று பிரதமர் முதல் பாமரர் வரை அனைவரும் செய்யும் பிரார்த்தனையில் நாமும் சேர்ந்துகொண்டு இறைவனை வணங்குகிறோம்.

தியாக வல்லபன்

விக்கிரமன்



அத்தியாயம் 1

குழந்தை மலர்கள்

வெள்ளைநிற விநாயகருக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிப்பது போல, காவிரி நதி அங்கே வலம் வந்து கொண்டிருந்தது.

இளவேனில் காலத்து, ஒரு நாள் இளங் காலைப்போது. கதிரவனின் உதயத்தை அறிவிக்க, வானத் திரைச் சீலையில் வண்ணச் சித்திரங்கள் எழுந்தன. மெல்லிய செம்பொற் கதிர்கள் சலசலவென்று ஓடும் பொன்னி ஆற்றில் மெல்லத் தவழ்ந்து வந்தன. நீராடு துறையில் நீராட வருவோரும், இருள் பிரியு முன்பே நீராடி, நனைந்த ஆடையை உடுத்திய வரும், கவிழ்ந்து வளைந்திருந்த மரக்கிளைகளின் மீதிருந்து ஆழமான இடத்தில் குதித்து நீந்துவோருமாக நீராடுதுறை களை கட்டி விட்டது.

கரையோரமாகத் இ ழும் தோப்புக்களிலிருந்து மிகமிக அவசரமாகப் புள்ளினங்கள் பறந்து சென்றன. எருமைகள், சிறுவீடு மேய்ந்து கொண்டிருந்தன.

திருவலஞ்சுழி ஆலயத்தை ஒட்டியுள்ள பூந்தோட்டத்தில் மல்லியண்ணன், அன்றலர்ந்த இளமலர்களைக் கொய்து கொண்டிருந்தான். முல்லையையும், இருவாட்சியையும் செண்பகத்தையும் அவன் பார்த்துப் பார்த்துப் பறிக்கும் விதமே அலாதிதான். ஏதோ அந்த மலர்களை அன்றுதான் முதன் முதலாகப் பார்ப்பது போன்ற ஒருவிதப் பிரமிப்பு அவனிடமிருந்தது. காலை இளம் போதில் அவன் பூக்கொய்யும் பணியைச் செய்து பல மாதங்களாகி விட்டன. சிறிது நேரம் சென்றால் உதவி செய்யப் பணியாட்கள் வந்துவிடுவர். அவனுடைய அருமை மகள் அல்லிவிழி தான் இருள் பிரியா முன்னர் எழுந்திருந்து பூக்களைப் பறிப்பாள். திருவேரகத்துச் சுவாமிநாதன் திரு மார்பை அலங்கரிக்கவும், திருவலஞ்சுழி கற்பக நாதருக்குக் காணிக்கையாக்கவும் அந்த மலர்கள் செல்லும். அரசர் இராஜராஜன் திருமார்பை அலங்கரிக்கப் பழையாறை மாளிகைக்குச் செல்லும். ஆயிரந்தளி மாளிகையிலுள்ள அந்தப்புரப் பெண்டிர் கூந்தலை அழகு படுத்தச் செல்லும்.

"அல்லி" என்று குரல் கொடுத்தான் மல்லியண்ணன். சிறிது நாட்களாகவே அல்லி அதிகாலைப் போதில் எழுந்திருப்பதில்லை. விழித்துக் கொண்டாலும் பாயில் படுத்துக் கொண்டு ஏதோ சிந்தித்தவாறிருக்கிறாள். அவள் விழிகளிலிருந்து நீர் கசிந்துருகித் தலையணையை நனைக்கின்றன. அவள் மார்பு விம்மித் தணிகிறது. மல்லியண்ணனுக்குத் தெரியும் மகளின் துயரம். குழந்தை இறந்த துயரத்தால் வாடும் மகளை என்ன கூறி அவனால் தேற்ற முடியும்?

தோட்டத்து வாவியிலுள்ள செங்கழுநீர் மலரைப் பார்த்து அவள் சிரிப்பாள். பூத்துக் குலுங்கி நிற்கும் மல்லிகைப் பந்தல் அருகே செல்வாள். பூமித்தாய்க்கு அர்ச்சனை செய்தாற்போல் பரவிக் கிடக்கும் பவழ மல்லிகை மலர்களைக் கை நிறைய, எடுத்துக் கண்களில் ஒத்திக் கொள்வாள். இருவாட்சியும், சாமந்தியும் பூத்து நிற்கும் செடிகளருகே செல்வாள். அவை எல்லாம் அவளது குழந்தைகளாகத் தோன்றும். அவளுடைய துயரத்தை மாற்றுவதற்கு மாறாக அவை அதிகப் படுத்தும். பூச்செடிகளின் சூழலிலிருந்து ஓடோடி வந்து நந்தவனத்து நடுவே திகழும் குடிலின் உள்ளே நுழைந்து தரையில் படுத்துவிடுவாள்.

மல்லியண்ணன் பெருமூச்சு விடுவான். குழந்தையைப் பறி கொடுத்த துக்கத்தை எப்படி மாற்றுவது என்று தெரியாமல் திண்டாடுவான். தன்னந்தனியனாகப் பூக்களைப்

பறித்து வந்து மகளருகே தொடுத்துக் கொடுக்கக் குவிப்பான்.

"அல்லி" என்று மீண்டும் குரல் கொடுத்தான் மல்லியண்ணன். இன்று இருள் பிரியுமுன்பே, அல்லி விழித்து எழுந்து விட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். அவனது குரலுக்கு மறுமொழி வரவில்லை. ஆனால், இனிய இசை மிதந்து வந்தது.

'என்ன புண்ணியம் செய்தனை
நெஞ்சமே! இருங்கடல் வையத்து
முன்னம்நீ புரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தாளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும்
வழிபடும் அதனாலே...!'

மல்லியண்ணன் சாளரம் வழியே எட்டிப் பார்த்தான்.

அல்லியின் கரங்கள் மிக வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. இருவாட்சியும், மல்லிகையும் அவள் விரல்களின் ஸ்பரிசம் பட்டுச் சிரித்தன. நோக்கப்பட்ட மலர்கள் வளைந்து நெளிந்து ஹாரமாகத் தரையில் திகழ்ந்தன.

இனிய குரலெடுத்து அவள் பாடிப் பல மாதங்களாகி விட்டன. அல்லியின் மனத் துயர் மெல்லக் குறைகிறது என்று அறிந்தான் மல்லியண்ணன்.

யாரோ, நந்தவனத்துச் சுற்று வேலிப் படலைத் திறந்து கொண்டு வருவது தெரிந்தது. மல்லியண்ணன் உற்றுப் பார்த்தான். போர்வையால் தலைமுதல் கால்வரை போர்த்தியிருந்ததால் அவனுல் அடையாளம் காண முடியவில்லை.

"யாரது" என்று குரல் கொடுத்தான். மல்லியண்ணன். "ஸ்" என்று உதட்டின் மேல் விரலை வைத்துச்



சைகை செய்த அந்த உருவம் அருகே வந்து போர்வையை விலக்கியது.

"ஆ, தாங்களா?" என்று வியப்புடன் கூவிய மல்லியண்ணன், "ஐயா, வாருங்கள் வாருங்கள். இந்தக் குடில் என்ன பாக்கியம் செய்ததோ?" என்று பரபரப்புடன் அவரை உட்கார வைக்க இருக்கையைத் தேடினான்.

பெருமான் நம்பிப் பல்லவராயன் சுற்று முற்றும் கம்பீரமாகப் பார்த்தார். சக்கரவர்த்தி இரண்டாம் இராஜராஜ சோழரின் வலது கரம்போல் விளங்கும் அவர், சோழ நாட்டுப் படைத் தலைவர்.


"மல்லியண்ணா, உள்ளே பாடுவது உன் மகள்தானே?" என்று கேட்ட அவர், "உன் மகளுக்குக் குரலினிமை சிறந்திருக்கிறது" என்றார்.

"ஆமாம், ஐயா! அவள் பாடிப் பல நாட்களாகின்றன. குழந்தையைப் பறி கொடுத்த பிறகு அவள் ஊமையாகி விட்டாள். இன்றுதான் அவள் பறவை போல் கலகலப்பாக இருக்கிறாள்" என்றான் மல்லியண்ணன்.

"அடடா, குழந்தை இறந்த ஏக்கமா? உனக்குப் பெயரனைப் பிரிந்ததால் வருத்தமிருக்கும். உன் மருமகனார் எங்கே இருக்கிறார்?" என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே கேட்டார் பெருமான் நம்பி.

"அவனை உங்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது, ஐயா! ஆயிரத்தளி அரண்மனையில் பணியாற்றுகிறான். குழந்தையைப் பறி கொடுத்த அல்லிக்கு ஆதரவாயிருந்து அவள் துயர் துடைக்காமல் வீட்டுப்பக்கம் வராமல் எங்கோ சுற்றுகிறான்" என்று மல்லியண்ணன் குறைப்பட்டுக் கொண்டான்.

"குழந்தையைப் பறி கொடுத்த ஏக்கமும், கணவனின் பிணக்கும் என் மகளைப் பித்துப் பிடித்தது போல் செய்து விட்டன. இன்று நல்லநாள். தங்கள் வருகையால் இந்த நந்தவனமே மணக்கிறது..." என்று கூறிய மல்லியண்ணனைக் கையமர்த்தி, "மல்லியண்ணா! நன்றாகப் பேசுகிறாய். இந்த நந்தவனத்துக்கு நான் வராமலேயே மணமிருக்கிறது. அதிகம் பேச நேரமில்லை. உன் மகளாலும், உன்னாலும் எனக்கு மிகப்





ஒரு திருடன் வைக்கோல் போரிலிருந்து வைக்கோல் திருடிக்கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த ஒரு குடியானவன் ''ஏன் வைக்கோலை எடுக்கிறாய்?'' என்று கேட்டான்.

''அதோ அந்த மாட்டுக்குப் போட'' என்று குடியானவனின் மாடுகளைக் காட்டினான்.

''இது என்னுடைய மாடு. இதன் மேல் உனக்கு ஏன் அவ்வளவு அக்கறை?''

''இது உன்னுடையதா?'' என்று வைக்கோல் போரைக் காட்டினான் திருடன்.

''இல்லை.''

''அப்படியானால் ஏன் உனக்கு அவ்வளவு அக்கறை?'' என்று சொல்லி விட்டு வைக்கோலைச் சுருட்டிக் கொண்டு நகர்ந்தான்.

- மூர்த்தி

பெரிய காரியமாக வேண்டும். அதனால்தான் நானே வந்தேன்...'' என்று மெல்லிய குரலில், அழுத்தமாகப் பேசிய பெருமான் நம்பி மேல் போர்வையைச் சரிசெய்துகொண்டார்.

உள்ளேயிருந்து கேட்ட பாடல் ஒலி நின்றது. '' அல்லி'' என்று குரல் கொடுத்த மல்லியண்ணனை நோக்கி ''உம்... இப்போது அவளை இங்கே அழைக்காதே. நான், சொல்வதை விவரமாகக் கேள். பிறகு உன் மகளிடம் கூறலாம்'' என்றார்.

''ஐயன்மீர், கட்டளையிடுங்கள், நான் காத்திருக்கிறேன். இட்ட பணியை நிறைவேற்ற. கட்டளையிடத் தாங்களே நேரே வரவேண்டுமா? சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேனே'' என்று மல்லி பணிவும் பரிவும் நிறைந்த குரலில் கூறினான்.

இதுவரை நின்று கொண்டிருந்த பெருமான் நம்பி திண்ணையில் உட்கார்ந்தார். திண்ணை நன்றாக மெழுகப்பட்டு மாக்கோலம் இடப்பட்டிருந்தது.

பெருமான் நம்பி நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டார். களைப்பு என்பதே அறியாத அவருக்குச் சிறிது நாட்களாகக் களைப்புத் தலைதூக்குகிறது. கவலையின் காரணமாக இருக்கலாமே தவிர முதுமை அவரை வாட்டுகிறது என்பதனால் இருக்க முடியாது.

''மல்லியண்ணா! கூப்பிட்டனுப்பியிருந்தால் நீ ஓடி வந்து விடுவாய் என்பது எனக்குத் தெரியாதா? ஆனால், நானே இந்தக் காலைப் பொழுதில் உன்னைத் தேடி வந்திருக்கிறேன் என்றால் அதிலுள்ள முக்கியமும், அவசரமும் தான் காரணம். உன் குடும்பத்தால் அரச குலத்துக்கு, இந்தச் சோழ நாட்டுக்கு, ஆக வேண்டிய மகத்தான காரியமொன்றிருக்கிறது..''— பெருமான் நம்பி சொல்லிக் கொண்டே போகும் போது, மல்லியண்ணன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவன் பார்வையில் கம்பீரமிருந்தது. மார்பை நிமிர்த்திக் கொண்டான்.

''சோழ நாட்டிற்கு என் குடும்பத்தால் ஆக வேண்டியதைச் சொல்லுங்கள், ஐயா சொல்லுங்கள். மலர் தொடுத்தளித்துச் செய்யும் கைங்கர்ய பலன் இன்று கைமேல் கிட்டிவிட்டது. இந்த ஏழையால் சோழ நாட்டிற்கும் ஏதாவது துரும்பு எடுத்துப் போட முடியுமென்றால் அதைவிட ஆனந்த மூட்டும் செய்தி வேறு என்ன இருக்கிறது... சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள்...'' என்று கூறிக் குடிலுக்குள் செல்ல எத்தனித்த மல்லியண்ணனை நோக்கிப் பெருமான் நம்பி,

''மல்லி, நீ உள்ளே செல்ல முயல்வதன் காரணம் எனக்குத் தெரிகிறது. இந்தக் காலை வேளையில் மோர் விட்டுக் கூழ் கரைத்துக் கொண்டு வருவாய். வேண்டாம்; சிரமப்படாதே. அதற்கெல்லாம் நேரமில்லை. ஆக வேண்டியவற்றை நான் கூறி விட்டு மன்னரைக் காணப் பழையாறை செல்ல வேண்டும்'' என்றார்.

''ஐயா, இந்த ஏழைக்குக் கிடைத்துள்ள அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இந்த நாட்டிற்கு என் குடும்பத்தார் என்ன செய்ய வேண்டும்; கட்டளையிடுங்கள். என் குடும்பம் என்பது இப்போது என் மகளையும் என்னையும் தவிர வேறு யாருமில்லை. என் மருமகன் மீது எனக்கு நம்பிக்கை இல்லை... அவன் திருந்தி வந்து, என் மகளை மகிழ்வித்தால் அது வலஞ்சுழி கற்பகநாதர் அளிக்கும் அருளால்தான் முடியும்'' என்று மல்லி உணர்ச்சி பொங்கக் கூறினான்.

''மல்லியண்ணா, இந்த நாட்டில் நடக்கும் விவகாரங்களை அறிந்து கொள்வதில் நீ எப்போதாவது 'ஆர்வம் காட்டியதுண்டா?'' என்று பெருமான் நம்பி பீடிகையுடன் தொடங்கினார்.

மல்லி மெல்ல நகைத்து, ''எனக்கு அதற்கெல்லாம் நேரமேது ஐயா? நந்தவனத்தைப் பண்படுத்துவது, உரமிடுவது, களை பிடுங்குவது, பூக்கும் புதுமலரைக் கண்டு ஆனந்திப்பது இவை தவிர நான் சிந்தனையை வேறு எதிலும் செலுத்துவதில்லை. வலஞ்சுழி கற்பக நாதர் அருளும், சேர, பாண்டியர்களை நடு நடுங்க வைத்த தங்களைப் போன்ற பெரிய படைத்தலைவர்களும் இருக்கும்போது என்னைப் போன்றவர்கள் அதில் நாட்டங்கொள்வதேதற்கு?...'' என்றான்.

''மல்லி! அப்படிச் சொல்லாதே. சோழ நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம் நாட்டைப் பற்றிக் கவலை கொள்ளும் காலம் வந்து விட்டது. சோழ மன்னர் ராஜராஜனுக்கு எதிராகத் திட்டமிடுகிறார்கள் சிலர்...''

''ஐயா! நான் கேள்விப்பட்டது உண்மையா, சோழ மகாராஜா உடல்நலம் சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருக்கிறார்களாமே...'' என்று மல்லியண்ணன் கவலையுடன் கேட்டான்.

''ஆமாம், மல்லி. அதைப் பயன்படுத்திக் கொண்டு வேண்டியவர்கள் போல் நடித்துச் சிலர் சதி செய்கிறார்கள். சோழ நாட்டையே தங்களுடையதாக்கிக் கொள்ள விரும்புகிறார்கள்'' என்று பெருமான் நம்பி கூறும் போது, ''ஆ... அப்படியா?'' என்று மல்லி கூவினான்.

''மல்லி! அதிகமாக வளர்த்திக் கொண்டு பேச நேரமில்லை. நீயே புரிந்து கொள்வாய். உன் நந்தவனத்து மலரைப் போல் எண்ணிச் சோழ மன்னரின் மீதும் நீ கவனம் செலுத்தப் போகும் காலம் நெருங்கி வந்து விட்டது. மிக நம்பிக்கைக்கு உரிய ஒருவரை நான் சில நாட்களாகத் தேடி வந்தேன். மற்றவர்கள் கவனத்தில் படாது ஒதுங்கித் தன் வேலையும் தானுமாய் இருக்கும் ஒருவரைத் தேடி வந்தேன். அதற்கு ஏற்றவன் நீதான்...''

பெருமான் நம்பி இவ்வாறு சொல்லச் சொல்ல மல்லியின் பரபரப்பு அதிகமாயிற்று.

''மல்லி! நமது மாமன்னருக்குப் பிறகு நாட்டைத் தாமே ஆள வேண்டும் என்று சிலர் துடிக்கிறார்கள். மன்னருக்கு வாரிசு இல்லை என்று அவர்களுக்குள் நினைக்கின்றார்கள்.'' – என்று பெருமான் நம்பி கூறினார்.

''எனக்குக் கூடக் கவலையாக இருக்கிறது ஐயா, நமது மகாராஜா யாருக்கு இளவரசுப் பட்டம் சூட்டப் போகிறார்...?'' என்று மல்லி கேட்டான்.

''அதைப்பற்றி இப்போது பேசிக் கொண்டிருக்க நான் வரவில்லை. எல்லோரும் நினைப்பதுபோல் மாமன்னருக்கு வாரிசு இல்லாமல் போகவில்லை. சோழ சூரியன் அஸ்தமித்து விடவில்லை. மன்னருக்கு வாரிசு இருக்கிறது. இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்கள்...'' என்று கூறிச் சற்று நிறுத்தினார் பெருமான் நம்பி.

''நமது மாமன்னருக்கு இரண்டு புதல்வர்கள் இருக்கிறார்களா?'' மல்லி ஆவலுடனும், அதிசயத்துடனும் கேட்டான்.

''ஆம், கங்கை கொண்ட சோழபுரத்தில் இருக்கிறார்கள். உன் மகன் பெற்ற குழந்தையை இழந்து பரிதவிக்கிறாள். ஆனால் அங்கு இரு பாலர்களும், பெற்ற தாயை இழந்து, சீராட்ட, பாராட்டத் தக்கவரின்றித் தவிக்கிறார்கள். அந்த இரு குழந்தைகளையும் கொன்றுவிடத் திட்டமிடுபவர்களைப் பற்றிய செய்தி இப்போதுதான் எனக்குக் கிடைத்தது. அதனால் அக்குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை உணர்ந்து நான் இங்கே ஓடோடி வந்தேன்...''

பெருமான் நம்பி, மல்லியின் முகத்தையே உற்றுப் பார்த்தவாறு பேச்சைச் சற்று நிறுத்தியவுடன், மல்லி மிகுந்த பரபரப்படைந்தான்.

''ஐயா, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உடனே சொல்லுங்கள். பாலின்றிப் பாலர்கள் பரிதவிப்பதை மாற்ற அரச குடும்பத்தில் எத்தனையோ பேர் இருப்பார்கள். நாங்கள் என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள்...'' என்று துடி துடிப்புடன் கூவினான்.

''மல்லி! அந்தத் தாயில்லாக் குழந்தைகளுக்குப் பாலூட்டும் பொறுப்பை உன் மகள் ஏற்க வேண்டும்'' என்ற நம்பியின் குரல் கேட்டு, அதுவரை அங்கு கதவருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த, அல்லி தன் மார்பை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு விழிகளை மெல்ல மூடிக் கொண்டு விம்மினாள்.

''ஆகா, அந்தப் பாக்கியம் என் மகளுக்குக் கிடைக்கிறதா; சோழ சக்கரவர்த்தியின் குழந்தைகளைப் பாலூட்டி வளர்க்கும் பொறுப்பு என் மகளுக்குக் கிடைக்கிறதா! சற்று முன்பு பாடினேனே என்ன புண்ணியம் செய்தேனோ என்று — 'முற்பிறவி புண்ணியத்துக்கான பலன் கிடைத்து விட்டது... சொல்லுங்கள் ஐயா சொல்லுங்கள்... நான் என்ன செய்ய வேண்டும், என் மகள் என்ன செய்ய வேண்டும் என்பதை உடனே சொல்லுங்கள்'' என்று பரபரத்தான் மல்லியண்ணன்.



ஒருவர்: அந்த ஹோட்டலில் எல்லா சப்ளையர்களும் இராணுவ உடையில் இருக்கின்றனரே. ஏன்?

மற்றவர்: அதுதான் மிலிடெரி ஓட்டலாச்சே! அ. கல்யாணசுந்தரம்.

பெருமான் நம்பி சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு மெல்லிய குரலில், ''மல்லி, நீ மிகவும் எச்சரிக்கையுடன் கவனமாகச் செயல் படவேண்டும். உன் மகள் இன்று இரவே கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறாள். அங்கே பெரிய நாச்சியார் அம்மங்கை தேவி இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உன் மகள் இரு குழந்தைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அழும் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். அரசியின் குழந்தைகள் அவை. அக் குழந்தைகளை இன்னும் சில நாட்களிலே கொன்று விட, உடன் கூட்டத்தார் சதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குள் குழந்தைகளை இங்கே கொண்டு வர வேண்டும்.''

பெருமான் நம்பி, இட்டத்தைக் கூறியவுடன் மல்லிக்கு உடனே ஏதும் பேசத் தோன்றவில்லை. ''ஆகா! கங்காபுரியில், அம்மங்கை தேவியார் இன்னும் உயிருடன் இருக்கிறார்களா? கங்கத் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவரின் திருமகளார் பெரிய நாச்சியாரான அம்மங்கை தேவியாருக்கு எழுபது பிராயத்துக்கு மேல் இருக்குமே?'' என்று மல்லியண்ணன் தன் பிரமிப்பை வார்த்தைகளால் புலப்படுத்த முயன்றான்.

''மல்லி! அரச குழந்தைகளை எடுத்துவரப் படைவீரர்களும், பரிவாரங்களும், பணிப் பெண்களும், அந்தப்புரத்து மாதர்களும் இருக்கும் போது என் சிறிய மகள் எப்படிக் காப்பாற்றுவாள் எனக் கவலைப்படுகிறாயா? தில்லையம்பல நடராசர் அருளால் உன் மகளுக்கு மகத்தான திறமை வரப் போகிறது. கங்கை கொண்ட சோழபுரத்து அந்தப்புரத்தில் வசிக்கும் அரச குடும்பத்து மகளிர் அனைவரையும் மாளிகையோடு தீயிட்டுக் கொளுத்திக் கூண்டோடு கைலாசம் அனுப்பத் திட்டமிட்டிருக்கும் சதிகாரர்களின் திட்டம் நிறைவேறாமல் எனது பரிவாரங்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால், அந்தக் குழப்பத்தில் அரச பாலகர்களுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது. பசியால் பால் நினைந்து அழும் குழவிகளின் குரல் வெளியே ஒலித்தால் திட்டம் பாழாகி விடுமே! அதனால்தான் மகவை இழந்த உன் மகள் தாயற்ற அக் குழந்தைகளை அழாமல் காப்பாற்றுவாள் என்று உறுதியுடன் நம்புகிறேன்'' என்றார். இயற்கையாகவே கம்பீரமான தோற்றமுடைய நம்பி இப்போது விழிகள் ஜ்வலிக்க நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

மல்லியண்ணன் உணர்ச்சி பொங்க விம்மினான். அவர்கள் பேசுவதைக் கதவருகே நின்று கேட்டுக் கொண்டிருந்த அல்லியின் மார்பகத்திலிருந்து தாய்மை உணர்ச்சி பிரவகித்தது.

''மல்லி, மிகமிக எச்சரிக்கையுடன் நீ நடந்து கொள்ள வேண்டும். கயாமிமலை கோயில் அருகே கூண்டு வண்டி ஒன்று இன்றைய மாலைப் பொழுதில் நிற்கும். அதில் பல பயணிகள் இருப்பர். உன் மகளும் அவர்களுடன் கங்காபுரிக்குச் செல்லும் பூக்காரியைப் போல் பயணமாகிறாள். தக்க சமயத்தில் அவளுக்கு ஆலோசனைகளும், உத்தரவுகளும் உதவிகளும் வரும். இதோ இந்த முத்திரை மோதிரத்தை அவளிடம் கொடு. சமயத்துக்கு இது பெரும் உதவி புரியும்'' என்று கூறி விட்டு உடனே புறப்பட்டார் பெருமான் நம்பி.

அவர் போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்த மல்லி, சோழ அரசிளங் குமரர்களைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு தனக்களிக்கப் பட்டிருப்பதைப் பற்றிப் பெருமகிழ்ச்சியடைந்தான். அல்லியோ இரு குழந்தைகளை அணைத்து அமுதூட்டும் சுகமான கற்பனையில் மிதந்தாள்.

அந்தச் சமயம் இவ்வளவு நாட்களாக வராத அவள் கணவன் குடிலின் வாயிலில் வந்து நிற்பதை அவர்கள் இருவரும் கவனிக்கவில்லை. (தொடரும்)

தாளிப்பு
கடுகு


யாருக்கென்று ஆடுவார் ஒரு டைப்பிஸ்ட்!



மணிப்பூர் அரசின் பிராணி நலத்துறை இலாகாவில்; ஊழியர்களை விட ஆபீஸர்கள் அதிகம்.


ஒரு செகரட்டரி, ஒரு இணை காரியதரிசி, ஒரு டெபுடி செகரெட்டரி ஒரு அண்டர் – செகரட்டரி ஆகிய நாலு பெரிய அதிகாரிகள் உள்ளனர்.

மற்றபடி இலாகாவில் ஒரு செக்ஷன் ஆபீஸர், ஒரு டைப்பிஸ்ட் ஆகிய இருவரே உள்ளனர்.



டென்னிஸ் மட்டை, பந்தைத் தாக்கும் போது மையப் பகுதியால் தாக்குவதே சிறந்தது. அப்போதுதான் பந்து விசையுடன் எதிர்ப்பக்கம் திரும்பிச் செல்லும். பந்தை மட்டையின் மையப்பகுதி கொண்டே அடித்து அடித்துப் பழக வேண்டும். இதில் பயிற்சி பெறுவதற்காக மையப் பகுதியில் மட்டும் வலைப்பை அமைப்புக் கொண்ட டென்னிஸ் மட்டைகள் அமெரிக்காவில் விற்பனையாகின்றன. இதில் பந்தைப் பிடித்துப் பழகினால் அந்த மையப் பகுதியால் பந்தைத் தாக்கும் திறன் நாளடைவில் உண்டாகி விடும்.

- நன்றி : நியூஸ்வீக



உங்கள் வீட்டு டெலிவிஷனில் 3–டி (3–D) படம் பார்க்க ஒரு சுலபமான வழி இருக்கிறது. தபால் கார்டு மாதிரி ஒரு அட்டையை எடுத்து அதில் குண்டூசியில் ஓர் ஓட்டை குத்திவிடுங்கள். ஒரு கண்ணின் முன்னே அட்டையை வைத்து அட்டை வழியாகப் பாருங்கள். மற்ற கண்ணை மூடக் கூடாது.

இப்படிப் பார்க்கும் போது டிவி படங்கள் மூன்று பரிமாணம் பெறுவது தெரியும்.

(சயன்டிபிக் அமெரிக்கன் பத்திரிகையில் வந்த தகவல்)

ஒன்றரை வருடத்தில் 354 நாட்கள் டூர்!

ஹரியானா அமைச்சர் டாக்டர் மங்கள் ஜெய்னின் ரிகார்டு இது:

ஜூலை 77லிருந்து டிசம்பர் 78 வரை அவர் 354 நாட்கள் டூர் சென்றிருக்கிறார். அசெம்பிளியில் அதிகார பூர்வமாகத் தரப்பட்ட தகவல் இது.

கமலா தேவி என்ற அமைச்சர் 290 நாட்களும், வீரேந்திரசிங் என்கிற அமைச்சர் 274 நாட்களும் டூர் போயிருக்கிறார்கள்!

உலகில் மகிழ்ச்சியைப் பெருக்க ஒரே வழி அதைப் பலருடன் பகிர்ந்து கொள்வதுதான்!

— பால் ஷெரர்



ஸ்பென்ஸர்ஸ் பழரசங்கள்
இயற்கை தன் செல்வத்தை மனிதர்கட்கு
பழங்கள் மூலம் அள்ளித்தருகிறது.
மாம்பழத்தின் கதுப்புச் சுவை, ஆரஞ்சின்
இனியசுவை, திராட்சையின் சாறு மற்றும்
அன்னாசியின் முழுமை பொருந்திய
பழச்சாறு ...ஆம் இயற்கை இவைகளை
தன் செல்வமாக கொழிக்கின்றது.
அச்சத்துக்களை, எப்போதும் தரமான
பொருள்களையே தயாரித்தளிக்கும்
ஸ்பென்ஸர் நிறுவனம் உங்களுக்காக
பாட்டில்களில் அடைத்து தருகின்றது.
Spencer's
ஸ்பென்ஸர்ஸ் பழரசங்கள்
புதுமை குன்றா பழரசங்கள்
அன்னாசி, ஆரஞ்ச், திராட்சை
மற்றும் மாம்பழம்
ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்
S 2836 TAM

மனோரமா அறிவிக்கும் பரிசுத் திட்டம்!



இந்த இதழில் கல்கி வாசகர்கள் எழுதிய பல நகைச்சுவை சம்பவங்கள், துணுக்குகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளுக்கு உரியனவற்றை நடுவர்களாக இருந்து திருமதி மனோரமாவும் திரு கருணிராஜனும் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள். இவை தவிர தரத்தில் நான்காவது, ஐந்தாவது இடங்களைப் பெறும் துணுக்குகளையும் அவர்கள் வரிசைப் படுத்துவார்கள்.

இப்போது நீங்கள் செய்ய வேண்டுவதெல்லாம் உங்கள் தீர்ப்பையும் வழங்குவதுதான். முதலிடம், இரண்டாம் இடம் என்று தகுதிக்கேற்ப ஐந்து துணுக்குகளை வரிசைப் படுத்தி எங்களுக்கு அனுப்புங்கள். கீழே தரப்பட்டுள்ள கட்டங்களில் பக்க எண்ணையும் துணுக்கை எழுதியவர் பெயரையும் குறிப்பிடுங்கள். தனித்தாளில் எழுதி அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

நடுவர் குழு செய்த முடிவும் உங்கள் தீர்மானமும் ஒரே மாதிரி இருந்தால் ரூ 500 - பரிசு பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

இந்தப் போட்டியில் வாசகர்கள் எழுதி அனுப்பியுள்ள துணுக்குகளை மட்டுமே தரம் பார்த்தால் போதும். ஓவியர் உமாபதி, கபாடியா போன்றவர்கள் தந்துள்ள நகைச்சுவைப் பக்கங்கள், மற்றும் கதை கட்டுரைகள் முதலியனவற்றை ரசியுங்கள், எடை போட வேண்டாம்.

முடிவு தேதி ஏப்ரல் 15உ.

உறையின் மேல் ''வாசகர் தீர்ப்பு'' என்று குறிப்பிடவும். கடிதப் போக்குவரத்து கிடையாது. சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியரின் தீர்மானமே முடிவானது.

ஏப்ரல் 1உ சிரிப்பிதழில் கல்கி வாசகர்கள் எழுதியுள்ள பின் வரும் துணுக்குகளைத் தரம் பார்த்து முதல் ஐந்து இடங்களுக்கு என வரிசைப் படுத்தியுள்ளேன்.

வரிசை	பக்க எண்	துணுக்கை எழுதியவர் பெயர்
1		
2		
3		
4		
5		

வரிசைப்படுத்தி அனுப்புபவர் பெயர், விலாசம், கையொப்பம்:


பெயர்:

விலாசம்:

கையொப்பம்:

மேலட்டை வண்ணப்படம் எடுத்தவர்: பிரபுசங்கர்

கமலா கல்யாணமே; வைபோகமே!




என் அருமை மனைவி கமலா என்னைக் கல்யாணம் செய்து கொண்டு இருபத்து ஐந்து வருடம் பூர்த்தியாகிறது.

சாதாரணமாக இதை வெள்ளி விழாவாகக் கொண்டாடலாம். ஆனால் இருபத்தைந்து நீண்ட வருட காலம் என் மனைவியுடன் மண வாழ்க்கையை நடத்தியதற்கு எனக்கு வீரவிருது அல்லது ''பொறுமைத் திலகம்'' என்ற பட்டம் அல்லது 'உலகில் மிகவும் பரிதாபத்துக்குரிய அப்பாவி' என்ற சிறப்புப் பட்டம் ஆகிய ஏதாவது ஒன்று கொடுத்தால் சரியாக இருக்கும்.

கல்யாணத்தின் போது என் மனைவிக்கு இரண்டு மூன்று தங்கச் செயின்கள் போட்டார்கள். அதனால் தானோ என்னவோ அவள் என்னைச் சங்கிலி போட்டுக் கட்டாத குறையாகப் பிடித்துப் போட்டிருக்கிறாள்.

''என்னைப் பற்றி ஒவ்வொரு கட்டுரையிலும் கன்னாபின்னா வென்று எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள் எழுதும் பேத்தல்களை இனி படிக்கப் போவதில்லை'' என்று என் மனைவி அடித்துச் (என்னை அல்ல!) சொல்லி விட்டதால், அவளைப்பற்றிச் சற்றுத் துணிவாகவே எழுதுகிறேன்.



கமலாவைப் பெண் பார்க்கச் சென்ற போது எனக்குக் கிடைத்த பல அதிர்ச்சிகளை யெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை.

முக்கால் அங்குல உயர டம்ளரில் எட்டிப் பார்க்கும் படியாகப் பாதாளத்தில் சிறிதளவு காப்பியைக் கொண்டு வந்த மாமியார், ''சர்க்கரை எல்லாம் சரியாகத்தான் இருக்கும்'' என்றாள்.


அந்தக் காப்பியில் பால், டிகாக்ஷன், எல்லாமே பற்றாக் குறையாகத்தான் இருந்தன என்றால் சர்க்கரை சிறிது அளவு கூட இல்லை. சர்க்கரை டப்பாவில் இருந்த ஸ்பூனால் கலக்கி விட்டால் காப்பி இனிப்பாகி விடும் என்பது மாமியாரின் கணிப்பு. இதை அறியாத நான் ''ஷுகர் கொஞ்சம் வேண்டும்'' என்றேன்.

என்னமோ, பெண்ணுக்கு வைர பேஸரி பண்ணிப் போடுங்கள் என்று நான் கூறி விட்டதைப் போல், என் மாமியார், ''கேட்டியாடி கமலா. உனக்கு வரப்போகிறவர் உனக்கு மேலே சர்க்கரைப் பித்தராக இருக்கிறாரே. காப்பிக்கு எப்பவும் சர்க்கரை கொஞ்சம் மட்டாகத்தான் இருக்க வேண்டும்'' என்று சொல்லி விட்டு, கமலாவின் தம்பியான தொச்சுவிடம், ''ஏண்டா, பாத்துக்கோடா இவர்தான் உனக்கு அத்திம்பேராக வரப் போகிறவர்'' என்றாள். (சர்க்கரை கொண்டு வந்து போட அவள் மறந்துவிட்டாள்!)

தொச்சு, ''இவரா? நல்லாவே இல்லியே. கறுப்பாக இருக்கிறாரே'' என்றான்.

''சரிடா... ஆம்பிளைக்கு என்ன அழகு வேண்டியிருக்கு?'' என்றாள். அதாவது, நான் அழகு இல்லாதவன் என்பதை அவள் சந்தடிச்சாக்கில் சொல்லி விட்டாள். அவள்

அகஸ்தியன்



கூற்றுப்படிப் பார்த்தால் தொச்சு, உலக மகா ஆம்பிளே!

''அகஸ்தியன்! என் பெண் கமலாவுக்கு எல்லாக் காரியங்களையும் அவள் அம்மா சொல்லிக் கொடுத்திருக்கிறாள். எல்லா விஷயத்திலும் அவளுக்கு அம்மாதான் குரு'' என்றார் என் மாமனார். தொடர்ந்து, ''கமலா... காப்பி சாப்பிட்டது புழுக்கமாக இருக்கிறது. அம்மாவை ஒரு வார்த்தை கேட்டு விட்டு ஃபேனைப் போடு'' என்றார். (மனைவியைக் கேட்காமல் தும்மக் கூட மாட்டார் அவர்!)

கமலா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகு, தன் தாயாரிடம் கற்ற பாடங்களை என் மீது உபயோகித்தாள். நானே அவளுடைய அப்பா மாதிரி இல்லாமல் சில சமயம் நானாகவே ஃபானைப் போட்டுக் கொள்வேன். ஆனால் போகப்போக என்னை அவள் சரிசெய்து விட்டாள்.

சென்னையில் உள்ள கல்யாணச் சத்திரங்களில் மிகச்சிறிய ஒன்றில் கல்யாணத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பிள்ளை வீட்டார் போய் இறங்கியதும் பெண்கள் படை ஒன்று வந்தது. என் மாமியார், ''அதோ பாருங்கடி, உயரமாகக் குச்சி மாதிரி இருக்காரே அவர்தான் மாப்பிள்ளை'' என்றாள்.

''நம்ப கமலா பூசினமாதிரி இருக்கிறாள். பையன் ஒடிஞ்சு விழற மாதிரி இருக்கானே'' — பல்போனாலும் 'விஷப்பல்' போகாத ஓர் அத்தை.

''இவன் சம்பாதிக்கிறதை எல்லாம் பெத்தவங்க உறிஞ்சிக் கொண்டு பையனைக் கவனிக்காமல் இருந்துட்டாங்க. கல்யாணம் ஆகட்டும் அப்புறம் பார் ஆள் டபுள்தான்! கமலா சாமர்த்தியக்காரி'' என்றாள் என் மாமியார்.

இந்த உரையாடல் மிகவும் தணிந்த குரலில் பேசப்பட்டது என்பதை அறியவும். என் மாமியார் வீட்டு மனிதர்கள் ரொம்ப மெள்ளப் பேசினாலே, கன்கார்ட் விமானம் பறந்து போவது போல் நமது காது 'ட்ரம்' அதிரும்!

(மாமியார் கூறியபடி கல்யாணம் ஆனதும் ஆள் டபுள்தான். நான் அல்ல, கமலாதான் குண்டாகி விட்டாள்!)

''அவரானால் ஆனை மட்டும் ஒரு டாக்டர் பிள்ளைக்குக் கமலாவைக் கொடுக்கணும் என்று பார்த்தார்...'' — என் மாமியார்.

(டாக்டர்களின் மேல் என் மாமனாருக்கு என்ன பகையோ விரோதமோ தெரியவில்லை!)

''ஆமாம், பையன் என்ன பண்றான்'' (என் மாமியார் உறவினர்கள் அப்போது ஆரம்பித்த ஏகவசனம் இன்று வரை தொடர்கிறது!)

''கதை எழுதறான்.''

''கதை எழுதறானா?... நான் கேட்கறேன்னு தப்பாக நினைச்சுக்காதே. இதில் என்ன பணம், காசு வரும்?''

இந்தச் சமயத்தில் வாயாடிப் பெண் ஒருத்தி, ''ஒரு விதத்தில் இவரும் டாக்டர் மாதிரிதானே. அறுக்கிற வேலைதான் இரண்டு பேருக்கும்'' என்றாள் கீச்சுக் குரலில். அவள் தொண்டையை அரைபிளேடால் அறுக்கலாமா என்று ஆத்திரம் வந்தது எனக்கு. (பின்னால் இந்தக் கீச்சுக்காரி, தொச்சுவின் மனைவியாகிப் படுத்திய — படுத்தும் பாடுகள், ஒரு தனிப் புத்தகமாக எழுதக் கூடியவை!)

கீச்சைத் தொடர்ந்து என் மாமியார், ''கமலாவுக்கே டாக்டர் படிக்கணும் என்று ஆசைதான். படிக்க வைச்சிருந்தால் பிரமாதமாகப் படிச்சுப் பாஸ் ஆயிருப்பாள்.... இவளை டாக்டராக்கிட்டா; அவளைவிடப் பெரிய படிப்பு படிச்ச பையனைப் பார்க்கணும். நிறைய எதிர்பார்ப்பார்கள்... ஏதோ ஏழைக்கேத்த எள்ளுருண்டை'' என்றாள்.

''அப்படித்தான் இருக்கான் எள்ளுருண்டை மாதிரி கன்னங்கரேல் என்று''

அவர்: ஒன்னும் ஒன்னும் ரெண்டுங்கிற பெயரில் ஒரு படம் எடுத்துக் கிட்டிருக்கிறீங்களாமே... டைட்டில் ரொம்பக் குழந்தைத் தனமா இருக்கு...!


இவர்: ''இருக்காதா பின்னே? சர்வதேசக் குழந்தைகள் ஆண்டையொட்டி குழந்தைகளுக்காக வென்றே நான் எடுக்கிற படம்தான் இது!''

உ. இராஜாஜி



பெற்ருள் ஒரு பாரி! அவளே, விரலால் தொட்டே கண்ணில் மை இட்டுக் கொள்ளலாம். அவ்வளவு கறுப்பு!

கல்யாணத்துக்குப் பிறகு 'கமலா ஒரு டாக்டர்' என்பதை அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டேன். எல்லா வியாதிகளுக்கும் அவள் மருந்துசொல்வாள் "எண்ணெயை நன்ருு சதும்பத் தேய்ச்சு, ஊறி, சுடச்சுட வெந்நீர் கொட்டிண்டு குளிச்சால் எப்பேர்ப் பட்ட நோயும் ஓடிப்புடும்" என்பாள். ஒரே ஒருதடவை — கல்யாணம் ஆன புதிதில் பெண்டாட்டி பித்து காரணத்தால் — அவள் ட்ரீட்மெண்ட்டை எனக்குக் கொடுத்தாள். "தலைக்கு அவள் இரண்டு செம்பு வெந்நீர் விடுகிறேன்" என்று சொல்லிக் கொட்டிஞள். வியாதி ஓடியதோ இல்லையோ - நான் குளியலறையை விட்டுப் பறந்து ஓடினேன். என் தோலே 'வழண்டு' விடும் அளவுக்குச் சூடு. அதன் பிறகு இன்று வரை எனக்கு வியாதியே வரவில்லை. வெந்நீர்ச் சூடு நமக்குத் தாங்கா தப்பா சாமி.



டைரக்டர்: ஏன் அநாவசியமா ஹீரோயினைத் தொட்டுத் தொட்டே நடிக்கிறீங்க?

புதுமுக நடிகர்: நீங்கதானே சொன்னீங்க, படம் பார்க்கிறவங்களுக்கு ரொம்ப 'டச்சிங்'கா இருக்கணுமின்னு?

ஷேக். வின்தா மாதார்

"இதுதான் கூறைப் புடவை. ஸ்பெஷல் தறி. எழுநூறு ரூபாய் ஆச்சு" என்று பெருமிதமாகச் சொல்லிக் கொண்டே ஒரு புடவையைக் காட்டினுள் என் மாமியார்.

என் தாயார், "அடேடே... இதே பார்டர், இதே உடல், இதே தலைப்புப் புடவை தான் நாங்களும் பெண்ணுக்கு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேம். என்ன பொருத்தம்!" என்று சொன்னுள். ஆனல் அவள் சொல்லாதது நாங்கள் அந்தப் புடவையை முந்நூறு ரூபாய்க்கு வாங்கின உண்மையை.

"மாமி... பெண்ணை அனுப்புங்கோ. எங்க மனுஷா பார்க்கணும்னு சொல்ரு."

"தாராளமாகப் பார்க்கட்டுமே உங்க வீட்டுப் பெண்தானே.. இதோ வராளே" என்ருள்.

ஆகா! என்ன அடக்கம்! என்ன பதவிசு! அந்தக் காட்சி மறக்க முடியாத அரியதொரு காட்சி. அதற்குப் பிறகு இன்றுவரை கமலா அப்படி இருந்ததே இல்லை.

"வாடியம்மா குழந்தை... உட்கார். எல்லாரும் பார்க்கட்டும். ... ஒரு நல்ல பாட்டு பாடு... மியூஸிக் டியூஷன் வைச்சதா அம்மா சொன்னுளே."

ரொம்பப் பிகுவுக்குப் பிறகு கமலா ஒரு தியாகராஜ கிருதியைப் பாடினுள். (என் மாமனுருக்கு டாக்டர்கள் மேல் மட்டும் விரோதம் அல்ல. தியாகராஜர் போன்ற இசை மேதைகள் மீதும் விரோதம் உண்டு என்பது கமலா பாடியதில் புலனுயிற்று!)

கமலா பாடிய போது அவளைச் சுற்று முற்றும் உள்ளவர்களைப் பார்த்தேன். கூடவே அவளுடன் யார் பாடுகிருர்கள் என்பதைக் கண்டு பிடிக்க. யாருமில்லை. அவளுக்கேதான் இரட்டைக் குரல். (பின்னல் குரலுக்கு ஏற்ற படி உடலை இரட்டையாக ஆக்கிக் கொண்டு விட்டாள்!)

குழந்தைகள் கண்ட குடியரசை ஸ்தாபிக்கக் கூடிய அளவு அரை டிக்கெட்டுகள். 'ஐயோ இவ்வளவு வால்களும் ஜானுவாசக் காரில் ஏறி அடைத்துக் கொள்ளும். நமக்கு இடமே கிடைக்காது' என்று நான் பயந்தேன். அது வீண் பயம் என்று நான் பின்னல் உணர்ந்தேன். காரணம் என் மாமனுர், "எதுக்கு சார் ஊர்வலம் அதுஇது எல்லாம். மாடியிலிருந்து நீங்க கீழே இறங்கி வந்தால் அதுதான் ஊர்வலம்" என்று என் அப்பாவிடம் சொல்லி விட்டார். (இத்தனைக்கும் அப்போது பெட்ரோல் விலை மலிவுதான்!)

போட்டோ கிராபர் வரத் தாமதமாகவே மாங்கல்ய தாரண நிகழ்ச்சி நடக்காதோ என்று பயப்படும் அளவுக்கு "போட்டோ மாமா வந்ததுமே ஆரம்பிச்சுடலாம்" என்று என் மாமியார், புரோகிதரிடம் சொல்ல அவரும் மாடி ரூமிலில் 'கை குறைந்த'வர்களுக்குக் கைகொடுக்கச் சென்று விட்டார்.

போட்டோ மாமா ஆற அமர வந்தார். மாப்பிள்ளையை விட அவருக்குத் தடபுடல் உபசாரம். அவரோ ரொம்ப அலட்டிக் கொண்டு உஸ், உஸ் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு, "கமலா... உனக்காகத் தான் ஓடிவந்தேன். நடிகை ஜிகினுஸ்ரீயின் தம்பி கல்யாணத்தில் 50 ரோல் எடுத்து விட்டு வந்திருக்கிறேன்... சரி... சரி முகூர்த்தத்தை ஆரம்பியுங்கோ... யாரு சமையல், சேச்சுவா?... சூடாக ஒரு அரைகப் காப்பி கொண்டு வா... உஸ்... உஸ்" என்ருர்.

அவரிடம் கமலா, "மாமா... கலர் போட்டோதானே எடுப்பீங்க?" என்ருள்.

"கலர் எதுக்குடி... அவள் இருக்கிற கறுப்புக்கு... எப்படி எடுத்தாலும் 'ப்ளாக்'காகத்தான் வரும். பிளாக் அண்ட் ஒயிட் தான்" என்ருர்.

புரோகிதர் ஷார்ட்—ஹாண்ட்டில் மந்திரங்களைச் சொல்ல, "ஆபீசுக்கு டயமானவர்கள்" முதல் பந்தியில் சாப்பிட்டு விட்டுச் சென்று கொண்டிருக்க, சீட்டுக் கச்சேரியைச் சுற்றி டி. வி.யில் சினிமாப் பார்ப்பதைப் போல் கூட்டம் சூழ்ந்து கொண்டிருக்க, மிச்சம் மீதி இருந்தவர்கள் போட்டோ மாமா கொண்டு வந்திருந்த சினிமா ஸ்டார் போட்டோ ஆல்பத்தைப் பார்த்துக் கொண்

டிருக்க, ஒரு ரகசியத் திருமணம் மாதிரி நாலைந்து பேரே எங்களைச் சுற்றி இருந்தனர். அப்படியிருந்தும் மாமா எடுத்த போட்டோக்களில் பாதி 'ஷேக்'. மீதி பாதியில், பாதிதான் எங்கள் உருவம் வந்திருந்தது.

பெண் ஊரில் கல்யாணம் நடந்ததால் அவர்கள் நண்பர்கள், உறவினர்கள் என்று நிறைய பேர் வந்து சாப்பிட்டு விட்டுப் போனார்கள். முகூர்த்தம் ஆன பிறகு நாங்கள் சாப்பிடப் போனால், ஓட்டல் மூடுகிற நேரத்துச் சாப்பாடு மாதிரி இருந்தது. என் மாமியார் எந்தச் சாமான் வாங்குவதில் சிக்கனம் பண்ணினாரோ இல்லையோ, உப்பு வாங்குவதில் அப்படிச் செய்யவில்லை என்பது சாப்பாட்டில் தெரிந்தது.

பல கலியாணங்களில் பொண்ணும் பிள்ளையும் சாப்பிடும் போது ஒருவர் இலையிலிருந்து மற்றவர் இலைக்கு ஜாங்கிரியை எடுத்துப் போடுவார்கள். என் கல்யாணத்தில் யாரும் அப்படிச் செய்யவில்லை. காரணம், யாரும் கையுடன் மைக்ராஸ்கோப் கொண்டு வராததுதான். இலையில் ஜாங்கிரி இருப்பது தெரிந்தால்தானே எடுத்துப் போட முடியும்!

இந்த அழகில் சமையல் கார சேச்சு என் மாமியாரிடம், ''என்ன பிள்ளை வீட்டுக்காரர்கள் பகாசுரர்கள் மாதிரி சாப்பிடுகிறார்கள். சாதமே மூன்று தடவை வடிச்சாச்சு...'' என்றார்.

''உம்ம சமையல் என்றால், நம்ப மனுஷானே நன்னா சாப்பிடுவார்கள். அவர்களைக் கேட்கணுமா? உம்ம கைருசி, கைமணம் யாருக்கும் வரும்?'' — என் மாமியார்.

சமையல்காரர் வாயெல்லாம் புகையிலைப் பல்லானார். பாவம், அவருக்குச் சமையற்கூலி கொடுக்கும் போது, இந்தப் பாராட்டுச் சொன்னதற்காக என் மாமியார் 'ரிபேட்' போட்டு விடுவாள் என்பது தெரிந்திருந்தால் அவ்வளவு சிரித்து இருக்க மாட்டார்!

என் கலியாணத்திற்கு ரிசப்ஷன் வேறு வைத்திருந்தாள் என் மாமியார். அதில் ஒரு பாட்டுக் கச்சேரி. அவளுடைய அக்கா பெண் தான் பாடகி.

ஜானுவின் கச்சேரியைக் கேட்ட பிறகு — என்னைத் தவிர யாரும் கேட்டதாகத் தெரியவில்லை — அவளுக்கு மனித உயிர் மேல் மோகம் என்பது உறுதியாகியது. உயிரை வாங்கி விட்டாள், தன் கச்சேரியால். அவள் பாட்டில் ஒரு இடத்தில் கூட சுருதி விலகவில்லை. காரணம், சுருதி எப்போதாவது சேர்ந்திருந்தால் தானே விலகுவதற்கு.

ஒன்பதரை வாக்கில் கச்சேரி முடிவதற்குள், கல்யாண சத்திரம் கிட்டத்தட்ட காலியாகி இருந்தது. வந்திருந்தர்களை வழியனுப்பும் மும்முரத்தில் கமலா இருந்தாள்.

தொச்சு, ''என்ன அத்திம்பேரே. உங்களை விட எங்க அக்காவுக்குத் தான் நிறைய பிரசண்ட்... இது என்ன பேனாவா... எதுக்கு அத்திம்பேர் இரண்டு மூன்று பேனா... நான் ஒண்ணு எடுத்துக்கிறேனே'' என்று எடுத்துக் கொண்டான்.

''சரி... போய், கமலாவை வரச் சொல்.''



வயதான கணவன்: ''என்னை ஏதோ ஒரு குழுவுக்கும் போன வாரம் தலைவராகத் தேர்ந்தெடுத்தாங்க... அது எந்தக் குழுவுக்குன்னு நினைவு வராம ஒரு மணி நேரமாத் தலையைப் பிச்சுக்கிட்டிருக்கேன்!

மனைவி: நாசமாப் போச்சு! ஞாபக மறதி நீக்க ஆராய்ச்சிக் குழுவுக்குத் தான் நீங்க தலைவர்! - உ. இராஜாஜி.

''ஒரு ரூபாய் கொடுக்கறீங்களா?''

கொடுத்து அழுதேன்.

அன்று ஆரம்பித்த பழக்கம், இன்னும் தொச்சுவை விடவில்லை. அப்போது ஒத்தை ரூபாய். இப்போது 200, 300 என்று!

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது, என் பெண் ஆனந்தி சொன்னாள்: ''அப்பா... உங்களுடைய அறுபதாம் கல்யாணத்தை 'ஜாம்' என்று நடத்தப் போறேன்.''

அதே சேச்சு சமையல், ஜானு பாட்டுக் கச்சேரி, ஸ்பெஷல் தறி புடவை, போட்டோ —மாமாவின் போட்டோ சில்லறைக் கோரிக்கைகள், என் மாமியாரின் சம்பந்தி விமரிசனங்கள் என்றெல்லாம் இருக்குமே.

''அதெல்லாம் எதற்கு? ஒன்றும் வேண்டாம்... சரி... புழுக்கமாக இருக்கு. அம்மாவைக் கேட்டு விட்டு ஃபேனைப் போடு'' என்றேன்.

ஒருவர் : தேனிலவுக்காக ஊட்டிக்குப் போக ஒரு மாசம் லீவு கிடைத்ததா ?

மற்றொருவர்: இல்லை. ஒரு வாரம்தான் கிடைத்தது. அதில் 'மினி மூன்' சென்று வந்தேன்.

- எஸ். பாரிநி



பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

(முன் கதைச் சுருக்கம்)

மின்சாரமும் யந்திர நாகரிக வளர்ச்சியும் ஏற்படாத சென்ற நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு செல்வச் சீர்மிகுந்த குடும்பத்தின் தலைவர் மருடேசன் பிள்ளை. மனைவியை இழந்தபிறகு தமது ஐம்பதாவது வயதில் இருபது வயதுக்கும் இளைய கோதையெனும் நிராதரவான பெண்ணை, மதிப்புக்குரிய ஒரு குடும்பத்திலிருந்து தேர்ந்து மணம் செய்து கொள்கிறார் மருடேசன். அவருக்கு வந்த இரண்டாம் மனைவியை விடவும் வயதில் மூத்த ஒரு பிள்ளையும் பல பெண்களும் அவருக்கு உண்டு. அவருக்கு மொத்தம் ஆறு பெண்கள்; மூன்று ஆண்கள். மூத்தவன் பெரியசாமி தாசித் தெருவில் திரிகிறான் என்று பேரெடுத்தபின் தந்தை மருடேசன் அவனுக்கு மங்களத்தை மணம் முடித்து வைக்கிறார். அதன் விளைவு இந்த வீட்டில் பெண் மக்களின் எண்ணிக்கையில் ஒன்று கூடியதே தவிர மகனை வீட்டுக்குக் கொண்டு வந்து ஒழுங்கான மனிதனும் ஆக்க அவர் மேற்கொண்ட அந்த உபாயம் பயன்படாததால், பெரிய சாமியை மருடேசன் நிராகரித்து விடுகிறார். பாட்டன் சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்து 'வீட்டு வாசற்படி மிதிக்காதே' என்று பெரியசாமியை விலக்கி வைக்கிறார்.

மருடேசன் பிள்ளை தமது இரண்டாவது கல்யாணத்துக்காகச் சில தினங்கள் வெளியூர் சென்றிருந்த சமயம் பெரியசாமி வீட்டில் வந்து தங்கிச் செல்கிறான். மங்களம் கர்ப்பமுற்றிருப்பது தெரிந்து மருமகளையும் மகனையும் தனியே அனுப்பி விடுகிறார் மருடேசன்.

மருடேசனின் ஆறு பெண்களும் ஆளுக்கு ஒரு விதமான கதைகளுடன் பிறந்த வீட்டிலேயே நிரந்தரமாகி விட்டவர்கள். மூத்தவள் காந்திமதி பால்ய விதவை; புருஷனை விட்டு விட்டுத் தாய் வீட்டோடு வந்தவள்.

புருஷனையும் கையோடு அழைத்துக் கொண்டு வந்தவள்; புருஷன் எங்கோ ஓடி விட்டதால் மாமியாரையும் அழைத்துக் கொண்டு, கைக்குழந்தைப் பெண்ணுடன் இங்கு வந்து விட்டவள் — அடுத்த தெருவிலே வாழ்க்கைப் பட்டதால் புகுந்த வீடு, பிறந்த வீடு என்ற பேதம் தெரியாமல் இங்கேயே



வாழ்ந்து வருகிறவள் என்று வகைக்கு ஒரு வாழ்க்கை அமைந்த பெண் மக்கள் மருடேசனுக்கு.

எட்டாவது மகன் சிங்காரம்தான் அவருக்கு வாழ்க்கையின் நம்பிக்கை. ஒன்பதாவது பையன் வைத்தியைப் பெற்றுத் தந்த நிறைவோடு மருடேசனின் மனைவி கண்ணை மூடினாள். தங்கள் பெரிய மகன் பெரியசாமி வீட்டோடு வர முடியாமல், கணவரால் விரட்டப்பட்டிருக்கும் குறை தீராமல் அம்பிகை அம்மாள் போய்ச் சேர்ந்தாள்.

மருடேசன் குடும்பம் தீவிர சைவக் குடும்பம். சிவமதம், வைணவம் இரண்டுக்கும் இடம் கொடுக்கிற வேளாளர் ஜாதியில் இவரது குடும்பம், மதம் என்ற அர்த்தத்தில் மாத்திரம் அல்லாது உணவு

விஷயத்தில் அதிதீவிர சைவத்தை மூர்த்தண்யமாய்த் தழுவியது ஆகும்.

அத்தகு வீர சைவரான மருடேசன் பிள்ளை வீட்டுப் பின் கட்டிலிருந்து ஒரு பூனை வாயில் மீனைக் கவ்விக் கொண்டு வருகிறது...

தமது அருமந்த புத்திரன் சிங்காரம் 'அத்திக் காய்' (மீன்) தான் வேணும்' என்று அடம் பிடித் தழுகிறான்.

'இந்த வீட்டிலா?... இந்தப் பெண் மக்களா?... இருக்காது... எல்லாம் இளையதாரம் கோதை கொண்டு வந்த சீதனமோ?' என்று அபாண்ட மாய்ப் பழியாகிறது... மருடேசன் பிள்ளை 'அன்னத் துவேஷம்' கொண்டு மாண்டு போகிறார்...

கோதை, குடும்பத்தைச் சேர்த்து வைத்து விட்டு சிங்காரத்தை வளர்த்து ஆளாக்கும் லட்சியத் துடன் மருடேசன் பிள்ளையின் ஸ்தானத்துக்கு உயர் கிறாள்— சுயமாய், தனியாய்!


சிங்காரத்துக்கு 'கார்டியனாக' மட்டும்பெரியசாமியை நியமித்து உயில் எழுதியிருக்கிறார் மருடேசன்.

அதன் படிதான் எல்லாம் நடக்கிறது. சிங்காரம் பள்ளிக்கூடம் போகிற சாக்கில் செம்படவக் குப்பத்



துக்குச் சிநேகிதன் ஆகிறான். பெரியசாமியை எதிர்த்து மட்டம் தட்டுகிறான். சகோதரிகள் பெரிய சாமியைச் சமாதானப்படுத்துகின்றனர். வீடு நிறைய பெண்களும் குழந்தைகளுமாய்ப் பெருகியுள்ள இந்தக் குடும்பத்தை ஒரு சின்னப் பையனின் வாய்த் துடுக்குக்காக விட்டுவிடுவது சரியல்ல என்று போதிக்கிறாள் தங்கை காந்திமதி. தன் தங்கையின் பெண்ணைச் சிங்காரத்துக்கு மனைவியாக்கும் தன் நிர் மானத்தையும் அண்ணனிடம் சொல்லுகிறாள் காந்திமதி.

இந்தக் குடும்பத் தலைவர் மருடேசன் வாழ்ந்திருந்த காலத்தில் அவருக்கு ஒரு கைவிளக்கு போல் உடன் இருந்து வெளிச்சம் தந்து கொண்டிருந்த விளக்குச் சாமி இங்கு நடக்கும் எல்லாவற்றையும் ஒரு நாடகம் போல் வீட்டு வாசற்படிக் கட்டில் தெருவுக்கு முது கைக் காட்டி உட்கார்ந்துகொண்டு ரசித்து...



கோடைக் காலத்தில் எவ்வளவு தண்ணீர் அருந்தினாலும் தாகம் தணி வதில்லை. இதோ தாகம் தணிய ஒரு சிறந்த வழி: ஒன்றிரண்டு சிறிய வெங் காயங்களை மென்று தின்று பின்னர் தண்ணீர் அருந்தினால் தாகம் உடனே தணியும்.

ரமா ராமநாதன்.

இரண்டாம் பாகம்

1. சாமியார் பார்த்த சல்லாபம்

கோதையும் தனது மற்ற சகோதரிகளும் எவ்வளவோ நல்லுபதேசங்களை எடுத்துக் கூறியும் சிங்காரம் தன் அண்ணன் மீது நாளுக்கு நாள் பகைமையை வளர்த்துக் கொண்டான்.

பெரியசாமி, விளக்குச்சாமி சொன்ன யோசனைப்படி சிங்காரத்தின் பள்ளிக்குச் சென்று தம்பியைப் பற்றி டானியல் பாதிரி யாரிடம் விசாரித்தான். டானியல் பாதிரி யார், பெரிய சாமியைத் தாமே கூப்பிட் டனுப்பிச் சிங்காரத்தைப் பற்றிப் பேச நினைத்திருந்ததாய்க் கூறித் தமது மாடி யறைக்கு அழைத்துச் சென்றார்.

தம்மையும் "வாருங்கள் சாமியாரே!" என்று அந்த வெள்ளைக்காரர் தமிழில் அழைத் தது விளக்குச்சாமிக்கு மிகவும் குளிர்ச்சியாய் இருந்தது. அந்தப் பள்ளிக் கூடக் கட்டிடத் தையும், சூழ்ந்திருந்த மரங்களையும், மரங் களின் பசுமைச் செறிவில் மறைந்திருந்து ஆரவாரிக்கும் குயில்களின் கூச்சலையும் ஒரு குழந்தை போல் ரசித்துக் கொண்டு பெரிய சாமியுடன் டானியல் பாதிரியாரின் மாடி யறைக்கு வந்தார் சாமியார்.

அறை வாசலின் கதவைத் திறந்து கொண்டு "உள்ளே வாருங்கள்... உங்கள் தகப்பனார் மருடேசன் பிள்ளைக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டவன்..." என்று பெரியசாமியை வரவேற்ற பாதிரியார் — வராந்தாவிலேயே நின்று விட்ட விளக்குச் சாமியைப் பார்த்து ":நீங்களும் வரலாம்" என்று புன்முறுவல் செய்தார்.

"இருக்கட்டும் — நான் இங்கேயே இருக் கேன்... நீங்க போயிப் பேசிட்டு வாங்க பிள்ளே" என்று வீசியடிக்கும் கடற்காற்றில் தாடிச் சிகை இருபுறம் பிரிந்து கழுத்தைப்



ஒருவர்: "குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு எங்க சங்கத்தில் ஒரு விழா கொண்டாடுகிறோம்; உங்களால் ஆன உதவியை..."

மற்றவர்: "ஓ... தாராளமாக... எனது பதினைந்து குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு போங்க!"

பொ. தண்டபாணி.

பின்னை, தூரத்தில் தெரிகிற அக்கரைக் குடிசைகளையும் — அதற்கும் அப்பால் தெரியும் கடலையும் பார்த்துக்கொண்டிருந்தார் சாமியார்.

"உங்கள் தம்பி சிங்காரம் பள்ளிக்கு ஒழுங்காக வருகிறான். ஆனால் வகுப்பில்தான் அவன் இருப்பதே இல்லே..." என்று பெரிய சாமியிடம் சொல்லிக்கொண்டிருந்த பாதிரியாரின் குரல் அந்தப் பெரிய கூடத்தில் எதிரொலியுடன் கேட்டது.

சிங்காரத்தைப் பற்றி டானியல் பாதிரியார் சொல்லிக் கொண்டிருந்தார்: "அவனுக்கு நல்ல திறமையும் அறிவும் இருக்கு; ஆனால், அவனுக்கு மரியாதைப் பண்புகள் தெரியவில்லே. பணிவும் இல்லே; கட்டுப்படாதவனுக்குக் கல்வி புகட்ட முடியாது... மேலும் மற்ற பையன்கள் இவனால் கெட்டுப் போய் விடுவார்கள் இல்லையா?... அவன் வகுப்பு நேரத்தில் அக்கரைக்குப் போய் விடுகிறான்.. அவனுக்கு அங்கேதான் தோழர்கள் இருக்கிறார்கள்...."

பாதிரியாரின் வார்த்தைகளைச் சாமியாரின் செவிகள் கேட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில், அக்கரையில் தோணித் துறை மணல் வெளியில் ஒரு செம்படவச் சிறுமியைத் துரத்தியவாறு ஓடிய ஒரு சிறுவனை அவரது கண்கள் ஒரு வேடிக்கை போல் கண்டன...

அவள் இடுப்பிலிருந்த கூடையிலிருந்து மீன்கள் சிதறி விழ அவளை அவன் நெருங்கிப் பிடித்து இழுத்தபோதுதான் 'அடே இது நம்ப சிங்காரம் இல்லே' என்று அவர் புத்தியில் உறைத்தது.

"உங்களிடம் — இதைச் சொல்வதற்கு வருத்தமாகத்தான் இருக்கிறது — மருதேசன் பிள்ளையின் மகன் சிங்காரத்தின் பெயரைப் பள்ளிப் பேரேட்டிலிருந்து நீக்கி விட்டோம்" என்று டானியல் பாதிரியார் குரல் எதிரொலி கேட்காத ஸ்தாயியில் வருத்தத்துடன் முனகியதையும் சாமியார் தெளிவாகக் கேட்டார்.

"அவ்வளவுதானே, அப்புறம் என்ன இங்கு பேச்சு?... வாங்க பிள்ளே போகலாம்" என்று குரல் கொடுத்து விட்டு விடுவிடென்றுப் படிகளில் இறங்கி, பள்ளிக் கூடக் காம்பவுண்ட் மர நிழலில் நின்றிருந்த வண்டியருகே ஓடிப் போய் நின்றுகொண்டிருந்தார் விளக்குச்சாமி.

அவருக்குச் சற்றுமுன் தான் கண்ட வேடிக்கைக் காட்சி பெரியசாமியின் கண்களில் பட்டுவிடக் கூடாதே என்ற பதைப்பு. 'பட்டால் தான் பெரியசாமி சிங்காரத்தை என்ன செய்து விட முடியும்? சிங்காரம் தான் ஒரு பட்டா இபதி... அண்ணனைவிட, சின்னம்மாவைவிட எல்லாரையும் விடத் தானே பணக்காரன் என்ற மதம் பிடித்தலைகிறபோது அவனை யார் நல்வழிப்படுத்த முடியும்?' என்று யோசித்தவாறிருந்த சாமியாரின் அருகே சற்றுநேரம் கழித்துக் குனிந்த தலையுடன் வந்து நின்றான் பெரியசாமி.

"அவனை பள்ளிக் கூடத்திலிருந்து நீக்கிட்டாங்களாம்..." என்று பெரியசாமியின் உதடுகள் முணுமுணுத்தன.

"சரி... விட்டுத் தள்ளுங்க, பிள்ளே! நாம என்ன பண்ண முடியும்? அவனும் மீசை முளைச்ச பையனாயிட்டான். புத்தி சொல்லித் திருத்தற வயசைத் தாண்டிட்டான்" என்று ஒரு பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் ஏறினார் சாமியார். பெரியசாமியும் வண்டியில் ஏறியபின், வண்டி அங்கிருந்து புறப்பட்டு பள்ளிக்கூடத்துக்கு வெளியே வந்தபோது சற்றுமுன் தான் தோணித் துறையில் பார்த்த சிங்காரத்தின் லீலையை எண்ணித் திடீரென்று வாய்விட்டுச் சிரித்தார் சாமியார். அவரது திடீர்ச் சிரிப்புக்குக் காரணம் தெரியாமல் அவரைத் திரும்பிப் பார்த்த பெரிய சாமியிடம் சொன்னார் விளக்கு:

"உங்கப்பா ஒரு காலத்திலே இந்தச் சிங்காரம் 'பொண்டுக சட்டி' ஆயிடுவானோன்னு பயந்ததை நினைச்சிகிட்டேன்... இல்லியா, பிள்ளே?... இந்த வீட்டுப் பொண்ணுங்க எல்லாம் சிங்காரத்துக்குப் பாவாடை கட்டி, பின்னல் போட்டுப் பொட்டைக் கொழந்தை மாதிரி வளர்த்தாங்களே... அதுக்காக உங்கப்பா இந்தப் பொண்களோட சண்டை போடப் போயிதானே, 'பெரிசா ஆம்பிளைப் பிள்ளை பெத்துட்டாரு, எங்களுக்கு வளர்க்கத் தெரியலைன்னு, இன்னொரு பொண்டாட்டி கட்டிக்கிறு வந்து புள்ளையை வளர்த்துக்குங்களே'ன்னு — உங்க தங்கச்சிமாருங்க சொல்லப் போயிதானே, கோதையம்மா வந்தாங்க?... அப்பிடி வருத்தப்பட்ட உங்க அப்பா இருந்தார்னு அவரு இதுக்கெல்லாம் சந்தோஷப்பட்டுக்குவாருன்னு நெனைச்சிச் சிரிச்சேன்" என்று சாமியார் விளக்கியதை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் விழித்தான் பெரியசாமி.


தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார் சாமியார்:

"ஒரு காலத்திலே உங்கப்பாரு, சிங்காரத்தை ஆம்பிளே இல்லேயோன்னு நெனைச்சி வருத்தப்பட்டாரு... இன்னைக்கி நான் பார்த்தேன்..." என்று மறுபடியும் சிரித்துப் பெரிய சாமியின் காதருகே குனிந்து ரகசியமாக அக்கரையில் பார்த்த காட்சியைப் பற்றி வண்டிக்காரனின் காதில் விழாமல் சொன்னார் சாமியார்.

வண்டிக்காரன் பெருங்குரலில் காளைகளை விரட்டினான். மாடுகளின் சதங்கை ஒலியில் சாமியாரின் சிரிப்பொலியும் சேர்ந்து கணகணத்தது.

(தொடரும்)

சிரிப்பக் ஜங்ஷன்!



மூன்று ஞாபக மறதிப் பேராசிரியர்கள் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்ததில் ரயில் வந்து நிற்பதையாரும் கவனிக்கவில்லை.

வண்டி புறப்பட கார்டு விசிலடித்தவுடன் சட்டென்று அவர்களுக்கு ஞாபகம் வந்தது.

வண்டி புறப்பட்டு விட்டது. இரண்டு பேர்கள் ஓடிப் போய் ஏறி விட்டார்கள். இன்னொருவர் சற்று வயதானவர். அவரால் ஏற முடியவில்லை. நின்று விட்டார். இதைக் கவனித்த ஒருவர், ''நல்ல காலமாக அவர்கள் இரண்டு பேருக்காவது ரயில் கிடைத்ததே'' என்று சமாதானப் படுத்தினார்.

பேராசிரியர் ''அதனால் ஒரு பிரயோசனமுமில்லை. அவர்களிருவரும் என்னை வழியனுப்ப வந்தவர்கள்'' என்று கூறினார்.

எஸ். எம். அனந்தநாயகி



ஒரு ஊரில் ஒரு சலவைத் தொழிலாளி. அவரிடம் ஒரு கழுதை. ஒரு நாள் அந்தக் கழுதை அவர் மாமியாரை உதைத்து விட்டது. அந்த அம்மாள் இறந்து விட்டாள். மாமியாரின் உடலைச் சவ அடக்கத்துக்குத் தூக்கிச் சென்றார்கள். ஒரு பெருங்கூட்டம் தொடர்ந்தது. மயானத்தை அடைந்தவுடன் சலவைத்தொழிலாளியின் உறவினர் ''உனக்கு இவ்வளவு நண்பர்களா?'' என்று கேட்டார்.

''இவர்கள் இத்தனை பேரும் துக்கம் விசாரிக்க வரவில்லை. என் கழுதையை என்ன விலையானாலும் வாங்கிப் போக வந்திருக்கிறார்கள்'' என்றான் சலவைத் தொழிலாளி.

எஸ். வி. ராமன்


தாத்தா: (பேரனைப் பார்த்து) மணி என்ன ஆகிறது பார்!

பேரன்: எனக்கு மணி பார்க்கத் தெரியாது தாத்தா!

தாத்தா: சின்ன முள்ளும், பெரிய முள்ளும் எதில் இருக்கிறது. பார்த்துச் சொல்லேன்.

பேரன்: இரண்டு முள்ளும் கடிகாரத்துக்குள்ளேயே இருக்கிறது தாத்தா.

-கே. வி. ராகவன்




புதுவை பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற பொழுது எடை பார்க்கும் மெஷினில் ஏறி நின்று ஒரு பத்து பைசாவைப் போட்டேன். எடை குறிப்பிட்டு ஒரு அட்டை வெளி வந்தது. திருப்பினேன். ''உம்முடைய நம்பிக்கை நிச்சயம் வெற்றி கொடுக்கும்'' என்றிருந்தது. மீண்டும் ஒரு முறை இன்னொரு பத்துப் பைசாவைப் போட்டேன். அட்டையில் ''உன் நண்பர்களை மறக்காதே. எதிர்காலத்தில் நல்ல மாறுதல் ஏற்பட இருக்கிறது'' என்றிருந்தது.

மூன்றாவதாக ஒரு முறை ஏறி நின்று பத்துப் பைசாவைப் போட்டேன். அட்டையில் ''வீண் செலவு செய்யாதே! புத்திசாலியாயிரு!'' என்றிருந்தது.

எஸ். நகவனம்





கல்லூரியில் எங்கள் பொருளாதாரம் பேராசிரியர் வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். அவர்களின் கவனம் பாடத்தின் மீது இல்லை. புரொபஸர் அவர்களின் பேச்சு சத்தம் அதிகமாகவே, எரிச்சலுடன் ''Last bench get out'' என்று சீறினார்.

கடைசி வரிசை மாணவர்கள் அமைதியாக எழுந்து நின்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு ஒன்றும் பேசாமல் ஆளுக்கொரு மூலையாகப் பிடித்து பெஞ்சைத் தூக்கிச் சென்று வராந்தாவில் போட்டு விட்டு, ஒன்றும் நடக்காத மாதிரி முக பாவத்துடன் வகுப்பறைக்குள் திரும்பி வந்தனர்.

இதைக் கண்டு மாணவர்களிடையே சிரிப்பு அலை. பேராசிரியரும் எல்லோரோடும் சேர்ந்து சிரித்து விட்டார்.

இது எர்ணாகுளத்தில் பாரத மாதா கல்லூரியில் நடந்த நிகழ்ச்சி.

எஸ். ஜெயந்தி.



என் சிநேகிதியும், அவள் கணவரும் வாசல் வராந்தாவில் இரு தோட்ட நாற்காலிகளில் உட்கார்ந்து, பேசிக் கொண்டிருந்தபின், மதிய உணவுக்காக உள்ளே சென்றனர். சாப்பிட்டு விட்டு வெளியில் வந்த சிநேகிதியின் கணவர், தெருவில் ஒருவன் ஒரு ஜோடி கூடை நாற்காலிகளை விற்றுப் போவதைப் பார்த்து, வீட்டில் இருக்கும் ஜோடிக்கு ஏற்றவையாக இன்னொரு ஜோடி இருக்கட்டுமென்று, வாங்கிப் போட்டார். சமையலறை வேலைகளை முடித்துவிட்டு என் சிநேகிதி, 'பழைய நாற்காலிகள் எங்கே' யென்று ஓடி வந்து வராந்தாவில் பார்த்திருக்கிறாள். வராந்தா காலி! தன் வீட்டு நாற்காலிகளையே மறுபடியும் விலை கொடுத்து வாங்கின கணவரை நினைத்து, சிரிப்பதா அழுவதா என்று என்சிநேகிதிக்கும் புரியவில்லை!

-ராஜீ வேங்கடராமன்.

வழி காட்டியவர்




புதிதாகப் பத்திரிகை தொடங்கப் போகும் இந்த நேரத்தில் பேராசிரியர் கல்கி சொன்ன சில விஷயங்களை எண்ணிப் பார்க்கிறேன்.

ஆனந்த விகடன் அலுவலகம் பிராட்வேயில் இருந்தபோது கல்கி அவர்கள் ஆனந்த விகடனின் பொறுப்பாசிரியராகப் பணி புரிந்துகொண்டிருந்தார்.

ஒருநாள் அவரிடம் சென்று உதவி ஆசிரியர் வேலை கேட்டேன். என் எழுத்தைப் படித்துப் பார்த்துவிட்டு ''ஊஹூம். இதெல்லாம் சரிப்படாது. கொஞ்சநாட்கள் கழித்து வந்து பார்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

''வந்தது வந்தோம் ஓவியர் மாலியைப் பார்த்து விட்டுப் போகலாம்'' என்று அவர் அறைக்குள் எட்டிப் பார்த்தேன். அங்கே அந்த அறைக்குள் 'கதிர்' என்ற பெயரில் எழுதிக் கொண்டிருந்த உதவி ஆசிரியர் வேங்கடராமன் நின்றுகொண்டிருந்தார். மாலி அவரைப் பார்த்து மளமளவென்று ஒரு படம் வரைந்தார். ''இதோ பார், நீ இந்த மாதிரிதான் கூனல் முதுகோடு ஒல்லியாக வளைந்து நிற்கிறாய். நன்றாகச் சாப்பிடு. நிமிர்ந்து நட....'' என்று கூறி அந்தப் படத்தை கதிர் வேங்கட ராமனின் கையில் கொடுத்தார். நான் மறைவாக நின்றபடியே அதைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தேன்.

ஒரு இ. ஜ. ரங்கநாதன் என்னுடைய ஆப்த நண்பர். அவர் எனக்கு ஒரு யோசனை கூறினார். 'கத்தரி விகடன்' என்ற பெயரில் 'டைஜஸ்ட்' பத்திரிகை ஒன்று தொடங்கச் சொன்னார். ''என்னிடம் பணம் இல்லையே?'' என்றேன். ''பணம் வேண்டாம். சும்மா விளம்பரம் போடும், ஆனந்த விகடனில் அதைப் பார்ப்பார்கள். உடனே உம்மை அழைத்து வேலை கொடுத்து விடுவார்கள்''



சாவி

என்று யோசனை கூறினார். 'ஹநுமான்' பத்திரிகையில் இலவசமாக ஒரு விளம்பரம் போட்டார்கள். அதைக் கண்டதும் கல்கி என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

"The Editor wants to see you. please go over here immediately.
R. Mahadevan"

என்று கையெழுத்திட்ட கடிதம் ஒன்றை தேவன் எனக்கு அனுப்பியிருந்தார்.

கல்கி அவர்களை நேரில் போய்ப் பார்த்தேன். ''நீதானே கொஞ்ச நாளைக்கு முன்பு வேலை கேட்டாய்?''

''ஆமாம்.''

''இப்போது உதவி ஆசிரியர் வேலை இருக்கிறது. ஒப்புக் கொள்கிறாயா?''

''வேண்டாம், நான் கத்தரிவிகடன் என்ற பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப் போகிறேன்'' என்றேன்.

''பத்திரிகையா? நஷ்டம் வருமே? ஏகப்பட்ட பணம் வேண்டுமே? யார் பணம் போடுகிறார்கள்?''

''எனக்குத் தெரிந்த ஒரு பணக்காரர் போடுகிறார்'' என்றேன்.

''பணத்தை எங்கே போடுகிறார்? குளத்திலா?'' என்று கேட்டு விட்டு, ''பத்திரிகையாவது, நடத்துவதாவது? அதெல்லாம் வீண் வேலை. பேசாமல் இன்றைக்கே ஆனந்த விகடனில் சேர்ந்து கொள்'' என்றார். சேர்ந்து விட்டேன். தி. ஜ. ர.விடம் அன்று மாலை திரும்பிப் போய் விஷயத்தைச் சொன்னபோது ''என் திட்டம் பலித்து விட்டது! சம்பளம் வாங்கியதும் அம்பீஸ் கேஃபில் ஸ்வீட்டும் மசாலா தோசையும் வாங்கித் தரவேண்டும்'' என்றார். அப்படியே செய்தேன்.

பின்னொரு காலத்தில் நான் நடத்திய 'வெள்ளி மணி' பத்திரிகையைப் பார்த்து விட்டு ''பேஷ்! பேஷ்! பத்திரிகை ரொம்ப நன்றாயிருக்கிறது. என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன்'' என்று என்னைக் கல்கி அவர்கள் உற்சாகப் படுத்தியதுடன் சொன்னபடியே முடிந்த உதவிகளையும் செய்தார். கட்டுரைகளும் கதைகளும் எழுதிக்கொடுத்து வெள்ளிமணியைச் சிறக்கச் செய்தார்.

சினிமாப் படங்களின் நீளம் பதினோராயிரம் அடிக்குமேல் தேவையில்லை என்பது கல்கி அவர்களின் வாதம். இதற்காகத் தமது பத்திரிகையில் ''எத்தனை அடி வேண்டும்?'' என்று ஒரு கட்டுரை எழுதினார்.

நான் 'தமிழன்' என்ற வாரப் பத்திரிகையில் இதை ஆதரித்து நகைச்சுவையாக 'நாலு பேர் அபிப்பிராயம்' என்ற தலைப்பில் ஒரு கற்பனை நாடகம் எழுதினேன். மூட்டைப் பூச்சியும் இன்னும் மூன்றுபேரும் பதினோராயிரம் அடியை எதிர்ப்பது போல் அது அமைந்தது.

'பதினோராயிரம் அடிக்கு மேல் படம் ஓடினால்தான் பார்க்க வருகிறவர்கள் அதிக நேரம் ஸீட்டுகளில் உட்கார்ந்திருப்பார்கள். நான் மெதுவாக வெளியே வந்து படம் பார்ப்பவரின் ரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதற்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டாமா?' என்று மூட்டைப் பூச்சி கேட்பதுபோல் அந்த நாடகம் அமைந்திருந்தது.

இதைப் படித்துப் பார்த்த கல்கி அவர்கள் என்னை நேரில் அழைத்துப் பாராட்டி ''உனக்கு நல்ல நகைச்சுவை உணர்வு இருக்கிறது. நீ இன்றே கல்கியில் சேர்ந்துவிடு'' என்று கூறி என்னைத் தம் பத்திரிகையில் சேர்த்துக் கொண்டார்.

நான் கதைகள் எழுத முற்பட்ட போது ''வேண்டாம், கதை எழுதுகிற வேலை உனக்கு வேண்டாம். வீட்டுக்கு ஒரு ரேடியோ பாடுகிறது. வீட்டுக்கு ஒரு பெண் கதை எழுதுகிறாள். அதே வேலையைப் பத்திரிகைகளில் வேலை செய்கிறவர்களும் செய்யக் கூடாது. நமக்கு நிறையப்பேர் கதை எழுதுவார்கள். பேட்டிக் கட்டுரை, நகைச்சுவைத் துணுக்குகள், துக்கடா, விமரிசனம், பயணக் கட்டுரை, நிருபர் சரடு போன்ற Feature Writing எழுத முயற்சி செய்து பார். உனக்கு நகைச்சுவையாக எழுத வருவதால் அதெல்லாம் சுலபமாக வரும்'' என்று யோசனை கூறி அம்மாதிரி எழுதும் பணியில் என்னை ஊக்குவித்தார். அவர் என்னை நவகாளிக்கு அனுப்பி எழுதச் சொல்லவில்லையென்றால் என் எழுத்துத் திறனை வெளிப்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்கும்.

அந்தப் பேராசிரியர் இன்றும் என்றும் எனக்கு வழிகாட்டியாக இருப்பார்.

ஒருவர்: என்ன ... கோட்டு, டை இல்லாமல் கிளம்பிட்டீங்க... அதிசயமாக இருக்கே...

மற்றவர்: கோடை வந்தாச்சுன்னா கோட்டும் டையும் போக வேண்டியது தானே?

டி. ஸ்ரீனிவாசன்.



வட்ட மேஜை

உங்களுக்கு ஒரு நியாயம்; ஊருக்கு ஒரு நியாயமா?

● தலையங்கத்தில் கர்நாடக சங்கீத வித்வான்கள் ஒருவருக்கொருவர் ஏசிக் கொள்வதாக எழுதியிருப்பது வருந்தத் தக்கது. பாலமுரளி பதில் கூற மறுத்து விட்டதை நீங்களே இதற்கு முன் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். 18-2-79 கல்கி இதழில் ''திணறிப் போன பாலமுரளிக்கு நேரிடையாகப் பதில் கூற 'பயம்' அதனால் அபயத்தை நாடினார் போலும்'' போன்ற வாசகங்களைத் தாங்கள் பிரசுரித்ததேன்? ஒரு தலை சிறந்த வித்வான் 'நுனிப் புல் மேய்ந்து பாடுபவர்' என்று ஒரு வித்வான் எழுதியதைத் தாங்கள் எடிட் செய்யாதது ஏன்? தங்களுக்கு ஒரு நியாயம். மற்றவருக்கு ஒரு நியாயமா?

சென்னை—18 அபயாம்பிகா

● ''ரஜனிகாந்த்'' என்ற தலைப்பு வியாபார நோக்கம் என்றாலும் தலையங்கத்தின் கருத்து உயர்ந்து நிற்கும் எவரெஸ்ட்!

இராசிபுரம் ப. தனுஷ்கோடி

● ''ரஜனி காந்த்'' தலையங்கம் படித்தேன். ஐயோ பாவம்! நடுக்காட்டில் ஒற்றைக் குரலில் ஓலமிடுகிறீர்கள்!!

திருச்சி ஸ்ரீதர்

● 'ரஜனிகாந்த்' தலையங்கம் கண்டவுடன் சற்று அதிர்ச்சி! ''என்ன, கல்கி வீண் வம்பு வளர்த்துத் தலையங்கம் எழுத ஆரம்பித்து விட்டதே, என்று''! நான்காம் பாராவைப் படிக்கத் தொடங்கியதும் — உமது பேனாவை எவ்வாறு போற்றுவது என்று புரியவில்லை. உமது தொண்டு வாழ்க!

பாதூர் ரங்கநாதன்

● திருமதி சிவசங்கரியின் பயணக் கட்டுரையும் அதற்கான புகைப்படமும் கண்டு துணுக்குற்றேன்.

'கொல்லான் புலால் மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிரும் தொழும்' என்பது வள்ளுவன் வாக்கு.

இவ்வளவு கொடூரமான சீனச்சமையல் கட்டுரையும், படமும் இடம் பெறும் வீழ்ச்சி, எதைக் காட்டுகிறது?

இது ஒரு பத்திரிகை தர்மக் குழப்பம் தான்! நவ (அ) நாகரீகப் போட்டியில் கல்கியும் தப்பவில்லை —

வைத்தியரே, முதலில் உங்களைச் சொஸ்தப் படுத்திக் கொள்ளுங்கள்!

சென்னை—90 ப. ராமமூர்த்தி

● ''அன்னம்'' எழுதிய ''அதே கேள்வி!'' என்ற கதையைப் படித்தவுடன் என் உள்ளம் மிகவும் வேதனைப்பட்டது. அதே இதழில் ''ரஜினிகாந்த்'' என்ற தலையங்கத்தில் தாங்கள் ஊருக்கு உபதேசம் செய்யப் புறப் பட்டிருக்கிறீர்கள்! ''அதே கேள்வி'' கதையில் என்ன ''நீதி'' வற்புறுத்தப்படுகிறது?

''கிழக்கே போகும் ரயில்'' கதாநாயகன் தன் குலத்தொழிலை வெறுக்கிறான். அந்தத் தொழிலை அல்ல. ஆனால் கதாசிரியர் அன்னம் மீண்டும் அதைப் பரம்பரைத் தொழிலாக்கவே முனைந்திருக்கிறார். இனியேனும் சிந்தித்துச் செயல்படுங்கள்!

கொடுமுடி பெ. கனகசபாபதி

● பரஞ்சோதி — பாஞ்சாலி. ரசிகர்களின் மனத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் உயிர் ஓவியங்களைக் கட்சியில் புகுத்தியும், பட்டண வாழ்வில் திணிய விட்டும், புழுதியில் தள்ளிவிட்டார் ஆசிரியர்.

பம்பாய் இலகவதி மணி

● பாரதிராஜா அம்போ என்று கிழக்கே போகும் ரயிலில் ஏற்றிவிட்ட பாஞ்சாலியையும், பரஞ்சோதியையும் குழந்தையும் கையுமாக நம் கண்முன் காட்சியளிக்க வைத்த ''அன்னம்'' அவர்களுக்கு எமது பாராட்டு.

கும்பகோணம் எஸ். தேவாதிராஜன்

● ஐ. ஜி. ஸ்டிரேசி பேட்டியில் 'மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் செய்தூரில்' என்று வருகிறது. Seithur என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிற இவ்வூர் தமிழில் சேத்தூர் என்றே வழங்கப்படுகிறது. இது வரை இந்த அளவு விரிவாகத் தமிழில் நக்ஸலைட்டுகள் பற்றிய செய்திகள் வரவில்லை.

ஸ்ரீரெங்கப்பாளையம் எஸ். விஜயன்

● 'நூறு பக்கத்துக்கு ஒரு இலட்சம்' என்னும் தலைப்புள்ள கட்டுரையைப் படித்தேன். அதன் ஆசிரியர் பெயர் 'அக்யாய' என்று அச்சிடப்பட்டுள்ளது. 'அக்ஞேய' அதாவது 'அறிய முடியாதது' என்னும் பொருளில் உள்ள வடமொழிச் சொல்தான் அந்தக் கவிஞரின் புனைபெயராகும்.

சென்னை—14 பாக்ய லக்ஷ்மி

● 'வாக்கு மூலங்கள்' என்ற சிறுகதை மிகவும் சுவாரசியமாக இருந்தது. அதில் கடைசியில் குப்பம்மாள்'' எல்லோரும் சொல்றாங்களே... எட்டணா... அந்த ஐம்பது பைசா என் கையில் இருந்தா...'' என்று இழுக்கும் சமயத்தில் ''நானே முதலில் அந்த விஷத்தை வாங்கிக் குடித்திருப்பேன்'' என்று கூறுவாளோ என்று நினைக்கையில், கதாசிரியர் திரு. கணேஷ் ''ஆளுக்கு ஒரு டயாவது வாங்கிக்கொடுத்திருப்பேனே'' என்று முடித்திருப்பது கதையில் ஒரு நல்ல மாற்றம்.

சென்னை—5 எஸ். வி. ராஜசேகர்



முன் கதைச் சுருக்கம்

தமது சுயமுயற்சியால் பாடுபட்டு முன்னுக்கு வந்தவர் வைத்தியலிங்கம். அகிலன் எண்டர்பிரைஸஸ் என்ற மருந்து தயாரிப்பு நிறுவனத்தை வளர்த்து விரிவு படுத்துவதற்கு அவருக்கு உறுதுணையாக இருந்தவர் அருள்ராஜ் என்ற ஆப்தநண்பர்.

வைத்தியலிங்கத்தின் மகன் சத்யா, கல்லூரிப் படிப்பு முடிந்ததும் தன் தகப்பனாரின் நிறுவனத்திலேயே உயர் பதவி வகிக்க எண்ணுகிறான். ஆனால் வைத்தியலிங்கம் அவனைப் பயிற்சிக்காக அருள் ராஜுக்குக் கீழ் வேலை செய்யுமாறு பணிக்கிறார். மற்ற சாமானிய ஊழியர்களைப் போலவே அவனையும் நடத்திச் சம்பளமும் குறைவாகவே தருகிறார்.

சத்யா யோகேஷ் என்ற செல்வந்தரின் மகள் பிரமீளாவைக் காதலிக்கிறான். உமன்ஸ் லிபரேஷனில் தீவிரப் பற்று கொண்ட முற்போக்கான பெண் பிரமீளா. இந்தக் காதலை வரவேற்கும் வைத்திய லிங்கம், பிரமீளாவின் பெற்றோரைப் போய்ப் பார்த்து வருமாறு தம் மனைவியையும் மகனையும் அனுப்புகிறார்.

அருள்ராஜின் மகன் தீபக் பால், வைத்திய லிங்கத்தின் மகள் சுலோசனாவைக் காதலிக்கிறான். மாற்று மதத்தினனாய் இருந்த போதிலும் தீபக்பால் அவன் தகப்பனாரைப் போலவே அறிவிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்தவன் என்பதால் வைத்திய லிங்கம் இதனையும் மகிழ்ச்சியோடு வரவேற்கவே செய்கிறார்.

இப்படி மகிழ்ச்சி நிரம்பிய மூன்று குடும்பங்களில் துயரப் புயல் வீசக் காரணமாகிறான் ஆனந்த். அவன் சத்யாவின் நண்பன். பெரும் பணக்காரன் என்பதோடு பிறரைத் துன்பத்தில் ஆழ்த்துவதிலேயே ஆனந்தம் காண்பவன் ஆனந்த்.

காரியாலயத்தில் அருள்ராஜுக்குக் கீழ் முதலாளி மகனாகிய தான் வேலை செய்ய நேர்ந்ததை அவமானமாகக் கருதும் சத்யா, ஆறுதல் நாடி ஆனந்தின் பாச்சிலர் அபார்ட்மெண்டுக்குப் போகிறான். அவனுக்கு மதுப்பழக்கத்தை ஏற்படுத்துவதுடன் நித்யா என்ற கால்கேர்லைப் பயன்படுத்தி அவனை வசியப் படுத்தவும் செய்கிறான் ஆனந்த். அப்போது சில புகைப்படங்களும் எடுத்துக் கொள்கிறான். பிறகு குடி போதையுடன் இருக்கும் அவனை வேண்டுமென்றே காரில் ஏற்றிக் கொண்டு வைத்தியலிங்கம் வீட்டுக்குச் சென்று அவர் கண்முன் அவனை சோபாவில் கிடத்துகிறான். அதிர்ச்சியுற்ற அவரிடம் "உங்க மகன் சத்யா மதுவை நாடுவதற்குக் காரணம் நீங்க அவனை முதலாளி மகனாகப் பாவித்துக் கௌரவமாக நடத்தாமல் கேவலமாக நடத்துவதுதான்" என்கிறான். மேலும், அந்தஸ்து, வேற்றுமதம் என்பதொன்றும் பார்க்காமல் சுலோசனா தீபக் பாலைக் காதலிப்பதும் சத்யாவின் மனத்தை ரொம்பப் பாதித்திருப்பதாக ஆனந்த் வைத்தியலிங்கத்திடம் கூறிச் செல்கிறான்.

மறுநாள் போதை தெளிந்து எழுந்த சத்யாவுக்கும் வைத்தியலிங்கத்துக்கும் இடையில் வாக்குவாதம் வலுக்கிறது. ஒரு தொழிலாளி என்ற முறை

இணைகள்

கி. ராஜேந்திரன்



பில் தானும் தொழிற்சங்கத்தில் சேர்ந்திருப்பதாகவும் தகப்பன் என்று பாராமல் கோஷம் போட வேண்டி யிருக்கும் என்றும் கூறி அவர் எதிரே அப்போதே, ''வைத்தியலிங்கம் ஒழிக'' என்றும் வேறு பலவாறு ஏசியும் கோஷமிடுகிறான் சத்யா.

''ஒன்றன் மீது ஒன்றாக வந்தஅதிர்ச்சிகளைத் தாங்க முடியாமல் வைத்தியலிங்கத்துக்கு இருதயத் தாக்குதல் ஏற்பட்டு விடுகிறது. ஆனால் தெய்வாதீனமாகச் சாகாமல் தப்புகிறார். டாக்டர், பூரண ஓய்வுடன் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். கல்யாணப் பேச்சுகள் இரண்டும் ஒத்திப் போடப் படுகின்றன.

சத்யாவுக்கு உரிய மதிப்பும் மரியாதையும் தராமல் தான் நடந்து கொண்டது தவறு என உணர்ந்து வைத்தியலிங்கம் அவனை மானேஜிங் டைரக்டராக்குகிறார். ஆனந்த் பற்றி எச்சரித்து அருள்ராஜின் யோசனையை ஏற்குமாறு பணிக்கிறார்.

கம்பெனி நிர்வாகத்தில் அருள்ராஜின் ஆலோசனைகளை ஏற்கக் கூச்சப்படுகிறான் சத்யா. பல பிரச்னைகளுக்கு விடை காண முடியாது ஒத்திப் போடுகிறான். ஆரம்பத்தில் சத்யாவிடம் ரொம்ப நயமாகப் பேசி ஒத்துழைப்பதாக வாக்களித்துப் பணம் பெற்றுச் சென்ற தொழிற்சங்கத் தலைவர் காளமேகம், நாளாவட்டத்தில் மறுபடியும் தொழிலாளர்களைத் தூண்டி விட்டுவிடுகிறார்.

முன்பு தொழிலாளர்களுடன்சேர்ந்து தானும் கோஷமிட்ட சத்யா, இப்போது அவர்கள் தனக்கெதிராகக் கோஷங்கள் எழுப்புவதைச் சகிக்க முடியாதவனும் ஆத்திரமடைகிறான். பிரச்னைகளைச் சந்திக்க முடியாதவன், மீண்டும் ஆனந்தையே சரணடைகிறான். முன்பு சத்யாவைத் தனது பாச்சிலர் அபார்ட்மெண்ட்டில் நித்யா வசீகரித்த போது எடுத்த புகைப்படங்களை வைத்துக் கொண்டிருக்கிறான் ஆனந்த். எனவே, சத்யா அவனுக்குப் பயந்து அவன் விருப்பப்படி நித்யாவை ரிஸப்ஷனிஸ்ட்டாக வைத்துக் கொள்கிறான்: ஆனந்த் — நித்யா ஆகியோரின் துர்ப்போதனைகளால் சத்யா மேன்மேலும் கெடுவதுடன் கம்பெனி நிர்வாகத்தையும் சீரழிக்கிறான். நஷ்டம் ஏற்படுகிறது.

கால்கேர்ல் நித்யாவை சத்யா தலையில் கட்டிவிட்ட ஆனந்த், புதுச் சரக்கு தேடுகிறான். சத்யாவின் காதலி பிரமீளா அவன் கவனத்தைக் கவர்கிறாள். அவளை வசியப்படுத்த எண்ணி அவளுடைய உமன்ஸ் லிபரேஷன் கொள்கையில் தனக்கும் ஈடுபாடு இருப்பதுபோல் காட்டிக் கொண்டு பழகுகிறான்.

அவர்கள் இருவரும் அடிக்கடி சந்திக்கிறார்கள் என்ற எண்ணம் சத்யாவினால் தாங்க முடியாததாயிருக்கிறது. பிரமீளாவைச் சந்தித்து எச்சரிக்கிறான். பிரமீளா, ''என்னை எச்சரிக்கும் நீங்கள் ஜாக்கிரதை



யாக இருப்பதாகத் தெரியவில்லையே? அதே ஆனந்திடமும் அவர் கொண்டுவந்து வைத்த நித்யாவிடமும்தானே நீங்கள் ரொம்ப இழைகிறீர்கள்?'' என்கிறாள்.

''நான் பலவீனமானவள் அல்ல; என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்'' என்கிறான் சத்யா.

'உமன்ஸ் லிப்' என்கிற பெண் விடுதலைத் தத்துவத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கும் பிரமீளாவுக்குக் கோபம் வருகிறது. ''நானும் பலவீனமானவள் அல்ல; என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்'' என்கிறாள்.

அவர்கள் காதலில் இலேசான விரிசல் தலைகாட்டுகிறது. சத்யா கோபத்துடன் திரும்புகிறான். அகவினி என்டர்பிரைஸஸ் ஸில் வேலைநிறுத்தமும் அதைத் தொடர்ந்து லாக் அவுட்டும் நிகழ்கின்றன.

ஆனந்தையும் அழைத்துக் கொண்டு ஒருநாள் வீட்டுக்கு வந்து சேரும் சத்யாவை அவன் தகப்பனார் வைத்தியலிங்கம், வேலைநிறுத்தம் பற்றியும் நிறுவனத்துக்கு நேர்ந்துள்ள நஷ்டங்களைப் பற்றியும் விசாரிக்கிறார். அவனுடைய திறமையற்ற, ஊழல் மிக்க நிர்வாகம் குறித்துக் கண்டிக்கிறார். அச்சமயம் அங்கு வந்து சேர்ந்த தீபக் பால் அவர் கண்ணில் பட்டுவிடுகிறான். சத்யாவின் நிர்வாகம் பற்றித் தொழிலாளர் என்ன பேசிக் கொள்கிறார்கள்; அருள்ராஜின் அபிப்பிராயம் என்ன என்பதையெல்லாம் சொல்லுமாறு அவனுக்கு ஆணையிடுகிறார் வைத்தியலிங்கம். தீபக் தர்ம சங்கடத்துக்கு உள்ளாகிறான். ஆனால் வைத்தியலிங்கமோ, 'அருள்ராஜுக்குத் தம்மீது உள்ள விசுவாசத்தின் மீது ஆணையாகச் சொன்னால் தான் ஆயிற்று' என்று பிடிவாதத்துடன் இருக்கிறார்.

அத்தியாயம் 27

தனபாக்கியத்துக்கு ஒரே கவலையாகப் போய் விட்டது. தன் கணவருடைய உடம்பு ஏற்கெனவே ஒருமுறை மாரடைப்பினால் பாதிக்கப் பட்டிருந்தது. இப்போது நன்றாகத் தேறி வருகிறது என்று அவள் சந்தோஷப் பட்டு வந்தாள். டாக்டரும் நம்பிக்கையோடு இருந்தார். 'ஆனால் இது என்ன? மறுபடி ஆபத்தைத் தருவித்துக் கொள்வார் போலிருக்கிறதே! இப்படி உணர்ச்சி வசப்பட்டு இரைந்தால்? முன்பும் இதே போல இவர் மகனிடம் கூச்சல் போடப் போய்த்தானே முதல் ஹார்ட் அட்டாக் வந்தது?'



டாக்ஸி டிரைவர்: மீட்டர் சார்ஜுக்கு மேலே சில்லறை இல்லை என்று ஏன் சார் போய் சொல்றீங்க? வழியெல்லாம் சில்லறை குலுங்கற சத்தம் கேட்டுக்கிட்டே இருந்துச்சுங்களே!
பயணி: அது சில்லறை இல்லேப்பா!. என் எலும்பு.
கே. காளீசுவரன்.

அவள் கணவனை நெருங்கி அவர் இடது கையைத் தோளுக்கு அருகே பற்றினாள். ''என்னங்க, நீங்க பதற்றப்படக் கூடாது!''

''விடுடீ என்னை'' என்று உதறினார் வைத்தியலிங்கம். ''எட்ட நில்லு'' என்று உத்தரவு போட்டார். ' ''தோசையைத் தான் திருப்பிப் போட முடியும், இட்டிலியைத் திருப்பிப் போட முடியுமான்னு' திருநெல்வேலி பக்கம் வசனம் சொல்லுவாங்க. உன் மகன் இட்டிலியையே திருப்பிப் போடப் பார்க்கிறான். என்னைப் பார்த்துக்கிட்டுச் சும்மா இருக்கச் சொல்றியா?'' அவர் தீபக் பக்கமாகத் திரும்பினார்: ''டேய், தீபக்! நான் கேட்டதுக்கு ஒழுங்காப் பதில் சொல்லு. அகவினி என்டர்பிரைஸஸின் மானேஜிங் டைரக்டர் சத்யா நல்லபேர் எடுத்திருக்கிறானா? அவனைப் பற்றி என்ன பேச்சு அடிபடுது? உன் அப்பா என்ன நினைக்கிறார்? பதில் சொல்லலைன்னா உன் அப்பாவுக்கும் எனக்கும் இடையிலே இருக்கிற கால் நூற்றாண்டு உறவு இந்தக் கணமே அறுந்து போயிடும். சொல்லு!''

''சொல்றேன் சார்!'' என்றான் தீபக். ''ஆனால் ரொம்ப விசனத்தோடு வேறு வழியின்றிச் சொல்கிறேன் என்கிறதை எல்லாரும் புரிஞ்சுக்குங்க'' என்ற போது அவன் நாத் தழுதழுத்தது. தொண்டை அடைக்கக் கம்மிய குரலில் அவன் தொடர்ந்தான்: ''சத்யாவுக்குத் தொழிலகத்தில் தொழிலாளரிடையே நல்ல பேர் இல்லே. ரா மெட்டீரியல்ஸுக்குக் கமிஷன் வாங்கி பிளாக் மணி பண்ணறதாகப் பேசிக்கிறாங்க. அப்புறம் ஊதாரித்தனமா செலவு பண்ணி கம்பெனி கணக்கில் எழுதறதாச் சொல்றாங்க. மேலும் அகௌண்ட்ஸிலே சில தகிடுதத்தங்களைப் பண்ணுவதாகவும் சொல்றாங்க... இன்னும்... இன்னும்...''

தீபக் பேசப்பேசத் தனபாக்கியமும் கலாசாவும் வைத்தியலிங்கத்தை நெருங்கி நெருங்கி வந்தார்கள். ஆறுதலாக அவர் கரங்களைப் பற்றிக் கொண்டார்கள்.

''இன்னும்...?'' என்று கர்ஜித்தார் வைத்தியலிங்கம். ''ஏன் தயங்கறே? இன்னும் என்ன?''

''அவன் தன் ரிஸப்ஷனிஸ்ட்டோடு சேர்ந்து ஆபீஸிலேயே காம லீலைகளை நடத்தறதாகப் பேசறாங்க சார்!''

தீபக் இதைச் சொல்லி முடித்த மறுகணம் விம்மி அழ ஆரம்பித்து விட்டான். தனது பெருமதிப்புக்குரிய வைத்திய லிங்கத்தினிடம் அவர் மகன் பற்றியே குறைகூற நேர்ந்ததால் ஏற்பட்ட வேதனை அவனைப்பலமாகத் தாக்கி விட்டது. இப்படி ஒரு நிர்ப்பந்தத்துக்குத் தான் ஆளாகிப் பேசியதால் பின் விளைவுகள் என்னவாக வெல்லாம் இருக்குமோ என்று யோசித்த போது அவன் உடம்பு நடுங்கியது.

கலோசஞ அவனை நெருங்கி வந்து, ''தீபக்! பிளீஸ் காம் யுவர் ஸெல்ஃப்!'' என்று கூறியது அவனுக்குச் சற்றே ஆறுதலாய் இருந்தது. நிலை குலையாமல் சமாளித்துக் கொண்டான்.

வைத்தியலிங்கம் தம் மனைவியைப் பார்க்கத் திரும்பினர். ''போதுமா? போதுமா தனம்? கேட்டுக்கிட்டியா? 'மகன் கிட்டே பொறுப்பை ஒப்படைச்சால் அவன் பொறுப் போடு நடந்துக்குவான்; பதவிக்கு வந்தால் பொறுப்பும் தன்னுல் வரும்'னு சொன்னியே! உன் மகன் எவ்வளவு பொறுப்பா என் காரி யாலயத்தை விபசார விடுதியா மாற்றியிருக் கான் கேட்டுக்கிட்டியா?'' என்றபோது வைத் திய லிங்கத்தின் குரலில் கோபத்தை விடத் துக்கமே மேலிட்டது.

தனபாக்கியம் விசும்பி அழுதபடியே, ''கேட்டுக்கிட்டேங்க; நீங்க அமைதியா இருங்க'' என்று துயரமும் கணவன் உடல்நிலை குறித்துப் பயமும் கலந்து பேசினுள்.

''கவலைப்படாதேமா'' என்ருர் வைத்திய லிங்கம். ''டாக்டர் சொல்லியிருக்கார். நூறு வருஷம் இல்லாவிட்டாலும் எண்பது வயசு வரையிலாவது வாழ்வேன்னு கூறியிருக்கார். எண்பது வரை வாழ்ந்து, இவன் இனிமேலும் பண்ணப் போகிற அக்கிரமங்களையெல்லாம் பார்த்தும் கேட்டும் அனுபவிக்கப் போகி றேன்!''

வைத்தியலிங்கம் நிலைகுலைந்து சோபாவில் தடுமாறி அமர்ந்து பெருக்கெடுத்த கண்ணீரை மேல் துண்டால் துடைத்துக் கொண்டார்.

சற்று நேரம் அங்கே நிலவிய மௌனம் சத்யாவின் ஆத்ம பரிசோதனைக்கு உதவி அவன் மனம் மாறிவிடுமோ என்று அஞ்சிய வன் போல ஆனந்த் பேசினுன்: ''நீங்க உங்க சொந்த மகனை நம்பாமல் இந்த ஸ்கௌண்ட் ரல் சொல்வதை யெல்லாம்தான் கேட்டு நம்பப் போறீங்களா?''

''யாரு ஸ்கௌண்ட்ரல்? தீபக்கா?'' என்று கேட்டார் வைத்தியலிங்கம். ''இவனும் இவன் அப்பாவும் அயோக்கியன்னு மார்ட் டின் லூதர் கிங்கும் மகாத்மா காந்தியும் கூட அயோக்கியங்க தான். நீதான் நல்ல வன்னு சைத்தான் கூட நல்லவன் தான்!''

''நீங்க என்னை இப்படித் திட்டறது ரொம்ப அநாகரிகம்'' என்ருன் ஆனந்த். ''ஆனலும் பொறுத்துக்கறேன், சத்யாவுக்காக. அவன் என்னேட பெஸ்ட் ஃபிரெண்ட். அவன் மனசை இம்சிக்காதீங்க. அவன் எப்படி வருத்தப்படருன் பார்த்தீங்களா?''


''வருத்தப் படருஞ? அப்படின்னு எனக்கு ரொம்ப சந்தோஷம். ஏன்னு, வருத்தப்பட்டா மனம் திருந்த வழியுண்டு. மனம் திருந்திய வனுக்கு எப்பவும் உய்வுண்டு.''

இதைக் கேட்டுச் சத்யாவே நெகிழ்ந்து போன குரலில் ''அப்பா!'' என்ருன்.

வைத்தியலிங்கம் அன்பும் கண்டிப்பும் நிறைந்த குரலில், ''இப்படி வாடா பயலே! நான் சொல்றதைக் கேளு'' என்ருர். தொடர்ந்து அறிவுரை வழங்கினர்: ''தொழி லாளர்களை அழைச்சு வச்சு உனக்குள்ள சிரமங்களை எடுத்துக் கூறு. நீ ஏதாவது தப்பு பண்ணியிருந்தா அதை மனம் விட்டு ஒப்புக் கொள். இனிமே திருந்திச் சரியானபடி தொழி லகத்தை நடத்தறதா அவர்களுக்கு வாக்குக் கொடு! உண்மைகளை மறைக்காமல் தர்ம நியாயமா நடந்துக்கிட்டு நீ பேசினு அவங் களும் மனம் இளகிடுவாங்க. அவங்க எல்லா ருக்கும் என்மேல் அன்பு உண்டு. உன்னேடு ஒத்துழைப்பாங்க. அடுத்த ஆண்டே மறுபடி கம்பெனி லாபகரமாக நடக்க வழி பிறக்கும்.''

''என்னப்பா, இது, நீங்க பேசறது? நம்ம கம்பெனியை நாம் நம்ம இஷ்டப்படி நடத் திட்டுப் போகிறோம். தொழிலாளர் கிட்டே நான் எதுக்கு மன்னிப்புக் கேட்கணும்? நன்ன டத்தை சர்ட்டிபிகேட் வாங்கணும்? எனக்குப் புரியலே, உங்க போக்கு. நான் ஃபிராடு பண்ணினு என்ன? பொய்க் கணக்கு எழுதினு என்ன? நீங்க கேட்கலாம், அவங்க யாரு கேட்கிறதுக்கு?''

''மடையா! 'இந்தக் கம்பெனி என் னுடையது; நான்தான் முதலாளி' என்கிற



'ஏன்மா தோசை சப்பையா இருக்கு?''
''மருதாணி அரைச்ச 'மிக்ஸி'யிலே தோசை மாவு அரைச்சுட்டேன்னு!''
சியாமளா சீதாராமன்.

பையன்: இன்னிக்கு எங்க கணக்கு எம். ஜி. ஆரும், இங்கிலீஷ் எம். ஜி. ஆரும் ஸ்கூலுக்கு வரலே.
அம்மா: என்னடா உளர்றே!
அப்பா: இரண்டு வாத்தியாரும் வரலேங்கறதைத் தான்டி உன் பையன் சொல்ருன்.
-உஷா சந்தானம்



எண்ணமே உன் மனத்தில் இருக்கக் கூடா துடா! தொழிலாளர்களுக்காகவும் பொது மக்களுக்காகவும் தர்ம கர்த்தாப் பொறுப்பு ஏற்று அவர்கள் சார்பிலே நீ நிறுவனத்தை நடத்தறேங்கிற எண்ணம் சதா உன் உள்ளத் திலே இருக்கணும். இதைத்தான் காந்திஜி சொன்னர்.''

''அந்த லட்சியமெல்லாம் ஏட்டுச் சுரைக் காய் சார்! இன்றைக்கு முதலாளிங்க எல்லாம் ஆட்சியிலிருப்பவங்களைத் திருப்திப் படுத்தற மாதிரி நடந்துக்கிறாங்க; தொழிலாளர் இயக்கங்களிலும் அரசியல் புகுந்துடுத்து'' என்றான் ஆனந்த்.

''அதோடு ஏன் நிறுத்திட்டே? இன்றைய கம்பெனி நிர்வாகத்திலும் பொய்க் கணக்கு தகிடுதத்தங்கள், சுரண்டல், கறுப்புப்பணம், ஊதாரித்தனம், காமக் களியாட்டங்கள் எல்லாம் புகுந்துடுத்தே அதையும் சொல்லு!'' என்றார் வைத்தியலிங்கம். தம் மகன் பக்கம் மீண்டும் திரும்பிப் பேசினார்:

''மனிதர்களை எடைபோட நீ தெரிஞ்சுக் கணும் சத்யா. உன் மனசுக்குப் பிடித்த மாதிரியெல்லாம் பேசறவங்கதான் உனக்கு நல்லதை நினைக்கிறாங்கன்னு எண்ணாதே. அதுவும் ஒரு தப்புக் கணக்கு ஆயிடும்.''

''என்னப்பா நீ! நீபக் சொன்னதை வைச் சுக்கிட்டுத் திரும்பத் திரும்ப என்னையே ஊழல் பேர்வழியாக்கறே'' என்று ஆங்காரத் துடன் கேட்டான்சத்யா.

வைத்தியலிங்கமும் பொறுமை இழந்தார்: ''நீ ஊழல் பேர்வழி இல்லேடா! ஊழலின் மொத்த உருவமே நீதான்னு புரிஞ்சுக்கிட் டிருக்கேன். சத்யான்னு உனக்குப் பேர் வைச்சேன் பாரு! என் புத்தியைச் செருப் பால் அடிக்கணும்!''

''அப்பா! எவனோ வேலைக்காரப் பய மவன் சொன்னதைக் கேட்டுக்கிட்டு நீங்க பெத்த மவனை இப்படி ஏசிப் பேசறது கொஞ்சம் கூட நல்லா இல்லே'' என்று குரலை உயர்த்தி இரைந்தான் சத்யா.

''யார் பெத்த மவன்டா நீ? எனக்குப் பிறந்த மகனா நீ? தனம் தன் வயிற்றிலே ஒன்பது மாதம் சுமந்து பெற்றாளா உன்னை? அப்படி எங்க பிள்ளையா இருந்தா நீ இந்த மாதிரி நடந்துக்க மாட்டியே! என் ரத்தத் தின் ரத்தமாய் இருந்தால் நீ யோக்கியமா நடந்துக்குவியே!''

''அப்பா! நீங்க என்ன சொல்றீங்க?'' திகைப்பும் வியப்பும் கலவரப் பீதியும் அவன் முகத்தில் கலந்து தோன்றின.

''இன்னும் தெளிவாச் சொல்லணுமா? அப்ப கேட்டுக்க!'' என்றார் வைத்தியலிங்கம். ''யூ ஆர் நாட் மை ஸன்! நீ என் பிள்ளை இல்லே, இன்றும் இல்லை, முன்பும் இல்லை, இனியும் இல்லை!''

''அப்படியானால் நான்... நான்...''

''சொல்றேன்... நீ... நீ...''

''வேண்டாங்க சொல்லாதீங்க!'' 'கோ' வென்று கதறியபடி அவர் காலடியில் விழுந் தாள் தனபாக்கியம். ''பெற்ற தாயில்லேன்னு அவன் நினைக்கும்படி நான் என்றைக்குமே நடந்துக்கிட்ட இல்லையே, எனக்கு ஏன் இந்தத் தண்டனை?''

''பாக்கியம்!'' என்று அதட்டினார் வைத் தியலிங்கம். ''மனசைத் திடமா வைச்சுக்க. சொல்லத்தான் வேண்டும். சொல்ல வேண் டிய தருணம் வந்துடுச்சு'' என்றவர் ஆனந்த் பக்கம் திரும்பிக் கூறினார்: ''நீ முன்பொரு சமயம் குடிபோதையிலிருந்த சத்யாவை இங்கே கைத்தாங்கலா அழைச்சு வந்து பேச்சு வளர்த்தபோது நான், 'என் குடும்பத்தினரிடமிருந்து இன்று வரை ஒரு சின்ன விஷ யத்தைக் கூட மறைச்சதில்லை; ஏன்னா, ஐ ஹேவ் நத்திங் டு ஹைட்' என்று பெரு மையா சொல்லிக்கிட்டேன். அதுவும் முழுப் பொய் இல்லை. உண்மையில் மறைப்பதற் குரிய சின்ன விஷயம் ஏதுமில்லைதான். பெரிய ரொம்பப் பெரிய விஷயமாகத்தான் ஒன்னே ஒன்னு இருந்தது. அந்த ஒரே ஒரு விஷயம் சத்யா என் சொந்த மகன் இல்லே என்பது தான். ஓர் அனாதை ஆசிரமத்திலிருந்து என்னால் எடுத்து வரப்பட்டு என்னிடம் வளர்ந்தவன்!''

தனபாக்கியம் விசித்து விசித்து அழ, தன் மடியில் படுத்திருந்த அவள் தலையையும் முதுகையும் மெல்ல ஆறுதலாகத் தடவிக் கொடுத்தார் வைத்தியலிங்கம். மற்ற அனை வரும் திக்பிரமை பிடித்துப் போய் நின் றார்கள். அசாதாரணமான அந்த மௌனத்தை நீண்ட நேரம் கழித்து ஆனந் தின் குரல் கலைத்தது. பரம ரகசியம் ஒன்றை ஊரறியக் கூறும் தொனியில் அடித் தொண் டையில் அவன் வியப்பொலி எழுப்பினான்: ''மைகாட்!'' வெளிப்படையாக வந்த இந்த வார்த்தைகளை அடுத்து அவன் உள்மனத்தில், 'இதை நான் பிங்கியிடமும் அவள் பெற்றோ ரிடமும் உடனடியாகச் சொல்லியாக வேண் டுமே!' என்ற எண்ணம் எழுந்தது.

விருட்டென்று திரும்பி நடக்க ஆரம்பித் தான் வாசலை நோக்கி.

தான் நிமிர்ந்து நிற்க இருந்த ஒரே பக்க பலமும் நழுவிவிட, தொய்ந்து துவள்வது போல் உணர்ந்தான் சத்யா. ''ஆனந்த்!'' என்று அவன் அழைத்தபோது, 'இப்படி என்னை நிர்க்கதியாய் விட்டுப் போகிறாயே' என்பது போல் பரிதாபமாக அவன் குரல் ஒலித்தது. ஆனந்த் திரும்பிப் பார்க்கவே இல்லை!

(தொடரும்)





திருச்சி அகஸ்தியர் புத்தகசாலை உரிமையாளரும் நேஷனல் கல்லூரி உதவிப் பேராசிரியர் திரு. S. ராமச்சந்திரனின் சகோதரருமான திரு. S. கோபால கிருஷ்ணன் B. Comக்கும், தஞ்சாவூர் சங்கீத ரத்னம் திரு. K. ராமய்யர் குமாரத்தி சௌ. சுதா B. A.க்கும் சமீபத்தில் தஞ்சாவூரில் நடைபெற்ற திருமணத்திற்கும், திருச்சியில் நடைபெற்ற வரவேற்பிற்கும் ஏராளமான நண்பர்களும், பிரமுகர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்

சிரித்தபடியே எழுதுவோம்!

பிறர் வாழ்க்கையில் நடப்பனவற்றை யெல்லாம் தொகுத்தளித்து வாசகர்களைச் சிரிக்க வைக்கும் பத்திரிகையாளர்கள் தங்கள் வாழ்க்கையிலேயே சிரித்து மகிழ்ந்த நேரங்கள் இருக்குமே...? சிலரைக் கேட்ட போது...

ஓடும் பஸ்ஸில் பேட்டி!

— 'பாவை சந்திரன்' குங்குமம்



பாவை சந்திரன் (குங்குமம்)

காஞ்சிபுரத்திலிருந்து பஸ்ஸில் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். 'பஸ் ஸ்டாப்பில்' மட்டுமல்லாது வழியில் ஆங்காங்கு பஸ்ஸைப் பார்த்த இடத்திலெல்லாம் மறித்து ஏறிக் கொண்டவர்கள் அதிகம் இருந்தார்கள். கண்டக்டர் கொஞ்சமாவது சலித்துக் கொள்ள வேண்டுமே! ம்ஹூம்.

மெள்ளக் கண்டக்டரை அணுகி, "இப்படி கண்ட கண்ட இடத்தி லெல்லாம் கையைக் குறுக்கே காட்டி பஸ்ஸை நிறுத்தி ஏறிக்கொள்கிறார்களே, உங்களுக்குக் கோபமே வருவது இல்லையா?" என்றேன்.

இந்தக் கேள்விக்கும், அதையடுத்து ஏனைய கேள்விகளுக்கும் கண்டக்டர் சொன்ன கருத்துக்களைத் தொகுத்துக் கட்டுரையாக எழுதினால் என்ன?

குறிப்பேட்டை எடுத்துக் கொண்டு எழுத முனைந்தபோது கோவையாக எழுத முடியாது திணறினேன். மயக்கமா? இல்லை. ஓடுகிற பஸ்ஸில் எழுதுகிற கலை என்னுடையதல்லவே!

கண்டக்டர் சிரித்துக் கொண்டே சொன்னார்:

"ஸார், நீங்க ரிப்போர்ட்டரா இருக்கலாம். ஒத்துக்கறேன். உங்களாலே நிலையா உட்கார்ந்துதான் எதையும் எழுத முடியும்!" என்று எள்ளி நகையாடினார்:

என்ன இப்படிச் சொல்லி விட்டாரே என்ற குறுகுறுப்புடன் தீவிரமாக எழுத முனைந்தேன். தோல்வி, தோல்வி.



"ஸார்! ஒன்று செய்வோம். நீங்க கேள்வியை மட்டும் கேளுங்கள். நான் பதிலை அப்படியே எழுதித் தருகிறேன்" என்றார்.


"நல்ல ஐடியா, இந்தாருங்கள்" என்று நோட்டையும் பென்சிலையும் அவரிடம் நீட்டினேன். சென்னை வந்து சேரும் வரை கேள்விகள் கேட்டேன். அவரும் சளைக்காது எழுதினார்.

எஸ்பிளனேடில் இறங்கியதும் இருவரும் டீ சாப்பிட்டு விடைபெற்றோம்.

அறையில் வந்து குறிப்பேட்டை எடுத்துப் படித்துப் பார்த்தால் ஒன்றுமே புரியவில்லை. நான் கேட்ட கேள்விகள் மட்டுமே எனக்கு ஞாபகத்துக்கு வந்தது!

கிழிந்த சுவர்!

— நவீனன் தினமணிகதிர்





நவீனன் (தினமணி கதிர்)

டி. கே. எஸ். சகோதரர்கள் திருச்சிராப் பள்ளியில் 'தேச பக்தி' என்ற அரசியல் எழுச்சி கொண்ட நாடகத்தைப் பார்க்க என்னை அழைத்திருந்தார்கள்.

நாடகம் நடைபெறுவதற்கு முன் ஔவை டி. கே. சண்முகம், கலைஞர் திருலோக சீதாராம் ஆகியோருடன் அமர்ந்து வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சுக்கு நடுவே ஔவை சண்

முகத்திடம், ''கிழிந்துவிட்ட ஒரு சுவரை எப்படித் தைக்க முடிந்தது?'' என்று திமரென்று கேட்டேன். சண்முகம் விழித்தார்.

எதிரே மேடையில் தொங்கிக் கொண்டிருந்த சுவர்ச் சித்திரம் தீட்டப்பட்டிருந்த சீன் திரையின் ஒரு மூலையில் கிழிசல் ஏற்பட்டுத் தைக்கப் பட்டிருந்ததை அவருக்குச் சுட்டிக் காட்டினேன். டி. கே. சண்முகம் என் முதுகில் உற்சாகமாகத் தட்டி, ''பிரமாதமான ஜோக்!'' என்று சொல்லிப் பெரும் ஓசையோடு குலுங்கிச் சிரித்தார்.

'கார்டன் கேப்'பில் கார்! — லேனா தமிழ்வாணன் கல்கண்டு



லேனா தமிழ்வாணன் கல்கண்டு

'புதிதாக என்ன செய்யலாம்; பழைய விஷயத்திற்குக் கிடைத்த வரவேற்பு எப்படி' என்றெல்லாம் ஒரு பத்திரிகையாளனின் மனம் சிறகடித்துப் பறந்து கொண்டே இருக்கும்.

அப்படிப்பட்ட ஒரு மனநிலையுடன் புரசைவாக்கத்திலுள்ள கார்டன் கேப்புக்குச் சென்றேன்.

காரைப் பூட்டினேன். ஒரே சிந்தனை.

டாப்பிக் – டெலிபோன் பேட்டி – அட்டைப்படம் – கேள்வி பதில் –

எல்லாம் மனத்தில் அலைமோதின.

சாப்பிட்டுவிட்டுப் பில்லுக்குரிய தொகையைக் கொடுத்து விட்டு நடந்தேன்.

நடந்து கல்கண்டு அலுவலகத்திற்கே வந்து விட்டேன்.

மாலையில் வீட்டுக்குத் திரும்ப நினைத்த போதுதான் கார் ஞாபகமே வந்தது!

ஆமாம். கார் –

ஹோட்டலிலேயே நிற்கிறது! அங்கு சென்று காஷியரிடம் விஷயத்தைச் சொல்லிக் கார்ச் சாவியைக் கேட்டேன். (சாப்பிடும் டேபிளில் வைத்து விட்டதாக ஒரு நினைப்பு) அவர் –

ஏகப்பட்ட சாவிக் கொத்துக்களை எடுத்துப் போட்டார்!

எனக்கு ஒரு திருப்தி!

அப்பாடா! இந்த நாட்டில் எத்தனை ஞாபக மறதிக் காரர்கள்! அந்தக் கொத்துக்களிடையே என் கார்ச் சாவி இல்லை!

பின்னே?

பாக்கெட்டைத் துழாவினேன். சாவி பாக்கெட்டிலேயே இருந்தது!

பத்திரிகையாளனுக்கு எப்போதும் பத்திரிகை பற்றித்தான் நினைப்பு. அதனால் வருவது ஞாபக மறதி. அது, மற்றவர்களுக்கு ஏற்படுத்துவது கேலிச் சிரிப்பு!



கிரிக்கெட் கற்கலாம்! 30

கோச்: கே. சந்திரசேகர்

படம்: ராஜு தயாரிப்பு: குண்டுமணி

போரா? ஜென்டில்மென் ஆட்டமா?





தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு

ஓர் அறிவிப்பு

தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகவும், செம்மையாகவும், வரலாற்று நெறிமுறையோடும் வெளியிட டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தமிழக அரசு அமைத்துள்ள வல்லுநர் குழு முயன்று வருகிறது. அப்பெரும் பணிக்குப் பலரது ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. தந்தை பெரியாரோடும், அவரது இயக்கத்தோடும் தொடர்புடைய பெருமக்கள் தமக்குத் தெரிந்த, தம்மிடமுள்ள, வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்புகள், புகைப் படங்கள், கடிதங்கள், கட்டுரைகள், எழுத்து வடிவங்கள், பத்திரிகைகள், சிறப்பு மலர்கள் ஆகியவற்றைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பியுதவுமாறு வேண்டுகிறோம். பணி முடிந்ததும் அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

பெரியாரின் கொள்கைகளில் பற்றும் மதிப்பும் கொண்டு, தமிழ்ப்புலமையும், ஆய்வு நெறி முறையறிவும், நூல் உருவாக்கத்தில் முன்னறிவும் வாய்க்கப்பெற்று, பொதுத் தொண்டாற்றும் விருப்பமுடையோர், இவ்வரலாற்று நூல் ஆக்கப்பணியில் முழு நேரமோ, பகுதி நேரமோ பங்குபெற வரவேற்கப்படுகின்றனர்.


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
செயலாளர்,
பெரியார் வரலாற்று வல்லுநர் குழு,
இராசாசி மண்டபம்,
அண்ணா சாலை, சென்னை–600 002.


இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை–600 009.

ஹிந்தியைத் திணிக்காதீர்கள்! ஒற்றுமையைக் குலைக்காதீர்கள்!

முரசொலி மாறன்

-2-





நமது பிரதமர் புத்திசாலி; வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசக் கூடியவர். ஆட்சி மொழியாக இந்தியின் உபயோகம் அதிகரித்துத்தான் தீரும் — என்று பிரதமர் கூறியிருக்கிறார். அதாவது, இந்தியை எங்கள் மீது திணிப்போம் — என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அது எங்களுக்கு நல்லது என்றும் கூறியுள்ளார். இதற்குப் பொருள் என்ன? இந்தி பேசாத மக்களின் நலனைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்ளாமல் ஆங்கிலத்தை அகற்றி விட்டு, இந்தியைத் திணிக்க முடிவு செய்துவிட்டீர்கள் என்பதுதானே இதற்குப் பொருள்? ஆட்சி மொழியாக இந்தியின் உபயோகம் அதிகரிக்கத்தான் செய்யும் என்று நீங்கள் சொன்னால், நான் சொல்கிறேன் — அந்த இந்திக்கான எதிர்ப்பும் அதிகரிக்கத்தான் செய்யும்! அதில் சிறிதும் சந்தேகம் வேண்டாம்.

முன்பே பிறப்பிக்கப்பட்டிருந்த ஆட்சி மொழிச் சட்டத்துக்கு 1976—ஆம் ஆண்டில் தான் விதிகளை (Rules) உருவாக்கினார்கள். அதில், ஏன் இந்தியில் பணியாற்றும் அறிவு (Working knowledge) என்றும், இந்தியில் திறமை (Proficiency) என்றும் கூறியிருக்கிறார்கள்?

ஆட்சி மொழிச் சட்டத்தில் 3 (2)—வது பிரிவு ஊழியர்கள் இந்தியில் ‘போதுமான பணியாற்றும் அறிவு’ (Working knowledge) பெறும் நாள் வரை மொழி பெயர்ப்புக்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

இப்போது, இன்ன தேர்வில் வெற்றி பெற்றால்தான் உனக்கு இந்தியில் போதுமான ‘பணியாற்றும் அறிவு’ (working knowledge) இருப்பதாகப் பொருள் என்று கூறுகிறார்கள்.

அதுபோலவே இன்னின்ன தேர்வுகளில் வெற்றி பெற்றால்தான் உனக்கு இந்தியில் போதிய திறமை (proficiency) இருப்பதாகக் கொள்ளப்படும் — என்று விதி (rule) உருவாக்கியிருக்கிறார்கள்.

ஐயா! ஆட்சிமொழிச் சட்டம் மக்கள் அவையில் இருத்தப்பட்டபோது பேராசிரியர் ரங்கா அங்கே உறுப்பினராக இருந்தார்; நானும் இருந்தேன்; இங்குள்ள பலர் அங்கு இருந்தார்கள். தற்போதைய உள்துறை அமைச்சர் கூட அங்கே — அப்போது — சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருந்து ஆங்கிலத்துக்காக வாதாடினார். எங்களோடு சேர்ந்து வன்மையாக இந்தியை எதிர்த்தார்.

அப்போது எங்களுக்குச் சொல்லப்பட்டது என்ன?

இந்தியில் பணியாற்றும் அறிவு (working knowledge) அல்லது திறமை (proficiency) —ஆகியவற்றை மத்திய அரசு ஊழியர்கள் கட்டாயமின்றி — வற்புறுத்தப்படாமல் — தாங்களாகவே விருப்பப்பட்டுப் பெற வேண்டும் — என்பதுதானே?

—அப்படித்தான் நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம்.

மாபெரும் நம்பிக்கை மோசடி

ஆனால், இப்போதோ — இன்னின்ன இந்தித் தேர்வுகளில் அவர்கள் வெற்றி பெற வேண்டும் என்கிறீர்கள்!

அவர்களைக் கட்டாயப் படுத்தி — வற்புறுத்தி — இந்தி வகுப்புகளுக்கு அனுப்புகிறீர்கள்!

இந்தி வகுப்புகளுக்குச் செல்லா விட்டால் கடமையிலிருந்து தவறியதாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறீர்கள்!

—இது ஒரு மாபெரும் நம்பிக்கை மோசடி என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



-கோ.கை.தூரிகை

ஆட்சிமொழிச் சட்டம் மக்கள்சபையிலே நிறைவேற்றப்பட்ட போது, 'இந்தியில் பணியாற்றும் அறிவு' (working knowledge) என்பதற்கும், 'இந்தியில் திறமை' (proficiency) என்பதற்கும், இப்படி மாறுபட்ட அர்த்தத்தை வழங்குவீர்கள் — என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இது மிகவும் மோசமானது. சட்டத்திற்குப் புறம்பானது.

எனவேதான், 1976-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த விதிகளைத் (rule) திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்துறை அமைச்சகத்தின் அறிக்கை 1977—ஆம் ஆண்டு ஜூன், ஜூலை வரை 3,65,000 ஊழியர்கள் இந்தித் தேர்வுகளில் வெற்றி பெற்றிருப்பதாகப் பெருமையுடன் அறிவிக்கிறது.

அந்த 3,65,000 பேரும் இந்தித் தேர்வு எழுதும்படி கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் — என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் ஒரு குடிமகனை இந்தியைப் படிக்கும்படியும், எழுதும்படியும் கட்டாயப்படுத்தினால் அது கட்டாய அறுவைச் சிகிச்சைக்குத்தான் சமமாகும்.

இது இன்னொரு 'நஸ்பந்தி'! அதைவிட மோசமானது!

'நஸ்பந்தி' என்கிற கட்டாய அறுவைச் சிகிச்சையினால் முன்னாள் ஆளும் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் பெருந் தண்டனையைப் பெற்றது.

நான் நட்பு முறையில் இந்த அரசை எச்சரிக்க விரும்புகிறேன் — இப்போது நீங்கள் நடத்தும் 'நஸ்பந்தி' காரணமாக இந்தி பேசாத மக்களின் வாக்குகளை வருங்காலத்தில் நீங்கள் இழக்க நேரிடும்!

ஒருவரை இந்தி படிக்குமாறு கட்டாயப் படுத்துவது அடிப்படை உரிமைகளுக்கும், 'சர்வீஸ் விதிகளுக்கும்' முரணானது. இது ஆட்சிமொழிச் சட்ட விதிகளுக்கும் விரோதமானது. அந்தச் சட்டத்தில் இல்லாத விதத்தில் சில சொற்றொடர்களுக்குப் புதிய அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்! அதை நீங்கள் எவ்வளவு விரைவில் திரும்பப் பெறுகிறீர்களோ அவ்வளவு விரைவில் நீங்கள் இந்தி பேசாத மக்களுக்கு நன்மை செய்தவர்களாவீர்கள்!

ஜனதாக் கட்சிக்காரர்கள் நாங்கள் பழைய அரசின் மொழிக் கொள்கையைத்தான் பின்பற்றி வருகிறோம் — என்று கூறுகிறார்கள். மாண்புமிகு பிரதமரும், முன்னாள் உள்துறை அமைச்சரும் — இந்நாள் நிதியமைச்சருமான திரு. சரண்சிங்கும் நாங்கள் ஒன்றும் புதிதாகச் செய்து விடவில்லை — என்று கூறியிருக்கின்றனர்.

—இது நூற்றுக்கு நூறு உண்மை.

நான் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன் — பழைய அரசு மேற்கொண்ட பலவற்றை நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். 42—வது அரசியல் சட்டத் திருத்தத்தில் இருந்த பல கொடுமையான பிரிவுகளை நீங்கள் விலக்கியிருக்கிறீர்கள். அதைப்போல் மொழி விஷயத்தில் பழைய அரசு புகுத்திய சட்ட விரோதமான அம்சங்களை நீங்கள் நீக்குவதற்கென்ன? 42—வது அரசியல் சட்டத் திருத்தத்தில் உள்ள கொடுமைகளை நீக்கியது போல இந்தச் சட்டவிரோதமான விதிகளையும் நீக்காமல் இருப்பதற்குக் காரணமென்ன?

பல ஜனதா அமைச்சர்கள் இந்தியில் செயலாற்றத் துவங்கி விட்டனர்.

பல ஜனதா அமைச்சர்கள் 'சீனியர்' அதிகாரிகளுக்குப் பதில் 'ஜூனியர்' அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர் — அவர்களுக்கு இந்தி தெரியும் என்கிற ஒரே காரணத்திற்காக!

அது மட்டுமல்ல, கேபினெட் கூட்டத்தில் விவாதங்கள் கூட இந்தியிலேயே நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன்.

அவ்வாறு அமைச்சரவைக் கூட்ட நிகழ்ச்சிகள் இந்தியிலேயே நடைபெறுவதால் தென்னிந்தியாவின் ஒரே அமைச்சரான திரு. பி. ராமச்சந்திரன் விவாதத்தில் என்ன நடைபெறுகிறது என்பதுகூடப் புரியாமல் அவதிக்கு ஆளாவதாகவும் கேள்விப்படுகிறேன்.

ஐயா! நமது அரசியல் அமைப்புச் சட்டம் நாம் இந்திய எண்களின் சர்வதேச வடிவத்தைத் தான் பயன்படுத்த வேண்டுமென்று உறுதியாகக் குறிப்பிடுகிறது.

அந்த எண்கள் இந்திய எண்கள் — இந்தியாவிலேயே முதன் முதலில் தோன்றியவை என்று நாம் பெருமைப் படுகிறோம். அவற்றை அராபிய எண்கள் என்றுகூட நாம் அழைப்பதில்லை. அதுபற்றி நாம் பெருமைப்படுகிறோம்.

இந்த நாட்டுச் சட்டப்படி நாம் வேறு எண்களைப் பயன்படுத்தக் கூடாது.

ஆனால், இன்றைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று கருதுகிறேன்.

டில்லியில் உள்ள கார்கள் இந்தி எண்களையும், உருது எண்களையும், குருமுகி (பஞ்சாபி) எண்களையும் பயன்படுத்துவதைப் புகைப் படம் எடுத்து வெளியிட்டிருக்கின்றனர்.

சமீபத்திய பட்ஜெட் வெளியானதும் எங்கள் ஆபீஸில் நடந்த ஓர் உரையாடல்: ''அப்பாடா! இனிமேல் லோன் ஜாம், லோன் ஸ்குவாஷுக்கு வரியே இருக்காது!''

''ஏன் அப்படிச் சொல்றே?''


''இதுதான் சரண்சிங்கின் லோன் பட்ஜெட் ஆயிற்றே!''

கல்பாக்கம் நாராயணன்.



கனவா-நிஜமா? 14

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்






சதிகாரர்கள் சண்டனும் முண்டனும் திட்டம் தீட்டுகின்றனர்.
நாம் என்ன செய்யலாம்?
நாம் ஒரு முடிவு எடுக்குமுன் அந்த முட்டாள் காட்டான் நம்மோடு ஒத்துழைப்பானா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.
அந்நியனுக்கு மாளவாசி விருந்தினர் மாளிகையில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சண்டனும் முண்டனும் அங்கு போய் அவனைச் சந்திக்கின்றனர்.
இரண்டு நாளைக்கு உட்கார முடியாது...
...நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கோ. உன்னைப் பார்த்தாலே உனக்கு எழுதப் படிக்கத் தெரியாதுன்னு புரியுது. நல்ல பலசாலியாயிருக்கே. ஏதோ அதிர்ஷ்டமும் சேர்ந்து உன் உடல் பலத்தை மட்டும் நம்பி இந்த மாயாபுரி சிங்காதனத்திலே...
என் நண்பர் என்ன சொல்றாரு, மாயாபுரியின் மணிமுடியைப் பெறவோ, மன்னராக விளங்கவோ எங்களுடைய ஆதரவும் உதவியும் உனக்கு வேணும். புரிஞ்சுதா?
புரியுது.... என்னை மன்னராக்குங்கள். உங்களைத் தக்கபடி கௌரவிக்கிறேன்.
அன்றிரவு நகரின் கோடியிலுள்ளதொரு பாழடைந்த மண்டபத்தில் பொற்கிழி கைமாறுகிறது.
சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். தவறு நேர்ந்துவிடக் கூடாது. புரிந்ததா?
நாளை எனது ஆட்களோ ஒரு மனிதனைத் தீர்த்துக் கட்டுவது முடிவு... அது நிச்சயமாக நிறைவேற்றப்படும்... கவலைப்பட வேண்டாம்.
நேர்மை தவறக் கூடாது என்பதற்காக மன்னர் வஜ்ரபாகு தம்முன் சேர்ந்த அப்பாதையை... அந்தப் பிராந்தியத்தில் அமைதியின்றி அலைபவராகுர்...
இந்த நிலையில் நான் எவ்விதமாக முடிவெடுக்கட்டும்? ஏதாவது ஒரு சக்தி எனக்கு வழி காட்டுமா?
தொடரும்

அசோக்குமாரிலிருந்து அமிதாபச்சன்வரை...

"ஜீவராசி"



அப்பாசாமியின் உயிர் அவன் உடலில் இல்லை. ஹிந்தி சினிமாக்களில் இருந்தது. படிப்பு முடியும் வரை கிராமப்பக்கங்களில் இருந்து விட்டு, வேலை கிடைத்த பிறகுதான் சென்னைக்கு வந்தவன் அவன். அதனால் அவனுக்கு அந்தக் காலத்து அசோக்குமார், திலீப்குமார், ராஜ்கபூரிலிருந்து நேற்றைய ராஜேஷ் கன்னா, ரிஷி கபூர், இன்றைய அமிதா பச்சன் வரை அந்த நடிகர்கள் நடித்த அத்தனை படங்களுமே புதுமையாக இருந்தன. அவன் ஊரில் அதுவரை அவனால் தமிழ்ப்படங்களை மட்டும் தான் பார்க்க முடிந்திருந்தது.

சென்னைக்கு வந்ததிலிருந்து வாரம் இரண்டு சினிமா என்ற கணக்கில் பார்த்துக் கொண்டிருந்தான். அவற்றைப் பார்க்கப் பார்க்க, தன்னையே அவற்றில் இழந்து, தன் உயிரையே ஹிந்தி சினிமாக்களில் வைத்துவிட்டான். வடக்கே என்னூர், தெற்கே கூடுவாஞ்சேரி, மேற்கே அம்பத்தூர். இந்த எல்லைக்குள் எங்கே பழைய ஹிந்தி சினிமா நடந்தாலும் இரண்டாவது ஆட்டம் பார்த்து விட்டு நடந்தே திருவல்லிக்கேணியில் இருந்த அறைக்கோ அல்லது நேரமாகி விட்டால் நேராக அலுவலகத்துக்கோ அப்படியே போய் விடுவான்.

அவன் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம். . அப்பா கடிதத்துக்குமேல் கடிதமாக எழுதிக் கொண்டிருந்தார், பெண்ணின் போட்டோக்களுடன்.

கல்யாணம் செய்து கொண்டால் தன் ஹிந்திப் பட ஆசை, ஆர்வம் எல்லாம் அம்போதான் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் இப்போதுதான் அசோக்குமார் - சுரையா சகாப்தம், தேவ் ஆனந்த் – கீதாபலி, திலீப் குமார் – மீனா குமாரி சகாப்தங்களை முடித்துக் கொண்டு ராஜ் கபூர் – நர்கிஸ் - பத்மினி சகாப்தத்தில் இருந்தான். இன்னும் ராஜேஷ் கன்னா, ரிஷி கபூர், அமிதா பச்சன் என்று ஏகப்பட்டவை பாக்கியிருந்தன. ஒவ்வொரு கதாநாயகனின் படங்களிலும் குறைந்தது ஐந்து படங்களையாவது பார்த்து, அவற்றை இரண்டாவது தடவையாக ரிவைஸ் பண்ணி முடித்தால்தான் ஒரு சகாப்தம்முடிந்ததாகக் கொள்வான். இன்னும் எவ்வளவு பாக்கி இருந்தது!

அருமையான ராஜ்கபூர் படம் ஒன்று அதில் இருந்த பாடல்கள் ஒவ்வொன்றும் அவனைச் சுண்டிச் சுண்டி இழுத்தது. மறுநாளே மறுபடியும் இரண்டாவது தடவையாக மூன்றாவது ஆட்டம் பார்த்து விட்டு அறையை நோக்கித் திரும்பினான். இரவு ஒரு மணி. பிசாசு மாதிரித் தன்னந்தனியாகத் தெருவில் நடந்து வந்தான். அவன் இருந்த இடம் ஒரு சத்திரம். பிரும்மச்சாரிகள் வசிக்கும் சத்திரத்து வாசலுக்குப் பூட்டு ஏது, தாழ்ப்பாள் ஏது? வாசற்கதவை எட்டி ஓர் உதை விட்டதும் அது மரியாதையாக நகர்ந்து கொண்டு ஸ்ரீமான் அப்பாசாமிக்கு வழி விட்டது.

மாடிப்படி ஏறியபோது அவனுக்கு ஏகக் குஷி. மாடிப் படி ஏறும் இந்த வேளைகளில் தான் அவனுக்கு இந்த உலகம் மறக்கும். அவனை அறியாமல் பாடல்கள் அவன் வாயிலிருந்து கிளம்பும். அந்தப் பதினைந்து படி ஏறி முடிப்பதற்குள் பாட்டை ஒருவழியாக முடித்து விடுவான். பாட்டு முடியாவிட்டால் மீண்டும் கீழே இறங்கி மறுபடியும் படி ஏற வேண்டியிருக்கும்.

இப்போதும் அன்றைய சினிமாவின் ஹிட் டைப் பாடிமுடித்துக்கொண்டு அறைக்கு வந்தான். கசிச்சைப் போட்டான். படுக்கையில் ஓர் உதை. அது விரிந்துகொண்டு மரியாதை செய்தது. பொத் என்று அதில் விழுந்தான்.

"உனக்குக் கோர்ட்டிலே என்ன தண்டனை கொடுத்தாங்க?"

" Fine "

"எதுக்கு?"

"அந்தப் பெண்ணைப் பார்த்து அப்படிச் சொன்னதுக்கு!"

-ஏ. ஜி. விஜயராகவன்.





தகப்பனூர்: எனக்குச் சம்பாதிக்கத் தெரியும்னு சொல்லி — பக்கத்து வீட்டுப் பெண்ணைக் கட்டிக்கிட்டு ஓடினியே. இப்ப என்னத்தே சம்பாதிச்சிட்டு வந்திருக்கே?

மகன்: மூணு ஆண். இரண்டு பெண்...

தகப்பனூர்: ?... ?... ?

பொன். பிரபாகரன்.

விளக்கை அணைக்க மறந்து போய்விட்டது. விளக்கை அணைக்க எழுந்தான். காலில் ஏதோ இடறியது. ஒரு கவர். கவர் என்றதுமே அவனுக்குத் தெரியும். அதனுள் வழக்கமான வாசகம், போட்டோவுடன் இருக்கும்.

கடிதத்தை எடுத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தபடி மேலெழுந்த வாரியாக மேய்ந்தவுடன் அதைத் தூக்கி எறிந்து விட்டுப் போட்டோவைப் பார்த்தான். உற்றுப் பார்த்தான்.

உலகத்தில் கல்யாணம் ஆகாமல் இருக்கும் பெண்களில் எவளோ ஒருத்தி அவன் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவனைத் துன்ப நரகத்தில் உழலச் செய்யப் போகிறாள் என்று நினைக்கும்போதே அவனுக்குப் பெண் இனத்தின்மீது கோபம் கோபமாக வந்தது.

பொழுது விடிந்தது. அப்பாசாமி எழுந்திருந்தான். கையில் அந்தப் பெண்ணின் போட்டோவை வைத்துக் கொண்டே தூங்கிக் கொண்டிருப்பதையும் விளக்கைக் கூட அணைக்கவில்லை என்பதையும் பார்த்து அவனுக்கு வெட்கமாக இருந்தது.

போட்டோவை எடுத்துக் கொண்டு போய் ஜன்னல் அருகில் வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தான். அந்தப் போட்டோவில் இருந்த பெண் அவன் கை விரல் வழியாக அவன் மனக்கு என்ன சொன்னாளோ, அப்பாசாமி பல்கூடத் தேய்க்காமல் அப்பாவுக்குத் தந்தி கொடுத்தான்!

''கிளம்பி வருகிறேன். பெண் வீட்டுக்காரர்களுக்கு எந்தவிதமான உறுதியையும் தரவேண்டாம்.''


மறுநாள் அப்பாசாமி ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். போனதும் போகாததுமாகச் சட்டையைக் கூடக் கழற்றாமல், ''அப்பா, உங்களுடைய பயமுறுத்தல்களுக்கெல்லாம் இந்த அப்பாசாமி பயப்பட மாட்டான். எனக்கு எப்போது கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது சொல்லுகிறேன். இப்போதுதான் ராஜ் கபூர் வந்திருக்கிறேன். இன்னமும் ராஜேஷ் கன்னா, ரிஷிகபூர், அமிதா பச்சன் எல்லாம் முடித்தாக வேண்டும்'' என்று வெடித்தான்.

ஆனால் அப்பாசாமியை விட அந்த அப்பாவான ஆசாமி கெட்டிக்காரர். பின்னே இப்படிச் சொல்வான் என்று தெரிந்து கொண்டு அவன் வருவதற்கு முன்பே பெண்ணின் தகப்பனாரையும் பெண்ணையுமே தம் வீட்டுக்கு வரவழைத்துத் தயாராக வைத்திருந்தார் அந்த எமகாதகர்.

அப்பாசாமி அபிதத்தைப் பெண் பார்க்க வேண்டியது போக, அபிதம் அப்பாசாமியை வந்து ''பின்னே'' பார்த்தாள்.'' நல்லவேளை, அவள் கையில் வெற்றிலைப் பாக்கு தட்டைக் கொடுத்துக் குனிந்தபடியே கூடத்துக்குப் போகச் சொல்லவில்லை. அவன் வந்து நமஸ்காரம் செய்தபோது 'டுண்டுண்'ணை நினைவுபடுத்தினாள்.

அவன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த போது எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் ஒரு குரல் கேட்டது. ''இவள் ரொம்ப அதிர்ஷ்டம் உடையவள். இவள் பெயரும் அவில் ஆரம்பமாகிறது. மாப்பிள்ளையின் பெயரும் அவில் ஆரம்பிக்கிறது. இந்த மாதிரி எழுத்துப் பொருத்தத்துக்காகத்தான் இத்தனை வருஷம் காத்துக் கொண்டிருந்தேன். ஏன் தெரியுமா? இரண்டு அவுக்கு அடுத்தது ''அதிருஷ்டம்''தான். நீங்கள் யோசனையே செய்ய வேண்டாம். இவளுக்குத் தாலியைக் கட்டிவிட்டு மாப்பிள்ளையை ஒரு லாட்டரி டிக்கட்டை வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள். லட்ச ரூபாய் பிரைஸ் விழுகிறதா, இல்லையா பாருங்கள்'' என்று பெண்ணின் அப்பா அங்கே அளந்து கொண்டிருந்தார்.

''லட்ச ரூபாய் டிக்கட் எல்லாம் வேண்டாம். எனக்கு அடிக்கடி சினிமா பார்த்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது. மேல் வகுப்புகளுக்கு ரிசர்வ் பண்ண முடியவில்லை. ஒன் நைண்டி அல்லாது நைண்டி டிக்கட் கலபமாகக் கிடைக்குமா சொல்லுங்கள். ஒரு மணி நேரம் கால் கடுக்க கியூவில் நின்ற பிறகு என் முறை வரும்







பட்டணத்துக்கு முதல் முறையாக வந்த ஒரு கிராமவாசி ஐஸ் ஹவுஸைப் பார்த்து விட்டு: ''இந்தக் கடுங்கோடை யிலும் ஐஸ் ஹவுஸ் உருகாமல் இருக்கே, ஆச்சரியமா இல்லே!''

சூடாமணி.

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

போது பட் என்று கௌண்டரைச் சாத்தி ஹவுஸ் புல் போர்டு போட்டு விடுகிறான்'' என்றான் அப்பாசாமி.

அவன் சொன்னது ஏதும் அவருக்குச் சரியாகப் புரியவில்லை. ஆனால் மனிதர் எமகாதகர். ''ஹவுஸ் புல் போர்டு போட்டால் என்ன? நீங்கள் இந்தண்டைப் பக்கம் வரும் போது எவனோ கைதவறிப் போட்டுவிட்டுப் போன போர் நைண்டி உங்கள் காலில் இடறும்'' என்றார்.

அவர் சொன்ன வாக்கியமே சுபசூசகமாகத் தோன்றியது. அப்பாசாமி உடனே சம்மதம் என்றான்.

ஒரு வருஷம் ஆயிற்று. அப்பாசாமியின் மாமனார் சொல்லியிருந்தபடி அவனுக்கு லாட்டரி டிக்கட்டில் லட்ச ரூபாய் எல்லாம் விழவில்லை. ஒன் நைண்டியோ, டூ நைண்டியோ டிக்கட்டுக்காக அவன் மணிக்கணக்காக க்யூவில் காத்துக்கொண்டிருந்தும் அவன் அருகில் வரும் போது ஹவுஸ் புல் போர்டு போடத்தான் போட்டார்கள். வரிசை கலைந்து பரபரப்புடன் மற்றவர்கள் மேல் வரிசை டிக்கெட்டுக்குப் போகும் போது அவன் சாவதானமாகக் காலடியைப் பார்த்துக் கொண்டு போனான். ஒரு தடவைகூட அவன் காலடியில் போர் நைண்டி டிக்கட் இல்லை, வெறும் நைண்டி பைசா டிக்கட்கூட இடற வில்லை. பீடித் துண்டுகள்தான் தென்பட்டன. ஆனால் மாமனார் சொன்ன அடுத்த பாதி சரியாகப்பலித்தது. 'புத்திர சம்பத்துப்போன்ற சகல சௌபாக்கியமும் கிட்டும்' என்று நீட்டியிருந்தார். புத்திரன் இல்லை, புத்திரி சம்பத்துத்தான் கிடைத்தது. அவர் வார்த்தைக்காகச் சௌபாக்கியம் எனப் பெயரிட்டான்.

அபீதம் இரண்டாவது தடவையாக ஊருக்குக் கிளம்பியபோது ''இந்தத் தடவையாவது திரும்பி வரும்போது 'ஒரு பயலே' அழைத்துக் கொண்டு வரணும்'' என்றான்.

''சரி'' என்றாள். அவளுடைய இதழ்க் கடையில் ஒரு புன்னகை அரும்பியது.

அவளை ஊருக்கு அனுப்பிய பிறகு அவன் மறுபடியும் பிரும்மச்சரிய வாழ்க்கையை ஆரம்பித்தான். அடடா! இந்த இரண்டு வருஷங்களாகப் பார்த்த சினிமாக்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் போலிருக்கிறதே என்று நினைத்தான். முன்பெல்லாம் திருவொற்றியூரில் தியேட்டரில் லீப் குமார் படம் பார்த்து விட்டு அங்கிருந்து ராத்திரி முழுவதும் நடந்து அப்படியே நேராக ஆபீசுக்குப் போவதுண்டு. இப்போது இரவு வேளைகளில் அபீதத்தைத் தனியாக விட்டுவிட்டுப் போக முடியவில்லை. அவள் தூங்கும்போது குழந்தை அழுதால் அவன் எழுந்து தூளியை ஆட்ட வேண்டியிருந்தது. படுக்கையைச் சௌபாக்கியம் கங்கையாக்கிக் கொண்டிருந்த போது துணியை மாற்ற வேண்டியிருந்தது.

இப்போது அபீதம் ஊரில் இல்லாத இந்த நாலைந்து மாதத்தில் குறைந்தது பதினைந்து சினிமாக்களாவது பார்த்துவிடுவது என்று தீர்மானித்தான். முதல் சினிமாவைப் பார்த்து விட்டு வந்த மறுநாள் அபீதத்தினிடமிருந்து லெட்டர் வந்தது. ''இப்போது அப்பா ரிடையர் ஆகிவிட்டார். செலவுகளுக்குக் கொஞ்சம் சிரமம். நீங்கள் ஹோட்டல் செலவுக்கு வைத்துக் கொண்டது போக மீதியை அனுப்பவும்.''

அபீதம் அங்கே கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும்போது இங்கே சினிமா என்ன வேண்டியிருக்கிறது என்று சினிமா ஆசையைத் தியாகம் செய்து விட்டுக் கையில் இருந்த பணத்தை அனுப்பி வைத்தான்.

இந்தத் தடவையும் அபீதம் திரும்பி வந்த போது அவன் கேட்டுக் கொண்டிருந்தபடி 'ஒரு பயலை' அழைத்துக் கொண்டு வரவில்லை. மீண்டும் ஒரு பாக்யத்தைத்தான் அழைத்துக்கொண்டு வந்தாள்.


✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

டாக்டர்: நர்ஸ்! 15 நம்பர் பெட் பேஷண்டைக் கவனித்தீர்களா?

நர்ஸ்: நானும் கவனிச்சுகிட்டுத் தான் டாக்டர் இருக்கேன். ஆனால் அவர் கவனமெல்லாம் நர்ஸ் மாலதி மேலேயே இருக்குது டாக்டர்.

- எஸ். மாரியப்பன்.





பெரியவர்: நீ எதிர்காலத்தில் காந்தி மாதிரி பேர் வாங்கணும்.
சிறுவன்: எந்த காந்தி மாமா?... சஞ்சய் காந்தியா, இந்திரா காந்தியா?

—மூர்த்தி

அவன் வந்ததிலிருந்து அப்பாசாமிக்கும் அவளுக்கும் தினம் ஏதாவது ஒரு காரணத்துக்காகச் சண்டை வந்து கொண்டிருந்தது.

''இன்றைக்கு ஆபீசிலிருந்து திரும்பிவரும் போது சர்க்கரை வாங்கிக் கொண்டு வாருங்கள்'' என்று பையைக் கொண்டு வந்து கொடுத்தாள் அபிதம்.

''இப்போதுதானே ஒரு வாரத்துக்கு முன்னுடி இரண்டு கிலோ வாங்கிக் கொண்டு வந்தேன்.''

''இரண்டு குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் கரைப்பதற்கு ஒரு வாரத்துக்கு எவ்வளவு சர்க்கரை வேண்டும் என்று எங்கேயாவது பாடம் நடத்தினால் கற்றுக் கொண்டு வாருங்கள்.''

''யேய்... யேய்... என்ன வாய் நீள்றது? பல்லை உடைப்பேன்!...''

''என் பல் உங்களை என்ன செய்தது. ஒரே அடியாக முகம் முழுவதையும் வேண்டுமானால் உடையுங்களேன். அப்புறம் நீங்கதானே ஜெயிலுக்குப் போகணும். ஜெயிலிலேகூட சினிமா காட்றாங்களாம். உங்களுக்குப் பிடிச்ச மாதிரிப் பழைய படங்களா...''

அவனுக்கு உடல் முழுவதும் எரிந்தது. ''என்ன, கிண்டலா பண்றே!'' என்று ஓங்கி..

டொக் டொக் என்று பெரிதாகச் சப்தம்.

அறையின் கதவு திறந்து கொண்டது. அப்பாசாமி பாதி கண்களைத் திறந்துகொண்டு பார்த்தான். எதிரே ஆபீஸ் பியூனும் அவனுக்குப் பின்னால் கையில் உளி, சுத்தியலுடன் ஆசாரி ஒருவரும்.

முக்கால் கண்களைத் திறந்தான்.

''சார்... சார்... என்ன சார் நேத்து ராத்திரி எங்கேயாவது நாலாவது ஆட்டம் சினிமா போனீங்களா என்ன? இப்போ மணி என்ன தெரியுமா? பதினொண்ணு. பத்தரை மணிவரையிலே நீங்க ஆபீசுக்கு வர வழியா காணும். வீடு பூட்டலும் வல்லே. பீரோ சாவி என்னடான்னு உங்க கிட்டே வச்சுக்கிட்டிருக்கீங்க. மானேஜர் என்னை விரட்டினாரு. ஆபீசு காரை எடுத்துக் கொண்டு போயிப் பாத்து பீரோ சாவியை வாங்கிக்கிட்டு வான்னு. எத்தனை தடவை பலமா கதவைத் தட்டறது? நீங்க கதவைத் திறக்கிற வழியா இல்லே. சரிதான்னு ஆசாரியை அழைச்சுகிட்டு வந்து தாழ்ப்பா பக்கத்திலே ஓட்டை போட்டு உள்ளே கையைவிட்டுக் கதவைத் திறந்தேன்...'' என்றான்.

''அப்படியா... அபிதம்?... குழந்தை...? சர்க்கரை...?''

எழுந்தான். மார்பிலிருந்து போட்டோ விழுந்தது. அருகில் அப்பாவின் கடிதம் அவனைப் பார்த்துச் சிரித்தது.

நல்லவேளை பிழைத்தேன். அமிதா பச்சன் சகாப்தத்தை முடித்துக் கொண்ட பிறகு தான் கல்யாணம் என்ற பேச்சே என்று சொல்லிக் கொண்டு ஆபீஸ் சாவிக் கொத்தை எடுத்துப் பியூனிடம் கொடுத்தான்.

நரிக்கொம்பு 14

மினி மர்மத் தொடர்கதை

கிருஷ்ணவேணி

விருந்தின் முடிவில் நந்தினிக்கும் ஹரிக்கும் பரிசளிக்கிறார் மதன். நந்தினியின் பரிசு அவளிடமிருந்து யாராலோ பறிக்கப்பட்ட அதே நெக்லஸ்! ஹரியும் நந்தினியும் திகைக்கின்றனர். மௌனமாக விடைபெற்ற இருவருக்கும் பின்னால் மதனின் பயங்கரச் சிரிப்பு விரட்டுகிறது.

நந்தினியை அவள் இருப்பிடத்தில் கொண்டு விடச் சென்றான் ஹரி. வழியில் நந்தினியிடம் ''அநீதா, மதன் இருவருமே அபாயமானவர்கள். ரமேஷிடமிருந்து நரிக் கொம்பைக் கைப்பற்ற அவனைக் கொன்றிருக்கிறார்கள். அந்த முயற்சியின் முடிவில் அந்தப் பொருள் அவனிடமில்லை என்கிற உண்மை தெரிந்த பிறகு அந்த நரிக் கொம்பை நம் இருவரில் யாருக்கோ அவன் அனுப்பி இருப்பதாகச் சந்தேகித்து இங்கு வந்திருக்கிறார்கள். ஆகவே நாம் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்ற ஹரி, தனக்கு ரமேஷிடமிருந்து வந்த டெலிபோன் காலைப் பற்றியும் கூறினான். நரிக்கொம்பு என்ற அந்தப் பொருள் பற்றியும் தங்கள் ஐயங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். ''பெரும் பணக்காரரான மதனுக்கு அந்த விலையுயர்ந்த பொருளிடம் உள்ள மோகம் அதன் பொருளாதார மதிப்பினால் அல்ல. அதைத் தன் வசமாக்கிக் கொண்டால் மிக உயர்ந்த பதவி கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை. ஏராளமான பணம் படைத்த அவருக்குப் பெரும் பதவியிலமர்ந்து 'பவர்ஃபுல்'லாக விளங்க வேண்டுமென்று ஒரு வெறி.'' பேசியபடியே நந்தினி தங்கியுள்ள பல மாடிக் கட்டிடத்துக்கு வந்தார்கள். அங்கு நான்காவது மாடியிலுள்ள அவள் அறையின் ஜன்னலையே பார்த்துக் கொண்டு ஒருவன் நிற்பதை நந்தினிக்குச் சுட்டிக் காட்டினான் ஹரி, அவனைக் கண்காணித்தபடி வேறு இருவர் நிற்பதையும் அவ்விருவரும் தன்னால் அவளைப் பாதுகாக்க நியமிக்கப் பட்ட துப்பறிபவர்கள் என்பதையும் விளக்கி விட்டு இனி அவள் எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று புத்திமதி கூறி, அவள் வீட்டுக்குள் நுழைவதைப் பார்த்த பிறகு தன் இருப்பிடம் திரும்பினான்.

வீட்டில் ஹரிக்காக அநீதா காத்திருந்தாள். அவ்வளவுக்குப் பிறகும் அவள் மறுபடி தன்னுடன் தங்க வருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அநீதா ஹரியிடம் மன்றாடினாள் — நரிக்கொம்பைத் தன் சித்தப்பாவிடம் கொடுத்து விடும்படி. ஹரி தன்னிடம் அது இல்லை என்று எவ்வளவோ கூறியும் அவள் நம்பவில்லை. ''உங்கள் வார்த்தைகளைச் சித்தப்பா நம்பவில்லை. உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையினால்தான் கூறுகிறேன். மதனை ஏமாற்றி வெற்றி கொள்ள முடியாது. உங்கள் நண்பர் ரமேஷையும் நான் காப்பாற்றவே பாடு பட்டேன். அவரைக் கல்யாணம் செய்து கொண்டது கூட மதனிடமிருந்து அவரைக் காக்கவே. ஆனால் அவரும் என் வார்த்தையைக் கேட்கவில்லை — உங்களைப் போலவே. அவர் முடிவு உங்களுக்கும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை'' என்றாள் அநீதா. பிறகு தன்னைப் பற்றிக் கூறினாள். பிறவியிலேயே குருடியல்ல அவள் — பன்னிரண்டு வயதில் நிகழ்ந்த ஒரு விபத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியினால் குருடானவள் — 'ஹிஸ்டிரிகல் பிளைண்ட்னஸ்'. மதன் அவளுடைய சொந்தச் சித்தப்பா அல்ல. அவள் தந்தையின் நண்பர். அவளைக் கண் வைத்தியத்துக்காக அவரிடம் அனுப்பினார். அநீதாவின் தந்தை உலகம் பூராவும் பரவியுள்ள ஓர் ரகசிய இயக்கத்தின் தலைவர். பலம் வாய்ந்ததோர் அமைப்பு அது. அப்படியோர் அமைப்புக்கு யார் தலைவர்களாக இருக்கிறார்களோ அவர்களிடம்தான் அந்த நரிக்கொம்பு இருக்கும். அது அநீதாவின் அப்பாவிடம் இருந்தது. சக்தி வாய்ந்த அந்தத் தலைவர் தான் இறக்கும் போது அடுத்த தலைவரிடம் அதைச் சேர்ப்பித்து விடுவார். அநீதாவின் அப்பா தன்னிடமிருந்த நரிக்கொம்பு இலச்சினையை அடுத்த தலைவராகத் தகுதியுள்ள அவ்வியக்கத்தின் முக்கிய அங்கத்தினரான மதனிடம் சேர்ப்பிக்குமாறு ஒரு நம்பகமான ஆளிடம் கொடுத்து விட்டு இறக்கிறார். அந்த ஆள் ரமேஷின் உயிர்த் தோழன். நரிக்கொம்பு பற்றிய ரசமான தகவல்களைக் கேள்விப் பட்ட ரமேஷ் அது பற்றிப் பரபரப்பான கட்டுரை எழுத அதைப் பார்க்க விரும்பினான். ரமேஷிடம் அதைக் கொடுக்க அவன் நண்பன் தீர்மானித்தான். இதற்குள் இந்த ஏற்பாடு மதனுக்குத் தெரிந்து விடுகிறது. பொருள் கைமாறுவதை விரும்பாத மதன், அநீதாவின் அப்பா யாரிடம் அதை ஒப்படைத்தாரோ அவரை வளைத்துப் பிடிக்க, அதற்குள் அது ரமேஷிடம் சேர்ப்பிப்பதற்காகப் பயணப்பட்டு விட்டது — வேறொருவர் மூலமாக. ஆத்திரம் கொண்ட மதனால் அந்த மனிதர் கொல்லப்படுகிறார். ஆனால் யார் மூலம் அது ரமேஷுக்கு அனுப்பப் பட்டது என்பது தெரியவில்லை. ஆகவே ரமேஷ் கண்காணிக்கப்பட்டான். ரமேஷிடம் நரிக்கொம்பை ஒப்படைத்த மனிதனை மதன் தன் திறமையினால் கண்டுபிடித்து உண்மையை அறிந்து கொண்டதும் அவனையும் கொன்று விடுகிறான்.

இனி அவர் இலக்கு ரமேஷ். எப்படியும் ரமேஷிடமிருந்து அதைப் பறித்துத் தனதாக்கிக் கொள்ளத் துடிக்கும் போதுதான் அநீதா மதனிடம் தான் அதைச் சாதிப்ப

தாகக் கூறி ரமேஷுடன் பழகினுள். மதனும் அவர் ஆட்களும், ரமேஷ் அநீதாவைக் கண்காணிக்கின்றனர். அவர்களை அறியாமல் ரமேஷினுல்எதுவுமே செய்ய முடியாத நிலை. அநீதாவோடு கடைக்குப் போய் சில பொருள்கள் வாங்கினுன் ரமேஷ். நந்தினிக்கு நெக்லஸ், அநீதாவுக்குச் சாவிக் கொத்து, தனக்குச் சில புத்தகங்கள் — சாக்லேட்டுகள் எல்லாம் அபாயமற்ற சாமான்கள். கண் காணிப்பவர்களும் சந்தேகிக்கவில்லை. அதன் பிறகு நான்கு நாட்கள் ஹோட்டல் அறையை விட்டு வெளியே வரவே இல்லை ரமேஷ். அநீதா எவ்வளவோ மன்றுடியும் ரமேஷைத் தன் விருப்பத்துக்கு இணங்க வைக்க முடியவில்லை அவளால். அவனை மணந்து கொண்டால் — தன் கணவனுகி விட்ட ரமேஷுக்கு மதனுல் ஆபத்து வராது — தன் வளர்ப்புப் பெண்ணின் கணவனிடம் கருணை காட்டுவார் மதன் என்று நினைத்தாள் அநீதா. அதுவும் பொய்யாகிப் போகிறது. நரிக் கொம்பை மதனிடம் ஒப்படைக்காத ரமேஷ் பரிதாபமாகக் கொல்லப் படுகிருன். அவன் உயிரற்ற உடலுடன் அநீதா ரயில் பெட்டியில் ஏற்றப்படுகிருள்.


அநீதா கூறிய விஷயங்கள் ஹரியைத் திடுக்கிட வைத்தாலும் இவற்றை முழுமையாக நம்பிவிடவில்லை. மதன் தன்னை அச்சுறுத்தி அந்தப் பொருளைப் பெறவே இதை அநீதாவின் மூலம் இப்படிச் சொல்லச் செய்திருக்கலாம் என்று நினைத்தான்.

ஹரியால் நியமிக்கப்பட்ட பிரைவேட் டிடக்டிவிடமிருந்து போன் வந்தது. லிப்டில் ஏறிய நந்தினி தன் அறைக்கு வரவே இல்லை. லிப்டிலிருந்து வெளிப்படும் போதோ, முன்பாகவோ - எப்படியோ கடத்தப் பட்டு எங்கோ கொண்டு போகப் பட்டு விட்டாள். ஹரிக்கு இப்போது அநீதாவின் உதவியை நாடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. அவள் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு — அவள் காதலை ஏற்பதாக நடித்துத் தன் சித்தப்பாவின் அந்தரங்கக் கோட்டைக்குள் தன்னை அழைத்துப் போக வைத்து விடுகிருன் ஹரி. அங்கு — நந்தினி இருக்கிருள். மதன் இல்லை. ஆனுல் அவர் காரியதரிசி லக்ஷ்மண் பிரசாத் காவல் காத்தான். அநீதாவைச் சந்தேகிக்காத லக்ஷ்மண் ஹரியோடு அவளை உள்ளே அனுமதித்தான்.

பார்வையில்லா விடினும் மிகத் திறமையாக ஒலியினுல் எதையும் உணரக் கூடிய அநீதாவுடன் சாகஸமாகப் பேசி — நந்தினியைத் தப்ப உதவுகிருன் ஹரி. ஆனுல் சமயத்தில் அநீதா ஒரு பட்டனை அழுத்தி லக்ஷ்மணை எச்சரித்து விடுகிருள். எஃகு மனிதனுன அவன் பிடியில் ஹரி மூச்சுத் திணறும் போது நந்தினி ஒரு ஜன்னல் கண்ணுடியை உடைத்து அதன் கூரிய முனையைப் பிரசாத்தின் உடலில் செலுத்தி அவனைச் சாகடித்தாள். அதற்கு முன்பாக அநீதாவைத் தாக்கி மயக்கமடையச் செய்து விட்டிருந்தாள்.

நந்தினியுடன் பேசிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ''ரமேஷ் நமக்கு வேறு எதையுமே அனுப்பவில்லை, தன் விதவை மனைவி அநீதாவைத் தவிர'' என்ற வார்த்தைகள் மின்னலாகத் தாக்குகிறது ஹரியை. ஏதோ ஓர் உணர்வு. மயங்கிக் கிடக்கும் அநீதாவின் இடையிலிருக்கும் வேலைப்பாடமைந்த விநோதமான அந்தச் சாவிக்கொத்தை உருவிக் கொள்ளுகிருன். நந்தினியையும் இழுத்துக் கொண்டு வெளியேறுகிருன்.

பறவைகள் தப்பிவிட்ட செய்தி அறிந்த மதன் வெறியனுனுன். லக்ஷ்மணின் மரணம் வேறு. அநீதாவினுல்தான் இப்படி ஏமாற்றப் பட்டுத் தோல்விக் கண்டோம் என்ற கோபம். தாறுமாருக அடிக்கிருன் அவளை. அந்த ஹோட்டலுக்கே தீவைக்க ஆணை பிறப்பிக்கிருன் மதன். நரிக் கொம்புடன் தப்பிய ஹரியும் நந்தினியும் தன்னைப் போலீஸிடம்



காட்டிக் கொடுத்து விடுவார்கள் என்ற பீதியில் தன்னிடமுள்ள — ஆதாரங்களை பல வருஷங்களாகச் சேமித்து வைத்துள்ள பல ஃபைல்களை அறைக்குள் குவித்து எரிக்கலானுன்.

ஹரி சந்தேகித்த படியே அநீதாவின் அந்த அழகிய சாவிக் கொத்தின் முகப்புப் பட்டையை நெம்பித் திறந்தபோது அதனுள் ஒரு சிமிழ் போன்ற இடத்தில் ஜ்வலித்துக் கொண்டிருக்கிறது கொம்புடைய நரியின் உருவம்! — கண்கள் இமைத்தது. நினைக்க முடியாத பொருளையும், புகழையும், பலத்தையும் அளிக்க வல்லது' என்ற நம்பிக்கைக்குரிய அந்த நரிக்கொம்பு இலச்சினையை தன் மனைவி அநீதாவிடமே ஒப்படைத்துக் காப்பாற்றியுள்ள ரமேஷின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்து போனுன் ஹரி — அது எங்கோ மாயமாக அப்புறப் படுத்தப்பட்டது என்று மதன் எண்ணிக் கொண்டிருக்க அது அவன் பக்கத்திலேயே — அநீதாவின் இடுப்பிலேயே — இருப்பதை அறிய முடியாத படிக்கு அவனை முட்டாளாக்கி விட்டான் ரமேஷ்.



நானும், எனது நண்பர்கள் சிலரும் பக்கத்துக் கிராமம் ஒன்றில் நடந்த 'அமெச்சூர்' நாடகத்தைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். நல்ல கூட்டம், ஆனால் நாடகம், தொடக்கத்திலே இளைஞர்களால் நடத்தப்பட்டதால் 'போர்' அடித்துப் போன பொதுமக்கள், கொஞ்சம், கொஞ்சமாகக் கலைந்து போய்க் கொண்டிருந்தனர். நாங்கள் மிகுந்த பொறுமையோடு இறுதி வரை இருந்து நாடகத்தைப் பார்த்து விட்டு, திரும்பி வந்து கொண்டிருந்தோம். எதிரே வந்த, விவசாயி ஒருவர் எங்களைப் பார்த்து ''நாடகம் முடிஞ்சு போச்சுங்களா?'' என்றுர். நான் மிகவும் அலட்சியமாக ''ஜனங்க வந்துக் கிட்டிருக்காங்களே தெரியலையா?...'' என்றேன். ''ஜனங்கதான் நாடகம் ஆரம்பிச்சதிலேயிருந்தே திரும்பி வந்துக் கிட்டிருக்காங்களே...!'' என்று ஒரு போடு போட்டார் அந்த விவசாயி.

— திருத்துறைப்பூண்டி
இ. வீரபாண்டியன்,

நந்தினியிடம் நரிக்கொம்பைக் கொடுத்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகச் சொல்லி விட்டு அநீதாவையும் மதனையும் சந்திக்க — மறுபடி ஹோட்டல் அறைக்கு வந்தான் ஹரி. வெறியனாகச் சொக்கப்பனைக் கொளுத்திக் கொண்டிருக்கும் மதனையும்... ''நான் வெளியே போகிறேன்... நெருப்பு வாசனை..., ஐயோ! நான் வெளியே போக வேண்டும்'' என்று துடிக்கும் அநீதாவையும் காண்கிறான். ஹரியைக் கண்ட மதன் கொலை வெறி கொண்டு — குப்புற விழுந்து கிடக்கும் லக்ஷ்மண் பிரசாத்தின் கையிலுள்ள துப்பாக்கியைப் பறிக்கத் தாவிப் பாய்ந்தான். ஆனால் அதற்குள் அது ஹரியின் கைக்குள் அகப்பட்டு அதிலிருந்து குண்டும் சீறிப் பாய்கிறது. மதன் அடிப்பட்ட நாயாகச் சுருண்டு புரண்டு விழுந்தான் கீழே. இதற்குள் அவனுடைய ஆட்கள் ஹோட்டலுக்கு வைத்த தீ பயங்கரமாகப் பரவி விடுகிறது.

அநீதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே ஓடிவந்த மறுவினாடியே பயங்கரமான சத்தத்துடன் கட்டிடம் அதிர்ந்து நொறுங்கிச் சரிந்தது. எந்தத் தீ அதிர்ச்சியினுல் அநீதாவுக்குப் பார்வை போயிற்றோ, அதே தீ அதிர்வு அவளுக்குப் பார்வையை மறுபடி தருகிறது. அநீதாவினுல் இப்போது எதையும் காண முடியும்.

மதனுக்குத் தான் அடிமையாகி இருந்தது எப்படி என்பதை விவரித்தாள் அநீதா. பார்வையற்ற அவளைக் கொண்டு பல பாதகங்களைச் செய்திருக்கிறுன் அவன். வசதியும், நல்வாழ்வும், அரவணைப்பும் ஆரம்பத்தில் மதன் சொன்னபடியெல்லாம் செய்ய வைத்தன அநீதாவை. ஒரு சமயம் தான் செய்வது என்ன என்பதை அறியாத படியே ஒரு கொலைக்குக் காரணமாகி விடுகிறுள். அதைச் செய்தது அவள்தான் என்று சாட்சிகளோடு அவள் மனசில் ஒரு பீதியை உருவாக்கி இருந்தான் மதன். அதன் பிறகு ஒவ்வொரு முறையும் அந்தக் கொலையையே குறிப்பிட்டு அவளைப் போலீசிடமிருந்து காப்பாற்ற தன் இச்சைப்படி செயல்படும்படி கூறி ஆட்டி வைக்கிறுன். ரமேஷை அவளுக்கு மனைவியாக்கி வைத்ததும் இப்படித்தான்.

தன்னை ஏற்றுக் கொள்ள மன்றுடும் அநீதாவிடம் ''கொடுமையிலிருந்தும் குருட்டுத் தனத்திலிருந்தும் விடுதலை பெற்று விட்டாய். ஆனால் உண்மையான விடுதலை — லக்ஷ்மண் பிரசாத், மதன் இவர்களின் மரணம் எப்படி நிகழ்ந்தது, ஏன் — என்பதைப் போலீசிடம் விளக்கி, அவர்களும் அதில் திருப்தியடைந்த பிறகே கிடைக்கும். எனக்கும், நந்தினிக்கும் உதவினேம் என்ற மன நிம்மதியும் கூட உனக்கு ஏற்படும்'' என்றுன் ஹரி.

தூரத்தில் போலீஸ் ஜீப் உறுமிக் கொண்டு வந்தது. அதில் போலீஸ் அதிகாரிகளுடன் நந்தினியும் அமர்ந்திருந்தாள்.

முற்றும்

சிவராமன்: அடேடே! குருசாமி! வாப்பா! சம்சார சகிதமாக அபூர்வ திடீர் விஜய மாக இருக்கிறதே! உட்காரு! (உட்பக்கம் பார்த்து) ஏய்! பார்வதி! இங்கே யாரு வந்திருக்கிறார்கள் பாரு!...

[சிவராமன் மனைவி பார்வதி உள்ளிருந்து வந்து குருசாமியின் மனைவி லட்சுமியை வர வேற்கிறாள். குருசாமி ஒரு நாற்காலியில் உட்காருகிறார்].

குருசாமி: மாமா!... நம்ப குடும்பத்திலேயே இப்போ நீங்கதான் 'சீனியர்' மெம்பர்... என் பையன் கோபாலுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கிறது. குடும்பத்திற்குப் பெரியவராக நீங்கள் வந்து நடத்திக் கொடுக்க வேண்டும்.

சிவராமன்: பேஷ்! பேஷ்! ரொம்ப சந் தோஷம். சம்பந்தியாக யாரைப் பிடித் திருக்கிறாய்?... யாரு உன்னிடம் மாட்டிக் கொண்டார்கள் என்று கேட்டிருக்க வேண் டும்?

குருசாமி: ரிட்டயர்ட் டிப்டி செக்ரட்டரி பத்மநாபன் பெண்! அவர்கள் இஷ்டத் திற்கு விட்டு விட்டேன்!

சிவராமன்: அதாவது உன் இஷ்டத்தை. தேவைகளையெல்லாம் அவர்கள் இஷ்டம் போல பெயிண்ட் அடிக்கச் சொல்லி விட் டாய்! நீ பமகாதகன்!

குருசாமி: கல்யாணப் பத்திரிகை அச்சான வுடன் முதல் பத்திரிகை உங்கள் கைக்குத் தான் வரும். முன்கூட்டியே தகவல் கொடுத்து உங்களைத் தயார் பண்ணத்தான் இப்போது நாங்கள் வந்தோம்!

சிவராமன்: குருசாமி! முடிந்தால் நாங்கள் வருகிறோம். இல்லையானால் எங்கள் வாழ்த்துத் தந்தி நிச்சயமாக வரும்.

குருசாமி: (திடுக்கிட்டு) என்ன மாமா அப் படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் வராமலா கல்யாணம்? அதுவும் உள்ளூர்க் கல் யாணம்? நான் ஒரு தப்பிதமும் செய்ய வில்லையே!

சிவராமன்: குருசாமி! என் சுபாவம் கொஞ் சம் சண்டை போடுகிற சுபாவம்! சம்பந்தி சண்டைகள் எதற்கும் நான் காரணமாக இருந்தேன் என்ற கெட்ட பெயர் எனக்கு வந்துவிடக் கூடாது பாரு!...

குருசாமி: நோ! நோ!... பத்மநாபன் ஒரு ஜெண்டில்மன். கல்யாணத்தில் ஒருசிறு குறைகூட ஏற்படாமல் பார்த்துக் கொள் வார்! மேலும் இந்த நாகரீக காலத்தில் சம்பந்திச் சண்டை அது இது என்பதெல் லாம் மறைந்து போய்விட்டன! வேலையற்ற சிண்டு முடியும் ஆசாமிகள் எப்போதோ சண்டைக்கு அஸ்திவாரம் போட்டார்கள் என்றால் நாமும் செய்வோமா?

சிவராமன்: இப்போ நீ என்னை 'ரிக்வெஸ்ட்' செய்கிறாயா? இல்லை பயமுறுத்துகிறாயா?

குருசாமி: அபசாரம்! அபசாரம்! நீங்கள் அப்படியெல்லாம் சிறு விஷயங்களைப் பெரிது படுத்த மாட்டீர்கள் என்று சொல் கிறேன். அப்போ நாங்க கிளம்புகிறோம். மறுபடியும் பத்திரிகையுடன் வந்து அழைக் கிறோம்.

(குருசாமியும் அவர் மனைவியும் கிளம்பு கிறார்கள்.)

காட்சி 2

[தேவி கல்யாண மண்டபம். ஹாலின் ஒரு பக்கத்தில் சிவராமன் உட்கார்ந்து வெற் றிலையில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டிருக் கிறார். குருசாமி வருகிறார்.]

குருசாமி: மாமா!... காப்பி குடிக்காமல் வெற்றிலை போட ஆரம்பித்து விட்டீர் களே!...

சிவராமன்: எனக்குக் காப்பி வேண்டாம்!

குருசாமி: அப்படிச் சொல்லக் கூடாது. நான் நல்ல காப்பியாக எதிர் ஓட்டலி லிருந்து வாங்கிவரச் சொல்லியிருக்கிறேன். கொஞ்சம்கூட மரியாதை தெரியாதவங்க கிட்டே வந்து மாட்டிக் கொண்டு விட் டேன்! ஒரு ரவுண்டு வருவதற்குள்ளே காப்பி தீர்ந்து விட்டது என்று பதில் வரு கிறது. சுத்த அற்பம்.

கட்சி மாறி!

கோமதி சுவாமிநாதன்



சிவராமன்: குருசாமி! நாம் காப்பி குடிப்பவர்கள் என்று அவர்களுக்குத் தெரியுமல்லவா?


குருசாமி: ஏன் தெரியாது? எங்க குடும்ப பிரஸ்டிஜே காப்பியில்தான் இருக்கிறது என்று பத்மநாபனிடம் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேனே!... நீங்க எழுந்திருங்க மாமா! இவங்களை ஒரு கை பார்க்கலாம்!

சிவராமன்: நான் இன்னும் அடுத்த கேள்வியைக் கேட்கலியே? நாம் காப்பியில் குளிப்போம் என்று அவர்களிடம் முன்கூட்டியே சொல்லியிருக்கிறாயா?

குருசாமி: என்ன மாமா சொல்கிறீர்கள்?

சிவராமன்: அதிகாலையிலிருந்து குடம் குடமாகக் காப்பியை அவர்கள் கொண்டு வந்து வைக்கிறார்கள். நான் இரண்டு தடவை சாப்பிட்டேன். நம் பக்கத்துக்காரர்கள் தான் காப்பியை டப்பாக்களில் ஊற்றி 'ரிசர்வ்' பண்ணுகிறார்களோ என்று சந்தேகம் எனக்கு! விஷயத்தை அதோடு விடு!... எவன் எவனோ ஏழு தடவை குடித்து விட்டுப் போகிறான்!

குருசாமி: அப்படியானால் இந்தப் பிரச்னையில் நீங்கள் ஒரு கலாட்டா பண்ண மாட்டீர்களா?... போகட்டும். பகல் சாப்பாட்டிற்குப் பால் பாயாசம் போடவேண்டும் என்று படித்துப் படித்துச்



"என்னங்க கழுதைக்குப் பக்கத்திலே ஸ்கூட்டரை நிறுத்தியிருக்கீங்க."
"நான் உதைத்து ஸ்டார்ட் பண்ணிப் பார்த்தேன். பயனில்லே."
- எம். வி. குமார்.

சொல்லியிருக்கிறேன்! ஆனால் அந்தப் பத்மநாபன் காலை பருப்புப் பாயசத்திற்குத் தான் சமையல்காரர்களிடம் சொல்லியிருக்கிறாராம்; அக்கிரமம்!

சிவராமன்: எனக்குப் பால் பாயசம் ஒத்துக் கொள்ளாது. அதனால் நான் இந்த விஷயத்தில் தலையிடுவது முறையாகாது!

குருசாமி: காசி யாத்திரைக்குக் குடை வாங்கியிருக்காங்களாம் குடை! பள்ளிக் கூடத்திலே வாசிக்க வைக்கிற குழந்தைகளுக்குக் கூட இன்னும்கொஞ்சம் பெரிய குடையாக மண்டையை மறைக்க வாங்குவார்கள்! சுத்த காகமிச்சம் பிடிக்கிற அற்பக் கூட்டம் போலிருக்கு! நீங்க அந்தக் குடையைப் பார்க்க வேண்டும் மாமா!

சிவராமன் உன் பிள்ளை கோபால் நிஜமாகவே கங்கா காவேரி எக்ஸ்பிரஸில் காசிக்கு டிக்கட் ரிசர்வ் பண்ணியிருக்கிறானு சொல்லு! ஒரு பெரியகுடையை இப்பவே வாங்கி வரச் சொல்றேன்! ... இதெல்லாம் ஒரு சின்ன சம்பிரதாய நாடகம்! அபிநயம்!

குருசாமி: இது ஒரு கௌரவப் பிரச்னை மாமா! சம்பிரதாயப் பிரச்னை. குடைதானே என்று ஒரு பிள்ளையார் சதுர்த்தி காகிதக் குடையைக் கொண்டு வந்து





விமலா: ஏண்டி கமலா, உன் கணவர், நீ, உன் மாமியார் நாடகம் போனீங்களே என்ன நாடகம்?''
கமலா: அவன் அவள் - அது.''
பாமாப்ரியா.

கோபால் தலையில் சொருகிக்காசி யாத்திரையை நடத்திவிட முடியுமா?

சிவராமன்: கவலைப்படாதே! பார்த்தசாரதி ஸ்வாமி கோவிலிலிருந்தும் கபாலீஸ்வரர் கோவிலிலிருந்தும் இரண்டு உற்சவக் குடைகளை வரவழைத்து உன்பிள்ளை காசி யாத்திரையை ஜாம் ஜாம் என்று நடத்திவிடலாம்!...அதோ பத்மநாபன் வருகிறார்!... சம்பந்தி சுவாமி! இப்படிஒரு நிமிஷம் வாருங்களேன்!...

குருசாமி: (மெதுவாக) கிழிகிழின்னு கிழியுங்கோ மாமா!...

பத்மநாபன்: (வந்து கொண்டே) வாங்கி வைத்திருந்த புதுக் குடையை எலி கடித்துக் கிழித்துவிட்டது. இந்தச் சத்திரத்திலே எலிகள் ஜாஸ்தி போலத் தோன்றுகிறது. அவசரத்திற்கு என் பேரப் பயல் குடையை எடுத்து வந்தேன்.

குருசாமி: (கோபத்துடன்) பார்த்தீங்களா மாமா! மறைமுகமாக நம்மையே எலிகள் என்கிறாரா?... தெளிவாகக் கேளுங்கள்!

பத்மநாபன்: நீங்கள் எல்லாம் புலிகள். நான் ஆட்சேபிக்கவே இல்லே. ஆனால் குடையை எலி கடித்திருக்கிறது. அதைப் புலி வந்து கடித்திருக்கிறது என்று என்னால் பொய் சொல்ல முடியாதே!

சிவராமன்: கரெக்ட்! நீங்க போய் உங்க வேலையைக் கவனியுங்கோ. முகூர்த்த நேரம் நெருங்கறது! அப்புறம் மாப்பிள்ளைக்கான காசி யாத்திரைச் செருப்பு ஹைஹீல் லேடீஸ் சப்பல் இல்லாமல் பார்த்துக்குங்கோ. பையன் உயரம். அப்புறம் நிலைப்படி தட்டும்.
(பத்மநாபன் போகிறார்).

குருசாமி: என்ன மாமா! அவரை இப்படி சுலபமாக விட்டு விட்டீர்கள்... வேறே குடை வாங்கி வருகிறேன் என்றுகூடச் சொல்லவில்லே. ... அப்புறம் கடலைப் பருப்பு பாயசம் பத்தி...

சிவராமன்: குருசாமி! கல்யாணமெல்லாம் முடித்து உன் வீட்டில் சாவகாசமாகப் பால் பாயசம் வைக்கச் சொல்லி ருசித்துச் சாப்பிடு! இந்த ஆயிரம் பேர் நாக்குக்குப் பால் பாயசம் பட்டால்தான் உன் அந்தஸ்து உயரும் என்று அமர்க்களம் பண்ணுதே!

குருசாமி: உங்களை நம்பிப் பிரயோஜனமில்லே! நானே அமர்க்களம் பண்ணுகிறேன்.

சிவராமன்: பேஷாகப் பண்ணு! ஒன்றும் நடக்கப் போவதில்லே! உன் பையனும் வருங்கால நாட்டுப் பெண்ணும் நேற்று இரவே மொட்டை மாடியில் ஏதோ கான்ஃபெரன்ஸ் நடத்திக் கொண்டிருந்தார்கள். அங்கே மனசு ஐக்யமாயிடுத்து.

குருசாமி: இந்தக் கோபால் பயலா அப்படி நடந்து கொண்டான்?

சிவராமன்: அவன் இன்ஜினீயர்! பிளான் போடத் தெரியாதா? நீ இங்கே ஏதாவது கலாட்டா பண்ணித் தடை விதித்தால் மேளம் வாசிக்கிற போது அவர்கள் எங்காவது கோவில் சன்னதியில் தாலி கட்டிக் கொண்டிருப்பார்கள்!... நீ பால் பாயசத்திற்கும் பெரிய குடைக்கும் கத்தினது தான் மிச்சமாகும்!


குருசாமி: நான் அன்றைக்கு உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் வாயை அவசரப்பட்டுக் கட்டினது தப்பிதம்?

சிவராமன்: குருசாமி! இந்த விஷயத்திலே நீ துரியோதனன் தான்! அர்ஜுனனாகப் பத்மநாபன் நேற்றே என்னிடம் வந்து இந்தக் கல்யாணம் எந்தவிதக் கலாட்டாவும் இல்லாமல் நடந்து முடிய வரம் வாங்கிக் கொண்டு போய் விட்டான்!

குருசாமி: மாமா!... நீங்க கட்சி மாறிட்டீங்க! சிவராமன், சிவராமகிருஷ்ணனாயிட்டீங்க!

சிவராமன்: ஹூம் ஹூம்! நான் அப்படியேதான் இருக்கேன்! உனக்குத்தான் இந்த நாகரீக காலத்திலே பழங்காலச் சம்பந்திச் சண்டைக்கு ஆசை வந்து விட்டது. சரிசரி! ... வருகிறவர்களைக் கவனி! காசி யாத்திரை ஆரம்பமாகப் போகிறது.
(எழுந்திருக்கிறார்).

கைதி 1: உன் சொந்தக் காரன் யாரோ ஒருத்தன் இன்னிக்குப் புதுசா ஜெயிலுக்கு வந்திருக்கானாம்.
கைதி 2: எங்க உறவுக்காரங்களில் இவன் ஒருத்தனாவது வெளியிலே இருக்கானேன்னு நினைச்சிண்டிருந்தேன்: ஹூம்!!
உஷா சந்தானம்.



நாடக நகைச்சுவை!


நாடக ஆசிரியர்கள் மற்ற நாடக ஆசிரியர்களின் நாடகங்களிலிருந்து தாங்கள் ரசித்த சில நகைச்சுவைக் காட்சிகளைச் சொல்கிறார்கள்:



விசு :

ஓர் இளம்பெண் அப்பாவியான தன் வயதான தந்தையுடன் வேலை தேடி சென்னை வருகிறாள்.

மானேஜர்: சின்ன பொண்ணு, தன்னந்தனியா மெட்ராஸுக்கு வேலை தேடி வரலாமாம்மா?



பெண்: என்ன பண்றது! எஸ். எஸ். எல். சி படிச்சு இருக்கேன். வயத்தைக் கழுவணும். அதான் அசட்டுத் தைரியத்தோட கிளம்பி வந்துட்டேன்.

மானேஜர்: வெரிகுட், உங்கப்பா பேரு அசட்டுத் தைரியமா?

நாடகம் : தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை.
ஆசிரியர் : மௌலி.

• • •

க்ரேஸி மோகன் :



ஓடிப் போன பையனைக் காணுததால் போலீஸில் புகார் கொடுக்கிறார்கள். அவரை இன்ஸ்பெக்டர் குறுக்கு விசாரணை செய்கிறார்.



இன்ஸ்பெக்டர்: ஏன் சார் உங்க பையன் வீட்டைவிட்டு ஓடிப்போனதோட காரணம் என்ன?

அப்பா: அவன் பொண்டாட்டியோட உபத்திரவத்தைத் தாங்கிக்க முடியாம ஓடிட்டான், இன்ஸ்பெக்டர்!

இன்ஸ்பெக்டர்: (ஒரு ஏக்கமான பெருமூச்சு விட்டு விட்டு) அடேடே அதுக்கு இப்படி ஒரு வழி இருக்கா... எனக்கு இது தெரியாமப் போயிடுத்தே!


நாடகம் : ஓடிப்போன கணவன். எழுதியவர் கே. கே. ராமன்.

• • •

மௌலி :



அது ஒரு துப்பறியும் நாடகம். வீட்டில் பிணத்தை வைத்துக் கொண்டு விழிக்கிறான் ஒருவன். வீட்டு ஹாலில் உள்ள பீரோவில் அதை வைதது மூடி விடுகிறான். பலர் பீரோ பக்கம் வந்து போகின்றனர்.



நம் மனம் திக்திக் என்று அடித்துக் கொள்கிறது... பாழும் கதவு திடீரென்று திறந்து கொண்டு விட்டது. பிணம் நிற்பது வீட்டில் நுழையும் அத்தனை பேருக்கும் தெரிந்து விடும். பின்னர் என்ன சஸ்பென்ஸ்? சமயோசிதமாக அந்தப் பிணம், நாடகத்தின் விறுவிறுப்பு குறையக் கூடாதே என்ற கவலையுடன் பொறுப்புணர்ச்சியுடன் ஒரு கையால் திறந்து இருந்த பீரோ கதவைச் சாத்திக் கொண்டு விட்டது. தியேட்டரில் ஒரே கரகோஷம். பிணமாக நடித்தவருக்குப் பரம திருப்தி!

நாடகத்தின் பெயர் நினைவில்லை. 1967ம் வருடம்.

• • •



ராது :

மனைவியுடன் வாழப் பிடிக்காமல் கணவன் ஒரு வீட்டை விட்டு ஓடி ஒளிந்து வாழ்கிறான். ஒரு நாள் அவன் இருக்கும் கோவிலுக்குள்ளே ரகுவின் மனைவியும் அவளது தோழியும்

வருகிறார்கள். தன்னை அவர்கள் அடையாளம் தெரிந்து கொள்ளக் கூடாது என்ற வேகத்தில் ராகு கோவிலில் திவட்டி எடுத்து வருபவனி டமிருந்து அதை வாங்கிக் கொண்டு நிற்கிறான். ராகுவின் மனைவி திவட்டியுடன் நிற்பவனைப் பார்த்த போதிலும் அடையாளம் புரிந்து கொள்ளாமல் தோழியுடன்வெளியேறுகிறாள். வசனம் அதிகம் இல்லாமல் Silent Comedy யாக அமைக்கப் பெற்றிருந்த இந்த நகைச் சுவை என்னை மிகவும் கவர்ந்த ஒன்று.

நாடகம் : "ஓடிப்போன கணவன்."
ஆசிரியர் : கே. கே. ராமன்.



• • •

கோமல் ஸ்வாமிநாதன் :


கிருஷ்ணன் ஒரு ஆபீஸில் வேலை பார்ப்பவர். அவர் நாடகத்தில் நடிப்பது மனைவிக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ஒரு நாடகத்தில் கிருஷ்ண வேஷத்தில் இருந்த கிருஷ்ணன் மனைவிக்குப் பயந்து மறைவாக ஓர் இடத்தில் ஒளிந்து கொள்கிறான். நடிகர்களை ஏற்றி வந்த பஸ் கலாட்டாவுக்குப் பயந்து புறப்பட்டு விடுகிறது. கிருஷ்ண வேஷத்தில் இருந்த கிருஷ்ணன் ஒரு மிளகாய் லாரியைப் பிடித்து வந்து இறங்குகிறான். இவன் யாரோ திருடன் என்று நினைத்துப் போலீஸ் துரத்துகிறது. கிருஷ்ணன் ஒரு வீட்டில் ஒளிந்து கொள்கிறான். அந்த வீட்டிலுள்ள ஒரு பெண் ஒரு கிருஷ்ண பக்தி மிதமிஞ்சிப் போன பைத்தியம். உண்மையான கிருஷ்ணனே தன்னைப் பார்க்க வந்ததாக நினைத்து உபசரிக்கிறாள். "கிருஷ்ணா ரதத்தில் வந்தாயா?" என்று கேட்கிறாள். "இல்லை நான் மிளகாய் லாரியில் வந்தேன்" என்கிறான்.

நாடகம் : கிருஷ்ணலீலா.
ஆசிரியர் : சாது.




கே. கே. ராமன் :

..பிறந்த சில வினாடிகளிலேயே பேச ஆரம்பித்து விடுகிறான் ராகு. வீட்டுக் குழாயில் வெந்நீர் வர வழைக்கிறான். அந்தரத்தில் தொங்குகிறான். இந்த விசித்திர ராகு கல்யாணத்துக்குப் பெண் பார்க்கப் போகுமிடத்தில் வருங்கால மாமனார் "நமஸ்காரம்" என்று கரங்குவித்து வரவேற்க, ராகு தன் விரலைச் சொடுக்குகிறான். அவ்வளவுதான்! "நமஸ்காரம் நமஸ்காரம்" என்று நிறுத்தாமல் கூப்பிய கரங்களுடன் மாமனார் 'மடேர்' 'மடேர்' என்று தம் மார்பில் அடித்துக் கொண்டேயிருக்க ராகு மீண்டும் விரலை சொடுக்குகிறான். அப்பாவி மாமனார் விட்டால் போதுமென்று கூட இருந்தவர் மீது சாய, கொட்டகையில் ரசிகர்களும் ஏறத்தாழ அதே நிலையில் தலைகுனிந்து ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து சிரித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.



நாடகம் : ஒன் மோர் எக்ஸார்ஸிஸ்ட்.
ஆசிரியர் : கிரேஸி மோகன்.

பேட்டி: அசோக் குமார்.



கனபாடிகளின் தாம்பூலம்


ஸ்ரீ சந்திரசேகர பாரதி சுவாமிகள்
(சிருங்கேரி பூர்வாசாரியர்)



ஆந்திர தேசத்திலிருந்து ஒரு வயதான கனபாடிகள் மைசூர் ஸம்ஸ்தானத்திற்கு வந்திருந்தார். அவருக்குப் பற்கள் எல்லாம் அநேகமாக விழுந்து விட்டன. இருந்தாலும் மைசூர் வெற்றிலை மிகவும் துளிராகவும் ருசியாகவும் இருக்கும் என்று பிரஸித்தியானதால் நம் கனபாடிகளுக்கு அதில் சபலம் உண்டாயிற்று. பல்லுப் போனவர் தாம்பூலம் போட்டுக் கொண்டார். வெற்றிலைதான் துளிராக இருந்ததே தவிரப் பாக்கு கெட்டியாக இருந்தது. ஜிஹ்வா சாபல்யம் (நாக்கின் சபலத் தன்மை) இலேசில் விடுகிறதா? பல் இல்லாமலும் ஈற்றினாலேயே பாக்கை நசுக்கி நசுக்கி மசிய வைத்தார். ஈறுகளிலிருந்து ரத்தம் கசிய ஆரம்பித்து விட்டது. உதடுகள் நல்ல சிவப்பாக ஆகிவிட்டன.

இதைப் பார்த்த ஒரு ஸ்நேஹிதர், ''மைசூர் வெற்றிலை ருசியானாலும் சாதாரணமாக இந்த வெற்றிலை போடுபவரின் வாய் அதிகமாகச் சிவப்பதில்லை. நாங்கள் எவ்வளவு பக்குவமாகப் பாக்கு சுண்ணாம்பு சேர்த்தாலும் எங்களுக்குச் சிவப்பதில்லை. தங்களுடைய தாம்பூல சர்வணம் (சுவைப்பு) நிரம்பவும் சிலாக்யமாக இருக்கிறது. ஒரேயடியாகச் சிவந்திருக்கிறதே!'' என்றார். விஷயம் தெரிந்து கொண்டு அவர் கேலியாகத்தான் இப்படிச் சொன்னார். ஆனால் பரிஹாஸம் என்று புரிந்து கொள்ளாத கனபாடிகள், 'தாம்பூல ருசியைவிட அதை மெல்லுகிற கஷ்டம்தான் நமக்குப் பெரிதாகத் தெரிந்தாலும், பிறருக்கு நம் வாய் மிகவும் அழகாகத் தெரிகிறதே!' என்பதிலேயே ஸந்தோஷப்பட்டார். எவ்வளவு வயது ஆனாலும், பாண்டித்தியம் இருந்தாலும் நாக்கு ருசி போகாதது போலவே, தன் அழகில் பெருமையும் போவதில்லையல்லவா? அதனால் கனபாடிகள் தமது தாம்பூல சர்வண ஸாமர்த்தியத்தில் தாமே ஸந்தோஷமடைந்து மேலும் வெற்றிலை போட்டுக் கொண்டார். விளைவாக அன்றிரவு போஜனம் செய்வதற்கே லாயக்கில்லாத விதமாக ஈறுகள் ஒரே புண்மயமாகி விட்டன. புண்ணின் வலியோடு பசியின் உபாதையும் சேர்ந்தது.

ஜீவர்கள் விஷய ஸுகம் (பொருள்களைப் புலன்கள் மூலம் துய்ப்பதால் ஏற்படும் இன்பம்) என்று எதையோ நினைக்கிறோமே அது உண்மையில் கனபாடிகளின் தாம்பூலதாரண ஸுகம் போன்றதுதான். வெற்றிலையிலிருந்தா ஸுகம் விளைந்தது? அதேபோல் வெளிப் பொருள்களில் வாஸ்தவமாக ஸுகம் எதுவும் இல்லை. விஷயங்களால் (வெளிப் பொருளால்) ஏற்படுவதாகத் தோன்றும் இன்பமானது வாஸ்தவத்தில் ஜீவனது சொந்த ஆசாபாசத் திருப்தியிலிருந்தே தாற்காலிகமாக உண்டாகிறதுதான். ஒருவிஷயம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற ஆசையால் மனசு கலங்குகிறது. அவ்விஷயம் கிடைத்தவுடன் அந்தக் கலக்கம் போய் விடுகிறது. அப்போதைக்கு மனசு தெளிகிறது. தெளிவுதான் ஜீவனின் ஸ்வபாவமானதால் உடனே அது ஸுக உணர்வை அநுபவிக்கிறது. ஆகையால் இயல்பான தெளிவு, ஆசையால் மங்கிய பிறகு விஷய அநுபோகம் அந்தக் கலக்கத்தை அப்போதைக்கு நிவர்த்தி மட்டும்தான் செய்கிறதே தவிர, தன்னால் ஸுகம் என்ற ஒன்றைத் தரவில்லை. அப்போதைக்கு அடங்





இரண்டு சர்தார்ஜி உல்லாசப் பயணிகள். ஒரு மலை மீது ஏறிச் சென்றதில் மிகவும் களைத்துப் போயினர். ஒரு சர்தார்ஜி மலையடிவாரத்தைப் பார்த்துக் கத்தினார்.

மற்றொரு சர்தார்ஜி: "என்ன கத்துகிறாய்."

முதல் சர்தார்ஜி: "மலை ஏறி வந்தது மிகவும் களைப்பாய் இருக்கிறது. இறங்குவதற்குக் கார் கொண்டு வரும்படி டிரைவரிடம் கூறுகிறேன்."

இரண்டாம் சர்தார்ஜி: "உனக்கு ஏதேனும் மூளை இருக்கா? இவ்வளவு உயரத்திலிருந்து கத்தினால் டிரைவர் காதில் விழுமா?" என்று கூறியபடி முதல் சர்தார்ஜியின் கையில் இருந்த 'பைனாகுலரை' இழுத்து அவர் கண்களில் பொருத்தினார். "இப்போது பார்! டிரைவர் எவ்வளவு கிட்டத்தில் இருக்கிறான் என்று. இப்போது கூப்பிட்டு, கார் கொண்டு வரச் சொல்" என்றார் பூரிப்போடு.

-குமாரி

ஒரு நாடகத்தில் நடிப்பதற்காக ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இருந்தபோது, குரங்காக நடிப்பதற்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரிடம் இன்னொருவர் அங்கலாய்த்தார் இப்படி: "உன் பாடு தேவலே! நடிக்க வேண்டிய அவசியமே இருக்காது!"

கல்பாக்கம் நாராயணன்.



னை மனனில் இதே விஷயம் மறுபடி, மறுபடி அதை அநுபவிக்க வேண்டும் என்ற ஆசையான கலக்கத்தையும் உண்டாக்கிக் கொண்டேதான் இருக்கும்.

எத்தனை ராஜபோகத்தை அநுபவிக்கும் சக்கரவர்த்தியானாலும் சரி, தினமும் தூங்க வேண்டும் என்று விரும்புகிறான். மிகவும் ஆசையாக அணிந்து கொள்கிற ஆபரணங்களைக் கூடத் தூக்கத்துக்குக் குந்தகமாக இருக்கிறதென்று கழற்றிப் போட்டு விடுகிறான். நன்றாகத் தூங்க விரும்பும் ஸமயத்தில், அதுவரை ரஸித்த உயர்வான நாட்டியம், வீணாகானம் எதுவுமே வேண்டியிருப்பதில்லை. அப்போது ஷட்ரஸோபேதமான போஜ்யங்கள் (அறுசுவை உண்டி) கொண்டு வந்தாலும் ஏற்பதில்லை. இப்படி அரசனிலிருந்து ஆண்டிவரை ஸகலரும் மற்ற எல்லா ஸுகங்களையும் ஒதுக்கிவிட்டு அநுபவிக்கிற நித்திரையில் என்ன இருக்கிறது? விஷயங்களும் இல்லை; அவற்றை இந்திரியங்களால் அநுபவிப்பதும் இல்லை. மானஸிகமாக (மனத்தின் கற்பனையால்) இந்திரிய ஸுகம் அநுபவிக்கிற ஸ்வப்பனம் கூட இல்லாத நித்திரையைத்தான் அனைவரும் விரும்புகிறோம். "சரியான தூக்கமே இல்லை; ஒரே ஸ்வப்பனங்களாக வந்தன" என்று வருத்தப்படுகிறோமல்லவா? வெளி வஸ்து, அவற்றின் அநுபோகம் என்ற எதுவுமே இல்லாமல் மனசு அடங்கிக் கிடக்கும் தெளிவு நிலையைத்தான் எவனும் எல்லா விஷய ஸுகங்களுக்கும் மேலாக நினைக்கிறான் என்று இதிலிருந்து தெரிகிறது.

ஸுகமாக இருக்கிறோம் என்ற பிரக்ஞை இல்லாத நிலை தூக்கம். பிரக்ஞா ரூபமாகவே (உணர்வு ரூபமாகவே) இவ்விதம் மனம் அடங்கி ஸௌக்கியமாயிருக்கும் நிலையே ஸமாதி.

தான் தானாக — இந்திரியம், மனசு எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவும், அதீதமாகவும் — இருக்கும் அந்த நிலையே நிஜமான ஸுகம். அந்த ஸுகத்தைக் கெடுத்துக் கொண்டு வெளி விஷயத்தால் ஸுகம் பெறுவதாக நினைப்பது தன்னையே துன்புறுத்திக் கொண்டு, 'அழகாகத் தோன்றுகிறோம்' என்ற அல்ப ஸந்தோஷத்தில் கணபாடிகள் ஸந்தோஷப்பட்ட கதைதான். விஷய ஸுகத்தில் நிரந்தர ஆனந்தமில்லா விட்டால் போகட்டும், அப்போதைக்காவது அந்தந்த இந்திரியத்துக்கு வாஸ்தவமாக ஒரு ஸௌக்கியமிருக்கிறதா என்றால் அதுவுமில்லை. அப்போதைக்குக் கூட கணபாடிகளின் வாய்க்கு ருசி என்ற இன்பத்தை விட ஈறுவலியே அதிகமிருந்ததுபோல விஷயாநுபவ காலத்திலும் கூட இந்திரியங்கள் ஆடிப் பலஹீனம்தான் அடைகின்றன. இந்த ஆட்டத்துக்குள்ளேயே ஆசா சாந்தியினால் (விருப்பம் நிறைவேறியதால்) தாற்காலிகமாக ஸந்தோஷப்படுகிறோம். நமது நிஜரூபமான சாந்த ஸமுத்திரத்தைக் கலக்குகிற போது அதிலிருந்தே தெறிக்கிற சிறு துளி தான் இது — தன்னுடைய ரத்தத்தின் ருசியிலேயே கணபாடிகள் ஸுகம் என்ற பிரமையை ஏற்படுத்திக் கொண்டது போல.

(அனுப்புனர்: ரா. கணபதி.)

சுப்பராமன் மடித்துக் கட்டிக் கொண்டிருந்த வேட்டியைக் கீழே தழைய விட்டார். ''ரெங்கு... ரெங்கு!''... என்று இரைந்து கூப்பிட்டார். ''வனஜா... அம்மா வனஜி..'' என்று கொஞ்சலான இரைச்சலில் பெண்ணை அழைத்தார்.

ஏஷியன் பெயிண்ட்ஸ் விளம்பரத்தில் வருகிற பையன் மாதிரி தலைமயிர் நெற்றியில் பாதி மறைக்க, சரியான வால் என்று யாருமே எளிதில் சொல்லிவிடக் கூடிய ரெங்கு பம்பரமும் கயிறுமாக வந்து சேர்ந்தான். பாவாடை தரையில் தழையத் தழைய, முதுகில் பாதியே எட்டிய பின்னலுடன் ஒரு மகாராணியின் நடையில் நடந்து வந்து, ''என்னப்பா?'' என்றாள் வனஜி.

சுப்பராமன் வீட்டில் டி.வி. வாங்கி விட்டார்கள்

— சாருகேசி



''உங்க வீட்டிலே இன்னுமா டீவி வாங்கலேன்னு கேட்டார்களே கோடி வீட்டுலே. அங்கே சொல்லி விட்டாயாடா ரெங்கு?''

''எதப்பா?''

''எதப்பா! நீ இங்கிலீஷ்லே இருபத்தஞ்சு மார்க் வாங்கினதை! டீவி. வாங்கியாச்சுன்னு சொன்னியாடாங்கறேன்!''

''சொன்னேன். ரெடி கேஷா இன்ஸ்டால்மென்டான்னு கேட்டார். இன்ஸ்டால்மென்ட் இன்ஸ்டால்மென்டா பாங்கில் கட்டியதைச் சேர்த்து ரெடி கேஷா கொடுத்து வாங்கினோம்னேன்!''

''அதிகப் பிரசங்கி! ரெடி கேஷ்னு சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே நீ? ம்... அப்புறம் அந்த மேலேயும் கீழேயும் பார்த்துவிட்டு, தெரியாத மாதிரி போகுமே ஜகந்நாதன். அதுங்கிட்டே சொன்னியா?''

''அவர் வீட்டிலே இல்லே. வனஜிதான் அந்த மாமிகிட்ட சொன்னாள்!''

''வீடு வீடா கொலுவுக்கு அழைக்கிற மாதிரி போய்ச் சொல்லுகிறீர்களாக்கும்? என்று கேட்டாள் அந்த மாமி.'' என்றாள் வனஜி.

''அவர்களுக்கு என்றைக்குமே பொறாமைதான். நாம் நன்றாக இருந்து விட்டால் பொறுக்காது!'' என்றாள் சுப்பராமனின் சகதர்மிணி வாலாம்பாள். (சின்ன வயசில் சரியான வால் போலிருக்கிறது. அதையே பெயராக வைத்து விட்டார்களாக்கும்?' என்று கல்யாணத்துக்கு முன்னால் சுப்பராமன் கேட்டது எல்லோருக்கும் இன்னும் நினைவிருக்கும்.)

வாலாம்பாள், ''மாடிலே அன்டோனி கட்டினானே, அவனுக்கு ரூபாய் கொடுத்தீர்களோ?'' என்று கேட்டாள்.

''ஐயோ, அது அன்டோனியுமில்லே, ஜோசப்பும் இல்லே. அதுக்குப் பேர் ஆன்டென்னு. யார் காது கேக்கவாவது அப்படிச் சொல்லாதே!''

''சரி, ஆன்டென்னு. ரூபாய் கொடுத்தாச்சா?''

''கொடுக்கலேன்னு அவன் அதைக் கழட்டிக் கொண்டு போய் அவன் வீட்டு மாடிலே கட்டிக் கொடி கட்டிப் பறக்க விடுவான்!''

''மனுஷாளுக்குக் குடுமி மாதிரி வீட்டுக்கு ஆன்டென்னுதான் குடுமி. இல்லேப்பா?'' என்று கேட்டான் ரெங்கு. (அவன் சமீப காலமாகப் புதுக்கவிதையெல்லாம் படிக்க ஆரம்பித்திருந்தான்.)

சுப்பராமன் வீட்டில் டீவி. வந்த பிறகு, அவர்கள் வீட்டு ஹால் ஒரு தனிக்களை பெற்றது. சுவரோரத்தில் டீவியை வைத்து விட்டு சோபா செட்டைப் போட்டுப் பார்த்தார்கள். பிறகு டீவி வைத்த இடத்தில் சோபா செட்டையும், சோபா செட் வைத்த இடத்தில் டீவி. யையும் வைத்துப் பார்த்தார்கள். இப்படி அப்படி இழுத்ததில், நீளமான அதன் கறுப்புப் பட்டை ஒயர், கொடி மாதிரி ஹாலில் தொங்க, வாலாம்பாள் அதையே மழைக்காலத்தில் துணி உலர்த்தக் கொடியாக உபயோகிக்கலாமா என்று அப்பாவித் தனமாய்க் கேட்க, சுப்பராமன் பூமிக்கும் ஆகாசத்துக்குமாகக் குதிக்க...



முன்பெல்லாம் இரவு எட்டரை ஒன்பதுக்கெல்லாம் சாப்பாட்டுக் கடை முடிந்து எல்லோரும் பத்து மணிக்குள் படுத்துக் கொண்டு விடுவார்கள்.

கிருஷ்ணமணி மட்டும் ஆபீஸ் வேலை ஏதானும் கொண்டு வந்து வைத்துக்கொண்டு பத்தரை பதினொன்று வரை ரேடியோவில் ஹிந்திப் பாட்டு கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பான். (நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று சுப்பராமனும் வாலாம்பாளும் அலைகிறார்கள்.)

இப்போதெல்லாம் பத்து மணிக்கு டிவி முடிந்து (அது நாகாலாந்து மக்களின் விநோத நடனமாக இருந்தாலும்) கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத்தான் எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பாட்டுக்கு இடையே டிவி விமர்சனம் வேறு.

சனிக்கிழமைகளில் மற்ற எல்லா வீட்டிலும் எப்படியோ, சுப்பராமன் வீட்டு ஹாலில் குறைந்தபட்சம் இருபது பேராவது பார்வையாளராக வர ஆரம்பித்தார்கள். வேலைக்காரி வள்ளியின் குடும்பம், பால்கார முனுசாமியின் குடும்பம், பேப்பர்க்கார வேம்புலியின் கட்டுப்பாடே இல்லாத குடும்பம், மேற்படியார்களின் மாமன் – மச்சான் எல்லாரும் சுப்பராமன் வீட்டு ஹாலில் ஆறு மணிக்கே ஆஜராகத் தொடங்கினார்கள். ''நாம் இந்தப் படமெல்லாம் எங்கே பார்க்கிறோம்? அவர்கள்தான் ரசித்துப் பார்க்கிறார்கள். பார்த்து விட்டுப் போகட்டுமே?'' என்று சுப்பராமனும் எல்லோரையும் வாசலில் கல்யாண வரவேற்புக்கு நிற்கிற மாதிரி நின்று கொண்டு 'வாருங்கள் வாருங்கள்' என்று வரவேற்று உபசரித்தார்.

ஒரு படம் விலக்கு இல்லாமல் எல்லாவற்றிலும் பத்து மணிக்கு மேல் வில்லனைப் போட்டு ஹீரோ சாத்து சாத்தென்று சாத்திய பிறகுதான், வாலாம்பாளும் சாத்தினாள் – கதவை. அவர்கள் போனபின், அங்கே இறைந்து கிடக்கும் வேர்க்கடலைத் தோலையும் வேர்வையையும் அகற்ற நன்றாகப் பெருக்கித் துடைத்து, படுக்கப் போகும்போது சாதாரணமாகப் பதினொன்றைத் தாண்டியது.

''இனிமேல் இங்கே டிவி பார்க்க வருகிறவர்கள் கண்டிப்பாக வேர்க்கடலை சாப்பிடக் கூடாது என்று ஒரு போடு போட்டு விடலாம்!'' என்றாள் வனஜா.

ஆபிசிலிருந்தே நேரம் கழித்து வந்து கொண்டிருந்த கிருஷ்ணமணி சில தினங்களாகச் சற்று சீக்கிரமே வரத் தொடங்கியதும், சோபாவில் ஒன்றை ஆக்ரமித்துக் கொள்வதும் சுப்பராமனுக்கும் வாலாம்பாளுக்கும் சற்று ஆச்சரியமாயிருந்தது. அதற்கு ஒரு காரணம் இருந்தது. அந்தக் காரணத்துக்கு ஓர் அழகான உருவமும் இருந்தது!

நீண்ட கருவிழிகளும், சாட்டை மாதிரிப் பின்புறம் தொங்கும் நீண்ட பின்னலும் கொண்ட, இருபத்திரண்டே பிராயம்ஆனவளும், அலட்சிய சிகாமணி என்று தெருவே கூடிப் பட்டம் வழங்கியபோதும் அலட்சிய



'இரண்டே நாட்களில்
தீர்ந்து போகிறதே
தாங்கள் தரும்
சம்பளம்' என
ஏங்கினாள் என் மனைவி.
'இரண்டே மணி
நேரத்தில்,
என் அருமைச் சம்பளம்
கைமாறிப் போயிற்றே'
என நான் ஏங்கிய
ஏக்கத்தின் ஆழத்தை
அறியாத பேதை!

— ஆர். மார்க்கண்டன்

மாகவே இருந்த ஜகந்நாதன் (ரிடையர்ட் முன்சீப்) என்கிறவரின் மருமானுமான யுவதி காயத்ரி. ஆறரை மணி அடித்தால் 'மாமி' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்து வாலாம்பாள் வரவேற்க, சோபாவின் கோடியில் போய் அமர்ந்து கொண்டு ஒன்பது மணிவரை டீவி பார்த்து விட்டு, நாலு வீடுகள் தள்ளி இருக்கும் தன் மாமா வீட்டுக்கு அன்னமாய் நடந்து செல்லும் காயத்ரி.

ஞாயிற்றுக் கிழமைகளில் மூன்று மணிக்கு மேல் நாலரை மணிக்குள் சில பல பெண்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன கிருஷ்ண மணியின் மனசில் காயத்ரியின் இந்தத் திடீர் விஜயம் ஒரு சின்ன சபலத்தை (சலனத்தை?) உண்டாக்கி விட்டது என்பது சுப்பராமனுக்கும் வாலாம்பாளுக்கும் எங்கே தெரிந்திருக்கப் போகிறது!

கிருஷ்ணமணியும் வெட்கத்தை விட்டு, ஜாடை மாடையாக வாலாம்பாளிடமும் வனஜியிடமும் கேட்டுப் பார்த்தான். கடைசியில். "ஓ, காயத்ரியா? லீவுக்கு வந்திருக்கிறாளாம். எம். ஏ. படிக்கிறாளாம் பம்பாயில். கல்லூரி திறந்ததும் போய் விடுவாளாம்!" என்றாள் வனஜி.

சூரியன் உதிக்காமலே போகட்டும் என்று சாபமிட்ட நளாயினியிடம் கொஞ்சம் விபூதி மந்திரித்து வாங்கிக் கொண்டு வந்து, 'கல்லூரிகள் திறவாமலே போகட்டும்!' என்று சபித்தால் (ஜபித்தால்?) என்ன என்று கிருஷ்ணமணிக்குத் தோன்றிற்று.

இப்படி வெகு சாதாரணமாய் இருந்து வந்த நிலைமை யாருக்கும் பிடிக்கவில்லையோ என்னவோ, ஒரு சனிக்கிழமை மாலை 'வாத்தியார்' படம் பார்க்க வேலைக்காரி வள்ளி, பால்கார முனுசாமியின் ஃபாமிலி எல்லாம் அமர்ந்திருக்கையில், "நாங்க மட்டும் பார்க்கக் கூடாதா அய்யரே?" என்று கேட்டுக் கொண்டே பத்துப் பதினைந்து பேர்கள் முண்டா பனியனும் துண்டுமாக வீட்டுக்குள்ளே, வியட்நாமுக்குள் புகுந்த சீனப்படை மாதிரி நுழைந்து கூச்சலிட—

வெளியே இருந்தாறு பேர்கள், "நாங்களும் உள்ளே வர்றோம்!" என்று செடி கொடிகளை மிதித்து, ஜன்னல்கள் வழியே மிரட்ட —

சுப்பராமன் கத்த, வாலாம்பாள் தன் சக்திக்கு மீறிய உச்சக் குரலில் கத்த, வனஜி பயந்து போய் ஒதுங்க, ரெங்கு அவர்களிடம் இரைய, கடைசியில் ஆபீசிலிருந்து அப்போதுதான் வந்து முகம் கழுவிக் கொண்டிருந்த கிருஷ்ணமணி அவர்களையெல்லாம் விரட்டாத குறையாக வெளியேற்றிக் கதவை அறைந்து சாத்திய பின், களைத்துப் போய்த் திரும்பிச் சோபாவைப் பார்த்தான்.

"எங்கே என்னையும் வெளியே தள்ளி வாசல் கதவைப் பூட்டி விடுவீர்களோ என்று பார்த்தேன்!" என்றாள் காயத்ரி.

"நோ... நோ... நீங்கள் பயப்படாமல் பாருங்கள்!" என்றான் கிருஷ்ணமணி.

"நீங்கள் ஒரு அல்சேஷனோ பொமரேனியனோ வளர்த்தால், வீட்டு வாசலில் கட்டிப் போட்டு விடலாம். கூட்டம் வந்து இப்படி முட்டி மோதாது. உங்கள் வீட்டுக் கண்ணாடி ஜன்னல்கள், கதவுகளெல்லாம் பத்திரமாய் இருக்கும். குடுகுடுப்பாண்டி முதல் மார்க்கெட் சர்வேக்காரர் வரை ஒரு தடவைக்கு இருதடவை யோசனை செய்து விட்டுத்தான் உள்ளே நுழைவார்கள்!" என்று காயத்ரி யோசனை கூறினாள்.

"ஐயையோ! நாயா! வேண்டாம்டியம்மா!" என்றாள் வாலாம்பாள்.

"அதிலும் பெண் — நாயாக இருந்தால் வேண்டவே வேண்டாம். அப்புறம் அதற்கும் வாலாம்பாள் என்றே பெயர் வைக்க வேண்டி வரும்" என்று சுப்பராமன் அங்கலாய்க்கவும் அவர் சகதர்மிணி அவரை முறைத்துப் பார்த்தாள்.

"நாய் வளர்க்கிறது ஒன்றும் பெரிய கஷ்டமில்லை. ரொட்டியும் பாலும் கொடுத்தால் போதும்!" என்று இன்னும் தூண்டினாள் காயத்ரி. "என் சிநேகிதி பிரமிளா வீட்டில் இரண்டு அல்சேஷன்கள் இருக்கிறதாம்... அவள் அப்பா பேரு ராமசேஷன். வேடிக்கையாயில்லை? ஒன்றை வேண்டுமானால், எடுத்துக் கொண்டு போயேன் என்று சொன்னாள்..."

"அப்படியானால் அவள் மிஸ்டர் ராமசேஷனைத்தான் சொல்லியிருப்பாள் எடுத்துக் கொண்டு போ என்று!" எனக் கிருஷ்ணமணி சொன்னபோது காயத்ரி அசிப்பல் தெரியச் சிரித்தாள்.

மறுநாள், பிரமிளாவின் வீட்டிலிருந்து நாயைக் கொண்டு வரப் போனபோது, "அப்பாடா, இப்போதுதான் உங்களுடன் தனியாகப் பேச முடிந்திருக்கிறது!" என்றாள் காயத்ரி.

"சனிக்கிழமைகளில்தான் எங்கள் வீடு சரியான மாம்பலம் ரங்கநாதன் தெரு மாதிரி

இருக்கிறதே. எப்படி நாம் பேசிக் கொள்ள முடியும்?'' என்றான் கிருஷ்ணமணி.

''உங்கள் வீட்டில் டீவி வாங்கியதால் தானே நாம் சந்திக்க முடிந்தது!''

''சாமியார் பூனை வளர்க்கப் போய்ச் சம்சாரியான கதைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது இப்போது!''

''நீங்கள் சாமியாரும் இல்லை. நாம் வாங்கப் போவது பூனையுமில்லை. ஆனால் நீங்கள் சம்சாரி'ஆகப் போவதை உங்கள் அம்மாவும் அப்பாவும் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்!''

''நீங்கள் எப்படி?''

காயத்ரி மௌனம் சாதித்தாள். வெட்கமாய் ஒரு புன்னகை புரிந்தாள்.

''ஹாய்'' என்றாள் காயத்ரி.

''ஹாய்'' என்றாள் பிரமீளா பதிலுக்கு.

டாக்ஸியில் 'ஜில்லி'யோடு வீடு வந்து சேர்ந்த போது, ''வலது காலை எடுத்து வைத்து வா'' என்றான் கிருஷ்ணமணி நாய் 'ஜில்லி'யிடம். காயத்ரியிடம்தான் அவன் அப்படிச் சொல்லுகிறான் என்று வியந்து போய் சுப்பராமனும் வாலாம்பாளும் எட்டிப் பார்த்த போது, ஜில்லி முரண்டு பிடித்தது. முன்னங்கால் இரண்டாலும் உள்ளே தாவியது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, கிருஷ்ணமணி ஆபீஸிலிருந்து திரும்பும்பொழுது வாசலில் நாயைக் காணோம்.

''ஜில்லி எங்கே?'' என்று அவன் பதைத்துப் போய்க் கேட்கத் துவங்கிய உடனேயே, வாலாம்பாள் உள்ளிருந்து வந்து, ''நல்ல நாயைக் கூட்டிக் கொண்டு வந்தேடா! அது வருகிறவனையெல்லாம் கையைக் காலைப் பிடுங்கப்போய், ரோடெல்லாம் ஓடுஓடு என்று ஓடி, அதைத் துரத்திக் கொண்டு உன் அப்பா ஓட, போய்ப்பார், கட்டிலில் ஓய்ந்து போய்ப் படுத்திருக்கிறார்!'' என்றாள்.

''அப்புறம் என்ன செய்தீர்கள் அதை?''

''ரெங்குவும் வனஜியுமாக அதைக் கொண்டு போய்க் காயத்ரி வீட்டில் விட, அவள் அதைப் பிடித்துக் கொண்டு போய் அவள் சிநேகிதி வீட்டில் விட்டு விட்டாளாம்!''

''நாய் ஜாக்கிரதை போர்டு இருக்கிறதோ? அதையும் நாயோடு சேர்த்துக் கொடுத்து விட்டீர்களோ? புதிசாக எழுதின போர்டு!''

''அதுதான் கேட்டில் தொங்குகிறதே! கழற்ற மறந்துவிட்டது பாரேன். அதை எடுத்து விடு!'' என்றாள் வாலாம்பாள்.

''அது அப்படியே இருக்கட்டும்! அதை நம்பாதவர்க்கு நாம் யாராவது உள்ளேயிருந்து குரைத்துக் காட்டினால் போதும்!'' என்றான் கிருஷ்ணமணி.

இதற்குப் பிறகு, காயத்ரி விடுமுறை முடிந்து, பம்பாய் கிளம்ப இரண்டு நாட்கள் இருக்கும்பொழுது --

ரிடையர்ட் முன்சீஃப் ஜகந்நாதன் ஒரு வெள்ளிக்கிழமை மாலை வந்து கதவைத் தட்டிய போது, கண் பார்வை சரியாகப் போதாமல், ''யாரையும் உள்ளே விடுகிற இல்லைங்க டீவி பார்க்க!'' என்றார் சுப்பராமன் இரைந்து.

''டீவி பார்க்க இல்லை, சுவாமி! உம்ம பையனுடைய ஜாதகத்தைப் பார்த்து வாங்கிக் கொண்டு போக வந்திருக்கிறேன். கதவைத் திறவும். என் மருமான் காயத்ரியின் ஜாதகத்தைப் பிடியும்'' என்றார் ஜகந்நாதன்.


ஜகந்நாதன் ஜாதகத்தைக் கொடுத்து விட்டுப் போகும் பொழுது, ''மருமானை வழக்கம்போல டீவி பார்க்க வரச் சொல்லும். வெட்கம் கிட்கம் பட்டுக்கொண்டு வராமல் இருந்துவிடப் போகிறான்!'' என்று சொல்லி வைத்தார் சுப்பராமன், கிருஷ்ணமணியின் காதில் விழட்டும் என்று.

'டீவி வந்ததும், நாய் வந்தது. நாய் வந்ததும் கல்யாணம் வந்தது. இதை விடப் பெரிய குஷுபடி என்ன வேண்டும்!' என்று காயத்ரியிடம் சொல்ல வேண்டும் என்று மனசுக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டான் கிருஷ்ணமணி.

கல்லூரி ராகிங்குக்குத் தடை உத்தரவு அப்போது கிடையாது.

பகல் பன்னிரண்டு மணிக்கு விளையாட்டு மைதானத்துக்கு வரச் சொன்னார்கள். ''உனக்கு ஆயிரம் நிலவே வா'' பாட்டு தெரியுமா? என்று கேட்டாள் ஒருத்தி. அப்பாட்டு எனக்கு மிக நன்றாகத் தெரிந்தாலும் பயத்தில் தெரியாது என்று தலையாட்டினேன். அப்பெண் உடனே ''தெரியவில்லையென்றால் பரவாயில்லை. மண்டியிட்டு ''ஒரு நிலவே வா, இரண்டு நிலவே வா, மூன்று நிலவே வா'', என்று ஆயிரம் வரையில் விடாமல் சொல்ல வேண்டும். சரியா?'' என்று மிரட்டினாள். எனக்கோ படபடக்கும் வெயிலில் உட்கார்ந்து 'நிலவே வா, நிலவே வா' என்று ஜபம் செய்யப் போவதை நினைத்ததுமே சிரிப்பு சிரிப்பாக வந்தது. ஆத்திரமடைந்த அப்பெண் உடனே எண்ணிக்கையை 1000த்திலிருந்து 1500 ஆக அதிகரித்து விட்டாள்! மிகவும் கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு நானும் எப்படியோ சொல்லி முடித்தேன்.

- ஹேமமாலினி



காதல் கனிரசமே!

கமல்—

இன்று திரைப்படங்களில் கதை வசனம்கூட இல்லாமல் இருக்கலாம் (சில படங்களைப் பொறுத்தவரை கதையே இல்லை என்பது வேறொரு விஷயம்!) ஆனால் படத்தில் காதல் இல்லாமல் இருக்க முடியாது. கண்ணே மணியே என்ற காதல் வசனங்களை எழுது எழுதி வசனகர்த்தாக்களும் ஓய்ந்து விட்டார்கள். மேலும் இன்று புதுப்புது கதா பாத்திரங்கள் வருகிறார்கள். மனிதர்களுடன் மிருகங்களும் கூட நட்சத்திர அந்தஸ்தைப் பெற்று வருகின்றன. பல வயதுக் காதல்களும் படங்களில் வருகின்றன. ஆகவே நமது எழுத்தாளர் ஏகாம்பரம் ரெடிமேட் காதல் வசனங்களைத் தயார் பண்ணி வைத்திருக்கிறார். அவர் நமக்கு அனுப்பிய சில சாம்பிள்கள்:

ஹாண்டாகீஸ் ரோட் ரிக்ஷா ஸ்டாண்ட் காதல்!



''என்ன சோத்துக்கூடை சின்னக் கண்ணு! யாரு வூட்லே கொடுத்தாங்க சிலுக்கு ரவிக்கை?''

''யோவ்... ஒன்னே அப்படியே தூக்கி கூவத்திலே போட்டுனும்யா... உன் கண்ணிலே ரவிக்கைதான் படுதா?''

''கண்ணு... அதுதான் சின்னக் கண்ணு. சிவப்பு ரவிக்கை ஒனக்குப் பாந்தமா இல்லேன்னு நான் சொல்லவேதான் இந்தச் சிலுக்கைப் போட்டாந்திருக்கே!''

''இந்த டிபன் காரியராலேயே தலைமேலே போட்டேன்னு பாரு... சரி... சரி. சோறு புடி... எவ்ளோ? எட்டணுவுக்கா?''

''உன் கையாலே பிசைஞ்சு போடு.. கையிலே வாங்கித் துன்றேன்.''

''கேட்டியா கதையென்னாம்... சரி, குந்து போடறேன்.''

''சின்னக்கண்ணு! தைமாசம் கழிஞ்ச பிறகு கையிலே போடற வேலை உனக்கு இருக்காது.''

''அப்படீன்னு?''

''வாயிலே போடுவே.''

''மூதுலேதான் போடுவேன். உன்னைக் கண்ணாலம் கட்டிக் இடப்போறேன்னு கெனா கூடக் காணுதே.''

''கெனாவா? ராவுலே படுத்தா ஒன் நினைப்பு தானே, தூக்கம் எங்கே வருது கெனா காண? கண்ணு முன்னே சின்னக்கண்ணுதான் நிக்குது.''

''நிக்குது. பாத்து துன்னு. இல்லாங் காட்டி தொண்டையிலே விக்குதுன்னுவே.''

நடிப்பு: காத்தாடி ராமமூர்த்தி, சமா

கன்னிமரா எதிர்புறத்து பஸ் ஸ்டாண்ட் காதல்!

''அரை மணியா பாழாய்ப் போன பஸ்ஸைக் காணோம்.''

''ஆமாம்... மிஸ்... இன்று நான் ஸ்கூட்டரை எடுத்திட்டு வரலே. என் பாடும் கண்டமாப் போய்ட்டுது.''

''என் காரும் வீல் அலைன்மென்டுக்குப் போயிருக்குது.''

''வாழ்க்கையும் கார் மாதிரிதான். இரண்டு பேரும் மனமொத்து ஒரே மாதிரியாகப் போனால்தான் சரிப்படும்.''

''பெரிய தத்துவமாகப் பேசறீங்களே, பிலாசபி ஆனர்ஸா?''



''இல்லே. இலக்கியம்... நீ?''
''ஆர்ட்ஸ்.''
''ஆர்ட்ஸ் படிக்கிறே. ஹார்ட்ஸைப் பிடிக்கிறே.''
''மிஸ்டர் இலக்கியம். ரொம்ப தூரம் வேண்டாம்.''
''நோ... நோ... நோவே நோ! ரொம்ப தூரம் போகலே... ரொம்பக் கிட்டவே வரேன்.''
''இதுதான் நீங்க படிக்கிற இலக்கியமா?''
''இல்லே. நான் காதல் இலக்கியத்தை உன் கண்ணில் படிக்கிறேன்.''
''கண் அது இது என்று ஆரம்பிக்க வேண்டாம்.''
''சரி, "கண்ணே" என்று சொல்கிறேன்! போதுமா?''
''மிஸ்டர்...''
''அதோ ஆட்டோ ரிக்ஷா வருகிறது. அதில் போகலாம். வழியில் உங்களை டிராப் பண்ணிடறேன்.''
''பாதிப் பயணத்தில் ட்ராப் பண்ணுவது தான் உங்கள் குணமா?''
''ஆட்டோ பயணத்தில் மட்டும். வாழ்க்கைப் பயணத்தில் அல்ல.''
''ரொம்ப தமாஷாகப் பேசுகிறீர்கள்.''

நடிப்பு: ஜூனியர் பாலையா, ரம்யா

''மனசு மட்டுமல்ல, யு ஹேவ் எ பாடி எ ஸோல்...''
''மேடம் மை பாடி... அடடே... என்னென்னமோ பேசிக்கிட்டுப் போகிறேனே.''
''நம் இரண்டு பேர் வேவ் லெந்த்தும் ஒண்ணு இருக்கிறதோ என்னவோ. அதனால் தான் யு 'ஆர் ஓபனிங் யுவர் ஹார்ட்.''
''இருக்கலாம்.''
''அது மட்டுமல்ல, மேடம்...''
''என் பெயர் ராணி.''
''ராணி... அவள் பெயரும் அதுதான்.''
''அவள்?''
''ஷி வாஸ் மை கேர்ல் ப்ரெண்ட்... பெரிய பணக்காரக் கிழவன் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று வந்தான். எனக்கு டாடா சொல்லி விட்டு அந்தத் தாத்தாவின் பின்னால் போய் விட்டாள்... நான் சாதாரண எலெக்ட்ரானிக்ஸ் எஞ்சினியர் தானே?''
''யு ஆர் யங்... ஹேண்ட்ஸம்...''
''காம்ப்ளிமெண்ட்ஸுக்கு நன்றி.''
''ஐ திங்க் நாம் இரண்டு பேரும் Made for each other.''
''இருக்கலாம். என்னைக் கேட்டால் Mad for each other என்பேன்.''

நடிப்பு: ஒய். ஜி. மஹேந்திரா. கே. எஸ். ஜெயலட்சுமி



பம்பாய் விமான நிலையக் காதல்!

''எக்ஸ்க்யூஸ் மீ. லண்டன் ஃப்ளைட் பற்றி அறிவிப்பு தந்துட்டாங்களா?''
''நோ, மாடம். இல்லே... நானும் லண்டன் தான் போகிறேன். நீங்க லண்டன் ப்ராபரா?''
''யெஸ்...''
''ஜாயினிங் யுவர் ஹஸ்பெண்ட்?''
''அந்த புருடைப் பத்திப் பேசாதீங்க. ஹி ஹேஸ் டெஸர்ட்டட் மீ...! நான் குவாலிஃபைட் டாக்டர்.''
''உங்களை விட்டுவிட்டுப் போக அவருக்குப் பைத்தியமாப் பிடிச்சிருக்கு..! யு ஆர் ஸோ சார்மிங்... அண்ட் யங்.''
''இருக்கலாம். இருபத்து நாலு மணி நேரமும் மோகல் 'ஆர்கிடெக்சரைப் பத்தியே படித்தால்...? எனக்கு என்று ஒரு மனம்...''


இப்படியும் ஒரு காதல்!

''ஆகா, என்ன அழகான நீளமான காது?''
''உங்க காது மட்டும் என்னவாம். பல் எவ்வளவு அழகாக வரிசையா இருக்கிறது.''
''இருக்கலாம். உன் சாம்பல் நிறமேனி கிளுகிளுப்பு ஏற்படுத்துகிறது. சின்ன.''
''போங்க... மச்சான்... பவுடர், ஸ்னோ இல்லாமலேயே உங்க மூக்கு எவ்வளவு வெளுப்பாக இருக்கிறது.''
''மூக்கு முக்கியமில்லே தொண்டைதான் முக்கியம் கண்ணே! உன் குரல் எவ்வளவு இனிமை! உன் உடல் மேல் உரசி...''
''போதும்... என் கிட்டே வாலாட்டாதீர்கள். ஏதோ ஒரு படத்தில் நடிச்சகட்ட கர்வமா?''
''அதெல்லாம் இல்லே... ஒரே ஒரு கிஸ்.''
''பேசக் கூடாது. அதோ அழுக்கு மூட்டையோட உங்க எஜமானர் வருகிறார்.''
''சரி... நாளைக்குப் பார்க்கலாம்.''

நடிப்பு: சைதாப்பேட்டை வண்ணார் துறையில் இரண்டு கழுதைகள்.

புகைப்படங்கள் : ''சலன்''





உன்னை நீயே வசியம் செய்து கொள்!

மலேஷியாவிலே ஒரு வகையான பழம் இருக்கிறது. அந்தப் பழத்தை நீங்கள் மூக்கிலே வைத்துப் பார்த்தால் ஒரு கணை கூட உங்களாலே சாப்பிட முடியாது. அவ்வளவு கெட்ட நாற்றம் அடிக்கும். ஆனால் அதையே நீங்கள் சாப்பிட்டுப் பழகி விட்டால், அதை விட வேறு ஒன்றையும் சாப்பிடத் தோன்றாது. அவ்வளவு சுவையானது.

முதலில் அது கெட்ட நாற்றமடிக்கிறது என்று சொல்வது எது?

நாக்கு அல்ல; நாசி அல்ல; மனம்.

நாசியினுள்ளே போன கெட்ட சுவாசம் மனத்தினுள்ளே போய், 'இது மோசமானது' என்று சொல்லுகின்றது. அதுவே நாக்கினுள்ளேபோய் வாயினுள்ளே போய் விழுந்ததும், 'ஆகா! இதல்லவா சுவையானது' என்று, அதே மனமே சொல்லுகிறது.

ஒரே மனம், இரண்டு வேலைகளையும் செய்கிறது.

இது தவறு என்று சொன்னால், அது தவறாக ஆகிவிடும்; இது சரி என்று சொன்னால், அது சரியாகவே ஆகி விடுகிறது.

ஆகவே மனத்தைக் கொண்டு, மனம் என்கின்ற லகானைக் கொண்டு, வாழ்க்கையிலே உடம்பையும் செலுத்தலாம், குடும்பத்தையும் செலுத்தலாம், நாட்டையும் செலுத்தலாம் என்பதைக் கண்டுதான் ஞானிகள், மனத்தையே மூலமாகக் கருதி, மனத்துக்கே யோசனைகள் சொல்லத் தொடங்கினார்கள்.

எதையும் அடக்கக் கூடியவன், ஆயிரம் யானைகளை அடக்கக் கூடியவன், ஆயிரம் குதிரைகளை அடக்கக் கூடியவன், பல போர்க்களங்களிலே வெல்லக் கூடியவன் — அவனும் கூட மனத்தையே அடக்கி, அந்த மனத்தின் மூலமாகப் பிறவற்றை அடக்குகின்ற சக்திதான் பெரிய சக்தி என்று கடைசியிலே தன்னுடைய வாழ்நாளை முடித்திருக்கிறான்.

அவன் அலெக்ஸாண்டராயினும், அவன் அசோகனாயினும், அவன் அதற்கு முன்னாலே வாழ்ந்த புத்தனாகினும், யாராக இருந்தாலும் கூட மனத்தின் மூலமாகவே ஒன்று அவன் வீரனாகி இருக்கிறான்; இல்லை ஞானி யாகி இருக்கிறான்.

ஆகவே இந்த மனம், வாழ்க்கையின் மிகப் பெரிய பகுதியாகும்.

ஆன்மாவில் இருந்து இந்த மனம் வேறுபட்டது. உடம்பிலே இருந்து இந்த மனம் வேறுபட்டது.

இந்த மனத்தை எவ்வளவுக் கெவ்வளவு உன் கைக்குள்ளேயே வைத்துக் கொள்கிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு, அது உனக்கு அடங்கி நடக்கிறது.

இந்த மனத்தின் போக்குக்கு எவ்வளவுக் கெவ்வளவு நீ பின்னால் செல்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு அது உன்னை இழுத்துக் கொண்டு போகிறது.

ஆகவே, 'உன்னை நீயே வசியம் செய்து கொள்' என்கின்ற உண்மையை, இந்த மனோ சாஸ்திரத்தில் இருந்து நீங்கள் கற்றுக் கொள்ள முடியும்.

'மனத்தை அடக்குங்கள்; மனத்தை அடக்குங்கள். மனத்தின் வழியே செல்லாதீர்கள். மனத்தை உங்கள் வழியே செலுத்துங்கள்' என்றெல்லாம் நம்முடைய ஞானிகள் சொன்னதை மனத்திலே கொண்டால், அந்த மனத்தை நாம் அடக்கி, நம்முடைய வாழ்க்கையை எளிமையாகவும், தெளிவாகவும், சுலபமாகவும், லாபகரமாகவும் ஆக்கிக் கொள்ள முடியும் என்பதனை இன்று நான் கண்டு கொண்டிருக்கின்றேன்.

நான் ஆரோக்கியமாக இருக்கிறேன். நான் திடமாக இருக்கிறேன்; என்னாலே எழுத முடிகிறது. இன்னும் எழுத வேண்டும் போல் எனக்குத் தோன்றுகிறது. நீண்ட காலம் வாழ முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. வாழ வேண்டும் என்கின்ற ஆசையும் இருக்கின்றது.

எதிர்காலம், அதற்குப் பின்னாலே வருகின்ற பாரம்பரியம் — இவை யாவற்றையும் இந்த மனம் எடை போட்டுப் பார்க்கிறது.

இந்த மனத்தினுடைய சக்தியாலே கால காலங்களை, தீர்க்கதரிசிபோல் நான் தரிசிக்கின்றேன்.

மனம், அது என்னுடனேயே இருக்கிறது. எனக்குக் கட்டுப்படுகிறது. அதனாலே என்னை அது அடக்கியாள முடியவில்லை. நான் அதனை அடக்கி ஆளக் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

சர்வர்: (சாப்பிட வந்தவரிடம்) என்னங்க, பேப்பர் ரோஸ்டை இப்படி உத்துப் பார்க்கறீங்க?

கிராமவாசி: இது தமிழ்ப்பேப்பரா, இல்லே இங்கிலீஷ் பேப்பரான்னு!

ஜயம்பேட்டை இருஞ்சான்.



RAE

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

ஸைமன் கமிஷன் வெள்ளையர்கள் மட்டுமே அடங்கிய குழு. எடுத்த எடுப்பிலேயே இந்தியாவைப் பகைத்துக் கொள்ள வேண்டும் என்று அதன் தலையில் எழுதியிருந்தது! டோரி கட்சியினர் அப்போது இங்கிலாந்தில் பதவியிலிருந்தனர். ஆனால் அடுத்த தேர்தலில் தொழிற் கட்சி பதவிக்கு வரும் என்று தோன்றியது. 'தாங்கள் பதவியில் இருக்கும் போதே இந்தியாவின் தலைவிதியை நிர்ணயித்து விட வேண்டும் என்று டோரி கட்சியினர் நினைக்கின்றனர்; இந்த நோக்கில் தான் ஸைமன் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது' என்பதாக ஒரு சந்தேகம் இந்தியா முழுவதும் பரவி யிருந்தது. எனவே; 'ஸைமனே! திரும்பிப்போ!'' என்பதுதான் அரசியல் இந்தியா அந்தக் குழுவினருக்குக் கொடுத்த பதிலாக இருந்தது. காங்கிரஸ் மட்டுமின்றி லிபரல்களும் ஸைமன் கமிஷனில் ஓர் இந்தியர் கூட இல்லை என்பதைக் காரணம் காட்டி அதனைப் பகிஷ்கரித்தனர்.

வெறிச்சோடிய வீதிகள் அல்லது ஆர்ப்பாட்டங்களைத் தாம் அந்தக் குழுவினர் எங்கு சென்றாலும் சந்திக்க முடிந்தது. ''பகிஷ்கரிப்பு மட்டும் போதாது. இதைத்தொடர்ந்து விடாப்பிடியான செயல் திட்டம் போதிய அளவில் அமைய வேண்டும்'' என்று காந்தி எழுதினார். தேசிய இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியில் குறுக்கிட விரும்பாமல் ஒதுங்கி இருந்து வந்த அவர் எப்போதாவது ஒரு முறை கட்டுரை எழுதுவதுடன் நிறுத்திக் கொண்டார். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பது போல் அமையக் கூடிய ஒரு செயல் திட்டத்துக்குத் தமது செல்வாக்கைப் பிரயோகித்தார். அந்நியத்துணியைப் பகிஷ்கரித்து அதை ஈடு செய்யும் வகையில் கதர் உற்பத்தியை அதிகரிப்பது என்பதுதான் அவரது அந்தச் செயல் திட்டம்.

1927 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் வருடாந்திரக் கூட்டத்துக்கு ஸி. ஆர். வந்திருந்தார். ஆனால் இன்னமும் சுயராஜ்யக் கட்சிக் காரர்களின் வசமிருந்த அந்தக் காங்கிரஸின் நடவடிக்கைகளில் அவர் பங்கேற்கவில்லை. மகாத்மா விஜயம் செய்ததால் இவரும் வந்திருந்தார், அவ்வளவே. காங்கிரஸ் நடந்த இடத்தை யொட்டி அமைந்திருந்த கதர் கண்காட்சியில் மகாத்மா பேசிய போது ஸி. ஆர். மொழிபெயர்த்தார்.

அரசியல் அரங்கிலிருந்து அவர் மேலும் இரு ஆண்டுகள் விலகியே இருந்தார். ஆயினும் 1928 மார்ச் மாதம் சில விநாடிகளுக்கு மட்டும் தோன்றி ஒரு கருத்தை வலியுறுத்தினார்.

சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு தேடி அயல்நாடுகளில் பிரசாரம் செய்ய வேண்டும் என்று காங்கிரஸுக்குள் பலமாகக் குரல் எழுப்பப்பட்டு வந்தது. அண்மையில் தான் ருஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் சுற்றுப் பயணம் செய்து விட்டுத் திரும்பியிருந்த ஜவாஹர்லால் நேரு இக்கருத்தை ஆதரித்தவர்களில் ஒருவர். ஆனால் ஸி. ஆர்., யதார்த்தப் போக்கை வலியுறுத்தினார்.

யங் இந்தியாவில் அவர் எழுதினார்: ''இங்கிலாந்துக்கு எதிரான இந்திய யுத்தம் அஹிம்சா மார்க்கத்தில் நடப்பதென்றால் இந்தியா தன் சுய பலத்தையேதான் முழுக்க முழுக்க நம்பியிருக்க வேண்டும். இந்த யுத்தத்தை ஒரு சர்வதேச விவகாரமாக்கி விட முடியாது. அஹிம்சைப் போராட்டத்துக்கு அயல் நாடுகளிலிருந்து ஆன்மீக ஆதரவு அன்றி வேறு எந்த விதமான உதவியையும் பெறுவது சுலபமல்ல. ஏன், சாத்தியமேயல்ல.

''தேவைப்படுவது உள்நாட்டிலோ அயல் நாட்டிலோ பிரசாரமல்ல, உறுதியான நிர்மாணப் பணியும் ஆன்மீக பலமும்தான்.

''குஜராத்தில் பார்டோலியில் விவசாயிகள் இந்த ஆன்மீக பலத்தை விரைவில் நிரூபித்தனர். முன்பு, 1921 லேயே, இவர்கள் நடத்திய போராட்டம், மகாத்மா திடுதிப்பென்று குறுக்கிட்டு நிறுத்தியிருக்க வில்லையானால், ஓர் உச்ச கட்டத்தை அடைந்திருக்கும். இப்போது அவர்கள் அதிகரிக்கப்பட்ட நிலவரியைக் கட்ட மறுத்தார்கள். தங்கள் நிலத்தையும் கால்நடைகளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்வதைப் பார்த்தும் கூட விட்டுக் கொடுக்காமல் உறுதியாக இருந்தார்கள். ஐந்து மாதங்களுக்குப் பிறகு, ஆகஸ்டில் தரப்பட்ட சலுகைகள், கூடுதல் நிலவரியை ரத்து செய்தது போன்ற நிலையை உருவாக்கியது: பறிமுதலான சொத்துக்கள் திருப்பித் தரப்பட்டன. காந்திய பிரங்கிக்கு முன் அரசு பணிந்து விட்டது.

பார்டோலியின் கதாநாயகர், விவசாயிகளிடையே ஒற்றுமையை வளர்த்து அவர்களை ஒழுங்கு படுத்திய வல்லபாய்தான். ''அற்புதமான வெற்றி'' என்று வர்ணித்த ஸி. ஆர்., ''இந்திய சரித்திரத்தில் வல்லபாயின் பங்கு மகத்தானது'' என்றார். போராட்டத்தில் வல்லபாய் பட்டேலுடன் தோளோடு தோள் நிற்க ஸி. ஆர். சம்மதம் தெரிவித்திருந்தார். ஆனால் படேலும் மகாத்மாவும் இது அந்தப் பிராந்தியத்தின் போராட்டமாக இருக்க வேண்டும் என விரும்பினர்.

இதற்கிடையே மகாத்மா தமது உணவு விஷயத்தில் சில சோதனைகளைச் செய்து கொண்டிருந்தார். ஐரோப்பா வருமாறு கிடைத்த ஓர் அழைப்பு குறித்து யோசித்துக் கொண்டிருந்தார். ஸி. ஆரைத் தம்முடன்



அழைத்துப் போவது பற்றிச் சிந்தித்தார். உணவு விஷயத்தில் பரிசோதனைகளை விரும்பாத ஸி. ஆர். எழுதினார்:

''கடைசியாக வந்த உங்கள் கடிதத்தில் பாதாம் விழுது பற்றியும் தேங்காய்ப்பால் பற்றியும் தாங்கள் எழுதியதைப் படிக்கும்போது எனக்கு ரொம்பக் கோபம் வருகிறது. இவை போன்ற நாக்குச் சிற்றுண்டிகள் ரொட்டிக்கும் பாலுக்கும் ஈடாகி விட முடியாது. தினம் பன்னிரண்டு மணி முதல் மூன்று மணி வரை நீங்கள் மௌனம் அனுஷ்டிப்பது பற்றி எனக்கு மகிழ்ச்சியே. ஆனால் படுக்கையில் படுத்திருந்தால்தான் மௌனம் அனுஷ்டித்ததாகும். இந்த நேரத்தில் ஒரு நிமிஷ அவகாசத்துக்கு அதிகமாக உங்களிடம் யாரும் பேசக் கூடாது. நீங்கள் எழுதவும் கூடாது.''

''என்னைப் பற்றிக் கவலைப்படுவதை நீங்கள் நிறுத்தி விட வேண்டுமென விரும்புகிறேன்'' என்று காந்தி பதிலளித்தார். ''என் ஆரோக்கியம் கெடுகிற மாதிரி நான் எதையும் வேண்டுமென்றே செய்ய மாட்டேன். பிடிவாதத்துடன் எதையும் செய்ய மாட்டேன்.''

மகாத்மா தொடர்ந்து எழுதினார்: ''ஐரோப்பிய விஜயம் குறித்து நான் என்ன முடிவு செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? அதை அச்சமின்றியும் எனக்குப் பிரியமானதைச் சொல்ல வேண்டும் என்கிற நோக்கமின்றியும் கூறுங்கள்.''

பார்டோலியில் இப்போது ஆரம்பமாகியிருக்கும் போராட்டம், அந்நியத் துணி பகிஷ்கரிப்பு ஆகியவை நிலைகுலைந்து போகிற மாதிரியான பாதிப்பைத்தான் மகாத்மாவின் மேல்நாட்டு விஜயம் ஏற்படுத்தும் என்று ஸி. ஆர். பதிலளித்தார்.

ஸி. ஆரின் பேனா முனை கதைகளைத் தொடர்ந்து உருவாக்கிய வண்ணமிருந்தது. அவை மனத்தைத் தொடுவனவாக அமைந்துள்ளதாக மகாத்மா கருதினார். யங் இந்தியாவில் பிரசுரித்தார். பொதுவாக அந்தக் கதைகள் தீண்டாமை குறித்து இருந்தன.

''இந்தக் கதைகள் உயர் ஜாதியினர் என்று தங்களைக் கருதிக் கொள்ளும் சிலரது கல்மனங்களையாவது கரைக்கும் என நம்புகிறேன்'' என காந்தி எழுதினார்.

'யங் இந்தியா' வுக்காக ஔவையார், பாரதியார் ஆகியோரது கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் ஸி. ஆர். நவம்பர் மாதத்தில் பாரதியின் தேசியப் பாடல்கள் அடங்கிய புத்தகத்தின் இரண்டாயிரம் பிரதிகளைச் சென்னை போலீஸ் பறிமுதல் செய்திருந்தது.

இதற்கு ஒரு பதிலடி தருவது போல் ஸி. ஆர்., ஆங்கில மொழிபெயர்ப்புக்களைத் தயாரித்தார். இதிலிருந்து குஜராத்தில் மொழி பெயர்க்கப்பட்ட ஒரு கவிதை நவஜீவனில் வெளியாயிற்று. ''தமிழ்க் கவிஞர் பாரதியின் பெயர் குஜராத்தில் பரிச்சயமாகியுள்ளது'' என்று காந்தி எழுதினார். சென்னை அதிகார வர்க்கத்தினர் பறிமுதல் செய்த புத்தகங்களை இரண்டு மாதங்கள் வரை வைத்துக் கொண்டிருந்து விட்டுத் திருப்பித் தந்து விட்டனர்.

எழுத்தாளர் ஸி. ஆரும் ஆசிரியர் காந்தியும் எப்போதும் ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. வங்கத்தில் உள்ள அபோய் ஆசிரமத் தொண்டர்களின் நற்பணிகளைப் புகழ்ந்து ஸி. ஆர். எழுதியிருந்த கட்டுரை காந்தியால் நிராகரிக்கப்பட்டது. ஆசிரமத் தொண்டர்களுக்கு விளம்பரம் தேவையில்லை என்பது மகாத்மாவின் கருத்து. ஸி. ஆர். ஆட்சேபித்தார். பின்னால் அதே ஆண்டில் அம்மனிதர்களின் தொண்டுகளை வேறு விதமாக யங் இந்தியா போற்றியது.

ஹிந்து முஸ்லீம் பிரச்னை பற்றி ஸி. ஆர். எழுதியிருந்த ஒரு குறிப்பும் மகாத்மாவினால் நிராகரிக்கப்பட்டது. ஸி. ஆரின் கருத்துக்கள் முற்றிலும் நியாயமற்றவை என்று காந்தி கருதினார். ''இப்போதைக்கு இதனைப் பத்திரமாகப் பூட்டி வையுங்கள்'' என்று ஸி. ஆருக்கு அறிவுரை வழங்கினார். ஸி. ஆரின் அந்தக் குறிப்பு இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

ஸி. ஆர். பதில் எழுதினார்: ''இந்த மாதிரியான விஷயத்தில் நீங்கள் தடையுத்தரவு பிறப்பிப்பீர்கள் என்று நான் நிச்சயம் எதிர்பார்த்தேன். எனவேதான் அந்தக் கட்டுரைக்கு 'விலை போகாத சரக்கு' என்று தலைப்புக் கொடுத்தேன். விலை போகாதது மட்டுமல்ல, அது விற்பனைக்கு இருப்பதாகக் காண்பிக்கவே கூடாது என்று இப்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

''அக்கட்டுரையை மறுமுறை படித்த பிறகும் என் கருத்துக்கள் தவறு என்று நீங்கள் எண்ணினால் அதனை விமர்சித்து எழுதுமாறு வேண்டுகிறேன். பல்வேறு அலுவல்களுக்கிடையில் இதற்கு உங்களுக்கு நேரமிருக்குமென்றால் செய்யவும். அரசியல் சாசனம் விஷயத்தில் முன்னேயும் போக விடாமல் பின்னேயும் வர முடியாமல் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கும் நிலைக்குத் தீர்வு காண என் கருத்து ஒன்றே வழி என எண்ணுகிறேன்.''

(தொடரும்)


தமிழாக்கம்: வெ. ராஜேந்திரன்

தாய்: தெரியுமா சேதி நம்ம மாலதி இங்கிலீஷ் வகுப்புக்குத் தமிழ்ப் புத்தகத்தை எடுத்துட்டு போனாளாம்... லெக்சரர் கேட்டதற்கு இங்கிலீஷ் புத்தகத்தோட கலர் தன் புடவை கலருக்கு மேட்சாகலேன்னு சொன்னாளாம்... என்னங்க... நான் சொல்லிக்கிட்டே இருக்கேன்... நீங்க அப்படி என்ன யோசிக்கிறீங்க...

தந்தை: அவ புடவை கட்டிண்டு என்னைக்கு காலேஜ் போனாள்ன்னு யோசிக்கிறேன்...!

— மு. கணேசன்





நாங்களும் சிரிப்போம்!



⌘ தேங்காய் சீனிவாசன் - ஆடூர்பாசி
⌘ சிவராம் - மெஹ்மூத் - அல்லு ராமலிங்கையா

.பல்வேறு மொழிகளில் நடிக்கும் நகைச்சுவை நடிகர்கள் வேறு மொழிப் படத்தில் வரும் தங்களுக்குப் பிடித்த நகைச்சுவைக் காட்சிகளைக் கூறுகிறார்கள்.

தேங்காய் சீனிவாசன் :

டீன் மார்ட்டின், ஜெர்ரி லூயி இருவரும் நடித்த ஒரு படம் பார்த்தேன். ஜெர்ரி லூயி வந்து நின்றாலே சிரிப்பு வரும். ஒரு காட்சியில் அவர் காதலிக்கும் பெண்ணை டீன் மார்ட்டின் தாம் மணந்து கொள்ளப் போவதாகக் கூறுகிறார். இதைக் கேட்கும் பொழுது ஜெர்ரி லூயி அணிந்திருக்கும் கண்ணாடி அப்படியே படீரென்று விரிசல் விடும்! ஜெர்ரி லூயி முக பாவத்தைப் பார்க்க வேண்டுமே!

பாலாஜி எடுக்கும் ''நல்லதொரு குடும்பம்'' என்ற படத்தில் நானும் நாகேஷும் நடித்திருக்கிறோம். இது வரை நாங்கள் நடித்து நீங்கள் சிரித்திருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் நடித்ததைப் பார்த்து நாங்களே சிரிப்பது அபூர்வம். படப்பிடிப்பு முடிந்தவுடன் எங்கள் குரலை மறு ஒலிப்பதிவு செய்ய நாங்கள் டப்பிங் தியேட்டர் சென்றோம். நானும் நாகேஷும் எங்களது செயல்களைத் திரையில் பார்த்ததும் அடக்க முடியாமல் சிரித்துச் சிரித்து மகிழ்ந்தோம். பல தடவை இப்படி சிரித்த பிறகுதான் எங்களால் சரியாகக் குரல் கொடுத்து டப் செய்ய முடிந்தது!

அல்லு ராமலிங்கையா (தெலுங்கு நடிகர்)

நான் அவ்வளவாக வேற்று மொழிப் படங்கள் பார்த்ததில்லை, தமிழில் ஒரு படத்தில் நாகேஷ் போலீஸ் கான்ஸ்டேபிளாக வருகிறார். அவர் மனைவி, ''எல்லோருக்கும் ப்ரமோஷன், உங்களுக்குத்தான் இல்லை'' என்று குத்திக் காட்டுவதால் கோபமடைந்தவர் ஒருநாள் தம் மனைவியின் ஆதங்கத்தைத் தீர்க்க இன்ஸ்பெக்டர் வேடம் பூண்டு வந்து ''அடியே எனக்குப் பிரமோஷன் கிடைத்து விட்டது. நான் இப்போது இன்ஸ்பெக்டர்'' என்று மார் தட்டிக் கொள்கிறார். பிறகுதான் தம் மனைவி தனியே இல்லை, விருந்தினர் வந்திருக்கிறார் என உணர்ந்து திரும்பிப் பார்க்கிறார். வந்து காத்திருப்பவர் இன்ஸ்பெக்டர்!

ஆடூர் பாசி (மலையாள நடிகர்)

இன்று நினைத்தாலும் சிரிப்பு வரும் சிரஞ்சீவிக் காட்சி ''காதலிக்க நேரமில்லை'' படத்தில் வரும் காட்சிதான். நாகேஷ், பாலையாவிடம் கதை சொல்கிறார். என்ன வேகம், என்ன தெளிவு, என்ன பாவங்கள்! டார்த்தவர்கள் நினைத்து நினைத்துச் சிரிக்கலாம். அந்த அளவுக்குச் சிறப்பு வாய்ந்தது. அதே போல் மற்றொருபடம் ''எவரகி வாரே யமுனா திரே.'' என்ற தெலுங்குப் படம். இதில் அல்லு ராமலிங்கையா ஒரு பெரிய பணக்காரரிடம் வேலையாளாக வருகிறார். படம் முழுக்க ரப்பர் மாதிரி இழுத்து இழுத்தே பேசும் பாகம். ஓர் இடத்தில் கூடத் தவறே செய்யவில்லை. இதே படத்தை மலையாளத்தில் நான் இயக்

டினேன். நான் இயக்கிய முதல் படமே இது தான். எங்களால் மலையாளத்தில் அந்தப் பாத்திரத்தை அதே அளவு சிறப்புடன் உரு வாக்க முடியவில்லை. அதனால் விட்டுவிட் டோம்.

சிவராம் (கன்னட நடிகர்)

குடிக்க வேண்டுமென்ற விருப்பம். ஆனால் குடிக்கக்கூடாது என்று தடை. இத்தடையை மீறத் தமக்குத் தாமே ஏதாவது ஒரு கார ணத்தைச் சொல்லிக் கொண்டு குடிக்கிறார். 'இன்று பிரச்னைகளே இல்லாத நாள். அத னால் குடிக்கிறேன்' என்பார். மறுநாள் இன்று பிரச்னைகள் அதிகமாகி விட்டன அத





விசாரணைக் கைதியாக இருந்த வீர சாவர்க் கருக்கு ஆங்கில அரசு விதித்த தண்டனையைத் தெரிவிப்பதற்காக வந்தார் ஆங்கிலேய சிறை அதிகாரி. ''உங்களுக்கு இரண்டு ஆயுள் தண் டனை வழங்கப்பட்டுள்ளது'' என்றார் அவர்.

''மனிதனுக்கு ஒரு ஆயுள்தானே. இரண்டு ஆயுள் தண்டனை விதிப்பது எப்படிப் பொருந் தும்?'' எனக் கேட்டார் சாவர்க்கர்.

''இந்தப் பிறவிக்கு ஒன்றும் உங்களது அடுத்த பிறவிக்காக ஒன்றும் தரப்பட்டுள்ளன'' என்று கிண்டல் செய்தார் ஆங்கில அதிகாரி.

அந்தத் துயரமான அதிர்ச்சி தரும் நேரத்தில் கூட சாவர்க்கர் உடனே பதில் தந்தார் — ''அப்படியா! மிக்க மகிழ்ச்சி! எனக்குத் தண் டனை வழங்கியதன் மூலம் உங்கள் ஆங்கில அரசாங்கம் மறு பிறவி உண்டு என்ற நமது தத்துவத்தை ஒப்புக்கொண்டதே! அதுவே எனக்கு வெற்றிதான்'' என்றார்.

ஆங்கில அதிகாரி வெட்கித் தலை குனிந்தார்.

— ஆனைமுகன்


னால் குடிக்கிறேன்' என்பார். இப்படிக் குடிக் கும் பாகத்தில் வந்தாலும் தம்முடைய நடிப் பால் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறார் அந்தோணி. படம் சட்டைக்காரி.

மெஹ்மூத் (ஹிந்தி நடிகர்)

சென்னை வந்தேன். ஏதாவது ஒரு தமிழ்ப் படம் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற் பட்டது.

அப்பொழுது. ''அனுபவி ராஜா அனுபவி'' எனக்குப் போட்டுக் காண்பிக்கப் பட்டது. நாகேஷ் அந்த வேடத்தில் புகுந்து விளை யாடியிருக்கிறார்: குறிப்பாக ''முத்துக் குளிக்க வாரீகளா,'' என்ற பாட்டு. அதற்கு முன்னும் பின்னும் உள்ள சில காட்சிகள் என்னை மிகக் கவர்ந்தன. இதன் விளைவு அதே படத்தை ஹிந்தியில் நான் தயாரித் தேன்!


பேட்டி: 'சக்திதரன்'





டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.

தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831



ராஜ கர்ஜனை

கோவி. மணிசேகரன்

30. கிருஷ்ணகிரி நாயகி

சிறைக் கோட்டத்தையே திறந்து விடுமாறு இடப்பட்ட இவர் உத்தரவைக் கேட்டு அதன் தலைவன் மருண்டு போனான். யார் யாரை விடுதலை செய்ய வேண்டும் என்பதில்லாது ஒட்டு மொத்தமாக அனைவரையுமே விடுதலை செய்து ராணுவத் திடலுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற அயாஸ்கானின் உத்தரவு, விரைந்து செயல்படத் தொடங்கியது. உள்ளூர்க் குற்றத்துக்காகக் கைதான அந்த நூறு அல்லது இருநூறு பேர்களைத் தேடிப் பட்டியலிலிருந்து நீக்கும் அளவுக்குப் பொறுமையில்லை; நேரமும் இல்லை. அவர்கள் மட்டும் என்ன பாவம் செய்து விட்டார்கள்? அவர்களும் ராணுவத்துடன் வந்து பலியாகட்டுமே என்று எண்ணி விட்டான் போலும் அயாஸ்கான்!

பசவராஜ், ரங்கநாயகியைப் பற்றி ஒரு கணம் யோசிக்க மறந்து விட்டானோ, அல்லது அவர்களையும் ராணுவத் திடலில் சந்தித்துக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தானோ?

சிறைக் கோட்டத்தில் நடந்த இந்தக் களேபரத்தினூடே பேரம்பாக்கத்திலிருந்து

ராஜாக் கானுடன் வந்த அந்தப் பதினெட்டு வீரர்களும் இதுதான் சமயம் என்று அவர்கள் தப்பித்துச் செல்வதற்குப் பதிலாக ஒரு ராஜ விசுவாச சுயரூபத்துடன் பசவராஜையும் ரங்கநாயகியையும் தப்பிக்கச் செய்து அனுப்பி வைப்பதில் தீவிரமாக முனைந்தனர்.

சிறைக் கோட்டத்திலிருந்து திபு, திபு வென்று சிற்றெறும்பு சாரைபோல் கைதிகள் சென்று கொண்டிருக்கையில்...

பேரம்பாக்கத்து வீரர்களில் இருவர் கோட்டை வாயத்திலிருந்து ஒரு குதிரையை அபகரித்து வருவதில் உயிரைப் பணயம் வைத்து ஈடுபட்டனர். ஒருவன் தனது சட்டையையும், குல்லாவையும் அவிழ்த்துக் கொடுத்து, ரங்கநாயகியை அணிந்து கொள்ள அவசரப் படுத்துகிறான்...

அதன் மூலம் வழியில் பெண் என்கிற நினைவு மற்றவருக்கு எழாமல் போகலாம் அல்லவா?

வியர்வையின் முடை நாற்றமுடன் அவிழ்த்துக் கொடுத்த அந்தச் சட்டையையும் குல்லாவையும் பெற்ற ரங்கநாயகி, அவற்றை அணியக் குமட்டினாள். அவளது அந்த உள்ளுணர்வுகளைப் புரிந்து கொண்ட பசவராஜ், ''ரங்கநாயகி! என் சகோதரி! நமக்கு இதை விட்டால் வேறு அரிய சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தோன்றவில்லை. நான் அழிவது குறித்துக் கூடக் கவலைப்படவில்லை. உன்னை அழியாமல் என் நண்பனிடம் சேர்த்து விட வேண்டும். உனது கற்புக்கு நான் பாதுகாவலாக இருப்பேன் என்று அன்று கூறிய சொற்களை நிஜப்படுத்தி நிரூபிக்க வேண்டும்! இங்கிருந்து நாம் தப்பிக்கிறபோது உனக்குப் பிடிக்காத சிலவற்றை நீ ஏற்றுத்தான் தீர வேண்டும். நம் மீது எவ்வளவு விசுவாசமாக இவர்கள் தங்கள் உயிரையும் மறந்து செயல்படுகிறார்கள்! இந்தச் சட்டையும் குல்லாயும் பாரிஜாத மலர்களினும் வாசனை மிக்கதென்றே நான் சொல்வேன்!'' என்றான்.

ஓர் ஓரமாக அவர்கள் பேசிக்கொண்டிருந் ததை யார் கவனிக்கப் போகிறார்கள்? சிறையிலிருந்து விடுதலை கிடைத்



நதே பெரிய யோகமாகக் கருதியவர்கள் விழுந்தடித்து ஓடிக்கொண்டிருந்தனர்.

இதற்குள் ஒருவன் மிகச் சாதுரியமாக ஒரு குதிரையை அவிழ்த்துக் கொண்டு வந்து தொலைவில் நிறுத்திய வண்ணம் சமிக்ஞை செய்தான்.

''அதோ பார் ரங்கநாயகி! குதிரையும், தயாராகி விட்டது. உன்னைக் குதிரையில் அமர்த்திக் கொண்டு செல்ல நான் நாணப் படவில்லை. ஏனென்றால் நான் உனது உடன் பிறவா அண்ணன்! நீ நாணப் படுவாயேயானால், நமது நோக்கம் வீணாவது மட்டுமல்ல, உனது கற்பு சத்தியமாகப் பறி போய் விடும்! யோசிக்க இது நேரமில்லை! புறப்படு ரங்கநாயகி!''

உண்மையிலும் யோசிக்க நேரமில்லை என்பதை உணர்ந்த ரங்கநாயகி, பசவராஜைப் பின்தொடர்ந்தாள்.

சற்றைக்கெல்லாம் ரங்கநாயகியை முன்னால் அமர்த்திக் கொண்ட பசவராஜ், குதிரையைத் தட்டி விட்டான். அது நாலுகால் பாய்ச்சலில் அம்பனையப் பாய்ந்து செல்வதைக் கண்டு, சிலர் பெருத்த கூச்சலிட்டனர். அந்தக் கூச்சலைக் கேட்ட ஹைதர் நகர் வீரர்களில் பதின்மர் தொலைவில் பறந்து கொண்டிருந்த பசவராஜைப் பிடித்து வரத் தமது குதிரைகளில் துள்ளி ஏறித் தொடர்ந்தனர்.

சூரியன் மேற்கு வாயிலில் விழுந்து கொண்டிருந்தான்.

தனது திறமையின் பிடிப்பிலிருந்து சற்றும் மீறி விடாத அளவில், குதிரையை விரட்டோ விரட்டென்று விரட்டி வருகிறான் பசவராஜ். இந்தப் பயங்கரமான வேகத்தின் காரணமாக ரங்கநாயகி பயந்து நடுங்கி மயக்கமுற்றிருந்தாள். அவளது உடல், எதிர்





''இது கலர் படம் தானே...?''
''ஆமாம்.''
''நடுவிலே சாயம் போகாதே! கலர் காரண்டிதானுங்களே?''
காயத்ரி தேவி.

காற்றின் பேய் மோதலின் காரணத்தாலும், பசவராஜின் முழு அங்கங்களும் தன் மீது பட்டு இந்த அவஸ்தா சோதனைகளுக்கு ஆளாகி விட்டோமே என்கிற கூச்சமான நாணத் தக்க உள்ளுணர்வின் காரணத்தாலும் சிலிர்த்திருந்தது. எந்த ஓர் ஆடவனும் தனதுடலை இதுகாறும் தொட்டதில்லை; சகோதர வாஞ்சையுடையவனானாலும், ஏன்? உடன் பிறந்த சகோதரனே யானாலும் தொட அனுமதிக்காதவளாயிற்றே ரங்கநாயகி!

அவளுக்கு இப்படி ஒரு சோதனை முளைத்தது. அவளது உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கச் செய்து ஊசி முனைகளாய்க் குத்தி வேதனைப் படச்செய்தது. என்றாலும் என்ன செய்ய இயலும்? ஆபத்துக்குத் தோஷமில்லை என்று கூறிய உபநிஷத்தின் ஞான வாசகங்களை எண்ணிப் பார்த்தும் அவளால் சமாதானம் செய்துகொள்ள முடியவில்லை. ஓ... தனது சங்கல்பம் இவ்விதமாய் விட்டதே என்பதில் அவள் மனம், குமைந்து கொள்ளுகிறது...

பசவராஜ் பின்னே வருபவர்களைத் திரும்பிப் பார்த்துக் கொள்கிறான்...

அவனைத் துரத்திப் பிடிக்க வந்த வீரர்கள் படுவேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள்...

இந்த வீரர்கள் பசவராஜைப் பொறுத்த மட்டில் கத்தரிக்காய்கள்; ஆனால் கையில் குறைந்த பட்சம் ஒரு குத்துவாள் கூட இல்லையே! எப்படி அவனால் சமாளிக்க முடியும்? என்னதான் வாள்வீச்சில் சமத்காரனாக இருந்தாலும் பத்து வாட்களுக்கிடையே ஒரு நிராயுதபாணியான அவனால் இரு கரங்களால் மட்டும் என்ன செய்துவிட முடியும்?

வேகத்தின் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத பூங்கொடி போன்ற ரங்கநாயகி, இடையிடையே 'வீல் வீல்' என்று பயத்தின் காரணமாக அலறுவது பசவராஜுக்கு வேதனை தரத்தக்கதாகவும் சோதனை தரத்தக்கதாகவும் இருந்தது. அவனால் அதற்கு மேலும் பயணம் செய்ய முடியவில்லை. வேறு வழியின்றிக் குதிரையைப் பாதையை விட்டு விலக்கியோட்டி, குறுக்கே புகுந்து அடர்ந்த ஓரிடத்தில் நிறுத்தினான். அந்தப் பழக்கமில்லாத குதிரை வெறுமனே நிற்கக் கூடாதா? அது பெருத்த கனைப்புடன் முன்னங்கால்களைத் தூக்கி, மீண்டும் தரையில் போட்டு, இப்படியுமப்படியுமாக அசைந்து நிற்கச் சில விநாடிகள் பிடித்தன.

குதிரையிலிருந்து இறங்கிய பசவராஜ், மெல்ல ரங்கநாயகியை ஒரு தெய்வ உணர்வுடன் தொட்டு ஒருபக்கமாக ஒளிந்து கொள்ளச் செய்தான். வருவது வரட்டும் என்கிற மரணத் துணிவு அது. ரங்கநாயகியின் இந்த அலறல் காரணமாக ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விடப்போகிறது என்று அஞ்சுவதற்கே அஞ்சி நடுங்கினான்.

அப்போதுதான் பக்கத்தே இருந்த படிக் கிணற்றில் தண்ணீரை அருந்தி விட்டு மேலே வந்த ஒருத்தி, சுற்றும் முற்றும் கவனிக்கிறாள். சற்றுமுன் குதிரை கனைக்கிற ஒலி கேட்டதே...

தொலைவில் அவளது கண் பார்வையில் பசவராஜ் தெரிந்தான். மாலையின் பொன் வெயிலில் அவனை அவள் இனம் கண்டு கொண்டாள். அவள் வேறு யாருமல்ல. கிருஷ்ணகிரியில் பசவராஜ் ஆணையின் பேரில் பதினெட்டு கசையடிகளைப் பெற்ற அந்தக் குடியானவனின் ஆசைநாயகி!

வேகமாக நடந்து வந்த அவள் பசவராஜை நெருங்கி ''வணக்கம் மகாராஜா!'' என்றாள்.

மகாராஜாவா?

எளிய மக்கள் அக்காலத்தே உயர்ந்த மக்களை அழைக்கும் வழக்கமான முறை இது என்பதனை உணர்ந்து, அவளைக் கூர்ந்து கவனித்தான் பசவராஜ். அவனுக்கு அவள் யார் என்பது புரிந்து விட்டது.

''நீயா நீ எப்படி இங்கே வந்தாய்?''

''என்னை நினைவு இருக்கிறதா மகாராஜா? கசையடிகளைக் கொடுத்து மைசூருக்குக் கொண்டு செல்லும்படி உங்கள் சிப்பாய்க்கு உத்தரவிட்டீர்கள். அந்தச் சண்டாளன் வழியிலேயே என்னை விட்டுவிட்டு உங்களைப் பின் தொடர்ந்து விட்டான். சும்மா விட்டுச் சென்றாலும் பரவாயில்லையே! என்னை அங்கம் அங்கமாக அனுபவித்து ஒரு சக்கையைத் தூக்கி எறிவது போல் எறிந்துவிட்டுப் போய் விட்டான்! நான் நடந்தே ஆங்காங்கே தங்கி, வயிற்றை எப்படியோ நிரப்பிக் கொண்டு, கிருஷ்ணகிரிக்கும் போக முடியாமல், மைசூரையும் எட்டிப் பார்க்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்! அந்தக் கிணற்றுத் தண்ணீர்தான் இன்றைய ஆகாரம்!''

ஓ... எத்தனை கொடுமையான காட்சி இது!

மேற்கொண்டு யோசித்துச் சில கேள்விகளைக் கேட்பதற்குள் தொலைவில் குதிரைகளின் குளம்படிச் சத்தங்கள் பயங்கரமாக நெருங்குகின்றன...

திரும்பிப் பார்க்கிறான் பசவராஜ்...

ரங்கநாயகி ஒரு மருங்கே மயக்கமுற்றுச் சாய்ந்து கிடக்கிறாள்... அவளை அப்போதுதான் பார்க்கிறாள் அந்தக் கிருஷ்ணகிரி நாயகி.

''யார் மகாராஜா இவங்க?''

''திப்பு சுல்தானின் வருங்கால மனைவி! நாங்கள் விரோதிகளிடம் சிக்கிக் கொண்டோம். தப்பித்து ஓடி வந்துவிட்டோம். எங்களைப் பிடிக்கத்தான் அதோ அவர்கள் வந்து

கொண்டிருக்கிறார்கள். என்னிடம் ஒரு கூர்மையற்ற வாளிருந்தால் கூட போதுமானது. அது இல்லாததால் பதுங்கி நடுங்கிச் சாகிறேன்! பெண்ணே ஒரு உதவி செய்வாயா? நான் உனக்குத் தண்டனை யளித்தவன்! அதன் காரணமாக நீ அவதிப்படுகிறாய்! உன்னை நான் உதவி கேட்டதே தவறு!''

பசவராஜ் தன்னையுணர்ந்து தலைகுனிகிறான்...

''பரவாயில்லை, என்ன உதவி தேவை?''

''நாங்கள் இருவரும் ஒன்று பிடிபடுவோம்; இல்லை, செத்துத் தொலைவோம்! நீ இதன் முடிவைத் தொலைவிலிருந்து பார்வையிட்டு, நேரே மைசூர் சென்று உன் மகாராஜா இப்புகல்தாளிடம் விவரத்தை எடுத்துச் சொல்வாயா? ஹைதர் நகர் சிறையிலிருந்து தப்பி வந்ததாகச் சொல்! இப்புவிடம் மட்டுமே சொல்ல வேண்டும்! இது பரம ரகசியமானது! சொல்வாயா?''

''சொல்வதாவது? உங்களுக்குக் கத்திதானே வேண்டும்? கொஞ்சம் பொறுங்கள்!'' என்று கூறிய அந்தக் கிருஷ்ணகிரி நாயகி, ஏதோ வாளை எங்கோ ஒளித்து வைத்திருப்பவளைப் போல் கண்களைப் பரக்க விரித்துத் தேடுகிறாள். தொலைவில் ஒரு நீண்ட மூங்கில் கழி இருப்பதைக் கவனித்து, நிரம்பவும் சந்தோஷப் பட்டுக் கடவுளை வாழ்த்திக் கொண்டு அதனை எடுத்துக் கொண்டு சாலை நோக்கி விரைந்தோடுகிறாள்.

'என்னமோ வாளை எடுத்துக் கொண்டு வந்து தருவாள் என்று எதிர்பார்க்க, இவள் கோலை எடுத்துக் கொண்டு குறுக்கே ஓடுகிறாளே' என்று கவனித்த பசவராஜ், வியப்புக் கலந்த பார்வையுடன் ஒளிந்த வண்ணம் சாலையைக் கவனிக்கிறான்.

சாலையின் ஓரத்தில், கையில் மூங்கில் கழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட அந்தக் கிருஷ்ணகிரி நாயகி, துரத்தி வந்த வீரர்கள் பதின்மர் வேகமாகக் குதிரையில் அருகே நெருங்குகிற போது, கொஞ்சமும் தயங்காது சாலையின் குறுக்கே பாய்ந்தாள். அவ்வாறு பாய்கிறபோது, கழியின் மத்திய பாகத்தைத் தனது கரங்களால் கெட்டியாகப் பற்றிக்கொண்டு தடுத்து நிறுத்துபவளைப் போன்றபாவனையுடன் உறுதியாக இருந்தாள்.

எதிர்ப்பட்ட இரு குதிரைகள் வேகத்தின் காரணமாகத் தடைப்பட்டுத் திமிறி, முன்னங் கால்களைத் தூக்கியதால் வெறிபட்டுப் பின்னங்கால்கள் பிசகிக் கீழே விழுந்து பரிதாபமாகக் கனைக்கின்றன. குதிரைகள் இரண்டும் மட்டுந்தானா விழுந்தன? கிருஷ்ண கிரி நாயகியும் தூக்கி எறியப்பட்டாள். அவளுடன் குதிரை மேலிருந்த சில வீரர்களும் விழுந்து காயமுற்றனர்.

அவர்கள் உறையிலிருந்து எட்டிப் பார்த்த ஒரு வாளைத் துணிந்து உருவிக் கொண்ட அந்தக் கிருஷ்ணகிரி நாயகி, ஒரு வெறி கொண்ட உணர்வுடன் தனது பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி எழுந்து ஓடோடிச் சென்று அதனைத் தூக்கிப் புதர் நோக்கி எறிகிறாள். அடுத்து — அவளுடலில் பரிதாபமாக ஒரு வாள் இரக்கமில்லாது நுழைந்து விடுகிறது. அவள் பரிதாபமான அலறலுடன் தரையில் சாய்கிறபோது...

புதரிலிருந்து வாளேந்திய சிங்கம்போல் வெளிப்பட்டான் பசவராஜ்.

தனக்குதவியவளைத் தரையில் சாய்த்தவனை முதல் பலி கொண்டது அந்த வாள்! ஏனையவர்களிடம் அது குழந்தை போல் விளையாடியது. அரைமணி நேரம் கூட அதிகம் தான். வந்தவர்களில் இருவரே மிஞ்சினர். அவர்கள் ஓட்டம் எடுத்தனர். அவர்களைத் துரத்திச் செல்வது அநாவசியமானது என்று உணர்ந்த பசவராஜ், தன் பொருட்டுத் தியாகம் செய்த அந்தப் பெண்ணின் அருகே வருகிறான்...

கண்களில் நீர்மல்க, அவளைக் கூர்ந்து கவனித்த பசவராஜ், ''பெண்ணே! உனது ஆத்மா சாந்தியடைவதாக!'' என்று கூறிக் கால்களைத் தொட்டு வணங்குகிறான்...

இந்த நாட்டின் தேசிய உரிமைக்காக இன்னும் எத்தனையோ ஆத்மாக்கள் சாந்தியடைய இருக்கின்றன என்கிற உணர்வுடன் ரங்கநாயகியை நாடிச் சென்று நடந்த விஷயத்தை விளக்கினான். ரங்கநாயகியும் எழுந்து வந்து அந்தப் பெண்ணைக் கவனித்துத் தன்னுள் வாழ்த்தி வணங்கிக் கொண்டாள்.

தொலைவில் விழுந்து கிடந்த வீரனின் வாளுறையொன்றைக் கழற்றி எடுத்துக் கொண்டான் பசவராஜ். தன்னிடமிருந்த வாளை அதனுள் செருகிக் கொண்டான். போதாக் குறைக்கு இன்னொரு வீரனுடைய வாளையும் உறையுடன் கழற்றிக்கொண்டான். வழியில் இப்போது அவனுக்கு எந்தவித ஆபத்துமில்லை என்று உணர்கிறான். இரட்டை வாள் இடுப்பில் இடம் பெற்று விட்டனவே! கிருஷ்ணகிரி நாயகிக்கான புதைகுழிக்கடனை அங்கிருந்த பள்ளமொன்றில் தன்னால் முடிந்த வரை ஆற்றிவிட்டுத் தலைவணங்கிய பசவராஜ், ரங்கநாயகியைக் குதிரையில் அமர்த்திக் கொண்டு வேகமாகத் தட்டி விட்டான். அது மைசூரை நோக்கித் தங்கு தடையின்றி விரைந்து பறந்தது.

இருள் வானை நன்றாகவே கவ்விக் கொண்டது.

(தொடரும்)

ராஜன்: ஏண்டா சேகர்! இது என்னடா ஜோக்?

முரளி: ஏண்டா இதுக்கென்ன?

ராஜன்: மறந்து போய் யார் கிட்டே யாவது காட்டிடாதே! சிரிச்சுடுவான்!

-கல்யாணசுந்தரம், வைத்தியநாதன்.



குழந்தைகள் சர்வதேச ஆண்டு

1979ம் வருஷம் சர்வதேச குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நடை முறை ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் குழந்தைகள் நலனை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் திட்டங்கள் இன்னும் வேகமாகத் துரித வழியில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பல புதிய குழந்தை நலத் திட்டங்களும் செயல் படுத்தப்படும்.

குழந்தை அபிவிருத்தி சேவைகள் இணைப்புத் திட்டம் மேலும் இரு வட்டாரங்களில், அடிலாபாத், அனந்தப்பூர் மாவட்டங்களில் அமுல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி சத்துணவு, ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு வசதிகள் அனைத்தும் சேர்ந்த இணைப்புச் சேவைகள் கிட்டும்.

1978 - 79ல் கிழக்கு கோதாவரி, வாரங்கல் கிருஷ்ணா, கர்னூல் மாவட்டங்களில் மேலும் நான்கு வட்டாரங்களில் இந்த இணைப்புச் சேவைகள் திட்டம் விஸ்தரிக்கப்படும். இந்தச் சர்வதேச குழந்தைகள் ஆண்டில் விசாகப்பட்டினம், சித்தூர், மேதாக் மாவட்டங்களிலுள்ள மூன்று வட்டாரங்களில் அவை அமுலுக்கு வருவதற்கு இருக்கிறது.

D.G. I & P.R. 43/78-79

இரு நிலவுகள் பட விமரிசனம்

"லேடி...!
"லேண்டர்டேய்னிங்..."
"பியூட்டி ஃபுல் ..."

இப்படியெல்லாம் கூறிக் கொண்டு தியேட்டரை விட்டு வெளிவரும் வாய்ப்பைத் தந்திருக்கிறது இருநிலவுகள். சிங்கீதம் சீனிவாசராவ்—ராஜாஜியின் திக்கற்ற பார்வதியை நீங்காத நினைவாக நம் உள்ளத்தில் பதித்த அதே சிங்கீதம் தான் இந்தச் சிங்காரப் படத்தை வண்ணத்தில் வடித்துக் கொடுத்திருக்கிறார். இரட்டைப் பிறவிகளைப் பற்றி எத்தனையோ கதைகள் வந்திருக்கின்றன. சிங்கீதம் இந்த இரட்டையைக் கையாண்டிருக்கும் பாணி பாராட்டும்படியாக உள்ளது. நகைச்சுவை கலந்து, சங்கீதத்தையும் குழைத்து இளமைத் துடிப்போடு இந்த நிலவு வீசுகிறது. படத்தின் ஆரம்பமே பாட்டும், ஆட்டமும் தான். அந்த மகிழ்ச்சியைக் கடைசிவரை தொய்வில்லாமல் கொண்டு போயிருக்கிறார் ராவ்.

இரட்டை வேடங்களில் கமல் பிரமாதப் படுத்தி விட்டார். 'அடி ராஜா அடி'..." என்று பொருட் காட்சியில் ஷூட்டிங் ஸ்டாலில் ரங்கனுகக் கூவுவதிலிருந்து 'ஐ யாம் டாக்டர் சேகர் எம். டி' – என்று கௌரவமாகக் குறிப்பிடும் பண்பட்ட நாகரீகப் பாத்திரம் வரை மாறிமாறி இருவேறு குணச் சித்திரங்களையும் வெகு இயல்பாகச் செய்திருக்கிறார். சேகரும், ரங்காவும் மாறிமாறிக் கதையைக் கொண்டு போகும் விதத்தில் சிரித்து மகிழ்வதற்கு நிறையச் சந்தர்ப்பங்களுண்டு. அதை நிறைவோடு செய்து காட்டி விருப்பதற்குக் கமலுக்குப் பாராட்டுமுண்டு. டாக்டர் சேகரைக் காதலித்து ரங்கனை மணக்கும் பாத்திரமாக ஜெயசுதாவும், ரங்கனைக் காதலித்து டாக்டரை மணக்கும் பாத்திரமாக ரோஜா ரமணியும் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.



நாகரீகத் துடுக்கும், நாட்டுப்புறமிடுக்கும் இவ்விருவரிடமும் நன்கு வெளிப்படுகின்றன. படுக்கையிலிருந்தபடியே பண்டரிபாய் பக்குவமாகத் தம் பங்கைச் செய்திருக்கிறார்.

கலரும், காமிராவும் விளையாடி இருக்கின்றன. அதற்காக பாலு மஹேந்திராவுக்கு சபாஷ் போடலாம். பாடல்கள் எல்லாமே இனிமையாக உள்ளன. அதற்காக ராஜன் நகேந்திராவுக்கும் சபாஷ் போடலாம். பாத்திரங்களின் நடிப்பிலே கவனம் போகாதபடிக்கு அதிக வசனங்களைப் போட்டுத் திணித்து அவஸ்தைப் படுத்தாமல் அளவோடு அழகாக வசனம் எழுதியுள்ளார் ஆரூர் தாஸ்.

இரு நிலவுகள்: ஒன்று குளுமை, மற்றது மனநிறைவு.

— கௌசிகன்



மத்திய ஸ்வாமிமலை திருமுருகன் கோவில்
ஆஸ்திகர்களுக்கு வேண்டுகோள்

மத்தியப் பிரதேசத்தின் தலைநகராகிய போபால் நகரில் முருகக் கடவுளுக்கு ஓர் கோவில் கட்ட வேண்டுமென்ற பக்தர்களின் கனவு நனவாகும் நாள் நெருங்குகிறது. இந்த நற்பணி தொடங்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் முடிந்து விட்டன. TAMIL NADU HANDICRAFTS BOARD (பூம்புகார்) ஸ்தாபனம் இக்கோவிலைக் கட்டுகின்றனர். தமிழ்நாட்டின் தொன்று தொட்டு புகழ்பெற்ற ஆகம விதிகளின் படி, வல்லுனர்களான ஸ்தபதிகளால் கட்டப்பட்டு வருகிறது. பொறுப்புள்ள பெரிய பதவி வகிக்கும் பலர் இக்கோவில் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆஸ்திகர்கள் தங்களாலியன்ற நன்கொடைகளை மணியார்டர் அல்லது Bank Draft மூலமாக அனுப்பி முருகனின் அருள்பெற கோரப் படுகிறார்கள்.

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :

Secretary :


SHRI MADHYA SWAMIMALAI TEMPLE COMMITTEE,
H-I-G-R4, Shahpura Road, E6/Arera Colony,
Bhopal - 462014

அனுப்பப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. (மத்திய பிரதேச வருமான வரி கமிஷனர் அவர்களது F. No. P-2/132/73 இலக்கமிட்ட 13-9-1974 தேதியிட்ட அங்கீகார கடிதத்தின்படி.)

காவல்

குறுநாவல்

கௌசிகன்





1

கோயிலிலிருந்து திரும்பும்போது கடை வீதி முனையில் கிருஷ்ணனின் பார்வை குறிப்பிட்ட கடை வாசலைத் துழாவியது. அங்கு கூடி இருந்த சிறு கூட்டத்தின் நடுநாயகனை அவன் இன்னும் வரவில்லை. தாமதிக்கலாமா போய் விடலாமா என்று ஒரு நிமிஷம் நிதானித்தார் கிருஷ்ணன். அந்தக் கூட்டத்தோடு போய்க் கலக்க விருப்பமில்லை அவருக்கு.

பார்வையை மேற்கே திருப்பினார். அதோ.. தோளில் பையும் கையில் கட்டுமாக வந்து கொண்டிருந்தான் தங்கவேலு — தபால்காரர். அவனை எதிர் கொண்டு வரவேற்கத் தான் அத்தனை பேரும் அந்தக் கடை வாசலில் காத்திருந்தார்கள். தனக்காக அத்தனை பேர் ஆவலோடு காத்திருப்பதில் — காக்க வைப்பதில்— தங்க வேலுவுக்கு ஒரு பெருமை. வீடு தேடிப் பன்னிரண்டு மணிக்கு மேல் வரும் தபால்களை முன்னதாக ஒன்பதரைக்கே வழி மறித்துப் பெறுவதில் இவர்களுக்கு ஒரு திருப்தி மகிழ்ச்சி. அலைச்சல் மிச்சம், சுமை குறையும் என்பதில் தங்க வேலுவுக்கு ஒரு ஆறுதல். இப்படி, பரஸ்பரம் ஏற்படும் சௌகரியங்களை அனுபவிக்க இரு சாராருமே ஒத்துழைத்ததில் அதிசயமில்லை.

தனித்து நிற்கும் கிருஷ்ணனைத் தூரத்திலேயே கவனித்து விட்டான் தங்கவேலு. கிட்ட நெருங்கியதும் அவரைப் பார்த்து, ''உங்களுக்கு ஒரு கடிதமிருக்கு சார்!'' என்று, பார்வையாலேயே வினவிய அவருக்குப் பதில் கூறியபடி, தோளிலிருந்த காக்கிப் பையைக் கடைத் திண்ணையில் இறக்கினான். கை அடங்காமல் அணைத்துக் கொண்டு வந்த கடிதக் கட்டைப் பிரித்து, 'டக்'கென்று ஒரு கவரை எடுத்து ஒதுங்கி நிற்கும் கிருஷ்ணனிடம், பலருடைய தலைகளுக்கு மேலாக நீட்டினான். மௌனமாக அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு கம்பீரமாக அவர் நடந்து செல்வதையே பல ஜோடிக் கண்கள் இமைக்காமல் மொய்த்தன.

தபால்காரத் தங்கவேலு அவருக்கு மட்டும் தனிச் சலுகை காட்டுவானேன்? — அப்படி யாரும் நினைக்கவில்லை ; நினைக்கவும் மாட்டார்கள். ஏனென்றால் அங்கு கூடி இருப்போருக்குக் கிருஷ்ணனைப் பற்றித் தெரியும். எல்லோருடைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராக வாழ்கிறவர் அவர்.

ஐம்பதைத் தாண்டி விட்டாலும் இளமை மாறாத தோற்றம். நூற்று எழுபது பவுண்டும், ஆறடி ஓரங்குலமும் கொண்ட — நாற்பதுக்கு மேல் தோன்றுமே ஓர் அழகு நரை, காதோரத்தில் ஆரம்பித்து எள்ளும் அரிசியும் கலந்ததைப் போல அப்படி சுருள் சுருளான முடி. கச்சிதமான உடல். தொப்பை தொள தொளா என்பதெல்லாம் காண முடியாது. அந்தப் பார்வை இருக்கிறதே கருநீலக் கண்கள், அடேயப்பா! அதற்குத்தான் எத்தனை சக்தி? கவிகள் கண் பார்வையைக் கணை என்று வர்ணிப்பார்களே அதை அவர் பார்வையில் காணலாம். அவரை விட வயதில் மூத்த பெண்கள் கூட அவர் வருவதைக் கண்டால் தங்களையறியாமல் எழுந்து உள்ளே போய் விடுவார்கள். அப்படியொரு புருஷ கம்பீரம்.

கிருஷ்ணனிடம் எல்லாருக்குமே ஒரு தனி மதிப்பும் மரியாதையுமுண்டு. அதைப் பிறர் தாங்களாகவே தரும்படியான கட்டுப்பாடான நெறிமுறைகளைக் கொண்ட வாழ்க்கை அவருடையது. காலையில் குளித்து விட்டுத் தும்பைப் பூப்போன்ற ஜரத் துண்டைப் போர்த்தியபடி, பளீரென்று வெண்ணீறு துலங்கக் கோயிலுக்குக் கிளம்பி விடுவார். அப்போது அந்த நடையின் வேகத்தையும் சுறுசுறுப்பையும் கம்பீரத்தையும் கண்டு வியக்காதவர் கிடையாது.

யாருடனும் அதிகம் பேச மாட்டார். பிறர் விஷயங்களில் தலையிடவும் மாட்டார். ஆனால் தன்னை நாடி வருபவர்களை மதிக்கத் தெரிந்த பண்பாளர். மற்றவர்களைப்போலவே தபால் தங்கவேலு அவருக்கு விசேஷ மரியாதை காட்டியதில் வியப்பில்லை.

ஒரே சீரான தனது நடையின் வேகத்தைக் குறைக்காமலேயே — நடந்தபடியே தங்கவேலு தந்த கவரை உடைத்துக் கடிதத்தைப் பிரித்தார். கண்கள் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த வரிகளை மேய்ந்தன.

''அன்புள்ள அப்பாவுக்கு அனேக நமஸ்காரம்...''

அவர் மகன் ரமணிதான் எழுதி இருந்தான். கிருஷ்ணனின் முகத்தில் ஒரு மலர்ச்சி, முறுவல். கடிதம் மேலே அவரிடம் பேசிக் கொண்டு போயிற்று.

''...உங்கள் திருமண வெள்ளி விழாக் கோலாகலத்தில் கலந்து கொள்ள வரமுடியாமைக்கு மன்னிக்கவும். ஏதேதோ அலுவல்கள் என்னை இங்கு கட்டிப் போட்டிருக்கின்றன. நான் வரப்போவதில்லை என்பதை அறிந்து அம்மா எப்படித் தாபப்படுவாள் என்பது எனக்குத் தெரியும். அவளுக்கு என் அன்பைச் சொல்லவும். அம்மாவின் நினைவு தான் எனக்கு எப்போதும். அம்மா கையால் மணக்க மணக்க — ருசிக்க ருசிக்க ரசம்சாதம் சாப்பிட அங்கு எப்போது வரப்போகிறேம் என்று காத்திருக்கிறேன். அம்மாவின் கை மணம் கமழும் உணவு கிடைக்காத ஒரு குறை தவிர மற்றபடி இங்கு எல்லாமே 'ஓகே!' ஜெய் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருப்பாள் என்று நம்புகிறேன். பாமி, சாவி இருவரையும் நன்றாகப் படிக்கச்

சொல்லவும். தபாலுக்கு நேரமாகி விட்டது. இத்துடன் என் கடிதத்தை முடிக்கிறேன். போஸ்டில் சேர்க்க வேண்டும். விரைவில் உங்களையெல்லாம் சந்திக்க வருவேன். அங்கு எல்லாரும் எல்லாமும் நலம்தானே?

அன்பு ரமணி.

கிருஷ்ணனிடமிருந்து லேசாக ஒரு பெருமூச்சு. அமைதியாகக் கடிதத்தை மடித்துக் கவருக்குள் செருகினார். வீடு நெருங்கி விட்டது. ரமணியிடமிருந்து வரும் கடிதங்களெல்லாமே ஒரே மாதிரிதான். அரக்கப் பரக்க, அவதி அவதியாகத் தபாலாபீசுக்கு ஓடி, அங்கு எல்லோருக்கும் பொதுவான பசை — அப்பி, வறவறத்துப் போன டெஸ்க்கில், நின்றபடியே வேகவேகமாக நாலுவரி கிறுக்கிக் கடிதத்தைத் தபால் பெட்டியில் விட்டெறிந்து விட்டு... ஏதோ ஒரு கடமையாக அதைச் செய்து வருகிறான். கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்ட மறுவினாடியே எல்லாவற்றையும் மறந்து விடுவான்.

இந்தக் காலத்து இளைய தலைமுறைகள் பெற்றோருக்கும் உற்றாருக்கும் கடிதம் எழுதுவதை எவ்வளவு சுமையாக, தொல்லையாகக் கருதுகிறார்கள் என்பதை அறியாதவரல்ல கிருஷ்ணன். காலப் போக்கில் பற்று, பாசம், அன்பு, ஆகியவற்றில்கூட எத்தகைய மாறுதல் ஏற்பட்டுவிட்டது, என்று வியந்து கொண்டார். அந்த நினைவு அவர் மகனைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது.


பிழைப்பிற்காகப் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து வெகு தூரத்தில் வாழ்க்கை நடத்தப் போயிருக்கும் தம் ஒரே மகனைக் காண வேண்டும் என்ற தவிப்பை அவர் எவ்வளவு சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது அவருக்கு மட்டுமே, அவரால் மட்டுமே உணர்ந்து கொள்ளக் கூடிய ஒன்று. 'உங்களை யெல்லாம் காண வேண்டுமென்று ஆவலோடு காத்திருக்கிறேன்' — என்று அவர் மகன் ரமணி எழுதுவதற்கும், அவனைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு நிறைந்த இவருடைய பந்த பாசத்துக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு.

தன் அன்பு மகனின் உருவத்தை மானசிகமாகக் கண்முன் உருவகப் படுத்திக் கொண்டார் கிருஷ்ணன். இருபத்தி மூன்று வயது. இளங்காளைப் பருவம். ஆறு அடி இரண்டங்குல உயரம். இருநூற்றுப் பதினாறு பவுண்டு நிறை. அவன் அம்மாவின் மயக்கும் மஞ்சள் கிழங்கு மேனி நிறம். அம்மாவைப் போலவே அவனுக்கும் பரந்த தோள்கள், சிறுத்த இடை, பாலீஷ் செய்த எவர் சில்வர் பாத்திரத்தில் ஒளி பட்டு ஜ்வலித்துத் தெறுமே அப்படியொரு ஜ்வலிப்பு அவன் கண்களில். க்ரேல் என்று சுருள் சுருளான கிராப்புத் தலை. அந்தச் சிரிப்பு — அதுவும் அவனுடைய அம்மாவின் உபயம்தான்! எவ்வளவு உறுதி படைத்த பெண்களின் இதயமானாலும் அதை உடைக்கக் கூடிய வல்லமை அந்தச் சிரிப்பிற்கு உண்டு. மேனி நிறம், அழகு, உடல் வாகு ஆகியவற்றில் அம்மாவையே கொண்டிருந்தாலும் தந்தையின் கம்பீரத்தையும் பெற்றிருந்தான் ரமணி.

கல்லூரிப் படிப்பு முடிந்த உடனே எல்லாப் பட்டதாரி இளைஞர்களைப் போல ரமணி வேலைக்காகக் காத்திருக்கவில்லை. அவன் கல்லூரித் தோழன் ஒருவனின் தந்தை பெரிய தொழிலதிபர். வடக்கே இரண்டு மூன்று பெரிய நகரங்களில் அவருடைய ஆலைகள் செல்வத்தை உற்பத்தி செய்து குவித்துக் கொண்டிருந்தன. தகப்பனாரிடம் கூறித் தன் தோழன் ரமணிக்கு அத்தகைய மில் ஒன்றில் உடனே வேலை வாங்கிக் கொடுத்து விட்டான் அவன். இருபத்திரண்டு வருஷங்கள் விழியை இமை காப்பது போல வளர்த்த ஒரே மகனைப் பிரிந்து வாழ வேண்டிய சூழ்நிலையை உருவாக்கி விட்டது மகனின் உத்தியோகம்.

ரமணிக்கு வேலையளித்த தொழிலதிபர் இந்தப் பக்கத்துக் காரர்தான். ஒரு தடவை அவரைக் கிருஷ்ணன் சந்திக்க நேர்ந்தது. மகனின் நலன் பற்றி விசாரித்தார். முன்னேற்றம் பற்றிக் கேட்டார், அவரிடம்.

''என் மகனின் கல்லூரித் தோழன் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் உங்கள் மகனுக்கு அந்த வேலையை அளித்திருக்கிறேன்.



ஒருவர்: உங்க ஆபீஸ் போன் ஏன் எப்போதுமே Engaged ஆக இருக்கு?
மற்றொருவர்: எங்க ஆபீஸிலே Young agedகள் அதிகம்.. அதனால் தான்... — மு. கணேஷ்

முன் அனுபவம் உள்ளவர்களையே இத்தகைய வேலையில் அமர்த்துவது வழக்கம். ஆனால் உங்கள் மகன் நான் எதிர்பார்த்ததை விடத் திருப்தியாகவே செயல்படுகிறான். கடினமான உழைப்பாளி. புத்திசாலியாகவுமிருக்கிறான். ஆகவே அவனுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறேன். ஒவ்வொரு துறையிலும் முறையான பயிற்சி கொடுத்து இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் அவனை மிக உயர்ந்த பதவியில் கொண்டு போய் உட்கார வைத்து விடுகிறேன்'' என்றார் அவர். தன் மகன் பாராட்டுப் பெறும்போது எந்தத் தந்தைக்குத்தான் பெருமையாக இருக்காது?

இப்படித் தந்தை புளகாங்கிதமடைய, தன் வாழ்வை வகுத்துக் கொள்ளப் பெற்றோரை விட்டு மகன் பிரிந்து போய் ஆறு மாதத்துக்கு மேலாகி விட்டது.

மகனின் நினைவுகளில் மூழ்கியவாறே உணவருந்திக் கொண்டிருந்தார் கிருஷ்ணன். அவர்கள் திருமண வெள்ளி விழாவுக்கு மகன்

வரப் போவதில்லை என்பதை அவன் அம்மாவிடம் எப்படி விளக்குவது?

'உன்னுடைய பிறந்த நாளைப்பற்றி (அவர்கள் திருமண நாளும் அவள் பிறந்த நாளும் ஒரே தேதியில் வருபவை') அவனுக்கு அக்கறையில்லை. அன்று அவன் ஜாலியாக யாராவது ஒரு கேர்ள் பிரண்டுடன் சினிமாப் பார்த்துக் கொண்டிருப்பான். உனக்கு நாற்பத்திரண்டு வயதாகப் போவதைப் பற்றியோ அன்று நீ தயாரிக்கப் போகும் பால் பாயசத்தைப் பற்றியோ அவனுக்கு எவ்வித அக்கறையுமில்லை' என்று கூற முடியுமா?

புதிய ஊரில், சூழ்நிலையில் தான் கண்டு, மகிழ்ந்து, பிரமித்து, வியந்த இளம் பெண்களின் வனப்பைப் பற்றித் தன் தங்கைகளுக்கு எழுதிய கடிதத்தில் ரமணி குறிப்பிட்டிருந்தது கிருஷ்ணனின் நினைவுக்கு வந்தது. தன் மகனின் வரவை அவர் மனைவி எவ்வளவு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அறிவார் அவர்.

''ஹேய், ஜேய்! நம்ம அம்மாக் குட்டி எங்கே?'' என்று உற்சாகமாகக் கூவிக் கொண்டு உள்ளே நுழையும் தன் மகனை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறாள் அவள். ''மம்மி! எப்படி இருக்கு உன்னுடைய சுலோகம், பாராயணம், எல்லாம்? புதிசா என்னென்ன புஜங்கம், மாலா, சுப்ரபாதம், நாமாவளிகளெல்லாம் கத்துண்டிருக்கே?'' என்று கேட்டபடி முகத்துக்கு நேரே வந்து குனிந்து குழைய வரப் போகும் தன் மைந்தனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள் அவள்.

''உன் மீசையும் நீயும்! மொதல்ல அந்த மீசையை எடுத்துத் தொலைடா!'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு, ஆனால் அதே போதில் பெருமையால் பூரித்துப் போகும் தம் மனைவியின் அந்த கிளர்ச்சி நிறைந்த முகத்தைக் கற்பனையில் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார் கிருஷ்ணன்.

தக்காளித் துண்டத்தை ரசச் செம்புக்குள் கரண்டியால் துழாவிக் கொண்டிருக்கும் தம் மனைவியையே பார்க்கிறார் கிருஷ்ணன்.

'உங்க பிள்ளையா, இவன்? நான் உங்க தம்பின்னு நினைத்தேன்!' என்று வியக்க வைத்த...

'கல்யாண வயசிலே உங்களுக்கு இவ்வளவு பெரிய பெண் இருக்காளா? என்னாலே நம்பவே முடியவில்லை. இது உங்க தங்கையாக்கும்னு எண்ணினேன்?'' என்று பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கும் கட்டுக் குலையாத இளமையும் அழகும் கொண்ட தோற்றம் தம் மனைவியுடையது என்பதில் கிருஷ்ணனுக்குப் பெருமையும் கர்வமும் உண்டு. அம்மாவின் அழகைக் குழந்தைகள் கொண்டிருக்கிறார்கள் என்ற பாராட்டைக் கேட்கும் போதெல்லாம், 'அழகிய மனைவியை அடைந்த பாக்கியசாலி நான்' என்று பெருமிதம் அடைவார். அப்படிக்கு அழகி அவர் மனைவி வசந்தா. லக்ஷ்மிகரமான தோற்றம். உருவி விட்டாற் போன்ற உடல். அகன்ற நெற்றியிலும் வகிட்டிலும் எப்போதும் பளிச்சிடும் மஞ்சள் மணம் கமகமக்கும் குங்குமம். எப்போதும் சிரிப்பு. எவரையும் நின்று தயங்கித் திரும்பிப் பார்க்க வைக்கும் வசீகரமான வதனம்.

''என்ன கோவிலிலிருந்து வந்தது முதல் ஒரே யோசனையா இருக்கேளே, என்ன விஷயம்?'' என்று கேட்டாள் வசந்தா கணவனுக்குப் பரிமாறிக் கொண்டே.

''ஒண்ணுமில்லே...''

''ஒண்ணுமில்லாமலா கத்தரிக்காய் ரஸவாங்கியைக் கூட ரசிச்சுச் சாப்பிடாமல் சிந்தனை லோகத்திலே சிக்கிக் கொண்டு...? உங்க பிள்ளை லெட்டர் போட்டிருக்கானா?'' இப்போதெல்லாம் அவரைச் சிந்தனையில் ஆழ்த்துவது மகனுடைய நினைவுதான் என்பதை அறியாதவளா அவள்?

''ம்... போட்டிருக்கான்...''

''வரானாமா...? ''

'இல்லை' என்பதற்கடையாளமாகத் தலையாட்டியவர் மடியிலிருந்த கடிதத்தை எடுத்து



மனைவியிடம் நீட்டியபடியே ''வர முடியாத துக்கு விசேஷமான காரணம் ஏதுமில்லே. வழக்கமான சாக்குப் போக்குதான். உன் பிள்ளையை உனக்குத் தெரியாதா?'' என்றார்.

வசந்தா கடிதத்தை வாங்கி வேகமாகப் படித்து முடித்து மறுபடியும் அதைத் தன் கணவனிடமே கொடுத்தாள்.

''போறது கழிசடை...!'' பாசம் மிக்க இதயம் அடைந்த ஏமாற்றத்தினால் வெளிப் படும் செல்லமான கோபச் சொல்லே தவிர, அது உண்மையான கடுசொல் அல்ல என்பது அவளை அறிந்த அவருக்குத் தெரியும். அவன் வராததைத் தான் சகஜமாக எடுத்துக் கொண்டதை மனைவிக்கு உணர்த்த ''ஏதா வது முக்கியமான வேலை இருக்கும். புதிய பொறுப்புக்களைச் சுமந்தி இருப்பார்கள்'' என்று சொல்லிக் கொண்டே கைகழுவ பாத்ருமுக்குப் போனார்.

''என்ன பெரிய வேலையும் புதிய பொறுப் பும்? எனக்குத் தெரியாதா என்ன?''

''உனக்கு என்ன தெரியும்?'' கைகளைத் துண்டில் துடைத்துக் கொண்டே மின் விசிறி யின் கீழ்வந்து உட்கார்ந்து கொண்டார் கிருஷ்ணன்.


''உங்க பிள்ளையின் பலவீனம் பற்றித் தான்'' வெற்றிலைத் தட்டு டன் வந்துகொண்டே வசந்தா கூறினாள்.

''பலவீனமா... நம்ம ரம ணிக்கா?...''

''ஆமாம். சந்தேகமில்லாமல். எல்லா ஆண்களுமே இந்த வய தில் அந்தப் பலவீனத்துக்கு ஆளாகக் கூடியவர்கள்தானே!'' வாசனைப் பாக்கைக் கணவனின் உள்ளங் கையில் கொட்டிக் கொண்டே, ''இருபத்தி மூணு வயதில் உங்களுக்கும்தான் அந்தப் பலவீனம் இருந் திருக்கும்'' என்றாள்.

பாக்கைக் குதப்பிக் கொண்டே கிருஷ் ணன், ''ஏய்! என்னையே 'தாக்கறயே? அது சரி, உன் பிள்ளை யாரையாவது காதலிக் கிறானா? கம்பியில்லாத் தந்தி மூலமா உனக்குத் தகவல் வந்திருக்கா?'' அவளிடமிருந்து எதையோ தெரிந்து கொள்ளும் தவிப்பிருந் தது அவர் பேச்சில். 'இவனுக்கும் தெரிந் திருக்குமோ அது?' என்று மனைவியின் உள் ளந்தரங்கத்தைச் சோதனையிட்டது பார்வை. கேட்டுக் கொண்டே வெற்றிலைச் சுருளுக்குக் கையை நீட்டினார்.

''இதுக்குப் போய் ஒயர்லெஸ்லே தகவல் வரணுமாக்கும்? பாக்கறவா 'ஆ'ன்னு மதி மயங்கறப்பலே இருக்கான் உங்க பிள்ளை— உங்களைப் போல. அது போறுதா? தன்னோட ஏகப்பட்ட பெண்கள் வேலே செய்கிறார்கள். நம்ம பக்கத்தைப் போலக் கட்டுப் பெட்டிகள் இல்லே. எல்லாருமே ரொம்ப சோஷியலாகப் பழகுவா. என்ன அழகு. எவ்வளவு 'சார்ம்'... அப்படி, இப்படின்னு வேலையிலே சேர்ந்த உடனே நமக்குக் கடித மெழுதல்லியா, மறந்துட் டேனா?'' மகனைப் பற்றிய வதந்திகள் ஏதாவது கணவனின் காதில் விழுந்திருக்குமேயானால், அதை அவர் நம்பிவிடக் கூடாதே என்ற கவலையும், அதனால் உரு





கடைக்காரர்: உங்க அப்பாவுக்கு இசைத் தட்டை ரெண்டு பக்கமும் போட்டுக் கேட்கணுமாம்... ஒரு பக்கம் மாத்திரம் கேட்டா போதாதா?
வாலிபன்: அதெப்படி! அவர் நீதிபதி ஆச்சே, இரண்டு பக்கமும் கேட்டு விட்டுத் தானே ஒரு தீர்மானத்துக்கு வருவார்! சக்தி எச். ஜப்பார்.

வாக்கிக் கொண்ட போலியான ஒரு இடசித்தமும் காணப்பட்டன வசந்தாவின் அந்தப் பேச்சில்.

''அதனாலே...?''

''இதென்ன கேள்வி மேலே கேள்வியாகக் கேட்டுண்டு? உங்களுக்கு ஆபீசு போக நாழியாகல்லியா? வயசுப் பிள்ளைகள், அதுவும் கொஞ்சம் உங்களைப் போல அழகா இருந்துட்டாலே ஆபத்துத்தான்'' என்றாள் குறும்புச் சிரிப்புடன் வசந்தா.

''இந்த மாதிரிப் பெண்கள் சிரித்தால்தான் ஆபத்து!'' அதற்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்து விட்டுக் கிருஷ்ணன் ஆபீசுக்குக் கிளம்பினாலும் அவர் நினைவில் மனைவி வசந்தா உருவாக்கி விட்ட காட்சி — யாரோ ஓர் அழகிய பெண்ணுடன் ரமணி கைகோத்துக் கொண்டு — திரைப்படங்களில் காட்டுவது போல உல்லாசமாக ஓடிக் கொண்டு...



2

அன்று ஞாயிற்றுக் கிழமை — விடுமுறையாதலால் கிருஷ்ணனுக்கு அன்று பல அலுவல்களிருக்கும். அதில் கிளப்புக்குப் போவதும் ஒன்று. சீட்டுக் கச்சேரி அரட்டைக் கச்சேரிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பச் சற்று நேரமாகிவிடும். அன்றுதான் அவர் கொஞ்சம் 'ரிலாக்'ஸாக இருப்பார். பகல் காப்பி சாப்பிட்ட பிறகு வெளியே கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்த போது அவர் மனைவி, ''இன்று இரவு வக்கீலாத்திலே ஒரு விருந்துச் சாப்பாடு, நினைவிருக்கில்லியா?'' என்று கேட்டாள்.

''அதான் நினைவு படுத்தி விட்டாயே?''

''எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவேன்?''

''டின்னர் எட்டு மணிக்கு. நாம் இங்கிருந்து ஏழு முக்காலுக்குக் கிளம்பினால் போறுது?''

''போதும். ஆனால் நீங்கள் வரணுமே. கிளப்பிலே சினேகிதர்களோட பேச ஆரம்பித்து விட்டால் இந்த உலகமே மறந்து போயிடுமே உங்களுக்கு...''

''இப்போ மணி மூணு. இன்னும் ஐந்து மணி நேரமிருக்கு. அஸ்வமேத யாகமே பண்ணலாம். நான் வரும்போது நீ ரெடியா இருந்தாப் போதும்.''

கிளம்பி விட்டார் கிருஷ்ணன்.

அன்று அவர்கள் பொழுது போக்கு வட்டத்தில் அவருக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. பண்ணையார் வீட்டுக் காரியதரிசி, கைலாசம் வடக்கே டெல்லி, பம்பாய், லக்னோ என்று பல இடங்களுக்குப் போயிருந்தவன் ஊர் திரும்பி இருந்தான். அன்று கிளப்புக்கும் வந்திருந்தான். கைலாசத்தின் வரவைக் கிருஷ்ணன் எதிர்பார்த்திருந்தாலும் அன்று சந்திப்போம் என்று நினைக்கவில்லை. அவர் மகன் ரமணி வேலை பார்க்கும் சண்டிகாருக்கும் போகப் போவதாகக் கூறி இருந்தான் கைலாசம். சண்டிகார் போகும் போது தம் மகனை அவசியம் பார்த்துவிட்டு வரும்படி அவனிடம் கேட்டுக் கொண்டிருந்தார் கிருஷ்ணன்.

கைலாசத்தை அன்று கிளப்பில் கண்டதும் மகனையே சந்தித்து விட்டது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது கிருஷ்ணனுக்கு. மகனைப் பற்றிய தகவல்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆவலில் கைலாசத்தின் தோளில் கை போட்டு உரிமையோடு அவனை ஒதுக்கிக் கொண்டு போனார் ஒரு மரத்தடிக்கு.

''இன்று நம்ம ஆட்டத்திலே சுவாரசியமிருக்காது. கிருஷ்ணன் ஒரு கை குறைஞ்சது மட்டுமில்லே, அவர் கைலாசத்தையும் இழுத்துக் கொண்டு போய்ட்டார்'' என்றார் ஒரு கிளப் மெம்பர். அவருக்குச் சீட்டாட்டம் களை கட்டாததில் வருத்தம்.

''மகனைப் பற்றித் தெரிஞ்சுக்கணும்னு தகப்பனாருக்கு ஆர்வமிருக்காதா? இயற்கை தானே?''

''அதுவும் ஐ விட்னஸ் ரிப்போர்ட்டாச்சே!'' என்றார் ஒரு குறும்புக் காரர் கண் சிமிட்டியபடி.

கிருஷ்ணனின் மகன் ரமணியைப் பற்றிய முரண்பாடான சில தகவல்கள் சில நாட்களாகக் கசமுசத்துக் கொண்டிருப்பதே அவருடைய கண் சிமிட்டலுக்கும் அழுத்தல் சிரிப்புக்கும் காரணம், என்பதை ஊகித்துக் கொண்ட மற்றவர்களும் ஒருவிதமாகத் தலையசைத்தபடியே தூரத்தில் தனித்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்த கிருஷ்ணனையும் கைலா

சத்தையும் ஒரு விநாடி பார்த்து விட்டுச் சிட்டாட்டத்தில் ஈடுபடலானார்கள்.

கிருஷ்ணனுக்கும் அந்த வதந்திகள் ஓரளவு காற்று வாக்கில் காதில் விழாமலில்லை. அதனால்தான் கைலாசத்தின் வரவை அத்தனை தவிப்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்றார்.

பொதுவாகக் கைலாசத்தின் பிரயாண அனுபவங்களை விசாரித்த பிறகு தம் மகன் விஷயத்திற்கு வந்தார் கிருஷ்ணன்.

''என் பையனைப் பார்த்தியா? எப்படி இருக்கான்?''

''பார்த்தேன். சண்டிகாரில் நாலு நாள் தங்கி இருந்தேனே. உம்ம பையனை நான் பார்க்காம இருக்க முடியாது. சௌக்கியமா, ஜோக்கா இருக்கான்'' — கைலாசத்தின் பதில் கிருஷ்ணனுக்குச் சகஜமாகப் படவில்லை.

''கைலாசம், சின்சியராச் சொல்லு. நீ அவனைச் சந்திச்சயா? அவன் ரூமுக்குப் போயிருந்தியா? அவனோட பேசினயா? என்ன சொன்னான்?''

''உன் ரமணியைப் பத்தி அங்கே எல்லோருக்குமே தெரியும். அவ்வளவு பாப்புலர். நீ கவலைப் படும்படியா ஒண்ணுமில்லே. அவன் ஃபாக்டரிக்குப் போயிருந்தேன். உம்ம பயலைப் பத்தி அங்கே எல்லோரும் ரொம்ப ஒசத்தியாப் பேசினு. வேலையிலே புலியா இருக்கானும். டிபார்ட் மெண்டிலே நல்ல பேராம். எல்லாருக்குமே உம்ம பையன் பேரிலே ஒரு கண் இருக்கு. ரொம்பச் சீக்கிரமா முன்னுக்கு வந்துடுவான். உமக்கு வேண்டியது அது தானே?''

நெஞ்சின் நுனியில் நின்று கொண்டு தவிக்கும் அந்த விஷயத்தை அவனிடம் 'ப்ளண்ட்'டாக எப்படிக் கேட்பது? அவன் பேச்சு இருபொருள் தருவதாகத் தோன்றியது கிருஷ்ணனுக்கு. தம் மகனைப் பற்றிய சஞ்சலத்தினால் தனக்கு அப்படித் தோன்றலாம் என்று அலட்சியமாக ஒதுக்க முடியாமல் தவித்தார். ''தமாஷ் எல்லாம் இருக்கட்டும், கைலாசம். பாப்புலரா இருக்கானு? என் ரமணி என்ன சினிமா ஸ்டாரா? நீ எதையோ மனசிலே வச்சிண்டு பேசறே!''

''பிரபல மாறத்துக்கு சினிமா நட்சத்திரமா இருந்தாத்தான் முடியுமா என்ன? அப்படிப் பார்த்தாலும் உம்ம பையன் சினிமா 'லைன்லே' புகுந்தானுனல், நல்ல சான்ஸ் இருக்கு. சண்டிகர்லே உள்ள 'மன் ஏஜ் — அதாம்பா, இளவட்டங்கள் அத்தனை பேருடைய உள்ளத்தையும் உம்ம பையன் உறுத்திண்டிருக்கான். பர்ஸனலிட்டிக்கு உம்மைக் கொண்டிருக்கான்!'' கண்களைச் சிமிட்டிக் கிருஷ்ணனின் தோள்களை அழுத்தினன் கைலாசம். அந்த அழுத்தத்துக்கு ஏதோ உள் அர்த்தமிருப்பதாகப் பட்டது கிருஷ்ணனுக்கு.

''அவனைப் பத்தி நீ என்னிடம் சொல்ல வேண்டியது இவ்வளவுதானு கைலாசம்?'' என்று கேட்ட கிருஷ்ணனுடைய குரலின் பரிதாபம் கைலாசத்தை நெகிழ வைத்து விட்டது.

''மிஸ்டர் கிருஷ்ணன், நீர் பத்தாம் பசலியோ, பழங்காலத்துக் கட்டுப் பெட்டியோ இல்லே. இந்தக் காலத்தைப் புரிஞ்சுண்டவர். இதெல்லாம் இந்த வயசிலே ஏற்படறது சகஜம். அதுவும் இன்றுள்ள நாகரிகச் சூழ்நிலே... உமக்குத்தான் தெரிஞ்சிருக்கே. உம்ம பையன் ரமணி ஒரு பெண்ணோட நெருங்கிப் பழகறது உண்மை. நீர் தெரிஞ்சுக்க விரும்பினது இதைத்தானே?''

கிருஷ்ணன் ஒரு விநாடி மௌனமாக இருந்தார். கீழே கிடந்த ஒரு காய்ந்த குச்சியை எடுத்த அவரது கைகள் அதை ஒடித்தன. அடுத்தடுத்துத் துண்டாடின அந்தக் குச்சியை அவர் விரல்கள். ''பெண் என்றால் எப்படிப்பட்டவள், யார்?''

''ஓர் ஆங்லோ இந்தியப் பெண். அற்புதமான அழகி. நைட் கிளப் டான்ஸர். ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலே பாடறு... ஆடறு...''

''ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்... நைட் கிளப் டான்ஸர்...''

''இதெல்லாம் அந்தப் பக்கத்திலே ரொம்ப சகஜம். உயர் குடும்பத்துப் பெண்கள், பெரிய பணக்கார ஃபேமிலி கேர்ள்ஸ்களெல்லாம் மாடல், ஆர்ட், ஹோஸ்டஸ் சர்வீஸ் அது இதுன்னு சகஜமா எல்லாரோடேயும் பழகரு. எங்கேயும் போரு. இப்படி வேலை செய்து கொண்டே படிக்கவும் செய்யரு. ஆனால், இவளைப் பற்றி எனக்கு விவரம் ஏதும் தெரியாது. இந்தப் பெண்ணுக்கு வயசு முப்பது முப்பத்தி ஒண்ணு இருக்கலாம். எலுமிச்சம்பழ நிறம். அந்தப் பக்கத்திலே எல்லாப் பெண்களுமே நல்ல நிறம். அழகு, கவர்ச்சி,... குரல் என்னமா இருக்குங்கறே? ரொம்பப் பிரமாதமாப் பாடரு. எல்லாம் 'பாப்' மியூசிக்தான். அவள் பாடறதைக் கேட்டா நம்மையுமறியாமலே நம் உடம்பு அதுக்குத் தகுந்த மாதிரி ஆட ஆரம்பிக்கறது.''


''பாப் மியூசிக்கோட குணமே அது தான்...'' என்ற கிருஷ்ணனுக்குத் தம் மகன் ரமணி டிரான்ஸிஸ்டரில் எப்போதும் வெஸ்டர்ன் மியூசிக்கை, ஸ்டேஷன் மாற்றி ஸ்டேஷன் உரக்க வைத்துக் கொண்டு இரவு வெகு நேரம் வரை விழித்துக் கொண்டிருப்பது

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''யார் ஸார் சைக்கிள்லே ரொம்ப ஸ்டைலாப் போறார்?''

''அவர்தான் எங்க ஆபீஸிலே 'சைக்கோஸ்டைல்' செய்யறவர்!''

—சதாசிவன்.



நினைவுக்கு வந்தது. மற்றவர் தூக்கத்துக்குக் குந்தகம் ஏற்படக் கூடாதென்று மொட்டை மாடிக்குப் போய் விடுவான். இருட்டில் உட்கார்ந்து கொண்டு ரேடியோ இசையுடன் சேர்ந்து இவனும் பாடுவான். இவனுக்கும் நல்ல குரல். ஆங்கிலப் பாடல்கள் அத்தனையும் அத்துப்படி. அவன் அம்மா ரேடியோவில் கர்னாடக சங்கீதத்தைத் திருப்புவாள். இவன் ஐரோப்பிய இசைக்கு மாற்றுவான். இருவருக்கும் நடக்கும் அந்தப் போராட்டத்தை எத்தனை இரவுகள் ரசித்து மகிழ்ந்திருக்கிறார். பாப் மியூசிக்கில் அவனுக்கு ஏற்பட்ட அந்த ஈடுபாடு இப்படி இதில் போய் முடியும் என்று அவர் கனவு கூடக் காணவில்லை. கிருஷ்ணனின் சிந்தனையைக் கலைத்தது கைலாசத்தின் குரல்.

''நம்ம ஊளப் மசால் வடையும் டிகிரி காப்பியும் சாப்பிட்டு எத்தனை மாசமாச்சு?... வா போகலாம் காண்டீனுக்கு...'' என்று எழுந்திருந்த கைலாசத்தின் கைகளைப் பற்றி உட்கார வைத்தார் கிருஷ்ணன். ''இங்கேயே கொண்டு வரச் சொன்னாப் போச்சு'' என்று சப்ளை பையனைக் கைதட்டி அழைத்து ஆர்டர் செய்தார். பிறகு கேட்டார் — ''நீ அவளைப் பாத்தியா? எப்படி இருக்கா?''

''பார்க்காமலா? அதுக்காகவே ஒருநாள் அந்த ஓட்டலுக்குப் போனேன். சண்டிகரை நீ பார்த்ததில்லையே? ரொம்ப மாடர்ன் சிடி. வெஸ்டர்ன் கண்ட்ரிலே இருக்காப்ல தான் இருக்கு. இரவு முழுவதும் கேளிக்கை வழங்கும் பல ஹோட்டல்கள் இருக்கு அங்கே. இந்தப் பெண்ணோட புரோகிராம் இரவு ஒன்பது மணிக்கு மேலேதான் ஆரம்பம். முதலில் பியானோ வாசிக்கிறாள். பிறகு மைக்கைக் கையில் பிடித்துக் கொண்டு அலை அலையாக வரும் வாத்ய இசைக்கு ஏற்பப் பாடுகிறாள். பாடிக் கொண்டே சாப்பிடுபவர்களிடையே, அவர்கள் உடலில் உரசுகிறாற் போலச் சுற்றி வருகிறாள். ஹாலில் மங்கலான ஒளி. அவளுக்கு மட்டும் பளீர் ஒளி — ஸ்பாட் லைட்... உல்லாசமாக ஆடுகிறாள் — இரவு பன்னிரண்டு ஒன்று வரை — ஒவ்வொரு நாளும் உமது பையனும் வருகிறான். தன் புரோகிராமை முடித்துக் கொண்டதும் அவள் அவனுடன் கிளம்பி விடுகிறாள். ஆனால் ஒரு நாளாவது உம்ம பையன் தன் அலுவலகத்துக்கு லேட்டாகப் போனது கிடையாதாம். வேலையிலும் தளர்ச்சி ஏற்பட்ட தில்லையாம். பாக்டரியிலே வேலையைப் பொறுத்த மட்டில் அவனுக்கு நல்ல பெயர். இந்தப்பெண்ணோட பழக்கம் அவனை எப்படி எந்த விதத்தில் பாதிக்குமோ எனக்குத் தெரியாது.''

ஆவி பறக்கும் காப்பியை உறிஞ்சியபடியே கேட்டார் கிருஷ்ணன். ''அந்தப் பொண்ணு — டான்ஸர் எப்படி இருக்கா?''

''அதான் சொன்னேனே, நல்ல சிவப்பு. பெரிய கண்கள். கனவிலேறு வடல் கொண்டு அமுது. பின் சமாதானமாகிப் போகும்போது பெண்களின் விழிகளிலே ஒருவித ஜ்வலிப்புத் தோன்றுமே — அப்படியொரு கவர்ச்சி. பளபளப்பு அந்தக் கண்களில். பந்தயக்குதிரை போன்று மதமதப்புடன் மினுமினுக்கும் உடல். பார்ப்பவர்களின் இதயம் கிறுகிறுக்கும்படி ஆடுகிறாள். கண்டி இழுக்கும்படி பாடுகிறாள்.''

''ம்... அவள் பெயர் என்ன?''

''சொந்தப் பெயர் என்னமோ தெரியாது. 'ட்ரீம் கேர்ள் டோரதி' என்று விளம்பரப் படுத்துகிறார்கள். நிஜமாகவே அவள் ஒரு கனவுக் கன்னிதான்.''

''கனவாகவே இருந்து விட்டால் தேவலாம். நிஜமான்னு இருக்கும் போலிருக்கு..?'' தனக்குள் மெதுவாகச் சொல்லிக்கொண்டார் கிருஷ்ணன்.

''உன்னையும் என்னையும் போல — நாற்பது நாற்பத்தைந்துகளோட — பார்வையெல்லாம் அவள் பாடும் போதும் ஆடும்போதும் அவளையே மொய்த்துக் கொண்டு விழுங்கியபடி இருக்கும். கிறங்கிப்போன ஐம்பதைத் தாண்டிய அரைக் கிழங்கள், பத்தும், இருபதும், ஐம்பதுமா நோட்டுக்களைச் சுருட்டி அவள் உடல் உறுப்புக்களில் படும்படி குறிபார்த்து வீசி அடிக்கிறார்கள். இவர்களிடையே பாடியபடி வளைய வரும்போதும் சிலர் அவள் கைகளை, உடலை, உடையைத் தொட்டு சேஷ்டைகள் செய்கிறார்கள். ஆனால் அவள் இவர்கள் யாரையும் எதையும் லட்சியமே செய்வதில்லை.

''இப்படி எல்லோரையும் பைத்தியமாக்கிப் போதை ஏற்றியதும் உம்ம பையன் வந்து அவளை அழைத்துக் கொண்டு போய் விடுகிறான். அந்த அழகியின் இடையில் கை வளைத்து அழைத்துச் செல்லும் இளைஞனை — உம்ம பையனை — அத்தனை அரைக் கிழங்களும் 'ஙே' என்று பார்த்தபடி உட்கார்ந்திருக்கின்றனர். யாரும் உமது பையனைத் தடுக்கவோ விவகாரம் பேசவோ செய்வதில்லை.''

கிருஷ்ணனும் இப்போது அதே நிலையில் தான் சிலையாக அமர்ந்திருந்தார். அந்த மௌனத்தை, அவர் உள்ளத்தில் ஓடும் எண்ணச் சூழல்களைப் புரிந்து கொண்டவனைப் போலக் கைலாசம், தன்னை யாரோ கூப்பிடுவதாகப் பாவனை செய்து கொண்டு, ''இதோ வந்துட்டேன்'' என்று கூறியபடி எழுந்தான்.

முதல் நபர்: இந்த வருடம் கோடைக்குப் பேசாமல் லீவு போட்டு, ஊட்டிக்கே போகலாம்னு நினைச்சேன்...

அடுத்தவர்: பிறகு?

முதல்நபர்: ரொம்பவும் செலவாகும்னு தோணுச்சு: ஊட்டியிலேயே இருக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்.

செண்பக ராஜன்.





3

கிருஷ்ணன் வீட்டுக்குத் திரும்பிய போது இரவு மணி பத்து.

வக்கீல் வீட்டு டின்னருக்குக் கிளம்புவதற்காகக் கட்டிக் கொண்டிருந்த பட்டுப் புடவையுடனேயே கணவனை வரவேற்றாள் வசந்தா. அவள் தலையில் மாலையில் சூட்டிக் கொண்ட போது அரும்பாக இருந்த மதுரை மல்லி மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தது — அவள் முகத்து முறுவலைப் போலவே. விருந்து வீணானதைப் பற்றிய கோபமோ தாபமோ இல்லை. சொன்னால் சொன்ன நேரப்படி வரும் தன் கணவன் வராத கவலையினால் சூம்பி இருந்த வதனத்தில் அவரைக் கண்டதும் களிப்புத்தான் படர்ந்தது.

''உடம்புக்கு என்ன... தலைவலியா?''

''உடம்புக்கு. ஒண்ணுமில்லே. தலைவலியுமில்லே..''

கணவனது கைகளைப் பற்றினாள் வசந்தா— உடல் சுடுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள. அப்படியே அந்தக் கையைத் தூக்கி அதில் 'டிக்கிட்டுக்' கொண்டிருந்த ரிஸ்ட் வாட்ச்சில் நேரத்தைச் சுட்டிக் காட்டினாள்.

''மணி பத்துபத்து என்று எனக்குத் தெரியும், வசி. உன் டின்னர் சாப்பாட்டைக் கெடுத்து விட்டதையும் உணர்ந்து கொண்டவன்தான்'' என்றார் கிருஷ்ணன் சட்டையைக் கழற்றிக் கொண்டே.

''விருந்துச் சாப்பாட்டையே பார்க்காதவளா என்ன நான்?''

''தெரியுமே.... 'பொக்பேன்னு எப்படி என்றே பார்த்ததில்லே. என்னை ஒரு தடவையாவது ஒரு பொக்பே விருந்துக்குக் கூட்டிக் கொண்டுபோகக் கூடாதா?'ன்னு நீ கெஞ்சினதை நான் மறந்து விடவில்லே வசி...''

''ஆங்...! எத்தனையோ வருஷத்துக்கு முந்தின சங்கதின்னு அதெல்லாம்...''

''உண்மைதான். ஆனால் காலம் நகராமல் அப்படியே நின்றிருக்கக் கூடாதான்னு ஏங்கறேன் நான் இப்போ''

''ஏனிப்படி ஒரே அலுப்பு? உங்க புள்ளையைப் பற்றி ஏதாவது தகவலா? பண்ணையார் காரியஸ்தன் கைலாசம் வடக்கேயிருந்து திரும்பி விட்டானமே. அவனைப் பார்த்தேளா?''

''பார்த்தேன்...'' சில விநாடிகள் மௌனம் சாதித்தவர், இனி கட்டின மனைவியுடன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லே என்ற முடிவுக்கு வந்தவரைப் போலச் சொன்னார். ''நம்ம பிள்ளை அங்கே என்ன செய்து கொண்டிருக்கான் என்பதையும் தெரிந்து கொண்டேன்.''

''என்ன பண்றானாம்...?'' ஏதுமே தெரியாதவளைப் போலக் கேட்டாள் வசந்தா. மகன் ரமணியைப் பற்றி அரசல் புரசலாக அவள் காதிலும் விழுந்திருந்தன. அவர் காதில் விழக் கூடாதே என்று கவலைப் பட்டவள்; தெரிந்தால் அவர் மனம் வேதனைப் படுமே என்று அவளாக அதை அவரிடம் விஸ்தரிக்கவில்லை. அவள் மருகிப் போவாளே என்று இவர் அதைப்பற்றி அவளிடம் விவாதிக்காதிருந்தார். இப்போது இருவருமே சேர்ந்து விவாதிக்க வேண்டிய நிலைக்கு விஷயம் விசுவரூபம் எடுத்து விட்டது.

''ஹோட்டலில் ஆடிப் பாடிப் பிழைக்கும் ஒரு பெண்ணோடே சகவாசம், போறுதா?''

''சகவாசம்னா... எது வரைக்கும் போயிருக்காம்?'' அமைதியாகக் கேட்டாள் வசந்தா —மிகவும் சிரமத்துடன் தன் உணர்ச்சிகளை அழுத்திக் கொண்டவளாக.

''எனக்கு எப்படித் தெரியும்...?'' அறையில் குறுக்கிலும் நெடுக்கிலும் நடந்தார். உட்கார்ந்தார். மறுபடி எழுந்தார். நிதானமிழந்த நிலையை அவரது பரபரத்த செயல் காட்டிற்று. ''கைலாசம் வர்ணித்ததிலிருந்து அவள் ஒரு மயக்கு மோகினின்னு தெரியறது. தன்னுடைய கவர்ச்சிப் பிடியிலே நம்ம பிள்ளையைக் கட்டிப் போட்டிருக்கா. அவனுடைய எதிர் காலத்தைப் பாழாக்கிடப் போறா...''


''எப்படி?...''

''எப்படியா...? வசி, நீயா இந்தக் கேள்வியைக் கொஞ்சமும் பதற்றமில்லாமல் கேக்கறே? உன்னைத்தனே திடமனசு எனக்கில்லே. அதுவும் இந்த விஷயத்திலே. ஏன்னா, இந்த மாதிரிப் பெண்களைப் பத்தி எனக்குத் தெரியும். திறமை மிக்க நல்ல எதிர் காலமுள்ள இளைஞர்களைக் கவர்ந்து, தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ளுவதிலே குறியாக இருப்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

'புதிதாகச் சமையல் கற்றுக் கொள்ளும் என் பெண் சப்பாத்திகள் செய்து என் கணவருக்குக் கொடுத்த போது ''அப்பா சப்பாத்தி வட்டமாக வரவில்லே. ஆப்பிரிக்கா, ஆசியா மாதிரியெல்லாம் தான் இட வந்தது'' என்றாள். இவர் அதற்கு ''அப்பப்பா! ஒவ்வோர் சப்பாத்தி சாப்பிடுவதும் ஒரு 'கண்டம்'தான்'' என்றார்.

வேதா ஸ்ரீனிவாசன்.





"உயரமும், உயரத்துக்கேத்த பருமனும், மூக்கும் முழியுமா லட்சணமா அளவெடுத்து தைச்ச சட்டைமாதிரி அழகாக இருக்காளே. இது யார்வீட்டுப் பொண்ணு?"

"நம்ம டைலர் வீட்டுப் பொண்ணுதான்!"

வி. ந. ஸ்ரீதரன்

பார்கள் இவர்கள். நம் ரமணிக்கு அவன் வேலை பார்க்கும் இடத்திலே பெரிய பதவி காத்திண்டிருக்குங்கறதைத் தெரிஞ்சுண்டிருக்கா. அதுதான் அவனைத் தன் வலைக்குள்ளே சிக்க வைச்சிருக்கா."

"அவளைத்தான் அவன் மணந்து கொள்ளப் போறானாமா?"

"அது எனக்கு எப்படித் தெரியும்? இனி வரும் கடிதங்கள் எதாவதொன்றில் அப்படியொரு செய்தி நமக்கு வந்தாலும் வரலாம். பெற்றோரை மதிக்காமல், அவர்களைப் புறக்கணித்துவிட்டு நடைபெறும் எவ்வளவு காதல் கலியாணங்களைப் பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆனால் அந்த நாட்டியக்காரி என் மகனைக் கவர்ந்து செல்ல நான் விடமாட்டேன்" என்றார் ஒருவித ஆவேசத்துடன் கிருஷ்ணன்.

"அது சரி, நாம மேரியேஜ் சில்வர் ஜூபிலிக்குத் திருத்தணிக்குப் போறமா, இருப்பிக்கா?" என்றாள் வசந்தா நடைபெறும் சம்பாஷணைக்குச் சற்றும் சம்பந்தமில்லாமல். கணவனுடைய நினைவை வேறு பாதையில் திருப்பவே அப்படிக் கேட்டாள்.

"ஒரே பிள்ளை, யாரோ ஒரு நாட்டியக்காரியோடு சுத்திண்டிருக்கான்னு நான் வேதனைப்பட்டிண்டிருக்கேன். நீயானா உன்னோட வெள்ளி விழா வைபவத்திலே மூழ்கிக் கிடக்கே" என்றார் எரிச்சலுடன் கிருஷ்ணன்.

"என்னை என்ன பண்ணச் சொல்றேள்? நேரே சண்டிகாருக்குப் போய் அந்தப் பழிகாரியோட முகத்தைப் பிராண்டி முழியைப் பிடுங்கணுங்கறேளா?"

"அதுக்கில்லே. நிலைமையோட சீரியஸ்னஸ் தெரியாமப் பேசறியேன்னு சொல்றேன். நிஜமாவே உன் பிள்ளையோட இந்தச் செயல் உன்னைப் பாதிக்கவே இல்லையா? கொஞ்சங்கூடப் பதறக் காணுமே நீ?"

"வெறும் வதந்திகளை நம்பி வேதனைப்பட விரும்பல்லே நான். உண்மை நிலை என்னன்னு தெரியாமல் நாம் உணர்ச்சி வசப்படுவானேன்? நம் குழந்தையைப் பற்றி நமக்குத் தெரியாதா? ரமணியோட முன்னேற்றத்திலே ரொம்பப் பேருக்குப் பொறாமை. அதனாலே..."

அப்போது வாசல் கேட் திறக்கும் சத்தம் கேட்டது. "இத்தனை நேரங்கழித்து யாரது?" என்றார் கிருஷ்ணன்.

"உங்க பொண்ணா இருக்கும். அவ சினேகிதியோட சினிமாவுக்குப் போனா — சாயந்திர ஆட்டம்..."

"யார், ஜெயஸ்ரீயா? குழந்தைகளெல்லாம் உள்ளே தூங்கிண்டு இருக்கான்னு நெனைச்சேன். உன் பெண்களுக்கு நீ ரொம்பதான் இடந்தரே. சினிமா என்ன? அதுவும் தனியா?..." பேசிக் கொண்டிருக்கும் போதே பரபரப்புடன் உள்ளே வந்த ஜெயஸ்ரீ, "அம்மா, நம்ம ரமணியைப் பத்தி ஏதேதோ பேசிக்கறாளே, உங்களுக்குத் தெரியுமாம்மா?" என்றாள்.

"என்ன பேசிக்கறா? நீதான் சொல்லேன் தெரிஞ்சுக்கறேன்" என்றாள் வசந்தா. கைலாசத்தின் பெண் ஜெயஸ்ரீயின் காலேஜ்மேட். கைலாசம் தம் கணவரிடம் விவரித்ததைத் தன் குடும்பத்தினரிடம், இன்னும் கொஞ்சம் காது மூக்கு வைத்து விவரித்திருப்பார் என்பது வசந்தாவுக்குத் தெரியாதா என்ன?

"சண்டிகாரில் நைட் க்ளப்பிலே ஆடிப் பாடற யாரோ ஒரு டான்ஸராம். அவளோட நம்ம ரமணி சுத்திண்டிருக்கானாம். ஹேமாவோட அப்பா (கைலாசம்) ரேடியோக் கடை முதலியார் கிட்டே சொல்லிண்டிருக்கிறதை என் காதாலே கேட்டேன். அவ இவனை விட வயசானவளாம். நம்ம ரமணி இப்படியெல்லாம் போகக் கூடியவனாம்மா? எனக்கென்னவோ நம்பிக்கையாகவே இல்லே" என்றாள் மூச்சு விடாமல் ஜெயஸ்ரீ.

"வயசானவள்னா எத்தனை வயசாம்?" இது அம்மா.

"முப்பதோ முப்பத்தொண்ணோவாம். தன் பாக்டரியிலே வேலை முடிஞ்சதும் தினம் இரவு அவளை அழைத்துப் போக ஹோட்டலுக்கு வந்து விடுறானாம் ரமணி. அவளுக்காக ஏங்கிக் கிறங்கிக் கிடக்கும் வயசான ஆண் பிள்ளைகள் முன்னாலே இவன் அலட்சியமாக அவள் கையைக் கோத்துண்டு கூட்டிப் போகிறானாம். எனக்கென்னவோ இது வெறும் 'டூப்' புன்னு தோணறது... இருந்தாலும் இந்தக் கைலாசம் மாமா சுத்த மோசம். இப்படியா நம்ம ரமணியைப் பத்தி ஒரு வதந்தியைப் பரப்பறது? ரொம்ப மானக்கேடு!"

"இதிலே மானக் கேட்டுக்கு என்ன இருக்கு?" என்றாள் வசந்தா மகளைப் பார்த்து.

கிருஷ்ணனுக்குத் தன் மனைவியின் இந்தத் தோரணை புரிந்து கொள்ள முடியாததாக இருந்தது. தன்னைவிட அவள்தான் பிள்ளையின் போக்கைக் கண்டு பொடி பொடியாகிப் போவாள் என்று நினைத்திருந்தார்.

"வசி... பந்த பாசங்களை, பற்றை விட்ட நிலைக்கு நீ உயர்ந்து விட்டதாகக் காட்டிக் கொண்டது போதும்" என்றார் கிருஷ்ணன்.

"நமக்குத் தெரிஞ்சவா அறிஞ்சவா மத்தியிலே எல்லாம் இதே பேச்சுத்தாம்மா. நீ என்னமோ கொஞ்சங்கூட அலட்டிக்காம..."

என்று தொடர்ந்த மகனை இடைமறித்தாள் வசந்தா.

''நீங்க அலட்டிக்கறது போறுதா? சரி... சரி... மணி என்ன ஆறது பாத்தியா? போய் டிரஸ் மாத்திண்டு சாப்பிட வா... போ...'' என்று மகனை விரட்டினள். ஏதோ முணு முணுத்தபடி ஜெயஸ்ரீ தன் அறையை நோக்கிப் போனுள்.

''ஊர் பூராத் தெரிஞ்ச விஷயமாயிட்டுது. நீ என்னடான்னு இன்னும் உன் பிள்ளை சத்திய சந்தன்ங்கற முடிவோட அலட்சியமா- 'இதெல்லாம் பொறுமைக் காராளோட புகைச்சல்'னு பேசறே. என்ன ஆனலும் சரி, என்னல இதை ஜீரணிச்சுக்க முடியல்லே. அந்த நாட்டியக்காரியோட பிடியிலிருந்து எப்படியும் நம்ம ரமணியை...''

''அதான் தீர்மானம் செய்துட்டேளென்னு! திருப்பித் திருப்பி அதையே சொல்லுவானேன்?''

''அப்படித்தான் சொல்லுவேன். என் மனது பொங்கிப் போறது. என் ஒரே பிள்ளையை யாரோ ஊர் பேர் தெரியாத ஒருத்தி வந்து கவர்ந்து கொண்டு போறதை என்னல் சகிக்க முடியாது. என்ன செலவானலும் சரி. அவனுடைய மயக்கத்திலிருந்து அவனை மீட்டுக் கொண்டு வருவேன்...''

''இந்த பாருங்கோ, ஏன் இப்படி உணர்ச்சி வசப்படணும். ஊரார் சொல்றதைக் கேட்டுண்டு நாம எந்த முடிவுக்கும் வரக்கூடாது. நம்ம மகன் அத்தனை முட்டாளில்லே. உங்களோட கற்பனையிலே நீங்க பார்க்காத ஒரு பெண்ணைப் பத்தி இப்படியெல்லாம் கேவலமாப் பேச வேண்டாம்.''

''அப்படின்னு உன்னுடைய மனசிலே நைட் கிளப் பிலே உடம்பைக் காண்பிச்சுண்டு பாடறவ ரொம்பப் பதிவ்ரதைங்கற நெனைப் பாக்கும்?''

''நான் நைட் கிளப்பைக் கண்டேனு, டே கிளப்பைக் கண்டேனு? எதையும் தீர விசாரிக்கணும். நம்ம கண்ணுல பாக்கணும். அதன் பிறகுதான் ஒரு முடிவுக்கு வரணும்.''

''நெருப்பு இல்லாமல் புகையாது. ஏதோ இல்லாம இவ்வளவு பேச்சு வருமா? எனக்கென்னமோ அவன் இங்கே நம்மோட இருந்த போதே அவனுடைய சகவாசங்களெல்லாம் திருப்தியா இல்லே. கண்ட பயல்களோடெல்லாம் சேர்ந்து ஊர் சுத்திண்டிருப்பான். அருமைப் புள்ளைக்கு அம்மாவோட அரவணைப்பு அதிகமாப் போயிட்டதினலே வந்த விபரீதம்தான் இதெல்லாம். விடிஞ்சு விடிஞ்சு இப்பத்தான் இருபத்தி மூணு வயசு ஆறது. அதுக்குள்ளே...'' பொருமிப் போகும் கணவனைப் பார்த்துப் புன்னகைத்தாள் வசந்தா.

''என் கழுத்திலே நீங்க மூணு முடிச்சுப் போடும் போது உங்களுக்கும் இருபத்தி மூணுதான். உங்க சினேகிதர்களெல்லாம் என்னைப்பத்தி அப்போ என்ன காமெண்ட் சொன்னுங்கறதும் எனக்குத் தெரியும். நான் உங்களுக்கு ஏத்தவளில்லேங்கறது எல்லாருடைய அபிப்பிராயமா இருந்த தில்லையா?''

''ஆனல் நீ நைட் கிளப்பிலே பாடிண்டிருக்கல்லே...''

''நைட் கிளப்பிலே பாடாட்டாலும் நானும் பாடகிதான். மேடை ஏறிக் கச்சேரி பண்ணணும்னு கனவு கண்டவள்தான். பாராட்டுக்கும் புகழுக்கும் ஏங்கறதிலே எல்லாப் பெண்களுமே ஒண்ணுதானே?''

''மேடைப் பாடகியாகக் கூடாதுன்னு உனக்குத் தடை விதித்ததை இப்போ நீ சுத்திக்காட்ட வேண்டாம். அதுக்காக யாரோ ஒரு மயக்குக் காரியையும் உன்னையும் சமமாக்கிப் பேச வேண்டாம். நாளைக்கே நான் சண்டிகார் கிளம்பறேன். அந்த மோகினியைச் சந்திக்கப் போறேன். நம்ம ரமணியை அவளுடைய பிடியிலிருந்து விடுவித்து அவனுடைய புத்தியைத் தெளிய வச்சுட்டு வரப் போறேன். ஆமா...''

''ரொம்ப சந்தோஷம். கல்யாணம் ஆன நாளிலிருந்து என்னை எங்கேயாவது கூட்டிண்டு போயிருக்கேளா? இந்தக் காலத்திலே தாலிக் கட்டினதுமே ஹனிமூன் கிளம்பிடறு. அப்போ உங்காத்துக் காமரா உள் தான் நமக்குக் காஷ்மீரா இருந்தது. அதுக்கும் உங்கம்மா வராளான்னு இங்கேயும் அங்கேயும் பாத்துக்கணும். நம்மோட கல்யாண வெள்ளி விழாவை சண்டிகார்லே கொண்டாடணும்னு இருக்குப் போலே இருக்கு. திருத்தணியும் திருப்பதியும் எங்கே ஓடிப் போறது? சண்டிகாருக்கு எனக்கும் சேர்த்து டிக்கெட் வாங்குங்கோ'' என்று உணவு பரிமாறக் கணவனுக்குத் தட்டை அலம்பி வைத்தாள் வசந்தா.



4


''குடும்பக் கவலை, சமையல் தொல்லை எதுவும் இல்லாமல் ஹோட்டல் ரூமில் ஹாய்யாகத் தங்க வேண்டும் குஷியாக வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று எத்தனை வருஷங்களாக எனக்கு ஆசை தெரியுமா? அது இப்போது தான் நிறைவேறி இருக்கு'' என்றுள் வசந்தா. சண்டிகார் ஹோட்டல் ரூமில். ஃபோம் மெத்தையில் 'அப்பாடா!' என்று பிரயாண அலுப்புத் தீரப் புரண்டு கொண்டே.

கிருஷ்ணன் ஹோட்டல் அறையின் அமைப்பையும் சௌகரியங்களையும் நோட்டமிட்டவாறே ஜன்னல் அருகே நின்று கொண்டு நகரின் கலகலப்பைக் கவனித்தபடி, ''நாம்

இங்கே வாழ்க்கையை உல்லாசமாக அனுபவிக்க வரல்லே. இது நம்மோட ஹனிமூன் 'டிரிப்'புமில்லே. நம் ஒரே மகனுடைய வாழ்க்கையைக் கிரகணம் பிடித்துள்ளது. அது அவனை விழுங்குமுன் அதிலிருந்து அவனை விடுவித்தாக வேண்டும். எந்தக் குறிக்கோளோடு இப்படி இங்கே ஓடி வந்திருக்கோம் என்பது மறந்து விட்டதா உனக்கு?'' என்றார்.

''நான் எதையும் மறந்து விடவில்லே. அதிசயமா என்னையும் கூட்டிண்டு, தனியா வந்து ஹோட்டல்லேயும் தங்கி இருக்கோமே — இத்தனை வருஷத்திலே நடக்காதது நடந்திருக்கே — அதை நினைத்துக் கொண்டேன். நம்ம பிள்ளையோட வாழ்க்கையை நேராக்கணும்னுதான் வந்திருக்கோம், யார் இல்லேன்னா?'' உற்சாகம் உலர்ந்த நிலையில் பெட்டியைத் திறந்து வழக்கமான அலுவல்களில் மூழ்கிச் செயல்படலானாள் வசந்தா.

''நான் கொஞ்சம் வெளியிலே போய் அந்த ஹோட்டல் எங்கே இருக்கிறதென்று தெரிந்து



இது ஓர் அரசியல் பொன்மொழி. அது ஒரு நகைச் சுவை விருந்தாக உள்ளது. 2500 வருடங்களுக்கு முன்பு ஏதென்ஸின் இராஜதந்திரி தெமிஸ்டோக்ளிஸ் கூறியது.

கிரேக்கர்கள் ஏதென்ஸ் மக்களை ஆட்சி செய்கிறார்கள். ஏதென்ஸ் மக்களை நான் ஆட்சி செய்கிறேன். என் மனைவி என்னை ஆட்சி செய்கிறாள். என் மனைவியை என் மகன் ஆட்சி செய்கிறான்.

எம். தாமஸ்.

கொண்டு வருகிறேன். நீ குளித்து ரெடியாக இரு. வந்ததும் சாப்பிடப் போகலாம்'' என்று வெளியே கிளம்பத் தயாரானார் கிருஷ்ணன்.

''என்னை இங்கே தனியா விட்டுட்டுப் போயிடுவேன். நான் இவ்வளவு பெரிய ரூமிலே கொட்டுக் கொட்டுன்னு மோட்டு வளையைப் பாத்துண்டு உட்கார்ந்திருக்கணும். அதுசரி, நாம் ரமணியை எப்போ பார்க்கப் போறது?''

''இப்போ நான் ரமணியைச் சந்திக்கப் போறதில்லே. என் புரோகிராம்படி முதல்லே அந்த மயக்கு மோகினியை இன்று இரவு அவள் நடனமாடும் ஹோட்டலில் போய்ப் பார்க்கப் போகிறேன். அவளைப் பார்த்த பிறகுதான் நாம் ரமணியைப் பார்க்கப் போறோம். சரி, நீ போய்க் குளித்துக் காரியங்களைப் பார்'' என்று வெளியேறினார் கிருஷ்ணன்.

அன்று இரவு ஏழு மணிக்கு டிரஸ்ஸிங் டேபிள் முன் நின்று உடையணிந்து கொண்டிருந்தார் கிருஷ்ணன். வசந்தா, ஹோட்டலை அடுத்திருந்த ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில், மாலை பார்த்து வந்த சில பொருள்களை வாங்கி வரப் போயிருந்தாள். வெளியூர் போனால் 'ஷாப்பிங்' என்பது பெண்களின் அத்யாவசியங்களில் ஒன்றாயிற்றே!

ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குப் போகிறோம். அதுவும் இரவுக் கேளிக்கை விடுதிக்கு விஜயம் செய்யப் போகிறோம் என்பதால் தம் அலங்கரிப்பில் கொஞ்சம் அதிக அக்கறை காட்டி இருந்தார் கிருஷ்ணன். அவளைச் சந்தித்துப் பேச வேண்டி இருக்குமானால் தான் எத்தகையவர் என்பதை அவள் புரிந்து கொள்ளும்படி நடந்து கொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டார். தான் கபளீகரம் செய்யத் துணிந்துள்ள காளையின் தந்தை முட்டாளல்ல என்பதை அவள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஷாப்பிங் முடித்துக் கொண்டு ஹோட்டல் அறைக்கு வந்த வசந்தா, கண்ணாடிமுன் அமர்ந்து தலைவாரிக் கொண்டிருந்த கணவனைக் கண்டு கண்கள் விரிய நின்றாள்.

''உங்க புள்ளையை விட்டுட்டு உங்களைப் புடிச்சுண்டுடப் போறா அவ. அப்புறம் என் பாடு திண்டாட்டமாயிடும்'' என்றாள்.

''கேலி இருக்கட்டும். சாமானெல்லாம் வாங்கிக் குவித்தாயிற்றா?''

''குவிக்கறதுக்கு என்ன இருக்கு? அதுசரி, அலங்காரம் செய்து கொள்ளுவதிலே அதிக அக்கறை காட்டி இருக்கேளே, மார்வலஸ்... ம்...'' என்று நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாள் வசந்தா.

''நைட் கிளப் டான்ஸரைக் கவர்வதற்காக இப்படி ட்ரிம்மாகப் போகவில்லை. ஒருவேளை அவளோட பேச நேரிட்டால் அவள் நம்மைப் பற்றிக் கௌரவமாக மதிப்பிட வேண்டுமல்லவா, அதற்காகத்தான்.''

''ஓகோ!... நீங்கள் அவளோடு பேசும் போது ரமணி வந்து விட்டானானால் என்ன செய்வீர்கள்? உங்கள் திட்டம் அவளைத் தனியாகச் சந்திப்பதல்லவா?''

''கைலாசம் சொன்னான் — ரமணி இரவு பத்து மணிக்கு மேல்தான் ஹோட்டலுக்கு வருவதாக. நான் அதற்குள் என் சந்திப்பை முடித்துக் கொண்டு விடுவேன், கவலைப் படாதே.''

''நான் கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது? நீங்க சீக்கிரம் திரும்பிடுங்க. நான் தனியாக இருக்கேன்.''

''நான் என்ன அவளோட டான்ஸாடவா போறேன்? நம்ம பிள்ளை முட்டாளாகாமல் தடுத்து அவனைக் காப்பாத்தணும். அது முடியும் என்கிற நம்பிக்கையும் இருக்கு பார்க்கலாம்...''

''ஆண்டவன் நம் பக்கிலே இருக்கணும். போய் வாங்க...'' விடை கொடுத்தாள் கணவனுக்கு வசந்தா.



5

அந்த உயர்தர உல்லாச ஹோட்டலின் பிரத்தியேகமான கூடத்தில், மங்கலான ஒளியில், மெலிதான இசை முனகிக் கொண்டிருக்கும் போது கிருஷ்ணன் அங்கு போனார். இன்னும் கூட்டம் சேரவில்லை. கிளர்ச்சியுண்டாக்கும் இசை எக்காளத்துடன் முழக்கமிடவில்லை. டைனிங் டேபிள்களுக்கு மட்டுமே ஒளி — அதுவும் மங்கலாக. மற்றபடி அந்த ஹாலில் ஒருவித இருள் மூட்டம். ஹாலின் கோடியில் மேடை. அங்கு பாப் இசைக் குழுவினர் தயார் நிலையிலிருந்தனர். ஓர் ஓரத்தில் பியானோ. கிருஷ்ணனை வரவேற்றவர் பணிவாக பவ்யமாக 'டின்னர் வேண்டுமா?' என்று கேட்டார். இப்போது அந்த எண்ணமில்லை. பின்னும் தேவையானால் ஆர்டர் கொடுப்பதாகக் கூறித் தமக்கு மேடையருகே ஒரு டேபிளில் இடம் தருமாறு கேட்டார். கொடுக்கப்பட்டது. குளிர்பானம், ஐஸ் கிரீம், மற்றும் கொறிக்க ஏதோ ஆர்டர் கொடுத்து விட்டு அமர்ந்தார். அந்த உல்லாச ஹோட்டலின் கேளிக்கை விடுதியை நோட்டமிடலானார். அடுத்தடுத்து அங்கிருந்த மேஜைகளில் கூட்டம் கூடலாயிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம் அந்த ஹாலில் கலகலப்புக் கூடியது. மெலிதான இசை வரவரப் பெரிதாகி ஒருவித வெறியூட்டும் விதமாகக் கிளர்ந்தெழலாயிற்று. அங்கு கூடி இருப்போரின் உணர்ச்சிகளைச் சுண்டி இழுத்து இசைக்கு ஏற்ப அவர்களைத் தாளமிட வைத்தது.

மேடையில் 'ஸ்பாட் லைட்' பளிச்சிட்டதும் கையில் மைக்கை ஏந்தியவாறே ஒளியில் குளித்தபடி ஒய்யாரமாகப் பாடிக் கொண்டு வந்தாள் அவள். 'ஹியர் கம்ஸ் தி ட்ரீம் கேர்ள் டோரதி!' என்று அறிவிப்பு அதிர்ந்தது. ட்ரம்மும் பாஞ்சோவும் பிளிறின. அவற்றை அமுக்கிக் கொண்டு எழுந்தது கரவொலி. அத்தகைய உத்ஸாகமான வரவேற்புக்கு ஏற்ற உருவம்தான். ஜ்வலிக்கும் வெள்ளையுடை, லோகட், போர்பேக் டிரஸ். வெட்டி விடப்பட்ட தலைமுடி முதுகில் அலையாக நெளிந்து ஆடியது. கண்களுக்கும் இமைக்கும் வர்ணந்தீட்டி இருந்தாள். சந்தன மேனி. தங்க ரதம் நகர்ந்து வருவது போல இடையையும் தோள்களையும் கவர்ச்சியாகக் குலுக்கியபடியே பாடிக் கொண்டு வந்தாள் மேடையை விட்டு இறங்கி. அவளை ஒட்டிக் கொண்டே வட்ட ஒளியும் நகர்ந்து வந்தது.

ஒவ்வொரு மேஜையின் அருகிலும் நின்று நிதானித்து, சிரித்து, குனிந்து கவர்ச்சியைக் காட்டி — சிலரது தோள்களை, தலையை, கன்னத்தைத் தன் கைகளால் வருடி வெறியேற்றிக் கொண்டே போனாள்.

அவளை அவள் தோற்றத்தை, கட்டான உடலமைப்பை, கிறங்க வைக்கும் குரலைக் கிருஷ்ணன் பார்த்தார், கேட்டார். 'இவளிடம் யாராலும் மயங்காதிருக்க முடியாது. எந்த வயதும் இதற்கு விதிவிலக்கல்ல. தன் மகனைவிட வயதில் மூத்தவள்தான். ஆனால் மோகத்துக்கு வயதேது?

கிருஷ்ணனின் முன்னாலிருந்த பாறை ஐஸ் கிரீம் உருகிக் கொண்டிருந்தது. கொறிப்பதற்காக வந்திருந்த சிப்ஸைத் தொடவேயில்லை. அவர் உள்ளத்திலெல்லாம் பார்வையிலெல்லாம் அவளே நிறைந்திருந்தாள்.

'என் மகனிடம் நான் எப்படிச் சொல்வேன்? — 'ஏய், ரமணி. இவள் உனக்கு ஏற்றவளில்லை. தாவணி அணிந்த ஓர் இருபது வயதுப் பெண்ணை — கல்லூரியிலிருந்து அப்போதுதான் வெளி வந்திருக்கும், கட்டவிழும் பருவத்திலுள்ள ஒரு மொட்டை உனக்கு மனைவியாக்கி வைக்கிறேன். மணம் சிந்தும் இந்த மலர் வேண்டாம். இது முப்பத்தைந்து நாற்பது வயது மனிதர்களுக்கான போதைப் பொருள். விரைவிலேயே மணமிழந்து விடும்' —இப்படியெல்லாம் அவனிடம் கூறினால் — கூற முடியுமா? இவளின் மயக்கத்திலுள்ள அவன் அதை ஏற்றுக் கொள்வானா?'

குழம்பிப் போய் உட்கார்ந்திருந்தார் கிருஷ்ணன்.

இந்தப் பிரச்னையை எப்படித்தான் தீர்ப்பது? இந்த மோகினியிடம், 'ஏ, கனவுப் பெண்ணே! உன் வயதுக்கேற்ற வேறொருவனுக்கு வலை வீசிப் பிடித்துக் கொள். என் மகன் சின்னப் பையன். இப்போதுதான் வாழ்க்கை உப்பரிகையை அடைய முதல்படியில் கால்வைத்திருக்கிறான். உன் பிடியிலிருந்து அவனுக்கு விடுதலை கொடு. அவன் இளைஞன்,

தந்தை: "உன் வகுப்பில் 45 பேர் படிக்கிறார்களா?"

பிள்ளை: உனக்கு எப்படி அப்பா தெரியும்?"

தந்தை: நீ வாங்கி இருக்கும் ராங்க் சொல்கிறதே!"

ஜி. எஸ். என். ராஜன்






அழகன், வாழ்க்கையில் சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. உன் ஆடலையும் பாடலையும் என்னைப் போன்ற நடுத்தர வயதுக்காரர்களிடம் வைத்துக் கொள். என் மகன் விளையும் பயிர், வாடி வதங்கக் கூடிய முற்றிய செடியல்ல...'' இப்படியெல்லாம் அவனிடம் வாதாட முடியுமா? வாதாடலாமா?

கிருஷ்ணனுக்குத் தொண்டை உலர்ந்து போயிற்று. உருகிப் பானமாகி விட்ட ஐஸ் கிரீமை ஸ்பூனினால் எடுத்து நெஞ்சை ஈரமாக்கிக் கொண்டார். இதற்குள் அவள் தன் பாட்டை முடித்து மேடைக்குத் திரும்பிக்கொண்டிருந்தவள் கிருஷ்ணனின் மேஜையருகே நின்றாள். ''மிஸ்டர் கிருஷ்ணன், என் பாட்டு நன்றாக இருக்கிறதா? ரசித்தீர்களா?'' என்று கேட்டாள் டோரதி.

கிருஷ்ணனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. திகைத்துத் திணறிப் போனார். ஆப்பிள் ஜூஸை அருந்தப் போனவரின் கைகள் நடுங்கின. அது தெரியாமலிருக்கக் கீழே வைத்தார். ''பாட்டு ரொம்பப் பிரமாதம். அது சரி என்னை உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார் கிருஷ்ணன் தன் திகைப்புக்குத் திரையிட்டவராக.

அவள் மோகனமாகச் சிரித்தாள். ''பனிரெண்டுக்குப் பத்து அளவில் உங்கள் புகைப்படம் ஒன்று உங்கள் மகனுடைய மேஜையிலிருக்கிறது. பார்த்திருக்கிறேன்'' என்றாள்.



''ஓ...!''

அதே சமயம் கிருஷ்ணனின் தோள்மீது ஒரு கை பதிந்தது. திரும்பினார். அங்கே ஆஜானுபாகுவாக — மூன்றுமாடிக் கட்டிடத்தைப் போல அவர் மகன் ரமணி சிரித்தபடி நின்று கொண்டிருந்தான்.

''அப்பா! வாட் எ சர்ப்ரைஸ்? இப்படி நைட் கிளப்பிலே உங்களை அம்மா பார்த்தாளானால் எரிமலையாக வெடிப்பாளே, பூகம்பமே ஏற்படும்...''

ரமணியின் கிண்டலையும் கேலியையும் ரசித்தவராகக் கிருஷ்ணன் மகனுடைய கையைப் பற்றி அருகே அமர்த்திக் கொண்டார். ''ஸர்ப்ரைஸ்தான் ரமணி. உனக்கு ஒரு ஸர்ப்ரைஸ் தரணும்னுதான். தவிர ஒரு சேஞ்சாகவு மிருக்கட்டுமே ன்னும் எங்களோட மேரேஜ் வெள்ளிவிழாவை வெளியூரிலே ஸெலிபரேட் பண்ணின தாகவும் இருக்கட்டுமேன்னு திடீர்னு நினைத்துக்கொண்டு இந்த டிரிப்புக்கு ஏற்பாடு செய்துகொண்டு வந்தோம்.''

''வந்தோம்னு? அம்மாவும் வந்திருக்காளா? எங்கேப்பா? நிஜமாகவா?''

''நிஜமாத்தான். அம்மா ஷாலிமார் ஹோட்டல் ரூம்லே எனக்காகக் காத்திண்டிருப்பா!''

''ஹை! டோரதி, நீ ரெடியா, கிளம்பலாமா?'' என்றான் ரமணி அந்த மோகினியைப் பார்த்து.

''ஓ, கிளம்பலாமே...'' என்றவள் ரமணியைப் பார்த்த அந்தப் பார்வை? அடேயப்பா! அவன் அம்மா இவளுடைய இந்தப் பார்வையின் ஆழத்தை — தீவிரத்தைப் பார்த்தானானால்?...

''இரவு பன்னிரண்டு மணி வரை உனக்கு இங்கே வேலை இருக்கும் என்று எண்ணினேனே?'' என்றார் கிருஷ்ணன்.

''இன்று திங்கள் கிழமை. திங்களன்று பத்துப் பத்தோடு என் டூட்டி ஓவர்'' என்றவள் ரமணியைப் பார்த்து ''ஜூலி என்ன செய்கிறாள்?'' என்றாள்.

''ஃபைன்... டி.வி.யில் சினிமா பார்த்துக் கொண்டிருக்கிறாள்...''

''ஜூலியா... யாரது?'' என்று கேட்டார் கிருஷ்ணன்.

''என் செல்ல மகள்'' என்றாள் டோரதி. அவள் முகத்தில் பெருமையும் கர்வமும் கலவையிட்டன.

''கொள்ளை அழகாக — பொம்மை போல் இருப்பாள். ஐந்து வயதுப் பொம்மை'' என்றான் ரமணி.

'ஐந்து வயதுக் குழந்தைக்குத் தகப்பனாகப் போகிறானா?' கிருஷ்ணனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஆனாலும் நிதானமிழக்காதவராக, உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ளாதவராகவே காணப்பட்டார். 'இன்றையச் சமுதாயச் சூழ்நிலையில் எதையும் தாங்கிக் கொள்ளும் இதயம் வேண்டும்' என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டவரானதினால்தான் இந்த நிலையிலும் அவரால் அமைதியாக இருக்க முடிந்தது. இங்கு இப்போது வசந்தா இருக்க வேண்டும் என்று ஏனோ அவர் மனம் விரும்பியது.

''அப்பா நாம் டோரதியின் வீட்டுக்குப் போகலாம். இங்கிருந்து ரொம்பக் கிட்டத்தில்தானிருக்கிறது'' என்றான் ரமணி. தன் வருங்கால மனைவியின் வீட்டுக்கு அழைக்கிறான் மகன். சிரிப்பதா, அழுவதா? மறுப்பேதும் சொல்லவில்லை அவர்.

நடந்து போகக் கூடிய தூரத்திலேயே தானிருந்தது அந்த இரவு மோகினியின் இருப்பிடம் — மிகமிக நாகரீகமான கட்டிடத்தின் ஐந்தாவது மாடியில் ஒரு ஃப்ளாட்டில். வசதி மிக்கதாகவுமிருந்தது. லிஃப்டில் தான் போனார்கள். அபார்ட்மெண்டை நோட்டம் விட்டார் கிருஷ்ணன். வாடகை மாதம் ஐநூறுக்குக் குறையாது என்று கணக்கிட்டது மனம்.

ஓசை கேட்டு ஓடிவந்தது ஒரு ஐந்து வயதுக் குழந்தை—ஆலன். அம்மாவைப் போலவே கொள்ளை அழகு. இளந்தளிர். வெல்வெட்டுப் போன்று உடலும் தலைமுடியும். பாரசீகத்துப் பூனையைப் பார்த்ததும் அள்ளி எடுத்துக் கொள்ளும் ஆர்வம் பொங்குமாமே — அப்படியொரு மகிழ்ச்சி.

''மம்மி... மம்மி...!'' குரலும் கூட தாயைப் போலவே இனிமை. ''ரமணி அங்கிள்...'' ஓடி வந்து கட்டிக் கொண்ட குழந்தையை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டான் ரமணி.

''ஜானு சித்தி உங்களுக்குக் காப்பி போட்டுக்கிட்டிருக்கா'' என்றது மழலையில் குழந்தை.

''ஸானி, இது என்னோட அப்பா — டாடி..' என்று தன் தகப்பனாரைக் குழந்தைக்கு அறிமுகப்படுத்தினான் ரமணி.

''ஹலோ.'' என்றது குழந்தை தன் பிஞ்சுக் கைகளை நீட்டி.

''ஹலோ'' என்று அந்தக் குஞ்சுக் கைகளை பற்றிக் குலுக்கினார் கிருஷ்ணன்.

''ஜானா... ஜா...''குரல் எழுப்பினான் ரமணி.

''இங்கே இருக்கேன்...'' என்று பதில் கொடுத்தது ஒரு வசீகரமான குரல். ''உங்கள் களைப்புக்கு நெஸ் கஃபே தயாரித்துக் கொண்டிருக்கேன்.''

''வாங்கப்பா, ஜானுவை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்.'' சர்வ சாதாரணமாக எவ்வித கல்மிஷமுமில்லாமல் பேசினான், பழகினான் ரமணி. கிருஷ்ணனுக்கு ஒருபக்கம் வியப்பு, மறுபக்கம் கொதிப்பு. ஆனாலும் யந்திரமாகச் செயல்பட்டார் — எதையும் காட்டிக் கொள்ளாமல்.

டோரதி உடை மாற்றிக் கொள்ளத் தன் அறைக்குப் போய் விட்டாள்.

சமையலறையில் ஒரு காலேஜ் குமரி காப்பி தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாள். உல்லன் கயிற்றினால் ஒன்று சேர்த்து முடிந்த கருங்குழல். சட்டையும் பாண்டும் அணிந்திருந்தாள்—ஆண் பிள்ளையைப்போல. அந்தப் பக்கத்திலேயே இந்தக்கோலத்தில் பெண்களைப் பார்த்துப் பழகிவிட்ட கிருஷ்ணனுக்கு அந்த 'மன் ஏஜின்' கோலம் எவ்விதத் தாக்குதலையும் ஏற்படுத்தவில்லை.

அதுவும் இவர்களை வரவேற்க அவள் திரும்பியபோது அந்த முகத்தின் அழகு, சாந்தம், கவர்ச்சி, வசீகரம் — ஏனோ அவை கிருஷ்ணனின் எரியும் உள்ளத்துக்கு இதமாக இருந்தன. எதனால்? அவளுடைய அந்தச் சிரிப்பா? அல்லது அந்தப் பேசும் கண்களின் பளபளப்பா?

''இந்த உடையில் பெண்களைப் பார்ப்பதற்கு உங்களுக்கு விநோதமாக விபரீதமாகக் கூட இருக்குமில்லையா?'' என்றாள் ஜானு என்ற அந்தப் பெண் ஜானகி.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை'' என்று சங்கடப்பட்டார் சிரிப்பதற்கு கிருஷ்ணன்.

''இந்த உடைதான் வேலை வெட்டி செய்வதற்குச் சௌகரியமாக இருக்கு'' என்றவள் ரமணியைப் பார்த்து ''நிக்கிக்கு இன்று பத்து மணியோட டூட்டி ஓவராம். இன்னும் அரை மணியில் இங்கு வருவதாகப் போன் செய்தார்'' என்றாள்.

''டோரதி, கேட்டியா, நிக்கிக்கு இன்று பத்துமணியோட டூட்டி ஓவராம். வந்து கொண்டே இருக்காளும்.''


''யாரது நிக்கி...?''என்றார் யந்திரமாக கிருஷ்ணன்.

''டோரதியோட கணவன். ...! நிக்கோலஸ் அப்பா, நான்கூட அடிக்கடி சொல்லுவேனே, என் டியர்ரஸ்ட் ஃப்ரண்டுன்னு. நம்ம வீட்டுக்குக் கூட இரண்டொரு தடவை வந்திருக்கான். அம்மாவுக்கு நன்னாத் தெரியும். நீங்க பார்த்ததில்லை போலிருக்கு. அந்த நிக்கோலஸுக்கு இங்கே ஒரு பாக்டரியிலே வேலை—எப்போதும் நைட் ஷிப்டுதான்.

''ஓ...!'' என்ற கிருஷ்ணனின் இதயம் திடீரென்று லேசாகி மிதப்பது போலிருந்தது. 'டோரதியின் கணவன் நிக்கோலஸ்' — இந்த வார்த்தைகள் தான் எவ்வளவு இனிமையாக, இதமாக, தெம்பூட்டுவதாக இருக்கிறது?

ரமணி சொல்லிக் கொண்டிருந்தான்.

''என் நண்பன் நிக்கோலஸ் டோரதியைக் காதலித்து மணந்து கொண்டிருக்கிறான். டோரதி என்பது அவள் நிஜப் பெயரல்ல. காமாட்சி என்று பெயர். அவா நம்ம பக்கத்து மனுஷாதான். நம்ம ஜாதிக்காராதான். அவள் அப்பா பெரிய ஆபீஸர். மேல் நாட்டுக்கெல்லாம் போயிருக்கார். ரெண்டு பெண்கள், காமாட்சியும் அவள் தங்கை ஜானகியும், ரொம்பச் செல்லமா வளர்த்துட்டார். நாகரீகமாகவும் வளர்த்துட்டார். காலேஜிலே படிக்கும் போதே மியூசிக், டான்ஸ், மாடலிங் இதெல்லாம் காமாட்சிக்கு ரொம்ப ஈடுபாடு. அப்பாவும் என்கரேஜ் செய்தார். ஆனால் அது—என் நண்பன் நிக்கோலஸோட காதல்லே போய் முடியப் போறதுன்னு பாவம் அவருக்கு அப்போ



தயாரிப்பாளர்: இந்தப் படத்திலே உனக்கு நல்ல ரோல். கதையும் கதாபாத்திரங்களும் முழுக்க முழுக்க உன்னைச் சுற்றிச் சுற்றி வரும்படியே அமைந்துள்ளது.''

நடிகை: ''எப்படிங்க?''

தயாரிப்பாளர்: ஹீரோயின் குடை ராட்டினம் சுற்றுகிறவளாக வருகிறாள்! ''பீட்டிமென்.''

தெரியல்லே. ரொம்ப முற்போக்குக் காரராணுலும் மகன் ஒரு கிறிஸ்டியனை மணப்பதை அவரால் தாங்கிக்க முடியல்லே. அவர் மட்டும்னுக்கூட சமாளித் திருப்பார். காமாட்சியோட அம்மா ரொம்ப ஆர்த்தடாக்ஸ். பூஜை புனஸ்காரங்களெல்லாம் உண்டு. தன் பெண் ஜாதி மாறிக் கல்யாணம் செய்துக்கறதை அவளாலே தாங்கிக்க முடியல்லே. இவளாலயோ என் ஃபிரண்டைக் கைவிட முடியல்லே. பெற்றோரைப்பகைத்துக் கொண்டு காதலனைக் கணவனுக்கிக் கொண்டு தனியா வந்துட்டா. காமாட்சியை நிக்கலஸ், டோரதியாக்கிட்டான். இருந்தாலும் அவளாலே தன் பெற்றோரை மறக்க முடியல்லே. இன்னைக்கும் அவர்களை நினைத்துக்கொண்டால் கண் கலங்குவாள்.



ஆபீஸர் (கிளார்க்கிடம்): பாங்கில் நமது கம்பெனி அக்கௌண்டில் எவ்வளவு பணம் இருக்கிறது?

கிளார்க்: ஒரு நிமிஷம் சார்! பாங்க் ஸ்டேட்மெண்டைப் பார்க்கச் சொல்கிறேன்.

ஆபீஸர்: ஏம்பா! இதையெல்லாம் Firger Tips ல் வைத்திருக்க மாட்டாயா?

கிளார்க்: வைத்திருந்தேன் சார். ஆனால் இன்று காலையில் நகம் வெட்டியில் அதெல்லாம் போய்விட்டது.

வசந்தா.

''ஜானகி — அவளோட சிஸ்டர், — தன் அக்காவைப் பார்க்க வந்திருக்கா வெகேஷனுக்கு.''

காமாட்சி டோரதியான கதையைக் கேட்கக் கேட்க வியப்புக்கு மேல் வியப்பாக இருந்தது கிருஷ்ணனுக்கு.

''நைட் கிளப்பில் பாடும் இந்த வேலையை விட்டு விடும்படி நிக்கோலஸ் வற்புறுத்திக் கொண்டிருக்கிறுன். அவன் இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் வேலைமுடிந்து வீடு திரும்பும் போது சில சோதாக்கள் அவளைப் பின் தொடர்ந்து தொல்லை தருகிருர்கள். ஹோட்டலிலிருந்து இந்த அபார்ட்மெண்ட் கிட்டத்திலேதான். ஆனாலும் பரவாயில்லேன்னு அவர்களிடமிருந்து தப்ப டோரதி டாக்ஸியில் வந்தாலும் கூடக் கயவர்கள் இவள் டாக்ஸியைப் பின்தொடர்ந்து வரலானுர்கள். ஆகவேதான் நான் இனிமேல், டோரதியைக் கொண்டு வந்து இங்கு சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதாக நிக்கோலஸுக்குவாக்களித்தேன். ஏனென்றால் அவன் நைட் ஷிப்டில் வேலை பார்க்கிறுன் — அதிக வருவாய்க்காக. நான் அருகே இருக்கும்போது டோரதியை ஒரு பயல் நெருங்க முடியாது. சோதாக்கள் நெருங்கவும் மாட்டான்கள்'' என்றுன் ரமணி தன் பரந்த தோள்களைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டே.

''அக்காவுக்கு அப்பா, செல்லாக் காசும் தர முடியாதுன்னுட்டார். இவனும் வீம்புடன் வெளியேறி விட்டான். செல்லமாக வளர்ந்தவன். தண்ணீர் போலப் பணத்தைச் செலவிட்டவன். இவன் 'மனம் வாடக் கூடாதே என்று அத்தான் நைட் ஷிப்டில் உழைக்கிருர். அத்தானோட வருவாயிலே மட்டும் கௌரவமாகக் குடும்பம் நடத்த முடியாதேன்னு அவர் வசதி குறையக்கூடாதுன்னு அக்கா தனக்குள்ள குரல் இனிமையையும் நாட்டியத் திறமையையும் கொண்டு இப்படிச் சம்பாதிக்கிரு. அவள் சம்பாத்தியமும் சேர்ந்து இந்தக் குடும்பத்தைக் கௌரவமா சந்தோஷமா வாழவைக்க உதவுகிறது'' என்றுள் ஜானகி. தன் அக்கா இப்படிப் பாடிப் பிழைப்பதைப் — பிறர் பார்வைக்கு விருந்தாவதை விகல்பமாகப் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதில் அவளுக்குள்ள அக்கறை அந்தப் பேச்சில் தொனிப்பதைக் கண்டார் கிருஷ்ணன். வீட்டைவிட்டுக் கிளம்பும்போது கிருஷ்ணனைக் கௌவிக் கொண்டிருந்த கோபம்வேகம், தாபமெல்லாம் எங்கோ போய் விட்டன. ஒரு லட்சியத் தம்பதிகளைக் காணும் மகத்தான வாய்ப்பைப் பெற்றது போன்ற மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது மனம். ஓர் அபலைப் பெண்ணின் அரணுக, அவள் தன் கணவனுடன் இன்ப வாழ்க்கை நடத்துவதற்கு உதவியாகத் தன் மகன் செயல்படுகிறுன். பிறர் பார்வைக்குத் தோன்றுவது போலத் தன் மகன் டோரதியின் காதலனுக இல்லை. அவள் கற்புக்குக் காவலனுகச் செயல்படுகிறுன் என்பதை அறிந்து பெருமையிலும் சர்வத்திலும் தம் இதயம் விம்முவதை உணர்ந்தார்.


o o o

''அப்பா நீங்க ஹோட்டலுக்குப் போய் அதைக் காலி செய்து விட்டு, அம்மாவை இங்கேயே அழைத்து வந்து விடுங்களப்பா. அம்மாவுக்கு நிக்கோலஸை ரொம்பப் பிடிக்கும். அவனும் இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துடுவான். என்ன சொல்றேள்?'' என்றுன் தன் தகப்பனுரைப் பார்த்து ரமணி.

ஒரு விநாடி மௌனமாகத் தம் மகனையே பார்த்தார் கிருஷ்ணன். 'கல்மிஷமில்லாத இந்த என் மகனைக் குற்றவாளியாகக் கருதி குமுறினேனே. உண்மையைத் தெரிந்து கொள்ளாது ஓர் அந்நியனின் பேச்சைக் கேட்டு நான் என் மகனின் நடத்தையில் களங்கம் கற்பித்துக் கொண்டு எப்படிப் பொங்கிப் போனேன்? வசந்தாவுக்குத்தான் தன் மகன் மீது எத்தனை நம்பிக்கை? அவள் கொஞ்சமும் பதற்றப் படவில்லையே. தன் மகன் மீதுள்ள அவளுக்குள்ள அந்த நம்பிக்கை எனக்கு ஏன் வராமல் போயிற்று?'

''என்னப்பா யோசிக்கறீங்க?'' என்ற ரமணியின் குரல் அவரை உலுக்கியது. ''ம்... வந்து ஒன்னுமில்லே. உன் அம்மா அங்கே என்னையும் உன்னையும் நினைத்தபடி கொட்டு கொட்டுனு விழித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பா. இதோ ஒரு கால் மணியிலே நான் அவளை இங்கே அழைத்து வருகிறேன்.''

வாசற்படியருகில் டோரதி கிருஷ்ணனைச் சந்தித்தாள். ''சீக்கிரம் மாமியுடன் வந்து விடுங்கள் மாமா. என் கணவரை நீங்கள் பார்க்க வேண்டாமா?''



பழைய வார்த்தைகள்
புதிய அகராதி

கொட்டாவி: சில கணவன்மார்களுக்கு மனைவி எதிரே தைரியமாக வாயைத் திறக்கக் கிடைக்கும் அரிய வாய்ப்பு!

பாதசாரிகள்: போக நினைப்பது ரோட்டின் எதிர்ப்பக்கம். ஆனால் பல பேர் போகுமிடம் — ஆஸ்பத்திரி!

சிவாஜி.

''உன் கணவர் நிக்கலஸை என் மனைவி மட்டுமில்லை; நாங்கள் இருவருமே அவரைச் சந்திக்க ஆவலாக இருக்கிறோம்.''

''உங்கள் குழப்பம் கவலையெல்லாம் குறைந்திருக்குமென்று நினைக்கிறேன். அப்படித்தானே மாமா?'' அர்த்தத்துடன் சிரித்தாள் டோரதி.

திகைத்துப் போனார் அவர். 'இவளுக்குத் தம் மன நிலை எப்படித் தெரிந்தது? இத்தனை துல்லியமாகச் சொல்லுகிறாளே?'

அவருடைய திகைப்பை உணர்ந்து கொண்ட டோரதியே அதற்கு விளக்கமும் தந்தாள். ''ரமணியோட நண்பன் கிட்டேயிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிலே மணிலே அவனைப்பற்றி எப்படி ஒரு பேச்சு அடிபடுகிறது என்பதைக் குறிப்பிட்டிருந்தான்.

நடிகை: சார்... நீங்க கொடுத்த 'செக்' திரும்பி வந்துட்டுது...

தயாரிப்பாளர்: நீங்க நடிச்ச படம் மட்டும் எப்படியாம்? ஒரு வாரத்துலே தியேட்டரிலிருந்து திரும்பி வந்துட்டுது... மு. கணேஷ்



'என்னைப் பற்றி என் பெற்றோர்களுக்குத் தெரியும். ஆனாலும் இதனால் அவர்கள் ரொம்பவும் பாதிக்கப்படுவார்கள்' என்று கவலைப் பட்டான் உங்க பிள்ளை. கடிதத்தையே எதிர் பார்த்தான் உங்களிடமிருந்து. ஆனால் நீங்களே நேரில் வருமளவுக்கு ஊர் வம்புக்கு அத்தனை பலமிருந்திருக்கிறது.''

கிருஷ்ணன் முகத்தில் அசடு வழிந்தது. ''குற்றவாளி நானல்ல காமாட்சி. வதந்திகள். அது எவ்வளவு உறுதியான உள்ளங் கொண்டவர்களையும் ஆட்டி வைத்துவிடும் என்பதற்கு நான் உதாரணம். ... உன் தங்கை ஜானுவை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. என் ரமணிக்கு அவளைப் போன்ற ஒரு பெண்ணைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். இனி தேட வேண்டிய அவசியமில்லை. நீ மணமானவள் என்பதை அறிந்து எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா? நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் ரமணியின் அம்மாவுடன் இங்கு வருகிறேன்'' என்று கூறி விட்டுக்குள் புகுந்தார் கீழே இறங்க.

நடப்பதாகவே தோன்றவில்லை அவருக்கு. அது இரவாகவும் தெரியவில்லை. ஏதோ ஒரு புதிய உலகில் மிதந்து போவது போலிருந்தது. அத்தனை இலேசாகி விட்டது மனம். கண்களின் ஓரத்தில் திரண்டிருந்த கண்ணீர் உருண்டு விழாதிருக்க இமைகளைப் பலவந்தமாக மூடித் திறந்து கண்களுக்குள்ளேயே அது நிரவி விடும்படி செய்தார்.

அன்று மாலை வரை அந்தப் பெண் டோரதியைப் பற்றித் தான் கொண்டிருந்த அபிப்பிராயமென்ன? இப்போது அவள் எவ்வளவு உயர்ந்து விட்டாள். காதலித்தவனையே கணவனாக்கிக் கொண்டு வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்ள எப்படி உழைக்கிறாள்? எந்த மதமாயிருந்தாலென்ன? மனம்தானே முக்கியம். தன் நண்பனுக்காக — அவன் மனைவியைப் பாதுகாக்கத் தன் மகன் ஊராரின், அபவாதங்களைப் பொருட்படுத்தாமல் — 'ஓ அவன் என் மகனல்லவா?' அவர் உள்ளம் பெருமையால் விம்மித் தணிந்தது.

அதே போதில் பளிச்சென ஓர் எண்ணமும் அவர் நெஞ்சைத் தாக்கியது. ரமணி — டோரதியின் பாதுகாவலனாக மட்டுமில்லாமல் ஜானுவின் காதலனாகவுமிருக்கிறானோ? அவன் வந்து ஒருவாரம் தானாகிறதாம். ஜானு அவனுக்கு ஏற்றவள்தான். இளஞ்சிட்டுக்கள். எவ்வித கல்மிஷமுமின்றிப் பழகுகின்றன. கல்மிஷமெல்லாம் வயது வந்த கிழங்களின் மனதில்தான். ''வஸி, ஜானகியைப்பார்த்தால் நிச்சயம் தன் மருமகளாக்கிக் கொண்டுவிடத் தயாராக இருப்பாள். வசந்தா இளந் தலைமுறைகளின் எண்ணங்களைப் புரிந்து கொண்டிருப்பவள்...'' இப்படிப் பலவாறு எண்ணமிட்டபடி தான் தங்கியுள்ள ஹோட்டலை அடைந்தார். காப்பாற்றப்பட வேண்டிய சூழலில் தங்கள் மகன் இல்லை என்பதை மனைவியிடம் சொல்லும் போது அவள் முகம் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்தவாறே தம் ஹோட்டல் அறையின் பஸ்ஸரை அழுத்தினார் கிருஷ்ணன். ●



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1979

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாம் பரிசு	**ரூ. 500**
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)	**ரூ. 500**

ஆகமொத்தம் ரூ 2000 - பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ 100 - சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர்கள் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஏப்ரல் 30.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப்பெற போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப்போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது —

ஆசிரியர் கல்கி, சென்னை–600 032.

இன்று ஏப்ரல் 1!



✖ மனோரமா, வெ. ஆ. மூர்த்தி, ஐஸரிவேலன், சச்சு

ஏப்ரல் 1ம் தேதி அனுபவங்களைப் பற்றிச் சில நகைச்சுவை நட்சத்திரங்களைக் கேட்டோம்:

மனோரமா: ஒரு சமயம் வெளியூரில் படப்பிடிப்பு. படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்கு அருகில் உள்ள ஓட்டல் ஒன்றில் தங்கினோம். எனக்கு ஒரு போன் வந்தது. ''உங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருந்து பேசுகிறோம். உங்கள் வீட்டில் திருட்டுப் போய் விட்டது. வீட்டினுள் ஒன்றுமே இல்லை. எல்லாவற்றையும் திருடன் எடுத்துச் சென்று விட்டான்'' என்றது குரல். நான் பரபரப்புடன் ''என்னென்ன திருட்டுப் போச்சு? எப்படிப் போச்சு? எப்போ?'' என்ற கேள்விகளைக் கேட்டேன். என்னுடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி விட்டுப் போனை வைத்தார் அந்த மனிதர். சிறிது நேரம் திகைத்துப் போயிருந்த நான் மீண்டும் டெலிபோன் அலறவே எடுத்தேன். ''என்ன வீட்டில் திருட்டு நடந்து விட்டதாமே?'' என்று உருக்கமாகக் கேட்டார் எங்களுடன் வந்திருந்த நடிகர் சந்திரபாபு. இப்படிக் கேட்டு விட்டு அவர் தொடர்ந்து இடிஇடியென்று சிரித்தார். பிறகு ''இன்று என்ன தேதி தெரியுமா?'' என்று கேட்டார்.

ஐசரிவேலன்: இன்று மந்திரியாக இருக்கும் திரு சௌந்தரராஜன், அன்றும், இன்றும் எனக்கு மிக நெருங்கிய நண்பர். அவர் மந்திரியாகப் பொறுப்பு ஏற்றவுடன் அவரிடம் சென்று என் வீட்டில் விருந்து வைக்கிறேன். நீங்கள் வந்து பெருமைப் படுத்த வேண்டும் என்றேன். அவரும் 'சரி' என்றார். ஆனால் நான் எந்த நாளில் அழைத்தாலும் அவரால் வரமுடியாத அளவுக்கு வேலைகள் அவருக்கு இருந்தன. ஒருநாள் அவரிடம் சென்றேன். ''என் தொகுதியில் எல்லா அமைச்சர்களும் பேசி விட்டனர். நீங்களும் வந்து நமது கட்சியின் கொள்கையைப் பரப்பப் பேச வேண்டும். இதற்கு நாளை இன்றே குறித்துக் கொடுத்து விடுங்கள்'' என்று கூறி ஒரு நாளையும் அவரிடம் குறித்துக் கொண்டு வந்தேன். அந்த நாளும் வந்தது. காலையிலேயே அவருக்கு போன் செய்து நினைவுபடுத்தினேன். மாலையில் சொன்ன நேரத்துக்கு அவர் வந்தார். சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, ''கூட்டம் என்று கூறினீர்கள். யாருமில்லையே?'' என்றார்.

''கட்சிக் கொள்கையைப் பரப்ப வேண்டும் என்றால் நீங்கள் வருவீர்கள் என்று தெரியும். அதனால்தான் கூட்டம் என்றேன். இன்று என் வீட்டில் உங்களுக்கு விருந்து. அது மட்டுமல்ல, இன்று ஏப்ரல் ஒன்று நினைவிருக்கிறதா?'' என்று கூறி அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றேன்.

சச்சு: நான் யாரையுமே இதுவரை ஏப்ரல் முட்டாள் ஆக்கியதில்லை. ஏப்ரல் முதல் நாள் வருவதே எனக்கு மறந்து விடுகிறது. ஆனால் நான் ஏப்ரல் முட்டாள் ஆகியிருக்கிறேன். தயாரிப்பாளர் திருச்செங்கோடு மாரிமுத்து எனக்குப் போன் செய்து மறுநாள் காலை படப்பிடிப்பு இருப்பதாகவும் ஒரு மணி நேரம்தான் என்றும் நிச்சயம் வர வேண்டும் என்றும் சொன்னார். நானும் 'ஒரு மணி நேரம்தானே கேட்கிறார்' என்பதால் சரி என்று கூறினேன். காலையில் கார் வந்தது. நேராக என்னைப் படக்கம்பெனியின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றது. ஸ்டுடியோவுக்குப் போகாமல் இங்கு செல்கிறதே என்று நான் நினைக்கும் போதே கார் நிற்க, எதிரே வந்தார் தயாரிப்பாளர் மாரிமுத்து. சிரித்துக் கொண்டே ''இன்று ஷூட்டிங் கான்சல்'' என்றார். எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''ஷூட்டிங் இல்லை என்றால் எனக்கு போன் செய்து சொல்லக் கூடாதா? இப்படி அழைத்து வர வேண்டுமா?'' என்று நான் கோபத்துடன் கேட்க ஆரம்பிக்கு முன்பே, ''இன்று ஏப்ரல் முதல் தேதி நினைவிருக்

கிறதா?'' என்றார். அவர். எனக்குக் கோபத்தையும் மீறிச் சிரிப்பு வந்தது.

வெ. ஆ. மூர்த்தி: எனது நண்பர்களுக்கெல்லாம் நான் போன் செய்து ''எனக்கு ஒரு நல்ல படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. கைநிறைய அட்வான்சும் கொடுத்துள்ளார்கள். அதனால் உங்களுக்கு நான் டிரீட் கொடுக்கப் போகிறேன். நாளை மாலை சுமார் ஆறு மணிக்குக் கண்ணகி சிலைக்குப் பின்புறம் மணலில் அமர்ந்திருங்கள். பெட் ஷீட்டும் டிரான்ஸிஸ்டர் ரேடியோவும் நீங்கள் கொண்டு வாருங்கள். உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் நான் கொண்டு வருகிறேன்'' என்று கூறினேன். அடுத்தநாள் நான் இரவு சுமார் எட்டு மணிக்குக் கண்ணகி சிலைக்கு அருகில் சென்றேன். எனது நண்பர் எல்லோரும் என்னை வேட்டாக வந்ததால் பீஸ் பீஸாகக் கிழிக்கும் நிலையில் இருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கூறியதெல்லாம் ''இன்று ஏப்ரல் முதல் தேதி. நினைவிருக்கா?'' என்றுதான்...

இதற்கு அடுத்த ஆண்டு. ''சார் உங்கள் நடிப்பு என்றால் எங்களுக்கு மிகவும் பிடிக்கும். நாங்கள் தயாரிக்கும் படத்தில் நீங்கள் அவசியம் நடிக்க வேண்டும். எங்கள் விலாசம் இது; வாருங்கள்'' என்று ஃபோன் வந்தது.

அப்போது ஆரம்ப நிலையில் இருந்த நடிகன் நான் — ஒரு ஆட்டோ ரிக்ஷாவை வைத்துக் கொண்டு அவர்கள் கூறிய விலாசத்தைத் தேட ஆரம்பித்தேன். கிட்டத்தட்டப் பத்து ரூபாய்க்கு மேல் செலவானதுதான் மிச்சம். விலாசத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மிகவும் களைப்போடு வீட்டுக்கு வந்தால் ஒரு ஃபோன் - ''ஏன் சார் காத்துக் கொண்டிருக்கிறோம் நீங்கள் வரவே இல்லை?'' நான் தேடி அலைந்ததைச் சொன்னேன். அவர்கள் சிரித்தார்கள். அப்புறம் கூடவா புரியாது? என் நண்பர்கள் என்னை ஏப்ரல் முட்டாள் ஆக்கியிருக்கிறார்கள் என்று!

பேட்டி : ருக்மிணி ராமச்சந்திரன்

அழகுப் போட்டியில் மென்நகை!

பெமினா, கட்டாவ், சவிஸ் ஃபினாஸ்க் ஆகிய மூன்று நிறுவனங்களும் கூட்டாகச் சேர்ந்து சென்னையில் நடத்திய அழகுப் போட்டியில் ஒவ்வொரு பெண்ணையும் அறிமுகப்படுத்தும் போது அறிவிப்பாளர் எரால் செக்யூரியா கூறிய சில அறுவைகள்:

- இவர் கராத்தே கற்றுக் கொள்பவர். ஒரு முறை இவர் ஓட்டலில் நுழைந்து மைசூர் பாகைக் கராத்தே அடி அடித்தே உடைத்துச் சாப்பிட்டாராம்.
- இவர் அதிகம் செலவு செய்து பாட்டுக் கற்றுக் கொண்டார். அதிகம் செலவு ஏற்படக் காரணம் தெரியுமா? இவர் இசை பயிலும் போதெல்லாம் சுற்று வட்டாரத்தில் அமைதியைக் குலைப்பதாகக் கருதிக் கைது செய்யப்பட்டு அபராதம் கட்ட நேர்ந்ததுதான்!
- இவருக்கு கல்யாணம் என்பது ஒரு வார்த்தை அல்லவாம். ஒரு வாக்கியமாம். Death Sentence.
- நாம் இங்கே அழகினை ரசிக்க, கவலையை மறக்க வந்திருக்கிறோம். ஆதலால் நாட்டின் பொருளாதாரம், ஜனத்தொகை, அரசியல், வரிகள் ஆகிய எல்லாவற்றையும் மறந்து விடுவோம் — என் மாமியாரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.
- நான் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். அழகாக இருந்தாள். பேச்சுக் கொடுத்தேன். தன்னை அதிகம் படித்தவள், அறிவாளி என்று கூறிக் கொண்டாள். நான், ''உனக்கு ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ், இவர்களைத் தெரியுமா?'' என்றேன். அவள் உடனே ''இப்படி ஆண்கள் பெயர்களாகவே சொல்லிக் கொண்டு போகாதீர்கள். எனது பாய் பிரண்டு பொறாமைப் படுவான்'' என்றாள்!

அசோக்

சென்னை அழகியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பத்தொன்பது வயது கல்லூரி மாணவி பீனு சர்மா



"என்ன சிரிப்பு வேண்டியிருக்கு?"

அலட்சியச் சிரிப்பு!

என் மனைவியின் சமையலில் எனக்கு அபிமானம் இருந்தாலும், தன் சமையலின் தரத்தைப் பற்றி அவள் தம்பட்டம் அடித்துக் கொள்வது மட்டும் எனக்குப் பிடிக்காத ஒன்று. 'பெரிசா சமையல் செஞ்சு கிழிச் சுட்டே போ' என்பேன் ஒருநாள். 'ஏன், நீங்கதான் ஒருநாளைக்குச் சமைச்சுப் பாருங்களேன்' என்று பதில் சொன்னாள் அவள்.

'ஹ' என்று அலட்சியமாக அவளைப் பார்த்துச் சிரித்து விட்டுச் சமையலறைக்குள் போனேன். உள்ளே போனவன் சமையலோடு என் உடம்பையும் கரியாக்கிக் கொண்டு வந்ததுதான் மிச்சம்.





அழுகைச் சிரிப்பு!

எங்கள் நாடகக் குழு வழக்கப்படி நாங்கள் ஒரு ஜோக் அடித்துவிட்டுக் கொஞ்சநேரம் இடைவெளி விடுவோம். ரசிகர்கள் சிரித்து முடித்த பிறகு அடுத்த வசனம் தொடரும். ஒருமுறை நான் ஜோக் என்று நினைத்து அடித்து விட்டு மக்கள் சிரிப்பதற்காகக் காத்திருந்தேன். ஒருத்தராவது சிரிக்க வேண்டுமே, ஊஹூம்! அமைதி, மயான அமைதி. அழுகையே வந்துவிட்டது எனக்கு. ஜோக்கை நினைத்துச் சிரிக்கவோ, அதை ரசிக்க யாருமில்லாதது கண்டு அழவோ முடியாத தர்ம சங்கடம். மேடையின் ஓரத்தில் நின்றிருந்த சக நடிகர்கள் என் தவிப்பைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிக்க, நான் மட்டும் அழுது கொண்டே சிரித்தேன்.

புகையிலைச் சிரிப்பு!

பாண்டிச்சேரியில் உறவினர் வீட்டுக் கல்யாணம். சேலம், கோயம்புத்தூரிலிருந்து பிற உறவினர் காரில் வந்து சேர்ந்தார்கள். நேரம் இரவு பன்னிரண்டு மணி. நெடுந்தூரப் பயணம் மேற்கொண்டிருந்த அவர்களிடம் ஒரு வயது முதிர்ந்த அம்மாள், 'களைப்பா வந்திருக்கேள், என்ன குடிக்கறேள்?' என்று கேட்டாரே பார்க்கலாம்! பாண்டிச்சேரியில் இருந்து கொண்டு கேட்ட அந்தக் கேள்வியைக் கேட்டு எல்லோரும் பகபகவென்று சிரிக்க நான் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தேன். பின்னே! வெற்றிலை புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டு சிரித்துத் தொலைத்தால் எதிரே உள்ளவர்கள் வெற்றிலைச் சாற்றில் நனைந்து சம்பந்திச் சண்டை உருவாகவா?



— நீஜு

அசட்டுச் சிரிப்பு!

ரொம்ப வருடங்களுக்குப் பிறகு ஒரு நண்பர் என்னைச் சந்தித்தார். 'ஹலோ' என்றார். 'ஹலோ' என்றேன். ''யார் தெரிகிறதா?'' என்று கேட்டார். 'ஓ! தெரியறதே!' என்றேன். அவரை யாருக்கு ஞாபகம் இருக்கிறது? அப்போதைக்கு விட்டுவிடுவார் என்று நினைத்து அப்படிச் சொல்லி விட்டேன். மனிதர் விடவில்லையே! 'யார் சொல்லு?' என்றார். தவித்தேன். 'சொன்னால்தான் விடுவேன்' விடாக்கண்டர் தொடர்ந்தார். அசடு வழியச் சிரித்தேன். அப்புறம் மரியாதையாக ஒப்புக் கொண்டேன், அவர் யாரெனத் தெரியவில்லை என்பதை.





அட்டகாசச் சிரிப்பு!

'கோவாடிஸ்' நாடகத்தில் இலக்கியவளம் செறிந்த' வசனங்களை நான் பேச வேண்டும். 'பேசவியாடா நீனு?. சரியாச் சொல்லியா?' என்று சோ கேட்டான். 'யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிறாய் நீ? உம்?' என்று உறுமி அட்டகாசமாகச் சிரித்தேன். 'போ, போ' என்று சந்தேகத்துடன் வாழ்த்தி அனுப்பி வைத்தான் சோ. அவன் சந்தேகப்பட்டது போலவே, 'இரந்து வந்தவர்க்கும் பரிசு கேட்போருக்கும் இல்லையெனாது வாரி வழங்கும் வள்ளல் எங்கள் கொற்றவன்' என்ற வசனத்தில் கடைசி மூன்று வார்த்தைகள் தடம் புரண்டு, 'கொள்ளல் எங்கள் வற்றவன்' என்று உளறி வைத்தேன்!


மயிலாப்பூர் கிளப்பில் நண்பர்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தேன். திடீரென்று எங்கள் கட்டிடத்தில் மின்சாரம் தடைப்பட்டுப் போய், விளக்குகள் அணைந்து விட்டன. ஆனால் எங்களுக்கு அடுத்த இரண்டாவது கட்டிடத்தில் ஜகஜ்ஜோதியாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. 'அது மட்டும் எரியறதே, எப்படி?' என்று கேட்டேன். 'அது அமிர்தாஞ்சனம் கம்பெனியோ, இல்லையோ, எப்போதும்தான் எரியும்' என்றார் நண்பர். குபீரென்று அனைவரும் சிரித்து விட்டோம்.



குபீர்ச் சிரிப்பு!

நமட்டுச்சிரிப்பு!

நாடகத்தில் ஆரம்ப காலத்தில் பெண் வேடம் போட்டிருக்கிறேன். 'நமட்டுச் சிரிப்பு சிரிக்க வேண்டும்' என்று டைரக்டர் சொல்வார். அது என்ன நமட்டுச் சிரிப்பு? எப்படிச் சிரிப்பது அதை? ஏதோ உதட்டைக் கோணிக் கொண்டு சிரித்து வைத்தேன். அதுதான் நமட்டுச் சிரிப்பு என்று மற்றவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆளைவிடு!





படங்கள், பேட்டி: பிரபுசங்கர்

மௌனச் சிரிப்பு!



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

